# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| 1. கணக்குகளும் நிதியும் | 1 |
| 2. வங்கி மேற்பார்வை | 64 |
| 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் | 67 |
| 4. தொடர்பூட்டல் | 68 |
| 5. நாணயம் | 70 |
| 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | 72 |
| 7. பொருளாதார ஆராய்ச்சி | 74 |
| 8. ஊழியர் சேம நிதியம் | 77 |
| 9. செலாவணிக் கட்டுப்பாடு | 81 |
| 10. வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் | 83 |
| 11. நிதி | 84 |
| 12. நிதியியல் உளவறிதல் பிரிவு | 85 |
| 13. நிதியியல் முறைமை ஆய்வுகள் | 86 |
| 14. ஆளுநர் செயலகம் | 87 |
| 15. மனித வளங்கள் முகாமைத்துவம் | 88 |
| 16. தகவல் தொழில்நுட்பம் | 93 |
| 17. உள்ளகக் கணக்காய்வு | 95 |
| 18. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | 95 |
| 19. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு | 97 |
| 20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு | 99 |
| 21. மாகாண அலுவலகங்கள் கண்காணிப்பு | 100 |
| 22. பொதுப்படுகடன் | 101 |
| 23. பிரதேச அபிவிருத்தி | 103 |
| 24. செயலகம் | 107 |
| 25. பாதுகாப்புப் பணிகள் | 107 |
| 26. புள்ளிவிபரவியல் | 107 |
| 27. அலுவலர் வசதிகள் முகாமைத்துவம் | 109 |
| 28. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை | 110 |

**கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

# இலங்கை மத்திய வங்கி

## நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழு அறிக்கை

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுவானது நாணயச் சபையின் நியமன உறுப்பினரான திரு. என் ஏ உமாகிலிய (கணக்காய்வுக் குழுவின் தலைவர்) திரு. எம். ஆர். மிகூலர் (கே. பி. எம். ஜி. போர்ட், றொட்டஸ் தோற்டன் அன்ட் கம்பனி பங்காளர்) மற்றும் திருமதி ஏ. எம். ஜே. பற்றிக் (எஸ். ஜே. எம். எஸ். பங்காளர்) ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. துணை ஆளுநர் முனைவர் டபிள்யு. எம். ஹேமசந்திர குழுவிற்கான செயலாளர்களாகப் பணியாற்றினார்.

2011ஆம் நிதி ஆண்டில், கணக்காய்வுக் குழுவானது 8 தடவைகள் கூடி பின்வரும் பணிகளை மேற்கொண்டது.

- கணக்காய்வாளர் கையொப்பமிடுவதற்கு முன்னதாக 2010ஆம் ஆண்டிற்கான வரைவு இறுதி கணக்குகளை மீளாய்வு செய்ததுடன் குறிப்பிட்ட வெளிப்படுத்துகைகளுடன் இணங்கிக் கொண்டது.
- இலங்கை மத்திய வங்கியின் 2010ஆம் ஆண்டுக் கணக்குகள் தொடர்பாக வெளிக் கணக்காய்வாளர்களினால் அவர்களது இடைக்காலப் பிரச்சனைகளின் புரிந்துணர்வு மற்றும் முகாமைத்துவக் கடிதத்தில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கவனத்தில் எடுத்தது.
- இடைக்காலப் பிரச்சனைகளின் புரிந்துணர்வு மற்றும் முகாமைத்துவக் கடிதம் தொடர்பாக கணக்காய்வுக் குழுவினால் பின்வரும் விதந்துரைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.
  - o மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களிலுள்ள நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகளின் கீழ் வேளாண்மைத் திட்டத்திற்கான கட்டாயக் கடன் வழங்கல் நடவடிக்கைகளின் வெளிப்படுத்துகையும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் வழங்கப்பட்ட நியதிகளையும் நிபந்தனைகளையும் தரப்படுத்துதல்.
  - o இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாக பதிவு செய்யப்படுவதற்காக ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் தொடர்பான உரிமம் பெற்ற வங்கிகளிலிருந்தும் நிதிக் கம்பனிகளிலிருந்தும் வரவேண்டிய வட்டி உள்ளிட்ட கைவிடப்பட்ட சொத்துப் பொறுப்புக்கள் மீது செலுத்தப்பட வேண்டிய மொத்த நிலுவைகளின் விபரங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
  - o இலங்கை வைப்புக் காப்பறுதித் திட்டத்திற்கு ஆரம்பத்தில் மாற்றல் செய்யப்பட்ட நியதிகளுக்கான கணக்கீடு.
  - o திட்டத்தின் தன்மை, உடன்படிக்கைகளுக்கான ஒவ்வொரு தரப்பினரினதும் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள், வரித்தாக்கங்கள், மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதங்கள், உறுதிப்பாடுகள் மற்றும் திட்டத்திற்கு காரணமாக வேறு ஏதேனும் பண்புகள் உட்பட பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக நிருபிக்கப்படுகின்ற அனைத்து நிதியங்களையும் உள்ளடக்கும் விதத்தில் மத்திய வங்கியின் நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள் மீதான வெளிப்படுத்துகைக் குறிப்பினை விரிவுபடுத்தல்.
  - o மீள்கொள்வனவு நோக்கங்களுக்காக கடன்படப்பட்டு பயன்படுத்தப்படாத பிணையங்களின் சந்தைப் பெறுமதியின் பிணையங்களின் கடன்பாடுகளிலிருந்து எழுகின்ற எதிர்பாராத பொறுப்பொன்றாகப் பதிவு செய்தல்.
  - o ஓய்வுகால நன்மைகளின் பொறுப்புக்களை காப்பீட்டு அடிப்படையில் பெறுமதியிடப்பட்ட தொகையில் பதிவு செய்தல்.
  - o அழிவடைந்தவை தொடர்பான செயற்பாடுகளின் போது கைகளினால் எண்ணப்பட்ட நாணயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றுதல்.
  - o அறிக்கையிடும் நாளன்று உள்ளவாறு ஒற்றை இலக்க திகதியிடப்பட்ட நறுக்கு முறிகளின் மீது பெறத்தக்க வட்டியினை அடையாளம் காண்பதற்கான நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதுடன் கணனி முறைமைக்கும் கையினால் செய்யப்படும் கணிப்புக்களுக்குமிடையிலான ஏதேனும் பாரிய வேறுபாடுகளுக்கு சீராக்கம் செய்தல்.
  - o திறைசேரி வணிகப்படுத்தல் அறை முகாமைத்துவ முறைமைக்கும் பொதுப்பேரேட்டு முறைமைக்குமிடையிலான ரூ.25 மில்லியன் கொடை தங்கப் பெறுமதிக்கிடையிலான சீராக்கப்படாத வேறுபாட்டினை திருத்துவதுடன் மீள் இணக்கம் செய்யப்படாத மீதியைப் பதிவழித்தல்.
  - o நாணய அசைவு முகாமைத்துவ முறைமைக்காக தனியான பரீட்சிப்பு நூலகமொன்றில் பரீட்சிப்புப் பிரதியில் ஆவணங்களைப் பேணுதல் மற்றும் தேவைப்படும் பொழுது ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் முறைமையில் மாற்று கோரிக்கைப் படிவங்களைப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- தொடர்புபட்ட தரப்பினரை அடையாளம் காணுதல் மற்றும் தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களாக அரசிடமிருந்து பெறப்படத்தக்க ரூ.2.3 பில்லியன் கொண்ட மீதியின் வெளிப்படுத்துகை ஆகிய விடயங்கள் தொடர்பாக 2010ஆம் ஆண்டிற்கான கணக்காய்வில் எதிர் கொள்ளப்பட்ட பிரச்சனைகள் மீது எர்னஸ்ட் அன்ட் யங்குடன் இணக்கம் காணுதல்.
- இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான தரப்பினரை அடையாளம் காண்பதற்காக ஆவணக் கொள்கையொன்றினை தயாரிக்குமாறு முதன்மைக் கணக்காளரை அறிவுறுத்தல்.
- லொயிட்ஸ் கட்டிடம் மற்றும் சவறின் றெசிடனஸ் புறப்பட்டீஸ் என்பவற்றை முதலீட்டுச் சொத்து என்பதற்குப் பதிலாக ஆதனம், பொறி உபகரணம் என்று அறிவிக்கப்பட இருப்பதற்கான இலங்கை மத்திய வங்கி முகாமைத்துவத்தின் உள்ளார்ந்த காரணத்தை மீளாய்வு செய்து உடன்படிக்கைக்கு வருதல்.
- இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களிலுள்ள மத்திய வங்கியின் வெவ்வேறு திணைக்களங்களினால் முகாமை செய்யப்படும் அனைத்து நிதியங்களினதும் நிதியியல் விளைவுகளைப் பதிவு செய்வதன் பூரண தன்மையை மீளாய்வு செய்தல்.
- வங்கியின் அனைத்து தொழில்நுட்ப முறைகளினதும் தொழிற்படு தன்மைகளை காலந்தரமாக மீளாய்வு செய்வதற்கு விதந்துரைப்புக்களை மேற்கொள்வதுடன் வங்கியில் பயன்படுத்தப்பட்ட மென்பொருட்களின் நடைமுறைக்குப் பின்னான மீளாய்வு மீதான தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் அறிக்கையை மீளாய்வு செய்தல்.
- திறந்த நிலைமையின் சந்தை மதிப்பீடு; வெளிநாட்டுச் செலாவணி வியாபாரங்கள், பெறுதித் தெரிவுகளுக்கான கணக்கீடு (தங்கம்), வெளிநாட்டுச் செலாவணி வியாபார இணைப்பின் அடிப்படையினை கொடுக்கல்வாங்கல்களின் நாள் சராசரிக்கு மாற்றுதல், நிலையான வருமான பிணையங்கள் மீதான மிகை அல்லது கழிவின் பதிவழிப்பு, சோமாவதியவிலுள்ள கட்டிடங்களின் கிரயத்தை மூலதனமாக்கல் மற்றும் நியூயோர்க்கில் கொள்வனவு செய்யப்பட்ட கட்டிடத்திற்கான கணக்கீடு போன்ற விடயங்களுடன் தொடர்புடைய கணக்கீட்டு நடைமுறைகள் பற்ற எர்னஸ்ட் அன்ட் யங் உடன் கலந்துரையாடி உடன்படுதல்.
- அனைத்து கணக்காய்வு செய்யப்படுபவர்களுக்கு கணக்காய்வு முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பதில்கள்

வழங்குவதற்கும் ஒரு குறிப்பிட்ட நேர அட்டவணையை தெரியப்படுத்துமாறு முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவுறுத்துவதோடு அவரின் முன்மொழிவுகளின் முன்னேற்றம் பற்றி மீளாய்வு செய்து கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கையிடல்.

- விதந்துரைப்புக்களின் நடைமுறைப்படுத்தலின் நிலைக்காக முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மீது மலேசியா உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கான நிறுவனத்துடன் இணைந்து கொலம்பஸ் அட்வைசரி சேர்விசஸ் எஸ்டிஎன் பிஎச்டி இனால் தயாரிக்கப்பட்ட தர மதிப்பீட்டு மீளாய்வு அறிக்கையில் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களைப் பின் தொடர்தல்.
- முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளில் விதந்துரைப்புக்களை மேற்கொள்ளுதல்.
- முகாமைக் கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளருக்கு அவருடைய ஒவ்வொரு அவதானிப்புகளுடனும் தொடர்புடைய இடர்நேர்வு அளவின் குறிப்பீட்டுடனான முன்னேற்ற அறிக்கைகளை வழங்குமாறு அறிவுறுத்தல்.
- முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் வெளிப்படுத்தப்பட்ட 2011 - 2014 இற்கான உபாயக் கணக்காய்வுத் திட்டத்தையும் 2011 இற்கான தொழிற்பாட்டு கணக்காய்வுத் திட்டத்தையும் ஒப்புதலளித்தல்.
- 2011ஆம் ஆண்டிற்கான வெளியகக் கணக்காய்வாளர் நியமனத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்
- எர்னஸ்ட் அன்ட் யங்கின் 2011 இற்கான கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்தல்.

# இலங்கை மத்திய வங்கி

### முகாமைத்துவக் கூற்று 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரியது

### இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்பான பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றமும்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச் சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால், மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத் தன்மைக்கான பொறுப்பபுடைமையின் அடிப்படையானது அதன் பிரதான குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளினூடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக் கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்குள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகு முறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக் கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமை வாய்ந்ததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோள்களிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது.

இப் பின்னணியில், மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல் ஆகியவற்றை அமுலாக்குகின்ற போது உருவாகின்ற இலாபம் மற்றும்/ அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதால், இக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச் சூழலமைவிற்கிணங்க வரைவிலக்கணம் அளிக்கப்படுதலும் புரிந்து கொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது, நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு எர்னஸ்ற் அன்ட் யங் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக் கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / துலைவா / My No: ஈஎப்/ஜே/சீபீ/எப்ஏ/2011

ඔබේ අංකය / உமது இல / Your No.:

දිනය / திகதி / Date: 27 March 2014

கௌரவ நிதி அமைச்சர்

## இலங்கை மத்திய வங்கியின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது நாணயச்சட்ட அதிகாரச்சட்டத்தின் (422 ஆம் அத்தியாயம்) 42(2) ஆம் பிரிவின் பிரசாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை மத்திய வங்கியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்ற மற்றம் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றம் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றம் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்பை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றக்களின் கணக்காய்வ 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரசட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றம் நாணயச் சட்ட அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 422) 42(2) ஆம் பிரிவு என்பவற்றடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்பரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இக்கணக்காய்வினை மேற்கொள்கையில் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களிற்குஇணங்கி நடத்தலை பரீட்சிப்பதற்காக பொதுச் சேவையில் உள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் ஒன்றினால் எனக்கு உதவியளிக்கப்பட்டது.

### நிதிக்கூற்றுகளுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றம் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்கும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய பிறழ் கூற்றுக்களில் இருந்த விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானவை என முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படும் உள்ளகக் கட்டுபாட்டிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உச்ச கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு (ISSAI 1000 – 1810) இசைவான இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் தவறுகள் மற்றம் மோசடிகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுகளிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று இடர்நேர்வின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வளாரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றம் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்கரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கினறாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கம் நோக்கத்தினைக் கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) மற்றம் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையம் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்க வழங்குின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் நிதிக்கூற்றுக்கள் நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவம் தருகின்றன என்பது அனது அபிப்பிராயமாகும்.

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 | +94-11-2887223 | oaggov@sltnet.lk | www.auditorgeneral.gov.lk

| | குறிப்பு | 2013 ரூ.000 | மீளக்குறிப் பிடப்பட்ட 2012 ரூ.000 | மீளக்குறிப் பிடப்பட்ட 2011 ரூ.000 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| காசு நிலுவையும் காசுக்குச் சமமானவையும் | | **425,676,763** | **235,278,133** | 303,551,702 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 5 | **94,137,368** | **169,312,604** | 106,006,361 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 5 | **357,531,750** | **386,761,690** | 270,664,801 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 6 | 5,670,258 | 3,989,701 | 2,794,334 |
| ப.நா. நிதித்துடன் தொடர்பான சொத்துக்கள் | 7 | **85,400,764** | **81,352,282** | 73,090,517 |
| ஏனைய வெளிநாட்டிலிருந்தான பெறத்தக்கவைகள் | | **591** | **8,243,512** | 19,361,831 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **968,417,494** | **884,937,922** | 775,469,546 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 8 | **15,853,513** | **175,251,772** | 183,885,564 |
| அரசுக்கான முற்பணங்கள் | 9 | **109,167,071** | **111,291,843** | 94,743,013 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 10 | **1,375,396** | **1,844,237** | 2,313,533 |
| ஏனைய உள்நாட்டில் பெறத்தக்கவை | | **1,829,712** | **2,970,099** | 2,924,028 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் | 11 | **41,095** | **41,095** | 41,211 |
| ஏனைய சொத்துக்கள் | 12 | **6,443,534** | **5,573,731** | 4,695,913 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **134,710,321** | **296,972,777** | 288,603,262 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **1,103,127,815** | **1,181,910,699** | 1,064,072,808 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 13 | **95,601,221** | **77,688,838** | 43,819,156 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| இருப்புக்கள் | 14 | **3,103,281** | **2,942,193** | 2,484,681 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள் | | **29,910,697** | **2,296,826** | 1,980,518 |
| சொத்து, பொறிகள் மற்றும் கருவிகள் | 15 | **14,228,915** | **13,913,077** | 9,996,697 |
| அருவச் சொத்துக்கள் | 16 | **35,598** | **24,153** | 13,723 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழில்நிலைக்குப் பின்னான நன்மைத் திட்டங்கள் | 43 | - | - | 1,020,925 |
| **ஏனைய மொத்தச் சொத்துக்கள்** | | **142,879,712** | **96,865,087** | 59,286,346 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,246,007,527** | **1,278,775,786** | 1,123,359,154 |
| **பொறுப்புக்களும் உரிமை மூலதனமும்** | | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகளுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய தொகை | 17 | **21,504,196** | **2,619,847** | 937,712 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 6 | **16,183,282** | **3,257,119** | 1,041,597 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை | 18 | **37,301,553** | **28,953,955** | 90,032,085 |
| ப.நா.நி. தொடர்பான பொறுப்புக்கள் | 19 | **422,032,012** | **467,642,196** | 328,772,419 |
| ஏனைய வெளிநாட்டிற்குச் செலுத்தப்படத்தக்கவை | 20 | **47,221,119** | **64,520,662** | 58,621,764 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **544,242,162** | **566,993,779** | 479,405,577 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 21 | **148,809,893** | **166,288,378** | 146,269,185 |
| அரச, அரச முயற்சிகளிலுள்ள மீதிகள் | 22 | **416,230** | **699,628** | 1,799,030 |
| மீள் கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 23 | **84,601,000** | **7,015,000** | 14,089,000 |
| ஊழியர்கள் நன்மைகள் திட்டத்திலுள்ள மீதிகள் | 24 | **2,419,087** | **1,341,268** | 875,124 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 25 | **5,659,718** | **31,934,646** | 28,041,215 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **241,905,928** | **207,278,920** | 191,073,554 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | **786,148,090** | **774,272,699** | 670,479,131 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 26 | **339,770,981** | **318,060,142** | 293,233,361 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 27 | **1,449** | **2,389** | 3,468 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 43 | **4,936,339** | **3,832,688** | - |
| நானாவிதப் பொறுப்புக்களும் ஒன்று சேர்ந்தவையும் | 28 | **243,455** | **143,916** | 884,048 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | **344,952,224** | **322,039,135** | 294,120,877 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,131,100,314** | **1,096,311,834** | 964,600,008 |
| **உரிமை மூலதனம்** | | | | |
| மூலதன நிதியம் | | **35,000,000** | **35,000,000** | 25,000,000 |
| ஒதுக்குகள் | | **79,907,213** | **147,463,952** | 133,759,146 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **114,907,213** | **182,463,952** | 158,759,146 |
| **மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம்** | | **1,246,007,527** | **1,278,775,786** | 1,123,359,154 |

நாணயச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2014 பெப்புருவரி 28ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

அஜித் நிவாட் கப்ரால் - ஆளுநர்　　　　எம்.ஐ.சுப்பியான் - முதன்மைக் கணக்காளர்

(பகுதி *II* - 7) தொடக்கம் (பகுதி *II* - 52)ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி

**வருமானக் கூற்று**

**2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்பு | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 31 | **18,505,656** | 13,571,866 |
| தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | **(27,892,406)** | 296,049 |
| தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | **13,389,159** | 16,770,494 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **4,002,409** | 30,638,409 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 32 | **(4,447,401)** | (5,769,658) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(4,447,401)** | (5,769,658) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்/ (நட்டம்) | | **(26,758,639)** | 25,181,713 |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்** | | **(27,203,631)** | 50,050,464 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 31 | **14,450,134** | 25,957,602 |
| வட்டிச் செலவு | 32 | **(2,979,850)** | (1,091,540) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **11,470,284** | 24,866,062 |
| ஏனைய வருமானம் | 33 | **2,919,260** | 976,019 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்/ (செலவு)** | | **(12,814,087)** | 75,892,545 |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| **ஆளணிச் செலவுகள்** | 34 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(3,138,445)** | (2,865,544) |
| - கட்டாய பகிர்ந்தளிப்புத் திட்டச் செலவு | | **(447,626)** | (426,622) |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டச் செலவிற்கான மேலதிகப் பங்களிப்பு | | **(1,988,525)** | (344,328) |
| | | **(5,574,596)** | (3,636,494) |
| பெறுமானத் தேய்வும் கடன் பதிவழிப்பும் | | **(365,644)** | (322,622) |
| பொருட்பட்டியல் செலவு | | **(1,476,937)** | (1,816,933) |
| மெதுவாக நகரும் இருப்புக்களிற்கான ஏற்பாடுகள் | | **(20,000)** | - |
| நிர்வாகச் செலவுகள் | 35 | **(1,997,048)** | (1,378,295) |
| நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் மீதான தேறிய நட்டங்கள் | | - | (3,963) |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள்** | | **(9,434,225)** | (7,158,307) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்** | | **(22,248,312)** | 68,734,238 |
| **வருமான வரி** | 36 | **(2,016,217)** | (2,525,694) |
| **இவ்வாண்டிற்கான தேறிய இலாபம்/ (நட்டம்)** | | **(24,264,529)** | 66,208,544 |

7 தொடக்கம் 52ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி

**அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று**

**2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டுக்கான தேறிய இலாபம்/ (நட்டம்) | **(24,264,529)** | 66,208,544 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | **(13,904,065)** | 1,835,087 |
| சொத்து, பொறி மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டின் மீதான இலாபம் | - | 3,280,575 |
| அகற்றப்பட்ட சொத்து, பொறி மற்றும் கருவிகள் மீதான மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | **(40)** | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | **(592,417)** | (4,619,242) |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | **(38,761,051)** | 66,704,964 |

7 தொடக்கம் 52ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி

**உரிமை மூலதன மாற்றக் கூற்று**

**2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | பங்களிக்கப் பட்ட மூலதனம் ரூபா 000 | மூலதனமாக ஒதுக்கப்பட்ட ஒதுக்குகள் ரூபா 000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா 000 | ஏனைய ஒதுக்கங்கள் (குறிப்பு 29) ரூபா 000 | திரட்டிய இலாபங்கள் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|
| முன்னர் அறிக்கையிட்டது போல | 15,000 | 24,985,000 | 2,706,067 | 82,890,980 | 48,132,745 | 158,729,792 |
| ப.க. நியமம் 19 இற்கிணங்க திருத்தம் செய்யப்பட்டது | | | | | 29,354 | 29,354 |
| **மீள்குறிப்பிட்டவாறு:** | | | | | | |
| **2012 சனவரி 1இல் உள்ளவாறு** | **15,000** | **24,985,000** | **2,706,067** | **82,890,980** | **48,162,099** | **158,759,146** |
| தேறிய இலாபம் | - | - | - | - | 66,208,544 | 66,208,544 |
| அதே நேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | 153,751 | (153,751) | - |
| பொது ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | 10,142,076 | (10,142,076) | - |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | 4,884,031 | (4,884,031) | - |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள் மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | - | - | - | 25,181,686 | (25,181,686) | - |
| இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கிற்கான மாற்றம் | - | - | - | 93,084 | (93,084) | - |
| நிலையான சொத்த மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கான மாற்றம் | | | 3,280,575 | - | - | 3,280,575 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | - | - | - | 1,835,087 | - | 1,835,087 |
| இ.ம.வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | - | (158) | (158) |
| மீதி இலாபத்தினை அரசிற்கு மாற்றுதல் - 2011 | - | - | - | - | (10,000,000) | (10,000,000) |
| முன்கூட்டியே இலாபத்தினை அரசிற்கு மாற்றுதல் - 2012 | - | - | - | - | (33,000,000) | (33,000,000) |
| ஓய்வூதிய நிதிய ஒதுக்கிற்கான மாற்றல் | | | | 1,000,000 | (1,000,000) | - |
| மூலதானமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒதுக்குகளிற்கான மாற்றம் | - | 10,000,000 | - | (10,000,000) | - | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | - | - | - | - | (4,619,242) | (4,619,242) |
| **2013 சனவரி 1இல் உள்ளவாறு** | **15,000** | **34,985,000** | **5,986,642** | **116,180,695** | **25,296,615** | **182,463,952** |
| தேறிய இலாபம் | - | - | - | - | (24,264,529) | (24,264,529) |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல | - | - | - | 191,428 | (191,428) | - |
| பொது ஒதுக்கிற்கான மாற்றம் | - | - | - | 126,315 | (126,315) | - |
| பணிக்கொடை நிதியம் மற்றும் மருத்துவ நிதியத்திற்கான மாற்றல்கள் | | | | 595,490 | (523,602) | 71,888 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | | | | | (592,417) | (592,417) |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள் மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | - | - | - | (26,758,632) | 26,758,632 | - |
| இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | 91,317 | (91,317) | - |
| **மருத்துவ நன்மைகள் திட்டம் மற்றும் பணிக்கொடை ஒதுக்குகளிலிருந்து அந்தந்தப் பொறுப்புகளிற்கு மாற்றல்** | | | | (1,511,789) | | (1,511,789) |
| அகற்றப்படும் நீண்ட காலச் சொத்து ஒதுக்கிற்கான மாற்றல் | | | (40) | 40 | | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | - | - | - | (13,904,065) | - | (13,904,065) |
| இ.ம.வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | - | (122) | (122) |
| பிடித்துவைத்தல் வருவாய்க்கான சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்குகளின் தேறிய மாற்றல் | | | | (6,703,951) | 6,703,951 | |
| மீதி இலாபத்தினை அரசிற்கு மாற்றுதல் - 2012 | - | - | - | - | (2,355,705) | (2,355,705) |
| இடைக்கால இலாபத்தினை அரசிற்கு மாற்றுதல் - 2013 | - | - | - | - | (25,000,000) | (25,000,000) |
| **2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **15,000** | **34,985,000** | **5,986,602** | **68,306,848** | **(5,613,763)** | **114,907,213** |

7 தொடக்கம் 52ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## காசுப்பாய்ச்சல் கூற்று
## 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **21,656,589** | 8,920,505 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **513,045** | 485,687 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **13,389,159** | 16,770,494 |
| தேறல் செய்யப்பட்ட செலாவணி இலாபம்/(நட்டம்) | | **(13,638,407)** | (2,713,634) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **1,175,609** | 967,667 |
| | | **23,095,994** | 24,430,719 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **(4,681,100)** | 3,236,655 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **2,827,328** | 1,095,513 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **3,947,528** | 3,017,754 |
| வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | | **29,596,753** | 483,137 |
| செலுத்தப்பட்ட வருமானவரி | | **2,016,217** | 2,525,694 |
| | | **43,068,926** | 10,358,753 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | 37 | **(19,972,932)** | 14,071,966 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு)/குறைப்பு | | **(858,623)** | (1,252,418) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் தொகை அறவீடுகள் | | **1,448,949** | 1,466,198 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகளின் விற்பனை/மீட்டல் | | **-** | 117 |
| சொத்து, பொறி, கருவிகளின் விற்பனை | | **2,268** | 74,343 |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு/(குறைப்பு) | | **77,586,000** | (7,074,000) |
| | | **(78,178,594)** | (6,785,760) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைப்பு) | | **(101,781,795)** | 95,692,569 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைப்பு) | | **1,407,072** | (266,442) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைப்பு) | | **(1,510,810)** | 80,569,162 |
| ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் கொடுபடத்தக்கவையிலான தேறிய அதிகரிப்பு/(குறைப்பு) | | **(722)** | 130 |
| கொடைகள் தவிர்ந்த சொத்து, பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் | | **694,982** | 957,284 |
| தங்க இருப்பிலான தேறிய அதிகரிப்பு/(குறைப்பு) | | **55,585,071** | 29,842,972 |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் | | **980,109** | 996,902 |
| | | **(44,626,093)** | 207,792,577 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **122,804,687** | (214,578,337) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை மீளப் பெறல் | | **259,640,254** | 382,207,833 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடுதல் | | **(237,929,416)** | (357,381,008) |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் தேறிய வழங்கல் | | **21,710,838** | 24,826,825 |
| **கழிக்குக:** | | | |
| அரச, கொடுக்கல்வாங்கல் மீதான சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய மீளப்பெறல் | 38 | **(175,136,711)** | (16,427,265) |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்களிலுள்ள சுற்றோட்ட நாணயத்தின் தேறிய மீளப்பெறல் | 39 | **17,284,956** | (19,325,888) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய மீளப்பெறல் | | **(157,851,755)** | (35,753,153) |
| **சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய அதிகரிப்பு** | | **179,562,593** | 60,579,978 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | **59,020,350** | (97,544,268) |
| ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள் | | **122** | 158 |
| திரட்டிய நிதியத்திற்கான இலாப மாற்றல் | | **26,350,000** | 43,000,000 |
| | | **85,370,472** | (54,544,110) |
| **நிதியியல் நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **94,192,121** | 115,124,088 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு** | | **197,023,876** | (85,382,283) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **(6,625,246)** | 17,108,714 |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **235,278,133** | 303,551,702 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 40 | **425,676,763** | 235,278,133 |

7 தொடக்கம் 52ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி

### 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்

**1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்**

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலங்கை நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி (வங்கி அல்லது இ.ம.வங்கி) இலங்கையின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் நாணய ஒழுங்குவிதிகள், நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றிற்குப் பொறுப்பான அதிகாரசபையாக இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது இலங்கை சனநாயக சோசலிச் குடியரசிற்குள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு இல.30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ளது.

மேற்படி நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கு ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2014 பெப்புருவரி 28ஆம் திகதி நாணயச் சபையின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்டது.

**2. கணக்கீட்டுக் கொள்கைகள்**

**2.1 தயாரிப்பிற்கான அடிப்படை**

இந் நிதிக்கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு, காணி, கட்டடம் மற்றும் ஒரு சில நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த ஏனையவை நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.1.1 அறிக்கையிடல் படிவம்**

வங்கியானது நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்கு வரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறை குறிப்பு 4இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

**2.1.2 இணக்கக் கூற்று**

2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந் நிதிக்கூற்றுக்கள் பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன. நாணய விதிச் சட்டத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ப.நி.அ. நியமங்களின் ஒரு சில தேவைப்பாடுகளின் காரணமாக, வகைப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடையதான எண்தொகைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை விட இந் நிதிக்கூற்றுக்களில் வித்தியாசமானதாக அமையலாம்.

**2.1.3 சமர்ப்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட நாணயம்**

வேறு விதமாக கூறப்பட்டிருந்தாலொழிய அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவின் ஆயிரத்திற்கு கிட்டிய தொகையில் தரப்பட்டுள்ளன.

**2.2 முக்கியமான கணக்கியல் தீர்ப்புகளும் மதிப்பீடுகளும்**

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, அரசிறைச் செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிவிக்கப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிர்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தனை ஏற்படுத்தும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களை மேற்கொள்வதனைத் தேவைப்படுத்துகிறது. சொத்துக்களின் தற்போதைய தொகைக்கு பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் பெறுபேறுகளை அல்லது எதிர்காலத்தில் ஏற்படும் பொறுப்புக்களில் பெறுபேறுகளை விளைவிக்கக்கூடும்.

**2.2.1 விற்பனை முதலீட்டிற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்பு**

சந்தைப் பெறுமதியானது அதன் கிரயத்திற்கு கீழே கணிசமானளவு அல்லது நீண்ட காலப் போக்கில் வீழ்ச்சியடையும் போது வங்கியானது, விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்புக்களை நிர்ணயிக்கிறது. குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட காலப் போக்கு எது என்பதை நிர்ணயிப்பதற்கு அவதானிப்புக்கள் அவசியமாகின்றன.

**2.2.2 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நலத் திட்டங்களும்**

குறித்துரைக்கப்பட்ட நலத் திட்டங்களின் செலவு ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதங்கள், எதிர்கால மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத் திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் குறிப்பு 43இல் தரப்பட்டுள்ளன.

**2.2.3 நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி**

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சந்தைப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும்.

**2.3 கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்களின் மாற்றங்கள்**

**2.3.1 பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 19 ஊழியர் நன்மைகள் (2011இல் திருத்தப்பட்டது)**

திருத்தப்பட்ட நியமங்களில் எடுத்துக்காட்டப்படுகின்ற மாற்றத்திற்குரிய ஏற்பாடுகளுடன் இணங்கும் விதத்தில் வங்கி பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 19 இனை (2011இல் திருத்தப்பட்டது). பின்னோக்கிய விதத்தில் தற்போதைய காலப்பகுதிக்கு பிரயோகித்தது. முன்னைய ஒப்பீட்டு காலப்பகுதியில் காட்டப்பட்ட நிதியியல் நிலைமையின் திறந்த கூற்றும் (2012 சனவரி 01) ஒப்பீட்டு எண்தொகைகளும் அவ்வாறே மீளக்குறிப்பிடப்பட்டுள்ளன.

மற்றைய விடயங்களுடன் பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 19 (2011இல் திருத்தப்பட்டது) மாற்றங்கள் கட்டாய நன்மைகள் திட்டத்திற்கான கணக்கீடுகள், வங்கியைப் பாதித்த முக்கிய மாற்றங்களில் சில பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன.

கடந்த அனைத்துப் பணிச் செலவுகளும் திருத்தங்கள்/கட்டுப்பாடுகள் ஏற்படுகின்ற முன்னைய வேளையில் அல்லது தொடர்பான மீளமைத்தல் அல்லது முடிவுறுத்தல் செலவுகள்

அங்கீகரிக்கப்படுகின்ற போது அங்கீகரிக்கப்படுகின்றன. இதன் விளைவாக, கையளிக்கப்படாத கடந்த கால பணிகளின் செலவு மேலும் பிற்போடப்படமாட்டாது என்பதுடன் வழங்கப்படும் எதிர்காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படும்.

முன்னர் வங்கி, முன்னைய காலப்பகுதியில் பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 19இற்கு இணங்கு கட்டாய நன்மைகள், கடப்பாடு மற்றும் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியின் மொத்தத்தில் 10 சதவீதத்தினை விஞ்சிய தேறிய ஒன்றுசேர்ந்த அங்கீகரிக்கப்படாத கணிக்கப்பட்ட இலாபம் மற்றும் இழப்புக்களை மாத்திரம் அங்கீகரிக்கின்றது.

இதன் விளைவாக, நிதியியல் நிலைமையின் வங்கிக் கூற்று, அங்கீகரிக்கப்படாத தேறிய கணிப்பு இலாபங்களினதும் இழப்புக்களினதும் குறிப்பிடத்தக்கப் பகுதியை பிரதிபலிப்பதாக இருக்கவில்லை.

இம்முறையானது திருத்தப்பட்ட ப.க. நியமம் 19இன் கீழ் இனிமேல் அனுமதிக்கப்படாதென்பதுடன் இதன் காரணமாக வங்கியானது, ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்றிலுள்ள மொத்தத்தில் அவை நிகழ்ந்த காலப்பகுதியில் கணிக்கப்பட்ட இலாபங்களையும் இழப்புக்களையும் அங்கீகரிப்பதற்காக அதன் கணக்கீட்டுக் கொள்கைகளை மாற்றியிருக்கின்றது.

பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 19 (2011இல் திருத்தப்பட்டது) உம் கூட மிக விரிவான வெளிப்படுத்துகைகளை தேவைப்படுத்துகின்றது. இவை குறிப்பு 43இல் தரப்பட்டுள்ளதுடன், அனுமதிக்கப்பட்ட பின்வரும் விலக்கல்களுடன் சேர்த்து, பின்னோக்கி பிரயோகிக்கப்பட்டுள்ளது.

- மற்றைய சொத்துக்களின் கொண்டிருக்கும் பெறுமதி, 2012 சனவரி 1இற்கு முன்னர் உள்ளடக்கப்பட்ட ஊழியர் நன்மை செலவில் ஏற்பட்ட மாற்றங்களுக்காக சீராக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பீட்டு காலப்பகுதிக்காக (2012 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு) கட்டாய நன்மைகள் கடப்பாடுகளுக்கான உணர்திறன வெளிப்படுத்துகைகள் தரப்படவில்லை.

பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 19 இற்கான திருத்தங்கள் மதிப்பீட்டு இலாபங்கள் மற்றும் இழப்புக்களின் அதாவது வீச்சுப் பொறிமுறை அங்கீகரித்தலின் வேறுபாட்டிற்கான விருப்பத்தேர்வினை அகற்றுகிறது. வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைகள் திட்டத்தின் பெறுமதியில் ஏற்பட்ட அனைத்து மாற்றங்களும் இலாபம் அல்லது நட்டத்திலும் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திலும் காட்டப்படும். இந்நியமம் நடைமுறைக்குவரும் திகதி 2013 சனவரி 1 ஆக இருக்கும்.

வங்கியானது பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 19 இனை இந்த ஆண்டில் முதல் முறையாக பிரயோகிப்பதுடன் இது முன்னைய நிதியியல் கூற்றுக்கள் மீளத் தயாரிக்கப்படுவதை தேவைப்படுத்துகின்றது. நியமத்தில் கூறப்பட்ட மாற்றத்திற்கான ஏற்பாடுகளின்படி ஒப்பிடக்கூடிய இதற்கு முன்னரான காலம் 2012 சனவரி 1 ஆக இருப்பதுடன் ஒப்பிடக்கூடிய எண்தொகைகள் இதன்படி நிதியியல் நிலைமைக் கூற்றில் மீளக்குறிப்பிடப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றுக்களை பாதித்த முக்கிய மாற்றங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திலுள்ள ரூ.592.4 மில்லியன் (2012இல் - ரூ.4,619.2 மில்லியன்) இனங்காணப்படாத மதிப்பீட்டு (இலாபங்கள்)/ இழப்புக்களை இனங்காணுதல்.

| முன்னர் அறிக்கையிடப்பட்ட மீதிகளை மீளக் குறிப்பிடல் (2012): | மீளக் குறிப்பிடப் பட்டவை ரூ.000 | முன்னர் ரூ.000 |
|---|---|---|
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டப் பொறுப்புக்கள் | 3,832,688 | - |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டச் சொத்துக்கள் | - | 964,379 |
| ஒதுக்குகள் | 147,463,952 | 152,053,840 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட தொகை | 4,619,242 | - |

| முன்னர் அறிக்கையிடப்பட்ட மீதிகளை மீளக் குறிப்பிடல் (2011): | மீளக் குறிப்பிடப் பட்டவை ரூ.000 | முன்னர் ரூ.000 |
|---|---|---|
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டப் பொறுப்புக்கள் | - | - |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டச் சொத்துக்கள் | 1,020,925 | 991,571 |
| ஒதுக்குகள் | 133,759,146 | 133,729,792 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட தொகை | (29,354) | - |

**2.3.2 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 13 சந்தைப் பெறுமதி அளவுகள்**

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 13, அனைத்துச் சந்தைப் பெறுமதி அளவுகளுக்குமாக பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமத்தின் கீழ் ஒற்றை மூல வழிகாட்டலொன்றினை நிறுவியது. நிறுவனமொன்று சந்தைப் பெறுமதியினை பயன்படுத்துமாறு தேவைப்படுத்தப்படும் பொழுது பன்னாட்டு நிதிய அறிக்கையிடல் நியமம் 13, மாற்றமடையாது. எனினும், ப.நி.க. நியமத்தினால் தேவைப்படுத்தப்படும் பொழுது அல்லது அனுமதிக்கப்படும் பொழுது நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியை எவ்வாறு அளவிடுவது என்பன மீதான வழிகாட்டலை வழங்கும்.

பன்னாட்டு நிதிய அறிக்கையிடல் நியமம் வெளியேறும் விலையில் சந்தைப் பெறுமதியினை வரை விலக்கணம் செய்கிறது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 13 வழிகாட்டலின் விளைவாக வங்கி, சந்தைப் பெறுமதியினை, குறிப்பாக பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதி அளவிற்கான செயலாற்றமல்லா இடர்நேர்வுகள் போன்ற அதன் மதிப்பீட்டு உள்ளீடுகளின் சந்தைப் பெறுமதிகளின் அளவுகளுக்காக அதன் கொள்கைகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 13உம் கூட மேலதிக வெளிப்படுத்துகைகளை தேவைப்படுத்துகிறது.

பன்னாட்டு நிதிய அறிக்கையிடல் நியமம் 13இன் பிரயோகம் வங்கியின் சந்தைப் பெறுமதி அளவுகளில் பொருண்மியம் மிக்க தாக்கமெதனையும் கொண்டிருக்கவில்லை. தேவையானவிடத்து, தென் சந்தைப் பெறுமதிகள் தீர்மானிக்கப்பட்டதோ அதன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தனிப்பட்ட குறிப்புக்களில் வழங்கப்பட்டன. சந்தைப் பெறுமதி அதிகாரம் குறிப்பு 44இல் தரப்பட்டுள்ளது.

2.4 நியமங்கள், விளக்கங்கள் மற்றும் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாத பிரசுரிக்கப்பட்ட நியமங்களுக்கான திருத்தங்கள்

விடுக்கப்பட்டவெனினும், வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் விடுக்கப்படுகின்ற திகதி வரை நடைமுறைக்கு வராத நியமங்கள் மற்றும் விளக்கங்கள் கீழே எடுத்துக்காட்டப்படுகின்றன. ஏற்புடைத்தானவிடத்த, இவை நடைமுறைக்கு வரும் பொழுது அவற்றைப் பின்பற்றுவதற்கு வங்கி எண்ணியுள்ளது.

2.4.1 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 நிதியியல் சாதனங்கள்

வழங்கப்பட்டவாறு பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9, பின்பற்றப்படும் திகதி பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39இனை நீக்கிவிடுவது தொடர்பாக அண்மையில் விடுக்கப்பட்ட வெளிப்படுத்துகை வரைவிற்கு உட்பட்டிருந்த போதும் கூட பன்னாட்டு கணக்கீட்டு நியமத்தின் முதலாவது கட்டடத்தினை பிரதிபலிப்பதுடன் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வு மற்றும் அளவிடல்களுக்கு பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39இல் காணப்படும் வரைவிலக்கணத்திற்கேற்ப பிரயோகிக்கப்படுகிறது. நியமமானது முதலில் 2013 சனவரி 1 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பித்த ஆண்டு காலப்பகுதிக்கு நடைமுறையிலிருக்கும். எனினும் பன்னாட்டு நிதியிடல் அறிக்கையிடல் நியமம் 9 இற்கான திருத்தத்தில் கட்டாயமாக நடைமுறைக்குவரும் திகதியும் 2011 திசெம்பரில் விடுக்கப்பட்ட பரிமாற்ற வெளிப்படுத்துகையும் நடைமுறைக்குவரும் கட்டாய திகதியை 2015 சனவரி 01இற்கு நகர்த்தியது. அதனைத் தொடர்ந்து வந்த கட்டங்களில் சபை பெறுமதி இழப்புக்களையும் காப்பீட்டுக் கணக்கீடுகளையும் கட்டுப்படுத்தும். வங்கியானது ஒப்பீட்டு தோற்றப்பாட்டினை பிரசன்னப்படுதும் பொழுது, மற்றைய கட்டங்களுடன் இணைந்த விதத்தில் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இன் முதலாவது கட்டத்தினை பின்பற்றுவதன் தாக்கத்தினைக் கணியப்படுத்தும்.

3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

3.1 வெளிநாட்டு நாணய மாற்றுவீதங்கள்

வங்கியின் நடைமுறை மற்றும் சமர்ப்பண நாணயம் இலங்கை ரூபாவாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளுக்கு ஏற்புடையதான நடைமுறை நாணயத்திலேயே பதிவு செய்யப்பட்டன. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் திகதியில் ஏற்புடையதாகவிருந்த செலாவணி வீதத்திற்கேற்ப இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான

| | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | **116.6709** | 132.2409 |
| 1 கனேடிய டொலர் | **122.7324** | 127.8255 |
| 1 யூரோ | **180.4522** | 168.1257 |
| 1 யப்பானிய யென் | **1.2459** | 1.4799 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | **201.3550** | 195.311 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | **215.5790** | 205.4728 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | **130.7530** | 127.1608 |
| 1 சீன றென்மின்பி (கரைகடந்த) | **21.5800** | 20.4373 |

இலங்கை ரூபா செலாவணி வீதங்கள் பின்வருமாறு:

நிதியல்லாத விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டுச் செலாவணியின் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் அளவிடப்பட்டுள்ளது.

3.2 சந்தைப் பெறுமதி அளவுகள்

வங்கி ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் காணி, கட்டடம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சந்தைப் பெறுமதியில் அளவிடுகின்றது. அத்துடன், பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி குறிப்பு 44இல் வெளிப்படுத்தப்பட்டன.

சந்தைப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களுக்கேயான கொடுக்கல்வாங்கல்களின் பொருட்டு பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். சந்தைப் பெறுமதி அளவீடு சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அநுகூலம் நிறைந்த சந்தை

முதன்மை அல்லது மிக அநுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சந்தைப் பங்கேற்பாளர்களின் ஊகத்தினைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றன. சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சந்தைப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் பொருளாதாரத்தில் கொண்டுள்ள சிறந்த ஈடுபாடுகளில் அவர்களது ஊகங்களில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை விலையிடும் பொழுது பயன்படுத்தப்படுகிறது. நிதியல்லாச் சொத்தொன்றின் சந்தைப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்தில் சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்தில் சிறந்த முறையில் பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கணக்கில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமான மதிப்பீட்டு நுணுக்கங்களைப் பயன்படுத்துவதுடன் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான சந்தைப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சந்தைப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சந்தைப் பெறுமதிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு பொதுவாக சந்தைப் பெறுமதியின் அளவிடலுக்குப் போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட(சீராக்கப்படாத) சந்தை விலைகள்

மட்டம் 2 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சந்தைப்

பெறுமதியினை அளவிடுவதற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு நேரடியாகவோ மறைமுகமாகவோ அவதானிக்கப்படுதல்

மட்டம் 3 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சந்தைப் பெறுமதியினை அளவிடுவதற்குக் குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு அவதானிக்கப்பட முடியாதவை.

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் மாற்றல்கள் வகைகளின் மீள்மதிப்பீட்டின் மூலம் (பொதுவாக சந்தைப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) ஒழுங்கமைப்பிலுள்ள மட்டங்களுக்கிடையில் நிகழ்ந்திருக்கின்றன.

### 3.3 நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

வங்கியானது, நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன், இணைந்த வருமானம் மற்றும் செலவுகளையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், ரூபா நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந் நடவடிக்கைகளைத் தனித்தனியாக விளக்குவதன் மூலம் வங்கியின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைந்து அறிக்கையிடுதல் நிதிக் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங்காணப்பட்டதுடன் இச் செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் அனைத்து கிரமமான வரியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் முறையே வர்த்தகம் நடைபெற்ற திகதியைக் கொண்டு இனங்காணப்படுகின்றன. கிரமமான வரியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் என்பன பொதுவான ஒழுங்குவிதிகளில் அல்லது சந்தையின் மரபுவரி முறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் விநியோகத்தைத் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளாகும்.

#### 3.3.1 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள்

வர்த்தகப்படுத்தக் கூடிய நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள "பிணையங்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்டு சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றி கூற்றில் வர்த்தகப்படுத்தக்கூடிய பிணையங்கள் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

பிணையம் வங்கிக்குச் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம் அல்லது நட்டம் விலை மீள் பெறுமதியிடலிலிருந்து பெறப்படாத இலாபமாக / (நட்டமாக) அறிக்கையிடப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக / (நட்டமாக) அறிக்கையிடப்படும்.

#### 3.3.2 வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள்

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒதுக்குகளின் கீழ் பிணையங்களின் விற்பனைக்காகவுள்ள பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளங் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபமும் நட்டமும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கப்படும் வரை அல்லது வேறு விதமாக இதனை அகற்றும் வரை அல்லது முதலீட்டினை இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை மூலதனப் பங்கின் (நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏனைய ஒதுக்குகளின் கீழ் காட்டப்பட்டுள்ள) தனியொரு கூறாக இனங்காணப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் முன்னைய மூலதனப் பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானமாக உள்ளடக்கப்படும்.

#### 3.3.3 நிதிப் பெறுதிக் கருவிகள்

வங்கிகள் பெறுதிகளை குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் என்பனவற்றிற்காக பயன்படுத்துகின்றனவேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. அத்தகைய நிதிப் பெறுதிக் கருவிகள் நியாயமான பெறுதியில் குறிப்பிடப்படுகின்றன. முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களின் நியாயப் பெறுமதியாக, இதையொத்த முதிர்ச்சித் தோற்றப்பாட்டுடனான ஒப்பந்தங்களுக்கான முன்னோக்கிய நடைமுறை செலாவணி வீதத்துடன் தொடர்புடைய வீதங்களில் கணிக்கப்படுகின்றன. இலாப அல்லது நட்டம் நிலையிலுள்ள அனைத்துப் பெறுமதிக் கருவிகளும் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தின் நிலுவையில் அல்லது நிதி நிலைமை பற்றிய கூற்றிலுள்ள விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

#### 3.3.4 "1 நாள்" வேறுபாடு

கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாசனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான திகதியை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை (ஒரு நாள் வேறுபாடு) தேறாத விலை மீள்மதிப்பீடுகள்" இலிருந்தான 'இலாபம்/ (இழப்பு) ஆக இனங்காணும்' அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சந்தைப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள் அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**3.3.5 பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்**

வங்கியானது இலங்கை அரசின் முகவராக செயற்படுவதனை காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில், ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு நிதி நிலைமை பற்றிய கூற்றின் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

**3.3.6 காசும் காசுக்குச் சமமானவைகளும்**

காசும் காசுக்குச் சமமானவைகளும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலுள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

உள்நாட்டு நாணயங்களினது நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் ஏலத்தில் கோரப்படாத பகுதியின் கொள்வனவு உட்பட அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நிதிக் கொள்கைப் பொறிமுறையாக வங்கியினால் பிரயோகிக்கப்படுகிறது. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந் நிதிக்கூற்றில் 37, 38 ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தல் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்த விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி காசு/கொடுப்பனவுக் கட்டளைகள் ஊடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்புடன் அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/வெளிநின்ற கொடுப்பனவுக் கட்டளைகள் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

**3.3.7 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல்வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

**3.3.8 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்**

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இ.ம.வ. பிணையங்களை வழங்குகின்றது.

வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. வழங்கப்பட்ட விலைக்கும் முகப்புப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் செலவாகப் பதிவு செய்யப்படுகின்றது.

**3.3.9 இலங்கை அரச பிணையங்கள்**

வங்கியின் முதலீட்டுப்பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகின்றது. இவை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதனால் நிதி நிலைமை பற்றிய கூற்றில் இச் சொத்துப்பட்டியல் கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதியப்படுகிறது.

**3.3.10 அரசிற்கான முற்பணங்கள்**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

**3.3.11 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் வழங்கப்பட்ட ஆரம்பத் தொகையிலிருந்து அறவிடமுடியாத தொகை ஏதுமிருந்தால் அதைக் கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன் (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொடுப்பனவுத் தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப் பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிடமுடியாக் கடன்கள் அடையாளம் காணப்படும் போது பதிவழிக்கப்படுகின்றன.

**3.3.12 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்**

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளுக்காக காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது வங்கியிடமிருந்து அப் பிணையங்களை திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்கள்) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் பொதுவான உத்தரவாதமெனப்படும்.

கடன்பட்ட பிணையங்கள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத பிணையங்களினதும் சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. தரகு ஒன்று சேர்ந்த அடிப்படையில் செலவிடப்படுகின்றன.

சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றம் செய்யப்படாதவிடத்து கடன் வழங்கல் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல் நிதியியல் நிலைமைக் கூற்றில் மட்டுமே பிரதிபலிக்கப்படும்.

**3.3.13 பணியாளர்களுக்கான கடன்கள்**

வங்கியின் பணியாளர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். மேற்படி கடன்கள் ப.க..நி. 39இன் பிரகாரம் கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி நியாயமாகப் பெறுமதியிடப்பட்டுள்ளன.

**கழிவு வீதம்** - மேற்படி வீதமானது இ.ம.வ. யின் (பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால்) ஐ.அ.டொலர்-வர்த்தக வட்டி வீதத்துடன் வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு 1 சதவீத இடர்நேர்வுத் தவணைத் தொகையையும் சேர்த்து நீண்டகாலப் பணவீக்க இலக்கின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு கழிவு வீதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திற்கும் இடையிலுள்ள பணியார்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதியின் வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் கடன்தீர் நிதியாக தீர்க்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக் கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சந்தைப் பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் 2008 ஆண்டிலிருந்து வழங்கப்பட்டதாகக் கருதுதல்.
- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

மத்திய வங்கி கடன் முகாமைத்துவ முறைமையினை இலகுபடுத்தும் நோக்குடன் கணனிக்கான கடன்களையும் வகை 'பீ' இன் கீழான இரண்டு கடன்களையும் ரூ.300,000 கொண்ட மொத்தக் கடன் வரையறையுடன் மீள்கொடுப்பனவுக் காலத்தினை பத்தாண்டுகளாக்கியதன் மூலம் கடன்பாட்டாளருக்கு தனியொரு கடனாக மாற்றியது. மேலும், இவ்வகையின் கீழ் புதிய கடனுடன் சேர்த்து வெளிநின்ற கடன் நிலுவை புதிய கடன் எப்பொழுது வழங்கப்பட்டதோ அதிலிருந்து மீளஅட்டவணைப்படுத்தப்படும்.

**3.3.14 நிதிச் சொத்துக்களின் தேய்வடையக்கூடிய தன்மை**

ஒவ்வொரு நிதி நிலைமை கூற்றுத் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து தேய்வடையக்கூடியதா என வங்கி மதிப்பிடுகிறது.

**3.3.15 கடன்தீர் கிரயத்திலுள்ள சொத்துக்களின் அளவு**

கடன் மீதான நட்டத்தின் தேய்வடையக்கூடிய தன்மை மற்றும் கடன்தீர் நிதிக் கிரயத்தின் பெறுகைகள் எடுத்துச் செல்லப்படுதல் ஏற்பட்டு, ஒரு புற உண்மைச்சான்று இருக்குமானால் அந்த நட்டத் தொகையானது சொத்துக்கள் எடுத்துச் செல்லும் தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்கால பெறுமதிக்கும் இடைப்பட்ட வித்தியாசமாக அளவிடப்படுகிறது. (ஏற்படாத எதிர்காலக் கடன் நட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை) நிதிச் சொத்துக்களின் அசல் தாக்குமிகு வட்டி வீதம் கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. (பயனுறு வட்டி வீதம் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டளவில் கணிக்கப்பட்டுள்ளது). சொத்தின் எடுத்துச் செல்லும் தொகையானது ஒன்றில் நேரடியாகவோ அன்றேல் படிகளின் கணக்கை உபயோகிப்பதன் ஊடாகவோ குறைக்கப்படும் வருமானக் கூற்றிலே நட்டத் தொகை இனங்காணப்படும்.

தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச்சொத்துகளுக்காக தனிப்பட்ட முறையிலுள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளாக, தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் பெறாத நிதிச் சொத்துக்களுக்காக தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக உள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளா என முதலில் வங்கி மதிப்பிடுகிறது. முக்கியமானதோ இல்லையோ, தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு நிதிச் சொத்துக்கு முடக்கம் இருப்பதற்கான புறவுண்மைச் சான்றுகள் இல்லையென அது தீர்மானிக்குமிடத்து, அச்சொத்தானது ஒத்த கடன் அபாயக் குண அம்சங்களைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் குழுவில் உள்ளடக்கப்படுகிறது. அத்துடன் நிதிச் சொத்துக்களின் குழுவானது முடக்கத்துக்கு உள்ளானது என கூட்டாக மதிப்பிடப்படுகிறது. முடக்கத்திற்காக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் அவைகளுக்கு முடக்க இருப்பு இருப்பின் அல்லது இனங்காணப்பட்டவையாகத் தொடர்ந்து இருப்பின் முடக்கத்தின் கூட்டு மதிப்பீட்டிற்குள் அவைகள் உள்ளடக்கப்படமாட்டாது.

தொடர்ந்து வந்த ஒரு காலப்பகுதியில் தேய்வடையக்கூடிய இழப்பின் தொகை வீழ்ச்சி அடைந்தால் அந்த வீழ்ச்சியை புறவுண்மை ரீதியாக முடக்கம் இனங்காணப்பட்டதன் பின்பாக கடந்த ஒரு நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடியும். முன்னதாக இனங்காணப்பட்ட முடக்க இருப்பும் நீக்கப்படும். அதைத் தொடர்ந்து வந்த தேய்வடையக்கூடிய இழப்பின் நீக்குதலும் சொத்தின் எடுத்துச் செல்லும் பெறுமதி, அதனுடைய கடன்தீர்

நிதிக் கிரயத்தை அந்த நீக்குதல் திகதியில் விஞ்சிவிடாது இருக்கும் அளவிற்கு வருமானக் கூற்றிலே இனங்காணப்படுகின்றது.

**3.3.16 விற்பனைக்குள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்பு**

விற்பனைக்குத் தயாராகவுள்ள ஒரு சொத்து முடக்கப்படுமாக இருந்தால் அதனுடைய கிரயத்திற்கும் (எந்தவொரு முதன்மைக் கொடுப்பனவும் கடன்தீர் நிதியும் நீங்கலாக) அதன் தற்போதைய நியாயப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசத்தை உள்ளிட்ட தொகையானது, இலாபத்திலோ நட்டத்திலோ முன்னதாக இனங்காணப்பட்ட எந்தவொரு முடக்க இழப்பையும் கழித்து, நிகரச் சொத்துக்களின் பெறுமதியிலிருந்து வருமானக் கூற்றிற்கு மாற்றப்படுகிறது. விற்பனைக்குத் தயாராகவுள்ளதாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களின் கருவிகள் சம்பந்தமான நீக்குதல்கள் இலாபத்தில் இனங்காணப்படுவதில்லை. கடன் கருவிகளின் மீதான முடக்க நட்டங்களின் நீக்குதலானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நீக்கப்படுகிறது. அந்தக் கருவியின் நியாயப் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுவதானது புறவுண்மை ரீதியாக இலாபம் அல்லது நட்டத்தில் முடக்க நட்டம் இனங்காணப்பட்ட பின்பாக இடம்பெறும் நிகழ்வோடு தொடர்புடையதாக இருக்க முடியும்.

**3.3.17 வெளிநாட்டு நாணய நியமத்திலான பொறுப்புக்கள்**

வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள், கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நியதிப் பொறுப்புக்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகிறது. வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றத்தின் விளைவாகத் தோன்றும் வருமானமும் நட்டமும் உடனடியாகவே வருமானக் கூற்றில் செலவுகளாக இனங்காணப்படுகின்றது.

பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது நட்டமோ விலை மீள்பெறுமதி யிடலிலிருந்தான பெற்றுக் கொள்ளப்படாத நட்டமாக (இலாபமாகப்) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பின் மீள்கொடுப்பனவின் ஊடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நட்டங்களாக (இலாபமாக) பதிவு செய்யப்படுகிறது.

**3.3.18 நிதியியல் உத்தரவாதங்கள்**

நிதிப் பிணைகள் ஏனைய செலுத்தப்படத்தக்க நியாயப் பெறுமதியின் கீழ் நிதிக்கூற்றுக்களில் நியாயப் பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஒவ்வொரு பிணையின் கீழான வங்கியின் பொறுப்பும், பிணையின் விளைவாக எழுகின்ற நிதிக் கடப்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றைத் தீர்ப்பதற்குத் தேவையான செலவினங்களின் மிகச் சிறந்த மதிப்பீட்டின் மீதே அளவிடப்படுகின்றன.

**3.3.19 ஏனைய நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயத் தாள்கள், காசு வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப்படுகின்றன.

**3.4 ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்**

**3.4.1 தங்கம்**

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக் கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. ஆதலால், 2013 திசெம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறு வங்கியானது அதன் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக ரூ.115.6 பில்லியனை (ஒதுக்கப்பட்டது ரூ.95.6 பில்லியன் மற்றும் ஒதுக்கப்படாதது ரூ.20 பில்லியன்) தங்கத்தில் வைத்திருந்தது. மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருந்தமையால் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதோடு, தங்கமானது நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுகளுக்கு மாற்றப்பட்டன. வருமான ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தீர்க்கப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டன.

**3.4.2 இருப்புக்கள்**

இருப்புக்கள் குறைந்த கிரயச் செலவிலும் விற்றுப் பெறக்கூடிய பெறுமதியிலும் வைத்திருக்கப்படுகின்றன. கிரயச் செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. கொடுப்பனவு மெதுவாக அசையும் இருப்புகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

**3.4.3 ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும்**

ஆதனம், பொறி, உபகரணம், நாளாந்தப் பராமரிப்புச் செலவுகளைத் தவிர்த்து பெறுமானத் தேய்வு ஏற்பாட்டைக் கழித்து பெறுமதி முடக்கத்தை ஒன்றுசேர்த்துக் கிரயத்தில் கூறப்பட்டுள்ளது. இனங்காணல் விடயத்தை பூர்த்தி செய்வதற்காக இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவீனங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது. காணியும் கட்டடங்களும் கட்டடம் மீதான பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு மீள்பெறுமதியிடல் திகதியை தொடர்ந்தான முடக்கம் அறவிடப்பட்டு நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.

சொந்தக் காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க இருப்புக்காலம் தொடர்பில், தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது.

| சொத்தின் வகை | பயனுள்ள இருப்புக் காலம் |
|---|---|
| சொந்தக் காணியின் மீதான கட்டடங்கள் | 50 வருடங்களுக்கு மேல் |
| குத்தகைக் காணிகள் மீதான கட்டடங்கள் | குத்தகைக் காலத்திற்கு மேல் |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 வருடங்கள் |
| உந்து ஊர்திகள் | 5 வருடங்கள் |
| கணனி வன்பொருள் | 4 வருடங்கள் |
| ஏனையவை | 3 வருடங்கள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் சுட்டிக்காட்டும் பொழுது பொறிகளினதும் உபகரணங்களினதும் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் முடக்கத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. கிரயத்தின் ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் எடுத்துச் செல்லப்படுகின்றன. இது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் நியாயப் பெறுதியாக உள்ள பொழுது, கட்டடங்கள் மீதான பின் தொடர்ந்து வந்த ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமானத் தேய்வுகளும், பின்தொடர்ந்து வந்த ஒன்று சேர்க்கப்பட்ட முடக்க நட்டங்களும் கழிக்கப்பட்டு இருக்கும்.

வங்கியின் காணி மற்றும் கட்டிடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கொரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும்.

எந்த மீள்மதிப்பீடு மிகையும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நிகரச் சொத்துப் பிரிவில் உள்ளடக்கப்பட்டு, மீள்மதிப்பீட்டு

ஒதுக்கில் வரவு வைக்கப்படுகிறது. வருமானக்கூற்றிலே முன்னதாக இனங்காணப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சி, மறுதலையாகாத அளவிற்கு, அந்த நிலைமைகளிலே அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. அதே சொத்தின் மீதான நேரடியாக குறைநிரப்பும், ஒரு முந்திய தொகையின் பற்றாக்குறை மீள்மதிப்பீட்டு மறுதலையின் மிகைக்கு எதிராக நேரடியாக மிகை நிரப்புவது தவிர்ந்த நிலைமைகளில், ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. கழிக்கும் நிலையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், தக்கவைத்துக் கொள்ளும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது. ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணம், அகற்றுகையின் போது அல்லது எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது இனங் காணப்படுகிறது.

அச்சொத்தின் இனங்காணல் முடிவடைவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை நடைமுறைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்து இனங்காணப்படல் முடிவடைந்த வருடத்தின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. மிகுதியாகவுள்ள சொத்தின் பெறுமானங்கள் பயனுள்ள இருப்புக் காலங்கள் மற்றும் முறைகள் மீள்பார்வை செய்யப்படுவதுடன் பொருத்தமாய் இருப்பின் கிரமமாகத் தக்கவாறு அமைத்துக் கொள்ளப்படுகிறது.

### 3.4.4 அருவச் சொத்துக்கள்

கணனி வன்பொருள்களில் முழுமையாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயச் செலவில் இனங்காணப்பட்டுள்ளன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து 4 வருட கால பயனுள்ள ஆயுட்கால அடிப்படையில் திரண்ட கடன்தீர் நிதி எவையேனும் இருப்பின் கழிக்கப்பட்டு கிரயச் செலவில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

### 3.4.5 பெறக்கூடியவை

புலப்படத்தக்க சான்றுகளின் அடிப்படையில், பெறக்கூடியவை ஐயக்கடனுக்கான ஏற்பாட்டினைச் செய்த பின்னர் எதிர்பார்க்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

### 3.4.6 நானாவிதச் சொத்துக்கள்

ஏனைய நானாவிதச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட பெறத்தக்க பெறுமதியில் மேற்கொள்ளப்பட்டன.

### 3.4.7 நிதிசாராச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

சூழ்நிலைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் முன்கொண்டு செல்லும் பெறுமதியில் முடக்கத்தை உண்டுபண்ணலாம் என்பதைக் காட்டுகின்றனவா என்பதையும் நிதிசாரா சொத்துக்கள் முடக்கப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதையும் அறிக்கை செய்யும் ஒவ்வொரு திகதியிலும் வங்கி மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்ளும். ஒரு சொத்தின் தேய்வடைந்ததாகக் கருதப்படுவதுடன் அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்தெழுதப்படும்.

### 3.4.8 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக் கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக் கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியும். ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

### 3.4.9 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதி நிலைமை பற்றிய கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

### 3.4.10 ஓய்வூதியம் மற்றும் தொழில்நிலைக்குப் பிந்திய ஏனைய நலத்திட்டங்கள்

வங்கியால் கையாளப்படும் ஊழியர் நிலைக்குப் பிந்திய ஓய்வூதியம் மற்றும் ஏனைய நலத்திட்டங்கள் குறிப்பு 43இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.4.11 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பிந்திய மருத்துவ நலன்கள் போன்ற குறித்துரைக்கப்பட்ட நலத்திட்டங்களை வங்கி செயற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளியும் பிறிதாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர். எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து, ஒவ்வொரு திட்டத்திற்கும் குறித்துரைக்கப்பட்ட திட்டங்களின் கீழ் நன்மை வழங்கும் செலவு நிர்ணயிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகிறது.

### 3.4.12 நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள்

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்களாகும்.

### 3.4.13 கொடைகள்

கொடைகள் (பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்காக உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் நியாயமான பெறுமதியில் இனங்காணப்பட்டு, மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கணக்குக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, நியாயப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

### 3.4.14 ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்று சேரும் விடுவிப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**3.4.15 தொழிற்பாட்டிலுள்ள குத்தகைகள்**

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையைக் கருத்திற் கொண்டு வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது.

**3.4.16 வரி விதிப்பு**

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 118ஆம் பிரிவின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், வங்கியானது 2013ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பொருளாதார பணிகள் விதிப்புச் (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி, பொருளாதார பணிகள் விதிப்பு விலக்களிக்கப்பட்டதுடன், 2013ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி நிதியியல் பணிகள் வழங்கல்கள் மீது பெறுமதிசேர் வரியானது விலக்களிக்கப்பட்டது.

**3.4.17 வருமானங்களும் செலவினங்களும்**

வங்கிக்குப் பொருளாதார நன்மைகள் பெரும்பாலும் கொண்டு வரக்கூடியதாகவும் அவ் வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகும் உள்ள போது வருமானமானது இனங்காணப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் இனங்காணப்பட்டுள்ளன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்:

**3.4.17.1 வட்டி**

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் கொடுபட வேண்டிய கழிவுகளையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

**3.4.17.2 பங்கிலாபங்கள்**

பங்குடமையாளர்கள் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டதுடன் பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகிறது.

**3.4.17.3 பல்தரப்பட்டவை**

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் ஒன்று திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

தற்செயலான நடவடிக்கை மற்றும் முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், நட்டங்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

**3.4.18 கூற்றுச் சாராத நிதியியல் நிலைமை விடயங்கள் உட்பட எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்**

நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு வெளிவாரியான விடயங்களைப் பிரதிபலிக்கின்ற படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு வெளிவாரியான விடயங்களாக இனங்காணப்பட்டு உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச் சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றது.

**4. நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க திருத்தப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் அல்லது பின்பற்றுவதற்கு அங்கீகாரமளிக்கப்படும் கொள்கைகளை அல்லது நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன ஒப்படைக்கப்பட்டதுடன் பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிர்வாகம் என்பவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறை என்பவற்றின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறை முகவராண்மையாகவும் தொழிற்படுகிறது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்
- நாணய வெளியீடு
- நிதி முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துதல்
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும், முகாமைப்படுத்தலும், மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்துதலும்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குக் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படும்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற நோக்கத்துடனும் அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக்கொள்ள முடியும். மேற்படி நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருனைக்கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

4.1 **வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்**

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழான இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயங்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணய இனங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண் யப்பானிய யென் மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன காணப்பட்டன. இவ் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதிக் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

4.2 **உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்**

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் துறையிலிருந்து நிதியங்களை மீளப் பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்று வைத்திருக்கப்படுகின்றது. வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

4.3 **நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை

| | 2013<br>ரூபா 000 | 2012<br>ரூபா 000 |
|---|---|---|
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள் | **94,137,368** | 169,312,604 |
| விற்பனைக்குள்ள முதலீடுகள் | **357,531,750** | 386,761,690 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **451,669,118** | 556,074,294 |

மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதிக்கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

5. **வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்**

6. **பெறுதி நிதியியல் சாதனங்கள்**

(அ) கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதியினைத் தருகின்றது. மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பெயரளவுத் தொகை, பெறுதித் தொகை, சொத்துக்கள் தொடர்பான வீதங்களை அல்லது சுட்டெண்ணினை சுட்டுகின்றதாக இருந்ததுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும்

| | 2013 | | | 2012 | | |
|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | பெயரளவு தொகை | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | பெயரளவு தொகை |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | 5,670,258 | 4,703,881 | 360,929,041 | 3,989,701 | 3,250,937 | 205,552,318 |
| முன்னோக்கிய வெளி நாட்டுச் செலாவணி | - | 451 | 180,452 | - | 6,182 | 1,027,364 |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தெரிவுகள் | - | 11,478,950 | 119,808,712 | - | - | - |
| | 5,670,258 | 16,183,282 | 480,918,205 | 3,989,701 | 3,257,119 | 206,579,682 |

மாற்றங்களை அளவிடுமொன்றாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

ஆ) குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றங்கள், நாணயத் தெரிவுகள் மற்றும் முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய மேற்படி பெறுதிகள், பன்னாட்டு ஒதுக்குகளை பேணுவதற்கான நியதித் தேவை நோக்கங்களை வசதிப்படுத்துவதற்காக வங்கிகளால் பேணப்படும் பன்னாட்டு ஒதுக்குகளின் குறிப்பிட்ட இடர்நேர்வுகளை முகாமை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றனவேயல்லாமல் இத்தகைய பெறுதிகளின் திறந்த நிலைமையில் வர்த்தகப்படுத்தல் மற்றும் வைத்திருத்தலின் மூலம் இலாபம் உழைப்பதற்கான ஊக வணிகம் சார்ந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதில்லை. பெறுதிகள் சந்தைப் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதுடன், சந்தைப் பெறுமதியானது நேர்க்கணியமாக காணப்படும் போது சொத்துக்களாகவும் எதிர்க்கணியமாகக் காணப்படும் போது பொறுப்புக்களாகவும் பதியப்படுகிறது.

இ) பெறுதிகள் அவற்றின் ஆரம்பத்தில் மாற்றல்களேதுமற்ற அல்லது சிறியளவிலான மாற்றல்களுடனான பரிசீலனையுடன் வாக்குறுதிகளின் பரஸ்பர பரிவர்த்தனைகளில் அடிக்கடி ஈடுபடுகின்றன. எனினும், இச்சாதனங்கள், இலாபம் உழைப்பதற்கான இடர்நேர்வுகள் மற்றும் பெறுதிகளின் ஊக வணிகம் சார்ந்த பட்டியல்களுக்கான உயர்ந்த தன்மையான ஒதுக்குகளுடன் உயர்ந்தளவில் தொடர்புபடுகின்றன. இந்த நிலைமையில், சொத்துக்களின் பெறுமதி அல்லது வீதங்கள் அல்லது பெறுதி ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்ட சுட்டெண் என்பவற்றில் காணப்படும் ஒப்பீட்டு ரீதியான சிறிய நகர்வுகளிலும் கூட, வங்கியின் இலாபங்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். திறந்த நிலையை மூடுவதற்கு பரிவர்த்தனை நிலையம் ஒன்று இல்லாத சந்தர்ப்பங்களில் தடையற்ற சந்தையிலான பெறுதிகள் இடநேர்வுகளைக் கொண்டிருக்கலாம்.

(ஈ) அத்தகைய பெறுதிகளிலிருந்தான எதிர்பார்க்கப்பட்ட பயன்களை உறுதி செய்வதற்கு பன்னாட்டு ஒதுக்குகளிலுள்ள வங்கியின் சந்தை இடர்நேர்வுகளின் பொதுவான முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக வங்கி வெளிப்படுத்துகை மிக நெருக்கமாக கண்காணிக்கப்பட்டது.

(உ) வங்கியின் பெறுதிகள் சொத்துப்பட்டியலின் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியானது பன்னாட்டு ஒதுக்குகளை உறுதி செய்கின்ற ஒரு உபாயமொன்றாக நாணய பரஸ்பர பரிமாற்றங்களைக் கொண்டுள்ளது. பரஸ்பர பரிமாற்றல்கள் என்பது வட்டி வீதம், வெளிநாட்டு நாணய வீதம் அல்லது பங்குரிமை மூலதனச் சுட்டெண் போன்றொரு குறித்துரைக்கப்பட்ட அடிப்படையான சுட்டெண்களின் அசைவுகளுடன் தொடர்பான விதத்தில் குறித்துரைக்கப்பட்ட பெயரளவு தொகைகளின் அடிப்படையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் கொடுப்பனவுகளினை பரிமாற்றிக் கொள்வதற்கான இருதரப்பினர்களுக்கிடையிலான ஒப்பந்த ரீதியிலான உடன்படிக்கைகளாகும். நாணய பரஸ்பரங்களில், வங்கியானது குறிப்பிட்ட தொகையை ஒரு நாணய வடிவில் வழங்கி குறிப்பிட்ட தொகையை இன்னொரு நாணய வடிவில் பெறும்.

## 7. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் | **2,032,177** | 491,322 |
| ப.நா.நி அனுமதிப் பங்கு | **83,240,157** | 80,741,567 |
| ப.நா.நி யுடனான வைப்புக்கள் | **128,430** | 119,393 |
| **மொத்த ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்** | **85,400,764** | 81,352,282 |

**(அ) சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்**

சிறப்பு எடுப்பனவு உரிமைகளைக் (சிஎஉ) கொண்டிருத்த லென்பது, ப.நா.நி. அங்கத்தவர்களுக்கு எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக் கூடியதாயுள்ள நாணய வகைகளுக்கான நிலையான உரிமையாகும். அதாவது சிஎஉ வைத்திருப்பவர்களால் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைப் பரிமாறிக் கொள்ள முடியும். இவ்வங்கத்தவர்கள் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைத்திருப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் கடப்பாடுடையவர்களாதலாலும் அத்துடன் சிஎஉ முறைமையின் நெறிப்படுத்தல்களுக்கு ஏற்புடையதான நானாவிதப் பொறுப்புகளுக்கு மதிப்பளிப்பதற்கு கடப்பாடுடையவர்களாதலாலும் ஒதுக்குச் சொத்தாக சிஎஉ முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயத்தின் மீது சிஎஉ இற்குள்ள உரிமைக்கு இரண்டு விதத்தில் மதிப்பளிப்பதை ப.நா.நி. உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமைகளிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களைப் பெயரிடுவதன் மூலமும் மற்றும் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் அங்கத்தவர்களிடையே தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்வதன் மூலமுமாகும். மேற்குறிப்பிடப்பட்ட நாணயங்களில் நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு ஏற்புடையதான தினத்தில் வங்கி வைத்திருந்த மொத்தத் தொகை மேலே காட்டப்பட்டுள்ளது.

**(ஆ) ப.நா. நிதிய அனுமதிப் பங்கு**

ப.நா. நிதியத்தின் அடிப்படை மூலம் அனுமதிப் பங்காகும் (மூலதன உதவுதொகை). ப.நா.நி. வளங்கள் அதன் அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்றன. பரந்தளவில் ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையும் அதற்குச் சமமான நாடுகளின் அனுமதிப் பங்குத் தொகைகளும் கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் உதவுதொகை அல்லது அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும்.

(i) **உதவுதொகைகள்**: ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் பங்களிப்பானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும். அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய கூடியபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நிதியம் தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துக்களிலிருந்து (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) செலுத்துதல் வேண்டும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் நாணயத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும்.

(ii) **வாக்களிக்கும் உரிமை**: ப.நா.நி. தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் உரிமையானது அனுமதிப் பங்கின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் 250 அடிப்படை வாக்குகளுக்கும் அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர்.

(iii) **நிதியிடலை பெறுவதற்கான வசதி**: அங்கத்தவரால் பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குவிதிகள் மற்றும் விஸ்தரிக்கப்பட்ட திட்டங்களுக்கேற்ப அங்கத்தவரால் நடைமுறை ரீதியில் வருடாந்த அனுமதிப் பங்கின் 200 சதவீதமும் திரண்ட ரீதியில் 600 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு இவ் வசதி இதை விட அதிகரிக்கலாம்.

(iv) **சிஎஉ ஒதுக்கல்**: அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குத் தொகை தீர்மானிக்கப்படுகிறது.

எனவே, சிஎஉ பங்கு ஒரு சொத்தாகும். வங்கியினால் ப.நா. நிதியத்துடன் நடத்தப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் இலங்கை அரசின் முகவராண்மை என்ற ரீதியிலன்றி தனது அதிகாரங்களின் பிரகாரம் நடத்தப்படுவதால் ப.நா. நி. அனுமதிப் பங்கு வங்கியின் சொத்தாக அதன் நிதியியல் கூற்றுக்களில் காட்டப்படுகிறது. ப.நா.நி. அனுமதிப் பங்குக்காகச் செலுத்தப்பட வேண்டிய நாணயத் தொகை 19ஆவது குறிப்பில் அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**(இ) பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு**

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு (எ.நி. கணக்கு) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783 மில்லியனை மாற்றுவதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்பு வைப்பு மேற்கொள்ளப்பட்டது. எ.நி. கணக்கை முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக எ.நி. கணக்கில் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றுவதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. எ.நி. கணக்கிற்குப்

பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது.

**8. இலங்கை அரச பிணையங்கள்**

குறுங்கால அரச பிணையங்களின் பட்டியலானது நாணய விதிச் சட்டத்தின் 90(2) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி பேணப்பட்டது.

**9. அரசுக்கான முற்பணங்கள்**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் 89ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட ஒவ்வொரு முற்பணமும் ஆறு மாதத்திற்குள் மீளச் செலுத்தப்படுமெனில், அத்துடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீதியாயுள்ள மொத்த முற்பணத் தொகை, முற்பணம் வழங்கப்படுகின்ற வருடத்தினுள் இலங்கை அரசின் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் பத்து சதவீதத்தைத் விஞ்சாதிருப்பின் ஒன்று திரட்டிய நிதியத்தினால் ஏற்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுக்கு நிதியிடுவதற்காக இலங்கை அரசுக்கு நேரடியான அதேநேர முற்பணங்களை வழங்குவதற்கு மத்திய வங்கியினால் முடியுமாயுள்ளது. வங்கியினால் அவ்வாறு வழங்கப்பட்ட முற்பணங்கள் மீதியில் காட்டப்பட்டுள்ளது.

**10. ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் திட்டத்தின் கீழ் பெறத்தக்கவை | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **37,377** | 39,510 |
| - ஏனையவர்கள் | **546** | 607 |
| சுசகன சுனாமி கடன் திட்டம் கட்டம் I மற்றும் II | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **104,576** | 191,982 |
| - ஏனையவர்கள் | **17,794** | 63,301 |
| மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டத்தின் கீழ் பெறத்தக்கவை | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **1,242,405** | 1,576,139 |
| **கழிக்குக:** | | |
| ஐயத்திற்குரிய பெறத்தக்கவைகளுக்கான ஏற்பாடு | **(27,302)** | (27,302) |
| **தேறிய பெறத்தக்கவை** | **1,375,396** | 1,844,237 |

**ஐயத்திற்குரிய பெறத்தக்கவைகைளுக்கான ஏற்பாட்டிலுள்ள அசைவு பின்வருமாறு**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் | **27,302** | 27,302 |
| ஐயக்கடன்களின் பதிவழிப்பு | - | - |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **27,302** | 27,302 |

**11. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள்**

(i) திருத்தப்பட்டவாறான, இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 105 ஏ ற்கு அமைய, இலங்கை மத்திய வங்கி வர்த்தகத்தில் ஈடுபடுவதையோ அல்லது ஏதாவது வர்த்தக, கைத்தொழில் அல்லது ஏனைய நிறுவனங்களில் நேரடியான உரிமைகளைக் கொண்டிருப்பதையோ அல்லது அதன் வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது ஏனைய வங்கித்தொழில் நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்வதையோ குறிப்பாகத் தடை செய்கிறது. எனினும், நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித்தொழில் மற்றும் நிதி துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக் கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு இச் சட்டம் அங்கீகாரமளிக்கிறது.

(ii) மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் வங்கியின் நிதி நிலைமை பற்றிய கூற்றுத் தொடர்பான திகதியன்று உள்ளவாறான முதலீடுகள்

| முதலீட்டைப் பெறும் நிறுவனம் | வியாபாரம் | கொண்டிருக்கும் உடமை % 2013 | 2012 |
|---|---|---|---|
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **19.66** | 19.66 |
| பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | கொடுகடன் தரமிடல் | **10** | 10 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | தன்னியக்க நிதிய மாற்றல் | **7.5** | 7.5 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் ஏற்பாடு | **19.3** | 19.3 |

(iii) தொடர்பான நிறுவனங்களிலான முதலீடுகளின் ஏட்டுப்பெறுமதி பின்வருமாறு:

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | **5,845** | 5,845 |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | **29,500** | 29,500 |
| பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | **3,500** | 3,500 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | **2,250** | 2,250 |
| **நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான மொத்த முதலீடுகள்** | **41,095** | 41,095 |

**12 ஏனைய சொத்துக்கள்**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| நிதியங்களின் முதலீடு | **2,034,546** | 1,799,394 |
| தீர்ப்பனவுச் செலவில் அலுவலர் கடன்கள் | **4,400,751** | 3,767,064 |
| தீர்ப்பனவுச் செலவில் தொகுதிக் கடன்களில் முதலீடு | **8,237** | 7,273 |
| | **6,443,534** | 5,573,731 |

தொகுதிக் கடன்களில் செய்யப்பட்ட முதலீடுகள், மோர்கன்ரைல் கிறடிட் லிமிடெட்டினால் 1990 தொடக்கம் 1992 வரையிலான காலப்பகுதியில் பெறப்பட்ட மீள்நிதியிடல் கடன்களின் பகுதித் தீர்ப்பனவாக வங்கியினால் பெறப்பட்ட தொகுதிக் கடன்களை பிரதிபலிக்கிறது. இது 2011இல் பதிவழிக்கப்பட்டது.

வங்கியினால் இலங்கை சேமிப்பு வங்கியின் ரூ.10,839,500 மொத்தப் பெறுமதி கொண்ட தொகுதிக் கடன்கள் பெறப்பட்டதுடன் அது தீர்ப்பனவுச் செலவில் குறிப்பிடப்படுகிறது. தொகுதிக் கடனின் 10 ஆண்டுகள் மீட்கப்படாதவையாகவும், கீழ்நிலைப்படுத்தப்பட்டவையாகவும் மீட்கப்படாதவையாகவும் ஆண்டொன்றிற்கு 5 சதவீத வட்டியை அல்லது ஓராண்டு திறைசேரி உண்டியல் விளைவு வீதத்தினை இதில் எது குறைவானதோ அத்தொகை வருடாந்தம் ஒன்றுசேர்ந்து வைக்கப்படும்.

13. **தங்கம்**

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(1) இன்படி, தங்கம் வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படுகிறது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(2) இன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது நாணய வடிவிலா வைத்திருப்பதற்கு முயல வேண்டும்.

14. **இருப்புக்கள்**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | **2,035,994** | 2,171,534 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | **732,232** | 706,071 |
| இடையிலுள்ள நாணயக் குத்திகள் | **109,233** | - |
| இடையிலுள்ள நாணயத் தாள்கள் | **233,897** | 51,564 |
| | **3,111,356** | 2,929,169 |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | **(45,000)** | (25,000) |
| | **3,066,356** | 2,904,169 |
| எழுதுகருவிகளும் நானாவிதப் பொருட்களும் | **36,776** | 37,908 |
| மருந்தகம் | **149** | 116 |
| **கிரயச் செலவு மற்றும் பெறத்தக்க தேறிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் மொத்த இருப்புக்கள்** | **3,103,281** | 2,942,193 |

15. **ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள்**

காணிகள் கட்டடங்களுக்கான ஏட்டுப் பெறுமதி சந்தைப்

| **கிரயம்** | காணியும் கட்டடமும் ரூ.000 | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் ரூ.000 | தளபாடங்களும் கருவிகளும் ரூ.000 | உந்து ஊர்திகள் ரூ.000 | கணனி ரூ.000 | ஏனையவை: வாசிப்புப் பொருட்கள் ரூ.000 | ஏனையவை: நடைபெற்று வரும் கட்டுமானம் ரூ.000 | 2013 மொத்தம் ரூ.000 | 2012 மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு | 12,332,079 | 1,144,261 | 764,765 | 400,719 | 720,374 | 49,047 | 633,906 | **16,045,151** | 12,414,835 |
| மீள்மதிப்பீடு | - | - | - | - | - | - | - | - | 2,746,379 |
| மேலதிக சேர்ப்பனவுகள் | 2,401.00 | 21,472 | 42,573 | - | 78,087 | 1,357 | 546,306 | **692,196** | 1,709,550 |
| மீள்வகைப்படுத்தல் | - | - | - | - | - | - | - | - | - |
| நீக்கப்பட்டவை/ மாற்றல்கள் | (2,000.00) | (211) | (11,948) | | (936) | | (20,343) | **(35,438)** | (825,613) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | 12,332,480 | 1,165,522 | 795,390 | 400,719 | 797,525 | 50,404 | 1,159,869 | **16,701,909** | 16,045,151 |

| **தேய்மானம்** | காணியும் கட்டடமும் ரூ.000 | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் ரூ.000 | தளபாடங்களும் கருவிகளும் ரூ.000 | உந்து ஊர்திகள் ரூ.000 | கணனி ரூ.000 | ஏனையவை: வாசிப்புப் பொருட்கள் ரூ.000 | ஏனையவை: நடைபெற்று வரும் கட்டுமானம் ரூ.000 | 2013 மொத்தம் ரூ.000 | 2012 மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு | 125,436 | 537,262 | 543,550 | 248,686 | 647,470 | 29,670 | - | **2,132,074** | 2,418,138 |
| மீள்மதிப்பீடு | - | - | - | - | - | - | - | - | (541,949) |
| ஆண்டிற்கான தேய்மானம் | 174,663 | 57,486 | 36,828 | 41,115 | 43,776 | 1,348 | - | **355,216** | 312,070 |
| அகற்றல் | (1,398) | (92) | (11,872) | - | (934) | - | - | **(14,296)** | (56,185) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | 298,701 | 594,656 | 568,506 | 289,801 | 690,312 | 31,018 | - | **2,472,994** | 2,132,074 |
| தேறிய ஏட்டுப் பெறுமதி | 12,033,779 | 570,866 | 226,884 | 110,918 | 107,213 | 19,386 | 1,159,869 | **14,228,915** | 13,913,077 |

பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றது. மிக அண்மைக்கால சுயாதீனமான மதிப்பீடு திரு. பி.பீ. கலுகலகெதர (பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளர்) அவர்களால் 2012 மாச்சு 31இல் மேற்கொள்ளப்பட்டதோடு, அது 2012 ஏப்பிறல் 30இல் உள்ளவாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மீளப் பெறுமதியிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் காணி, கட்டடங்களின் உள்ளடக்கம் பின்வருமாறு

| | ஏட்டுப் பெறுமதி 2013 ரூபா 000 | ஏட்டுப் பெறுமதி 2012 ரூபா 000 |
|---|---|---|
| சொந்த உரிமைக் காணி | **5,243,100** | 5,180,100 |
| சொந்த உரிமைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **6,705,474** | 6,939,096 |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **85,205** | 87,447 |
| | **12,033,779** | 12,206,643 |

தேய்மானங்கள் கழிக்கப்பட்ட கிரயச் செலவு எடுத்துச் செல்லல் பெறுமதியாக நிதிக் கூற்றுக்களால் புகுத்தப்பட்டிருப்பின் இது ரூ.9,305.235 மில்லியனாகும் (2012 ரூ.9,464.544 மில்லியன்).

**16. அருவச் சொத்துக்கள்**

**17. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| **கணனி மென்பொருட்கள்:** | | |
| **கிரயச் செலவு:** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **614,997** | 595,731 |
| மேலதிக சேர்ப்பனவு | **23,023** | 19,266 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **638,020** | 614,997 |
| **பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமதி இழப்பு** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **590,844** | 582,008 |
| ஆண்டுக்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம் | **11,578** | 8,836 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **602,422** | 590,844 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **24,153** | 13,723 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **35,598** | 24,153 |

**18. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **20,863,380** | 1,485,466 |
| ஏனைய வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **640,816** | 1,134,381 |
| | **21,504,196** | 2,619,847 |

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியமானது, 1974ஆம் ஆண்டில் பங்குபற்றும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கிடையே கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்கின்ற நிறுவனமாக, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக் குழுவின் அனுசரணையின் கீழ் நிறுவப்பட்டது. இலங்கை ஒரு பங்குபற்றும் நாடாகும். பங்களாதேஸ், ஈரான் இஸ்லாமிய குடியரசு, நேபாளம், பாக்கித்தான், இந்தியா, பூட்டான், மியன்மார் ஆகியன ஏனைய பங்குபற்றும் நாடுகளாகும். இது பங்குபற்றும் நாடுகளுக்கிடையே நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களைப் பல்தரப்பு அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கான தீர்ப்பனவு வசதியொன்றாகும். ஒவ்வொரு மாத இறுதியிலுமுள்ள தேறிய நிலையை இரண்டு மாத கடன் கால கட்டத்தின் பின்னர் தீர்த்து வைத்தல் அல்லது பெற்றுக்கொள்ளல் நடைபெறுகிறது. தேறிய கடன்படுநர்களால் 0.01 சதவீதத்திற்கும் 0.17 சதவீதத்திற்குமிடையிலான வட்டி அமெரிக்க டொலரிலும், (2012இல் 0.01 சதவீதம் மற்றும் 0.17 சதவீதம்) 0.00 சதவீதத்திற்கும் 0.00 சதவீதத்திற்குமிடையிலான வட்டி யூரோவிலும் (2012இல் 0.00 சதவீதம் மற்றும் 0.01 சதவீதம்) இவ் வசதிக்காகச் செலுத்தப்படுவதுடன் இது, தீர்த்து வைக்கும் நாட்களுக்கிடையே தேறிய கடன்படுநர்களின் நாளாந்த மொத்த மீதிகளுக்கு மாற்றப்படுகிறது. மேற்படி மீதிகளின் மூலம் குறிப்பிட்ட நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்கு ஆசிய தீர்ப்பனவுக் ஒன்றியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை காட்டப்படுகிறது.

**19. பன்னாட்டு நாணய நிதியம்**

(அ) வட்டியுடனான கடன்களில் ப.நா. நிதியத்துடனான வறுமைக்

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறையற்ற | **173,416,994** | 260,727,978 |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறை | **95,379,347** | 58,278,166 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | **79,627,890** | 77,237,728 |
| ப.நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை | **48,517,078** | 48,432,045 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | **25,090,703** | 22,966,279 |
| | **248,615,018** | 206,914,218 |
| **ப.நா.நி. தொடர்பான மொத்தப் பொறுப்புகள்** | **422,032,012** | 467,642,196 |

குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதிகளும் நீடிக்கப்பட்ட நிதிய வசதிகளும் அதேபோன்று அவசரகால உதவி வசதிகளும் உள்ளடங்குகின்றன.

(ஆ) **வ.கு.வ. வசதியானது,** குறைந்த வருமானம் பெறுகின்ற அங்கத்தவர்களுக்கு ப.நா. நிதியினால் வழங்கப்படுகின்ற நீண்ட கால நிதியாக்கல் வசதியாகும். இத் திட்டமானது, மேம்படுத்தப்பட்ட உள்ளமைப்பு ரீதியிலான சீர்செய்தல் வசதிகள் என முன்னர் குறிப்பிடப்பட்டது. வறுமையைக் குறைத்து நீண்டு நிலைத்திருக்கக்கூடிய அடிப்படையில் அதிக வளர்ச்சியொன்றை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் உயர் வாழ்க்கை நிலையை அடைந்து கொள்ளல் இவ் வேலைத் திட்டத்தின் இலக்காகும். வ.கு.வ.வ. கடனுக்காக அறவிடப்படுகின்ற வட்டி வீதம் ஆண்டிற்கு 0.5 சதவீதமாகும். இக் கடனுக்கு ப.நா. நிதியத்தால் வழங்கப்படுகின்ற மீளச் செலுத்துவதற்கான ஆகக் கூடுதலான காலகட்டம் 10 ஆண்டுகளாகும். கடன்களின் இறுதி மீளக்கொடுப்பனவுகள் (சிஎஉ 3,839,000) 2013 ஏப்பிறல் 30ஆம் நாள் மேற்கொள்ளப்பட்டது.

(இ) **நீ.நி. வசதியானது** பேரண்டப் பொருளாதார சமமின்மை மற்றும் உள்ளமைப்பு ரீதியிலான பிரச்சனைகளின் மூலம் எழுகின்ற சென்மதி நிலுவை வசதியீனங்களை அடக்கியாளும் பொருட்டு நடுத்தர கால வேலைத் திட்டங்களுக்கு உதவி வழங்கும் நிதி வசதியாகும். இது முன்னேற்றப்பட்ட உள்ளமைப்பு ரீதியிலான சீர்செய்தல் வசதிகளின் விஸ்தரிப்பாகும். இதன் கீழ் கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதம் ஆண்டுக்கு 0.5 சதவீதமாகும். ப.நா. நிதியத்தினால் இதன் கீழ் பெறப்பட்ட கடன்களைச் செலுத்துவதற்கு 4 1/2 ஆண்டு கால அனுசரணைக் கால

கட்டத்துடன் சேர்த்து 10 ஆண்டு காலம் வழங்கப்பட்டுள்ளது. இக்கடன்களின் இறுதி மீள்கொடுப்பனவுகள் (சிஎஉ 1,722,500) 2013 ஏப்ரல் 24 ஆம் நாள் மேற்கொள்ளப்பட்டது.

(ஈ) **துணைநில் ஒழுங்குகளானது** கடன்பெறும் நாடுகளின் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தின் மீதான குறிப்பிட்ட நிலைமைகள் தொடர்பாக, பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்படுகின்ற சென்மதி நிலுவைக்கு உதவும் நிதியியல் வசதியாகும். ப.நா. நிதியம் சென்மதி நிலுவைக்கு உதவியாக இலங்கைக்கு 2009 யூலையில் சிஎஉ 1.65 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 2.6 பில்லியன்) ஒப்புதலளித்தது. துணைநில் ஒழுங்குகள் 2012 யூலையில் இறுதித் தொகுதியை பெற்றுக்கொண்டதுடன், 2012இல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. இக்கடன் வசதி 4 ஆண்டுகளுக்குள் மீளச் செலுத்தப்பட வேண்டியதுடன் மீள்கொள்வனவுகள் 2012 ஒத்தோபரில் தொடங்கப்பட்டன. துணைநில் ஒழுங்குவசதிகளின் வட்டி வீதம் தீர்ப்பனவுக் கட்டணம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ஆகிய இரண்டு கூறுகளை உள்ளடக்கியதாகும். தீர்ப்பனவுக் கட்டணம் சிஎஉ வட்டி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு வாராந்தம் கணிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கில் 300 சதம் வரையிலான வெளிநின்ற கடன் தொகையில் ஆண்டிற்கு ஒரு சதவீதமாக இருக்கும். வெளிநின்ற கடன் தொகை அனுமதிப்பங்கான 300 சதவீதத்தினை விஞ்சும் பொழுது 300 சதவீதத்தினை விஞ்சிய வெளிநின்ற தொகை மீது ஆண்டிற்கு 2 சதவீதமான மேலதிகக் கட்டணம் விதிக்கப்படும். முதலாவது மீள்கொடுப்பனவான சிஎஉ 25.8 மில்லியன், 2012 ஒத்தோபர் 25ஆம் நாளன்று செலுத்தப்பட்டது. 2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், சிஎஉ 292.83 மில்லியனான மொத்த மீள்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான வெளிநின்ற மீதி சிஎஉ 1,334.938 மில்லியனாக விளங்கியது.

12 மாத காலப்பகுதிக்கு முன்பும் பின்பும் அதன் பின்னர் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வட்டியுடன் கூடிய கடன் தொகைகள் பின்வருமாறு:

| | செல்லுபடியாகும் வட்டி வீதம் % | முதிர்ச்சி | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|---|---|
| நடைமுறை | | | | |
| நீ.நி.வ. | | | - | 336,423 |
| வ.கு.வ.வ.2 | 0.50 | | **95,379,347** | 749,799 |
| து.நி.ஒ | | | - | 57,191,944 |
| | | | **95,379,347** | 58,278,166 |
| நடைமுறையற்ற | | | | |
| து.நி.ஒ | | 2017 | **173,416,994** | 260,727,978 |
| | | | **173,416,994** | 260,727,978 |
| வட்டி உழைக்கும் மொத்தக் கடன்கள் | | | **268,796,340** | 319,006,144 |

(உ) **சிறப்பு எடுப்பனவு உரிமை** (சிஎஉ) என்பது கைவசமுள்ள ஒதுக்கச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா. நிதியத்தால் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா.நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தின் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா. நிதியத்திற்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா. நிதியத்தால் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரச சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா. நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கேற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா. நிதியத்தால் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉவை இரத்துச் செய்வதற்குக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 7 ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும் அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா. நிதியம் சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா. நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

(ஊ) **ப.நா. நிதியத்திற்குச் செலுத்தப்படத்தக்க ஏனைய தொகைகள்**

தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல்வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

(எ) **அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்**

7ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா. நிதிய அனுமதிப் பங்கிற்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

## 20. வெளிநாட்டுக்குச் செலுத்த வேண்டிய ஏனையவை

(அ) **இஸ்ரோ உடன்படிக்கையின் கீழ் சீன அபிவிருத்தி வங்கிக்**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| இஸ்ரோ உடன்படிக்கையின் கீழ் சீன அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை | **29,052,050** | 43,324,799 |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கி/ டிஎவ்சிசி உலகக் கடன் II | **36,264** | 35,268 |
| நிதி அமைச்சு (மொரககந்த) | **15,657,844** | 19,056,691 |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | **2,474,961** | 2,103,904 |
| | **47,221,119** | 64,520,662 |

**கூட்டுத்தாபனத்திற்கு வரவேண்டிய தொகை**

சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் வசதி உடன்படிக்கையொன்று ஐ.அ.டொலர் 500 மில்லியன்களாக 2011 மாச்சு 31ஆம் நாளன்று கையெழுத்தானது. இவ்வுடன்படிக்கையின் நிதியானது முதன்மை வீதிகளின் அபிவிருத்திக்கும் புனரமைப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. வசதி உடன்படிக்கையின்படி இஸ்ரோ முகவராக, இக்கடன்களை வைப்புச் செய்யும் ஒரே நோக்கத்திற்கான இலங்கை மத்திய வங்கியில் இஸ்ரோ கணக்கொன்று திறக்கப்பட்டது.

இக்கணக்கானது இவ்வுடன்படிக்கையினைத் தொடரும் விதத்தில் கடன் வழங்குநராலும் கடன்பெறுநராலும் கூட்டாகத் தொழிற்படுத்தப்படும்.

இஸ்ரோ நிதியத்தின் முதற்றொகுதியான ஐ.அ.டொலர் 326 மில்லியன் 2011 யூன் 29ஆம் திகதி பெறப்பட்டதுடன் இரண்டாவது தொகுதியான ஐ.அ.டொலர் 174 மி ல்லியன் 2011 ஒத்தோபர் 28ஆம் நாள் பெறப்பட்டது.

இஸ்ரோ கணக்கிற்கு அனுப்பிய ஒப்புதல் அறிவித்தலொன்றின் மூலம் பகிர்ந்தளிப்புக் கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட கணக்கிற்கு இஸ்ரோ நிதியத்தினை வழங்குமாறு கடன் வழங்குநர் இஸ்ரோ முகவருக்கு அறிவுறுத்தினர்.

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து ஒப்புதல் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற பின்னர் ஐ.அ.டொலர் 1.768 மில்லியன் கொண்ட தொகை முதலாவது பகிர்ந்தளிப்பு 2011 ஒத்தோபர் 18ஆம் நாள் மேற்கொள்ளப்பட்டது.

சீன அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்ட கொடுப்பனவு ஒப்புதலுக்கிணங்க 2011 மற்றும் 2012இல் ஐ.அ.டொலர் 157.5 மில்லியனும் 2012ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 340.7 மில்லியனும் 2013இல் ஐ.அ.டொலர் 118.52 மில்லியனும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

2013 திசெம்பர் 31இல் எஞ்சியிருந்த நிலுவை ஐ.அ.டொலர் 222.190 மில்லியனாகக் காணப்பட்டது.

(ஆ) ஐரோப்பிய முதலீட்டு வங்கி/ டிஎவ்சிசி குளோபல் கடன் 2

யூரோ 50 மில்லியன் கடன் உடன்படிக்கையின்படி, நுண்பாக நிதியிடல் நோக்கங்களுக்காக ஐரோப்பிய முதலீட்டு வங்கியிலிருந்து 50 மில்லியன் கடன் பெறப்பட்டது. எனினும், இக்கடனின் பிற்பகுதி ஐ.அ.டொலரில் பெறப்பட்டது. திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் கோரிக்கையின்படி, ஈஐபி/ டிஎவ்சிசி குளோபல் கடன் - 2இன் கீழ் டிஎவ்சிசி வங்கிக்கு நிதியினை வழிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்பேரேட்டுக் கணக்கு இலக்கம் 4897இல் சிறப்பு டொலர் கணக்கினை மத்திய வங்கி திறந்தது. 2012 பெப்புருவரி 3ஆம் நாளன்று ஐரோப்பிய முதலீட்டு வங்கியிலிருந்து ஐ.அ.டொலர் 12.7 மில்லியன் பெறப்பட்டது. இரண்டாவது தவணைப் பணமாக 2012 யூன் 01ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 19.2 மில்லியன் பெறப்பட்டது. முதலாவது பகிர்ந்தளிப்பான ஐ.அ.டொலர் 4,002,299.29 2012 மாச்சு 01ஆம் நாள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஐ.அ.டொலர் 6,573,500 மற்றும் 2,142,170.71 கொண்ட பகிர்ந்தளிப்புக்கள் முறையே 2012 மே 3ஆம் நாளன்றும் 2012 ஓகத்து 14ஆம் நாளன்றும் மேற்கொள்ளப்பட்டது. திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் கோரிக்கையின்படி ஐ.அ.டொலர் 12,342,500 மற்றும் 6,171,250 கொண்ட தொகைகள் இலங்கை மத்திய வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஐ.அ.டொலர் 473,368.81 கொண்ட இன்னொரு கடன் தொகை 2012 நவெம்பர் 19ஆம் நாள் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2013 திசெம்பர் 31ஆம் நாளன்று உள்ளவாறான எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 0.277 மில்லியனாகக் காணப்பட்டது.

(இ) மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டம்

இலங்கை உடன்படிக்கை சீன அபிவிருத்தி வங்கிக்கும் (கடன் வழங்குநர்) நிதி திட்டமிடல் அமைச்சிற்கும் (கடன் பெறுநர்) இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் (வங்கியாளர்) கையெழுத்தானது. இக்கடன் உடன்படிக்கையின் நோக்கம், மொறககந்தையிலுள்ள நீர்மின் வலு நிலையத்தின் கட்டுமானத்திற்கு நிதியிடுவதற்கு வசதியளிப்பதேயாகும். இலங்கை மத்திய வங்கி கணக்கொன்றினை மத்திய வங்கியின் பொதுப்பேரேட்டு கணக்கு இல. 4898 இனை நிதி திட்டமிடல் அமைச்சு - சீன அபிவிருத்தி வங்கி மொரககந்த அபிவிருத்தி செயற்றிட்டக் கணக்கொன்றினை வெளிவாரி மூலவளங்கள் திணைக்களத்தின் கோரிக்கையின்படி திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தது. நீர்ப்பாசன மற்றும் நீர் மூலவள முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, அத்தகைய பணம் வரவு வைக்கப்பட்டுள்ள கணக்குகளை தொழிற்படுத்துவதற்கு மத்திய வங்கி விளங்கியது. 2012 யூன் 29ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 214.2 மில்லியன் கொண்ட தொகை சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 64,337,066.36 கொண்ட முதலாவது பகிர்ந்தளிப்பு 2012 ஓகத்து 24ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்டது.

2013ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 30.1 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான மீதி ஐ.அ.டொலர் 119.751 மில்லியன் காணப்பட்டது.

## 21. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களால் வைப்பிலிடப்பட்டவை

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு பொறிமுறையின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் உட்பட பங்குபற்றுபவர்களால் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குத் தேவையான நிதியங்களை வட்டியற்ற, பூரணமான மேலதிகப் பிணையுடன் கூடியதாக நாளினுள் திரவத்தன்மை வசதியின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாயுள்ளது. அவ்வாறான நாளினுள் திரவத்தன்மை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு, பங்குபற்றுபவர்கள் வர்த்தகம் செய்யக்கூடிய அரச பிணையங்களை அடகு வைத்தல் வேண்டும். நாளினுள் திரவத்தன்மை வசதியின் கீழ் முற்பணங்களின் மூலம், வர்த்தகம் செய்யக்கூடிய அரச பிணையங்கள் மீது வழங்கப்பட்ட முற்பணங்கள் காட்டப்பட்டுள்ளன. இரண்டு ஆண்டு இறுதிகளிலும் இவை பூச்சியப் பெறுமதியைக் கொண்டுள்ளன.

| | 2013<br>ரூபா 000 | 2012<br>ரூபா 000 |
|---|---|---|
| **வங்கிகளின் வைப்புக்கள்** | | |
| - தொடர்புடைய தரப்பினர் | **77,899,164** | 84,679,924 |
| - ஏனையோர் | **70,906,573** | 81,572,604 |
| | **148,805,737** | 166,252,528 |
| **நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்** | | |
| - தொடர்புடைய தரப்பினர் | **202** | 242 |
| - ஏனையோர் | **3,954** | 35,608 |
| | **4,156** | 35,850 |
| **வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் மொத்த வைப்புக்கள்** | **148,809,893** | 166,288,378 |

## 22. அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகள்

| | 2013<br>ரூபா 000 | 2012<br>ரூபா 000 |
|---|---|---|
| அரச வைப்புக்கள் | **27,766** | 340,506 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | **388,464** | 359,122 |
| | **416,230** | 699,628 |

## 23. மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2013<br>ரூபா 000 | 2012<br>ரூபா 000 |
|---|---|---|
| அரச பிணையங்கள் | **84,601,000** | 7,015,000 |
| | **84,601,000** | 7,015,000 |

நாணய விதிச் சட்டம் 90 மற்றும் 91ஆம் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் திறந்த சந்தை நடவடிக்கைகளில்

வங்கியினால் உருவாக்கப்பட்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகள். இம்மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானது வங்கிக்குச் சொந்தமான பிணையங்கள் அதேபோல் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டு வங்கியின் பிணையங்கள் கடன்பாடு நிகழ்ச்சித்திட்டத்தின் பெற்றுக் கொள்ளப்பட்ட பிணையங்கள் போன்றவற்றால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன.

### 24. ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களின் வங்கியாளர் என்ற ரீதியில் செயற்படுகின்றது. வங்கியின் தனியாக நிருவகிக்கப்படுகின்ற ஊழியர் நன்மைத் திட்டங்களில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகைகள் பின்வருமாறு:

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| ஊழியர் சேம நிதியம் | **429,932** | 150,895 |
| ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | **600,119** | 694,165 |
| விதவைகள்/விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **1,440** | 1,113 |
| பணிக் கொடைகளின் கீழ் செலுத்தப்பட வேண்டியவை | **90,398** | 63,104 |
| மருத்துவ நலத் திட்டங்களின் கீழ் செலுத்தப்பட வேண்டியவை | **1,297,198** | 431,991 |
| **ஏனைய மொத்த வைப்புக்கள்** | **2,419,087** | 1,341,268 |

### 25. ஏனைய கொடுபடத்தக்கவை

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| கொடுபடத்தக்க உள்நாட்டு வட்டி | **161,223** | 1,445 |
| ஏற்பாடுகளும் விதிப்புக்களும் | **610,465** | 502,892 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கொடுபடத்தக்கவை | **1,880,078** | 1,869,662 |
| கைவிடப்பட்ட சொத்துக்களுக்கெதிரான பொறுப்பு | **2,335,466** | 1,962,473 |
| சுவப் வசதியின் மீது வெளிநாட்டு மத்திய வங்கிக்கு கொடுபடத்தக்கவை | **-** | 27,473,460 |
| ஏனைய கொடுபடத்தக்கவை | **672,485** | 124,714 |
| **ஏனைய மொத்த கொடுபடத்தக்கவை** | **5,659,717** | 31,934,646 |

கொடுபடத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிகக் கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதங்களுடன் சேர்த்து வங்கிகளின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 26. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. குறிப்பிட்ட வங்கியினால் வெளியிடப்பட்டு நிதி நிலைமைகள் பற்றிய கூற்றுத் திகதியன்று சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயத் தரவுகள் பின்வருமாறு:

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| **இனக் குத்திகள்** | | |
| சதம் 1 | **3,631** | 3,631 |
| சதம் 2 | **5,702** | 5,702 |
| சதம் 5 | **23,245** | 23,245 |
| சதம் 10 | **39,211** | 39,209 |
| சதம் 25 | **120,566** | 120,732 |
| சதம் 50 | **185,798** | 185,378 |
| ரூபா 1 | **714,252** | 702,536 |
| ரூபா 2 | **1,013,765** | 998,102 |
| ரூபா 5 | **3,035,467** | 2,981,784 |
| ரூபா 10 | **1,672,674** | 1,275,959 |
| ஞாபகார்த்த நாணயக் குத்திகள் | **574,663** | 572,256 |
| | **7,388,974** | 6,908,534 |

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| **தாள்கள்** | | |
| ரூபா 1 | **4,981** | 4,981 |
| ரூபா 2 | **26,698** | 26,698 |
| ரூபா 5 | **37,198** | 37,198 |
| ரூபா 10 | **1,638,800** | 1,735,340 |
| ரூபா 20 | **3,725,554** | 3,350,440 |
| ரூபா 50 | **4,041,101** | 3,779,318 |
| ரூபா 100 | **15,332,034** | 14,978,744 |
| ரூபா 200 | **138,465** | 144,531 |
| ரூபா 500 | **23,668,137** | 23,317,647 |
| ரூபா 1000 | **105,385,676** | 101,046,102 |
| ரூபா 2000 | **87,798,698** | 109,370,204 |
| ரூபா 5000 | **90,584,665** | 53,360,405 |
| | **332,382,007** | 311,151,608 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | 339,770,981 | 318,060,142 |

### 27. பிற்போடப்பட்ட கொடைகள்

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறு | 2,389 | 3,468 |
| இவ்வாண்டின் கடன் தீர்ப்பனவு | (940) | (1,079) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 1,449 | 2,389 |

பிற்போடப்பட்ட வருமானம் அத்தகைய சொத்துக்களின் தேய்மானத்துடன் பொருந்தத்தக்க விதத்தில் இக் காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டன. இது, எந்தவித கரிசனைகளுமில்லாது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களின் சந்தைப் பெறுமதி பிற்போடப்பட்ட கொடைக் கணக்கொன்றில் செலவு வைக்கப்படுவதுடன், தொடர்பான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைகளின்படி அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்குமுரிய ஏனைய வருமானமாகக் கொள்ளப்படுகிறது.

### 28 பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும்

பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும் கொடுப்பனவு செய்யத்தக்க கணக்குகளிலுள்ள கொடுபடத்தக்க மீதிகள்,

ஒப்பந்த ரீதியான பிடித்துவைத்தல்கள், மீட்கத்தக்க விலைக்கோரல் வைப்புக்களாக எடுக்கப்பட்ட வைப்புகள் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்யப்படத்தக்க தண்டங்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

**29. பங்குரிமை மூலதனம்**

**(அ) பங்குரிமை மூலதனம் விடயத்தின் தன்மை**

(i) **மூலதன நிதியம்**

பங்களிப்பு மூலதனம் - நாணய விதிச் சட்டத்தின் 6ஆவது வாசகத்தின் பிரகாரம் மூலதனக் கணக்கிலுள்ள வங்கியின் மூலதனம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

(ii) **மூலதனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒதுக்குகள்**

நாணயச் சபையின் தீர்மானம் எம்பீ/எவ்/22/12/2008 இன் பிரகாரம் 2008ஆம் ஆண்டில் பொது ஒதுக்கங்களிலிருந்து ரூ.24,985 மில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கு உருவாக்கப்பட்டுள்ளது. 2012 மாச்சில் எம்பீ/எவ்/5/17/2012 இலக்க நாணயச் சபையின் தீர்மானத்தின்படி பொது ஒதுக்கிலிருந்து ரூ.10 பில்லியன் கொண்ட தொகை மாற்றல் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்**

ப.நா.க.நி 16 இன் படி இவ்வொதுக்கானது ஆதனம், பொறி மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டுமிகையை உள்ளடக்கியுள்ளது.

**(இ) வைத்திருக்கப்படுகின்ற வருவாய்களுக்கு மேலதிகமாக, ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:**

(i) **பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்** - மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் மூலம் உருவாகிய பன்னாட்டு ஒதுக்கம் என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்கமாகும். இதன் பிரகாரம், தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் மூலம் மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதன் ஊடாக உருவாகின்ற உண்மையிலேயே ஈட்டப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் மீளக் கணிப்பிடப்படுகின்ற பன்னாட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(ii) **சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் -**

வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் சந்தைப்படியான விலைகளின் மோசமான தாக்கத்திற்கு வழிவகுக்கின்ற பன்னாட்டுச் சந்தைகளின் தளம்பல்களின் ஏதேனும் மோசமான தாக்கத்தினை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டுச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து கிடைக்கும்

ஏனைய ஒதுக்கங்களிலான அசைவுகள் பின்வருமாறு:

| | நடுத்தர கால, நீண்ட கால கொடுகடன் ஒதுக்கம் ரூ.000 | சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ.000 | ஏனைய ஒதுக்கம் ரூ.000 | இமவ குறித் துரைக் கப்பட்ட ஒதுக்கம் ரூ.000 | அ.நே. மொ. தீ. கடன் கரைப்பு நிதியம் ரூ.000 | வட்டி வீத இடர்நேர்வு ஒதுக்கம் ரூ.000 | விற்பனைக்குள்ள பிணையங்களின் தேறிய சந்தைப் பெறுமதி/ (நட்டம்) ரூ.000 | ஓய்வூதிய நிதிய ஒதுக்கம் ரூ.000 | தொழில் நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம் ரூ.000 | மாகாண அபிவிருத் திக் கொடு கடன் நிதியம் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2013 சனவரி 01இல் உள்ளவாறான | 11,425,000 | 11,354,757 | 9,852,383 | 824,982 | 672,598 | 67,593,177 | 6,557,798 | 4,000,000 | 1,000,000 | 2,900,000 | 116,180,695 |
| அ.மொ.தீ. முறை வருமானத்தை அ.மொ.தீ. நிதியத்திற்கு மாற்றுதல் | - | - | - | | 191,428 | - | - | - | - | - | 191,428 |
| இ.ம.வங்கியின் மருத்துவ நன்மைகள் திட்டத்திற்கு மாற்றுதல் | - | - | - | 84,852 | - | - | - | - | - | - | 84,852 |
| இ.ம.வங்கியின் பணிக்கொடை நிதியத்திற்கு மாற்றுதல் | - | - | - | 6,465 | - | - | - | - | - | - | 6,465 |
| இலாபத்தை பொது ஒதுக்கு மற்றும் கட்டிட ஒதுக்கிற்கு மாற்றுதல் | - | - | 126,315 | - | - | - | - | - | - | - | 126,315 |
| பணிக்கொடை நிதிய ஒதுக்கம் மற்றும் மருத்துவ நிதிய ஒதுக்கத்திற்கு மாற்றல் | - | - | - | 595,490 | - | - | - | - | - | - | 595,490 |
| மருத்துவ நன்மைகள் திட்டம் மற்றும் பணிக்கொடை ஒதுக்குகளிலிருந்து உரிய பொறுப்புக்களுக்கான நிதிய மாற்றல் | - | - | - | (1,511,789) | - | - | - | - | - | - | (1,511,789) |
| இலாபத்தினை சந்தை மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றுதல் | - | - | - | - | - | (26,758,628) | - | - | - | - | (26,758,628) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபம்/நட்டத்தின் மாற்றல் | - | - | - | | - | - | (13,904,065) | - | - | - | (13,904,065) |
| விற்பனைக்குள்ள பிணையங்கள் மற்றும் தங்கத்தின் மீதான தேறிய சந்தைப் பெறுமதி நட்டம் | - | - | 40 | - | - | - | - | - | - | - | 40 |
| அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி | - | (6,703,951) | - | - | - | - | - | - | - | - | (6,703,951) |
| **2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான** | **11,425,000** | **4,650,806** | **9,978,738** | **-** | **864,026** | **40,834,549** | **(7,346,267)** | **4,000,000** | **1,000,000** | **2,900,000** | **68,306,848** |

விலைப் பெறுமதி இலாபங்களை மாற்றல் செய்வதற்காக 2003 சனவரி 30ஆம் நாளன்று நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டது. நாணயச் சபையானது இந்த ஒதுக்கினை இலங்கை மத்திய வங்கியின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கில் உயர்ந்தபட்சம் 10 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு தீர்மானித்தது. மற்றைய ஒதுக்குகள் பொது ஒதுக்கு, கட்டிட ஒதுக்கு மற்றும் கொடுகடன் உத்தரவாதம் என்பவற்றை உள்ளடக்குகிறது. பொது ஒதுக்கு, நாணயச் சபையினால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் வருவாய்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படும் தொகையினை உள்ளடக்குகிறது.

(iii) **மற்றைய ஒதுக்குகள்**

பொது ஒதுக்கு, கட்டட ஒதுக்கு மற்றும் கொடுகடன் உத்தரவாதம் என்பவற்றை உள்ளடக்குகிறது. பொது ஒதுக்கு, நாணயச் சபையினால் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் வருவாய்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது.

(iv) **விற்பனைக்குள்ள பிணையங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட தங்கக் கணக்குகளின் தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/(நட்டம்)** - விற்பனைக்குள்ளதாகப் பெயரிடப்பட்டுள்ள பிணையங்கள் மீள மதிப்பிடப்பட்டதன் மூலம் 2012 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் உருவாகிய விற்றுப் பெறப்படாத இலாபம் அல்லது நட்டம் ஒதுக்கப்படாத தங்கக் கணக்குகள் இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

(v) **அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை கடன்கரைப்பு நிதியம்** - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதில் பங்குபற்றுகின்றவர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந் நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. இந் நிதியமானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் முதலீடு செய்வதற்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயிருக்கும்.

(vi) **ஓய்வூதிய நிதிய ஒதுக்கம்** - வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் வடுக்களால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் குறைபாடுகள் உருவாகுமாயின் அதனை ஈடுசெய்யும் பொருட்டு 2007ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து மேலதிகமாக ரூ. 3 பில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

(vii) **தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம்** - குறிப்பாக தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைப்பாடுகள், நவீனமயமாக்கல் அல்லது இ.ம.வங்கியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொதுப்பேரேடு, அ.நே.மொ. தீர்ப்பனவு முறை, திறைசேரி வணிக அறை முகாமைத்துவ முறைமை அல்லது பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை ஆகிய தகவல் தொழில்நுட்ப நைமையைத் தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இவ்வொதுக்கம் 2007 ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து உருவாக்கப்பட்டது.

(viii) **மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம்** - 2010ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கி இலாபத்திலிருந்து உருவாக்கிய நிதியத்தின் மூலம் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாகாணங்களுக்கு ரூ.2.9 பில்லியன் கொண்ட நடுத்தர கால மற்றும் நீண்ட கால மீள்நிதியிடல் இலங்கை வங்கியூடாகவும் மக்கள் வங்கியூடாகவும் வழங்கப்பட்டன.

**30. தேறிய இலாபத்தை மாற்றல் செய்தல்**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 39 (சீ) வாசகத்தின் பிரகாரம், இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள இலாபத்தை, நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் வாசகத்தின் பிரகாரம் தேவைக்கேற்ப ஒதுக்கங்களுக்கு ஒதுக்கீடு செய்ததன் பின்னர் அரசுக்குச் செலுத்தியது. இக்காலப்பகுதியில் 2012 தொடர்பில் ரூ.2.35 பில்லியனும் 2013 தொடர்பில் ரூ.25 பில்லியனும் கொண்ட இலாபமும் அரசாங்கத்திற்கு மாற்றல் செய்யப்பட்டன.

**31. நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | **2,048,673** | 1,934,021 |
| நிதிச் சொத்துக்கள் | **9,634,528** | 9,566,537 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள் | **5,147** | 4,616 |
| பரஸ்பர பரிமாற்றல் நன்மைகள் | **6,817,308** | 2,066,692 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **18,505,656** | 13,571,866 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **13,897,078** | 25,441,705 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **553,056** | 515,897 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான மொத்த தேறிய வட்டி வருமானம்** | **14,450,134** | 25,957,602 |
| **நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **32,955,790** | 39,529,468 |

**32. நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | **18,220** | 36,919 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **4,298,227** | 4,639,495 |
| தேறிய பரஸ்பர பரிமாற்றல் செலவு | **113,672** | 972,897 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்த வேண்டியன | **17,282** | 120,347 |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **4,447,401** | 5,769,658 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | | |
| - திறைசேரி உண்டியல்கள் | **2,033,328** | 897,233 |
| - திறைசேரி முறிகள் | **707,838** | - |
| முறிக் கடன்பாடுகள் மீது செலுத்தப்பட்ட கட்டணம் | **20,853** | - |
| கைவிடப்பட்ட ஆதனம் | **217,831** | 194,307 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **2,979,850** | 1,091,540 |
| **நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **7,427,251** | 6,861,198 |

(அ) பரஸ்பர பரிமாற்றச்செலவு 2009 பெப்புருவரியிலிருந்து வங்கி வெளிநாட்டு மத்திய வங்கிகளோடு அமெரிக்க டொலர் 200 மில்லியன் வசதிகளுடன் பரஸ்பர பரிமாற்றச்செலவிற்குள் நுழைந்தது. மொத்தமாக ரூ.199.374 (2012 - ரூ.824.574) மில்லியன் கொண்ட தொகை, வெளிநாட்டு மத்திய வங்கியுடனான பரஸ்பர

(ஆ) சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்ளும் வங்கியின் நடவடிக்கையின் பொருட்டு பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்பட்ட செலவாக ரூ.4,219.018 மில்லியன் (2012இல் ரூ.1,695.884 மில்லியன்) செலவு வங்கிக்கு ஏற்பட்டது. பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கான செலவு மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் மீது ஏற்பட்ட வட்டிச் செலவினையும் முறிகளின் கடன்பாட்டின் மீது செலுத்தப்பட்ட கட்டணங்களையும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களையும் வட்டி வருமான சொத்துப்பட்டியல் - இலங்கை அரசாங்க பிணையங்களின் தேறிய செலவு நீங்கலான தேறிய பரஸ்பர பரிமாற்றல் உள்ளடக்கிய ஐ.அ.டொலர்/ இல. ரூபா பரஸ்பர பரிமாற்றச்செலவு என்பனவற்றை கீழே கலந்துரையாடப்பட்டவாறு உள்ளடக்குகிறது.

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மீது ஏற்பட்ட வட்டிச் செலவு | **2,741,167** | 897,233 |
| முறிக் கடன்பாட்டின் மீது செலுத்தப்பட்ட கட்டணம் | **20,853** | - |
| கழி: | | |
| மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் பிணையங்களின் கொள்வனவு மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம் | **(244,788)** | (1,139,067) |
| ஐ.அ.டொலர்/இல.ரூபா சுவப்ற் செலவு/ இலாபம் | **(6,736,250)** | (1,454,050) |
| | **(4,219,018)** | (1,695,884) |

33. ஏனைய வருமானம்

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| பங்கிலாப வருமானம் - தொடர்புபட்ட நபர்கள் | **14,811** | - |
| - ஏனையோர் | **525** | 14,792 |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் அகற்றல் மீதான இலாபம் | **(731)** | 17,287 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகளை விற்பதன் மீதான இலாபம் | **-** | 3,793 |
| பிற்போடப்பட்ட கொடைகளின் கடன் தீர்ப்பனவு | **940** | 929 |
| தொழிலுக்குப் பிந்திய நன்மைகள் திட்டச் செலவின் மீள்பெறுகை | **1,736,376** | - |
| பல்வகை வருமானம் | **1,167,339** | 939,218 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **2,919,260** | 976,019 |

பல்வகை வருமானமானது வரையறுக்கப்பட்ட இலங்கைச் சேமிப்பு வங்கியின் தொகுதிக் கடன் மீதான ரூ.0.964 மில்லியன் (2012-நீங்கலாக) கொண்ட பதிவழிப்பு இலாபத்தையும் வங்கியிலிருந்து மோர்கன்டைல் கிறடிட்டினால் பெறப்பட்ட மீள்நிதியிடல் கடனின் ஒரு பகுதியை தீர்ப்பனவு செய்வது தொடர்பில் 2012.12.03இல் பெறப்பட்ட தொகையையும் (குறிப்பு 12) எஞ்சிய ஐந்தாண்டு காலப்பகுதியில் ப.நா. நிதியத்துடனான சிஉஉ 788,783 கொண்ட வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதிப்படுத்தலின் பதிவழிப்பு இலாபமான ரூ.5.372மில்லியனையும் (2012இல் இல்லை) உள்ளடக்குகிறது. (குறிப்பு 07)

34. ஆளணிச் செலவுகள்

35. நிர்வாகச் செலவுகள்

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் | **3,138,445** | 2,860,792 |
| குறித்துரைக்கப்பட்ட உதவுதொகைத் திட்டச் செலவுகள் | **447,626** | 426,622 |
| தொழில் நிலைக்குப் பிந்திய குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவு | **1,988,525** | 344,328 |
| ஊழியர் கடன்களை மீள் அட்டவணைப் படுத்தியதன் காரணமாக ஏற்பட்ட பெறுமதி இழப்பு | **-** | 4,752 |
| **மொத்த ஆளணிச் செலவுகள்** | **5,574,596** | 3,636,494 |

36. வரி விதிப்பு

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| திருத்தங்களும் பேணல்களும் | **692,701** | 575,873 |
| ரொயிட்டர், புளூம்பேர்க் மற்றும் சுவப்ற்றிற்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள் | **115,981** | 133,642 |
| பயணம் | **109,846** | 87,628 |
| வாடகைச் செலவுகள் | **5,309** | 8,015 |
| அச்சிடல் | **30,740** | 30,999 |
| கணக்காய்வுக் கட்டணம் | **7,822** | 7,658 |
| நாணயச் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | **1,020** | 900 |
| இமவ சேம நிதியம் மீதான வட்டிச் செலவினம் | **433,842** | 147,174 |
| பல்வகைச் செலவினம் | **599,787** | 386,406 |
| **மொத்த ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்** | **1,997,048** | 1,378,295 |

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 7b (xvi) இன் படி இலங்கை மத்திய வருமான வரி செலுத்தப் பொறுப்புடையதல்ல என்பதுடன் வங்கியால் செலுத்தப்படும் பிடித்துவைத்தல் வரி உள்நாட்டரசிறைத் திணைக்களத்திற்கு வங்கி செலுத்தும் இறுதி வரியாகவும் கருதப்படுகிறது. 2013இலிருந்து மத்திய வங்கி பொருளாதாரப் பணிகள் கட்டணத்தைச் செலுத்தப் பொறுப்புடையதல்ல.

2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) ஏற்பாடுகளின் பிரகாரம் பங்கிலாபம் அல்லது வட்டி செலுத்தப்படுகின்ற போது அல்லது வரவு வைக்கப்படுகின்ற போது 10 சதவீதம் தடுத்து வைத்தல் வரிக்கு உட்பட்டதாயிருக்கும். அரச பிணையங்களின் வட்டி வருமானத்தின் மீது தடுத்து வைத்தல் வரியானது, அண்மிய முதனிலை ஏலத்தின் எடையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் முதிர்ச்சித் திகதிக்குச் சீர்செய்யப்பட்ட அடிப்படையில் தீர்க்கப்படுகிறது.

இக் காலப்பகுதியில் ரூ.13,897.078 மில்லியன் கொண்ட வட்டி வருமானம் (2012 - ரூ.25,441,705 மில்லியன்) மற்றும் ரூ.15.336 மில்லியன் கொண்ட பங்கிலாப வருமானம் (2012 - ரூ.14.792 மில்லியன்) என்பனவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய அத்தகைய பிடித்துவைத்தல் வரி தொடர்பான செலவு

ரூ.1,986.217மில்லியன் (2012 - ரூ.2,405.694 மில்லியன்) ஆகக் காணப்பட்டது. மேலும், வங்கி 2013இல் பொருளாதாரம் பணிக் கட்டணமாக ரூ.30 மில்லியனை (2012 - ரூ.120 மில்லியன்) செலுத்தியது.

**37. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப் பாய்ச்சலுடன் மீள் இணக்கப்படுத்தல்**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிவிக்கப்பட்ட தேறிய இலாபம்** | **(24,264,529)** | 66,208,544 |
| **கூட்டுக / (கழிக்குக) காசல்லா விடயங்கள்** | | |
| தேய்மானம் மற்றும் பதிவழிப்பு | **365,644** | 322,622 |
| பெறப்பட்ட வட்டி - உள்ளூர் நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(13,897,078)** | (25,441,705) |
| மொத்தத் தேறாத வெளிநாட்டுச் செலாவணி (இலாபம்)/நட்டம் | **13,120,232** | (27,895,347) |
| நிலையான சொத்து விற்பனை மீதான இலாபம் | **(964)** | - |
| தொகுதிக் கடன்களின் பதிவழிப்பு | - | (7,273) |
| ஏனைய ஏற்பாடுகள் | **(25,754,497)** | 4,426,262 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | **(940)** | (929) |
| மெதுவாக நகரும் இருப்புக்களிற்கான ஏற்பாடுகள் | **20,000** | - |
| மீள்மதிப்பீட்டின் மீதான நட்டம் | - | 3,963 |
| வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பின் பதிவழிப்பு | **(5,371)** | 35,527 |
| அலுவலகக் கடன்களின் மீள்பட்டியலிடல் மீதான பதிவழிப்பு | - | 4,752 |
| செற்பாட்டிலுள்ள கட்டுமானத்தின் பதிவழிப்பு | - | 313 |
| விற்கப்பட்ட கொடைச் சொத்தின் நீக்கம் | - | (150) |
| விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம், விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதிய நன்மை பொறுப்புக்களின் ஏனைய வருமானங்கள் | **(1,736,376)** | - |
| ஓய்வூதிய நலன் பொறுப்பிற்கான மேலதிக ஏற்பாடுகள் | **932,447** | - |
| **கூட்டுக (கழிக்குக) ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு** | | |
| இருப்புகளின் (அதிகரிப்பு)/குறைவு | **(181,089)** | (457,512) |
| பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு | **3,110,920** | (2,623,493) |
| பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/(குறைவு) | **378,945** | (597,744) |
| கொடுபடத்தக்க வட்டியில் அதிகரிப்பு/(குறைவு) | **(81,176)** | 426,811 |
| ஏனைய பெறத்தக்கவற்றின் அதிகரிப்பு/(குறைவு) | **128,494** | (45,240) |
| **கூட்டுக (கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| முதலீட்டிலிருந்தான வருமானம் | - | 8,614 |
| தேறிய பெறப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **27,892,406** | (296,049) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(19,972,932)** | 14,071,966 |

**38. அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் வெளியீடு/(புறக்கீடு)**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| முதலீட்டுச் சொத்துப்பட்டியலுக்காக இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | **(154,163,065)** | (10,868,300) |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - இலங்கை அரச பிணையங்கள் | **(19,132,272)** | (23,207,197) |
| இலங்கை அரசுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் அதிகரிப்பு/(குறைவு) | **(2,124,771)** | 16,548,830 |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | **283,397** | 1,099,402 |
| | **(175,136,711)** | (16,427,265) |

**39. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/(புறக்கீடு)**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்களிலான (அதிகரிப்பு)/குறைவு | **17,284,956** | (19,325,888) |
| | **17,284,956** | (19,325,888) |

**40. இறுதியிலுள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்**

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்** | | |
| ஏனைய வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள் | **425,676,763** | 235,278,133 |
| | **425,676,763** | 235,278,133 |

41. நிதியிடலின் திரட்சி

ஆண்டின் இறுதியில் வங்கியின் நிதியிடலின் திரட்சியானது பின்வருமாறு:

| 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு | மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய தொகை | 21,504,196 | - | - | - | 693,218 | 20,810,978 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 16,183,282 | - | - | 15,003,873 | - | 1,179,409 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | 37,301,553 | - | - | - | - | 37,301,553 |
| ப.நா.நி.தொடர்புடைய பொறுப்புக்கள் | 422,032,012 | - | - | - | 422,032,012 | - |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 47,221,119 | 44,709,894 | - | 1,784,046 | 685,825 | 41,354 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | **544,242,162** | **44,709,894** | **-** | **16,787,919** | **423,411,055** | **59,333,294** |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 148,809,893 | - | - | 148,805,736 | - | 4,157 |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | 416,230 | 416,176 | 54 | - | - | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 84,601,000 | - | - | 84,601,000 | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள் | 2,419,087 | - | - | - | - | 2,419,087 |
| ஏனைய செலுத்தத்தக்கவை கொடுப்பனவுகள் | 5,659,719 | 24,834 | - | 182,000 | - | 5,452,885 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | 241,905,929 | 441,010 | 54 | 233,588,736 | - | 7,876,129 |
| **மொத்த நிதிப் பொறுப்புக்கள்** | **786,148,091** | **45,150,904** | **54** | **250,376,655** | **423,411,055** | **67,209,423** |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 339,770,981 | - | 339,770,981 | - | - | - |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 1,449 | - | - | - | - | 1,449 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 4,936,339 | - | - | - | - | 4,936,339 |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 243,455 | 22,602 | - | - | - | 220,853 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | **344,952,224** | **22,602** | **339,770,981** | **-** | **-** | **5,158,641** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **1,131,100,315** | **45,173,506** | **339,771,035** | **250,376,655** | **423,411,055** | **72,368,064** |

2012 திசெம்பர் 31இல் உள்ளவாறான ஒப்பீட்டுத் தொகைகள் பின்வருமாறு:

| 2012 திசெம்பர் 31இல் உள்ளவாறான | மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய தொகை | 2,619,847 | - | - | - | 839,009 | 1,780,838 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 3,257,119 | - | - | 3,207,000 | - | 50,119 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | 28,953,955 | - | - | - | - | 28,953,955 |
| ப.நா.நி.தொடர்புடைய பொறுப்புக்கள் | 467,642,196 | - | - | - | 467,642,196 | - |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 64,520,662 | 62,381,490 | - | 1,547,781 | 551,034 | 40,357 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | **566,993,779** | **62,381,490** | **-** | **4,754,781** | **469,032,239** | **30,825,269** |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 166,288,378 | - | - | 166,252,528 | - | 35,850 |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | 699,628 | 698,965 | 663 | - | - | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 7,015,000 | - | - | 7,015,000 | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள் | 1,341,268 | - | - | - | - | 1,341,268 |
| ஏனைய செலுத்தத்தக்கவை கொடுப்பனவுகள் | 31,934,646 | 31,168 | - | 182,000 | - | 31,721,478 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | **207,278,920** | **730,133** | **663** | **173,449,528** | **-** | **33,098,596** |
| **மொத்த நிதிப் பொறுப்புக்கள்** | **774,272,699** | **63,111,623** | **663** | **178,204,309** | **469,032,239** | **63,923,865** |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 318,060,142 | - | 318,060,142 | - | - | - |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 2,389 | - | - | - | - | 2,389 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 3,832,688 | - | - | - | - | 3,832,688 |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 143,916 | 14,172 | - | - | - | 129,744 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | **322,039,135** | **14,172** | **318,060,142** | **-** | **-** | **3,964,821** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **1,096,311,834** | **63,125,795** | **318,060,805** | **178,204,309** | **469,032,239** | **67,888,686** |

## 42. கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கி நாணயச் சபையுடன் சேர்ந்து இரண்டு சட்ட நியதி குறிக்கோள்களை, அதாவது, பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றைக் கொண்டிருந்ததுடன், அதன் குறிக்கோள்களை எய்தும் விதத்தில் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கேற்ற விதத்தில் பரந்தளவான சட்ட அதிகாரங்களையும் கொண்டிருந்தது. ஆகவே, பணத்தினை அச்சிடல், வட்டி வீதங்கள் செலாவணி வீதம் மற்றும் கொடுகடன் என்பனவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துதல் என்பன மூலம் நிதிச் சொத்துக்களை கையகப்படுத்திக் கொள்ளக்கூடிய விதத்தில் கொள்கைகளை உருவாக்கக்கூடிய அதிகாரத்தினை வங்கி கொண்டுள்ளமையினால் வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவம் அல்லது செயலாற்றத்தின் காத்திரமான தன்மையினை அது ஈட்டும் இலாபத்தின் அளவின் மூலம் அளவிடமுடியாது. ஆகவே, இலாபமோ அல்லது நட்டமோ வங்கியினது நடவடிக்கைகளிலிருந்து நிதியியல் வெளிப்பாட்டில் சமமானதொன்றாகவே கருதப்படுவதுடன் அதன் தொழிற்பாடுகளும் கொள்கைகளும் இலாபத்தை நோக்கியனவாக இருக்கவில்லை. எனினும், வங்கி அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது நற்பெயர் சார்ந்த இடர்நேர்வுகள், நிதியியல் இடர்நேர்வுகள் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் என்பனவற்றை எதிர்நோக்குகிறது. இடர்நேர்விற்கு உட்படக்கூடிய தன்மையினை மதிப்பிடவும் கண்காணிக்கவும் முகாமைப்படுத்தவும் வலுவானதும் காத்திரமானதுமான இடர்நேர்வு முகாமைத்துவம் கட்டுப்பாட்டு முறைமைகளும் நடைமுறைக்கிடப்பட வேண்டுமென வங்கி எதிர்பார்க்கிறது.

இறுதியில் இடர்களை அடையாளம் கண்டு கட்டுப்படுத்துவதில் நாணயச் சபை பொறுப்பு வாய்ந்ததாகும். பயனுறுதியான முகாமைத்துவமும் இடர் கட்டுப்பாடும் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக இந்தப் பணியை பல குழுக்களுக்கும் அலகுகளுக்கும்/திணைக்களங்களுக்கும் சபை அளித்துள்ளது.

ஆளுநரின் தலைமையிலான, உயர்மட்ட இடர் முகாமைத்துவக் குழு அனைத்துப் பிரதி ஆளுநர்களையும் உதவி ஆளுநர்களையும் இடர்முகாமைத்துவத் தொழிற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பிரதான திணைக்களங்களின் தலைவர்களையும் கொண்டுள்ளது. இடர் உபாயத்திட்டத்தை வகுத்தல் மற்றும் கோட்பாடுகள், சட்டகங்கள், கொள்கைகள் மற்றும் எல்லைகளை நடைமுறைப்படுத்தும் ஒட்டுமொத்தப் பொறுப்பை குழு கொண்டுள்ளது. ஏற்படக்கூடிய இடர்களை அடையாளம் கண்டு அத்தகைய இடர்களைக் குறைப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நுட்பங்கள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அது பொறுப்பாகவுள்ளது. எல்லா அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளும் இருப்பதுடன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை, பொதுப் பேரேட்டு முறைமை மற்றும் திறைசேரி நடவடிக்கை அறை முகாமைத்துவ முறைமை போன்ற வங்கியினால் பயன்படுத்தப்படும் தன்னியக்க முறைமைகள் தொடர்பான இடர்கள் கட்டுப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் குழு நாடுகின்றது.

மதிப்புச் சார்ந்த இடர்நேர்வு முக்கியமாக வங்கியின் கொள்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் பொருளாதாரத்திற்கு அல்லது பொதுமக்களுக்குப் போதுமான நன்மைகளை ஏற்படுத்தாத வங்கியின் அத்தகையக் கொள்கை வகுப்புத் தொழிற்பாடுகளிலிருந்தே தோன்றுகின்றது. எடுத்துக்காட்டாக, இம்மதிப்புச் சார்ந்த இடர்நேர்வு, உயர் பணவீக்கம் அல்லது இதன் ஒழுங்குவிதிகளின் கீழ் நிதியியல் நிறுவனங்கள் முறிவடையும் நேரங்களில் உயர்வாகக் காணப்படுகின்றன. கொள்கைகள் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதனையும் அத்தகைய கொள்கைகள் போதுமானளவிற்கு தொடர்பூட்டப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக வங்கியானது மனித மற்றும் ஏனைய மூலவளங்களை பொருளாதாரம் மற்றும் நிதியியல் கொள்கைகளுக்குப் பொறுப்பான திணைக்களங்களுக்கு வழங்கியது.

மத்திய வங்கி உள்ளாகக் கூடிய முக்கிய இடர்நேர்வுகளாக பிரதான நிதி இடர்கள் கடன் இடர்நேர்வு, வெளிநாட்டு நாணயமாற்று இடர்நேர்வு மற்றும் வட்டி வீத இடர்நேர்வு ஆகியவை விளங்குகின்றன. இந்த இடர்களின் கணிசமான ஒரு விகிதம் வங்கியின் வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவத்திலிருந்து எழுபவையாகும். வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலை முகாமைத்துவம் செய்கின்றது. பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் நடுநிலை அலுவலர் வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலுடன் தொடர்புடைய நிதி இடர்நேர்வின் கண்காணிப்புக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாவார்.

நாணயச் சபையினால் நியமிக்கப்படும் வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவக் குழு வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவத் தொழிற்பாடு பயனுறுதியாகவும் வினைத் திறனுடனும் மேற்கொள்ளப்படுவதை உறுதிப் படுத்துவதற்குரிய பொறுப்பு மிக்கதாகும். இடர் முகாமைத்துவம் தொடர்பானவை அடங்கலாக எல்லாக் கொள்கை நடவடிக்கைகளும் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு பின்பற்றுவதற்காக நாணயச் சபைக்கு விதந்துரைக்கப்படுகின்றன. இடர் குறைப்புக் கொள்கைகளை உள்ளடக்கிய விரிவான வழிகாட்டல்களின் தொகுதி ஒதுக்க முகாமைத்துவத் தொழிற்பாட்டில் ஈடுபட்டுள்ள வணிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முதலீடுகளினதும் எதிர்த்தரப்புகளினதும் கடன் வீதங்களை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் கடன் இடர் முகாமைத்துவம் செய்வதற்கு எதிர்தரப்பு கடன் இடர் முகாமைத்துவ முறைமையொன்று பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்றது. வட்டி வீதத்தின் அசைவுகளுக்கு வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் படுநிலை பற்றிய வட்டி வீத இடர், பட்டியலின் காலப்பகுதியின் பொருத்தமான சீர்செய்தல்கள் ஊடாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. வெளிநாட்டுச் செலாவணி இடர் அல்லது செலாவணி வீதத்தில் தளம்பல்களின் விளைவாக உருவாகின்ற மூலதன இழப்புகள் பிரதானமாக முதலீட்டு நாணயங்களின் பல்வகைத் தன்மையூடாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. பயனுறுதியான வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டின் ஆற்றலைப் பேணுவதற்காக திரவத்தன்மை இடரைக் குறைக்கும் வெளிநாட்டு ஒதுக்கங்களை முகாமைத்துவம் செய்தல் பிரதான அக்கறையாகும். கடன்கள், வட்டி வீதம், வெளிநாட்டு நாணயம், திரவத்தன்மை இடர்கள் முறையே பிரிவுகள் 42.1,42.2,42.3, மற்றும் 42.4 ஆகிய பிரிவுகளில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் வருடாந்தம் வங்கியின் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்படுகின்றன. நடவடிக்கை முறைகளின் போதுமானளவு, நடவடிக்கை முறைகளுக்கு வங்கிகள் இணங்கியொழுகுதல் ஆகியவற்றை இது பரிசீலிக்கின்றது. எல்லாத் திணைக்களங்களும் காலத்திற்குக் காலம் உள்ளகக் கணக்காய்வு மீளாய்வுக்கு உள்ளாகின்றன. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் நேரடியாக ஆளுநருக்கு அறிக்கை செய்வதுடன் அதன் கண்டுபிடிப்புகளையும் விதப்புரைகளையும் கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கை செய்கின்றது.

நாணயச் சபை அங்கத்தவரின் தலைமையிலான கணக்காய்வுக் குழு, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் கணக்காய்வு முன்னேற்பாடுகளையும் அதேபோன்று உள்ளகக் கணக்காய்வாளர்களையும் மேற்பார்வை செய்கின்றது. குழு உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மீளாய்வு செய்வதோடு வெளிவாரிக் கணக்காய்வுக்கான நேரடிப் பிரவேசத்தையும் கொண்டுள்ளது. பொதுமக்களுக்கு துல்லியமானதும் பொருத்தமானதும் நேரம் தவறாததுமான தகவல்களை வழங்கும்

பொருட்டு பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிதி அறிக்கையிடல் முறைமைக்கேற்ப முகாமை செய்யும் பொருட்டு நாணயச் சபைக்கு அறிவுரை வழங்குதலும் உதவுதலும் கணக்காய்வுக் குழுவின் முதன்மையான தொழிற்பாடாகவுள்ளது. குழு அதன் செயற்பாடுகளை கிரமமான அடிப்படையில் நாணயச் சபைக்கு அறிக்கையிடும்.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 மற்றும் 43இன் கீழ் வங்கி கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்விற்கு உட்படுதல் வேண்டும். அதன் காரணமாக கணக்காய்வாளர் நாயகம் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்துவதற்காக பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களின் கீழ் கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பட்டயக் கணக்காளரான ஏனஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் பணியினைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

### 42.1 கொடுகடன் இடர்நேர்வு

(அ) வங்கியின் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி புவியியல் பிரதேசங்களுக்கேற்ப (நாணயக் கூறுக்குரிய நாட்டை அடிப்படையாகக் கொண்டு) பின்வருமாறு:

| புவியியல் பிரதேசங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை | **140,373,807** | 299,357,182 |
| ஐக்கிய அமெரிக்கா | **213,281,074** | 307,264,213 |
| யப்பான் | **78,023,705** | 98,907,157 |
| பிரித்தானியா | **139,059,208** | 145,154,489 |
| ஐரோப்பா | **117,118,354** | 101,744,534 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **196,757,857** | 140,089,264 |
| ஏனையவை | **218,513,810** | 89,393,860 |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | **1,103,127,815** | 1,181,910,699 |

(ஆ) **கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி**

வங்கியின் ஆண்டு இறுதியில் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி நிறுவனங்களுக்கேற்ப வருமாறு:

| | 2013 ரூபா 000 | 2012 ரூபா 000 |
|---|---|---|
| அரசு | **638,446,787** | 916,429,708 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **196,757,857** | 140,089,264 |
| வெளிநாட்டு வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **255,318,467** | 116,674,935 |
| இலங்கை வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **7,731,366** | 4,235,915 |
| ஏனையவை | **4,873,338** | 4,480,877 |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | **1,103,127,815** | 1,181,910,699 |

(இ) **கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை**

பின்வரும் அட்டவணை ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ், பிச் றேட்டிங்ஸ் மற்றும் மூடிஸ் கொடுகடன் தரமிடல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிதிச் சொத்துக்களின் அல்லது வெளியீடுகளின் கொடுகடன் தரமிடல்களை காட்டுகின்றது. ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் தரமிடல்களுக்கும் பிச் றேட்டிங்ஸ் தரமிடல்களுக்கும் ஏற்ப AAA குறியீடுகள் அதியுயர் கொடுகடன் தரத்தினைக் கொண்ட தரமிடுதல்களையும் மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினையும் காட்டுகின்றது. நிதிக் கடப்பாடுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய சிறப்பான பலம் பொருந்திய நிலை உள்ளதென்பதை இது காட்டுகிறது. AA குறியீட்டின் மூலம் உயர் தரமிடுதல் காட்டப்படுவதோடு மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகின்றது. A குறியீட்டின் மூலம் உயர் மத்திய தரம் காட்டப்படுவதோடு குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகிறது. BBB குறியீட்டின் மூலம் கீழ்மட்ட முதலீட்டுத் தரமிடுதலும் கொடுகடன் இடர்நேர்வு தொடர்பில் நடைமுறையில் குறைந்த எதிர்பார்ப்பு உள்ளதென்பதும் காட்டப்படுவதோடு, பாதுகாப்பு அளவீடுகளின் தேவையை வலியுறுத்துகிறது. AAA குறியீட்டுக்குக் குறைவான தரங்களை பிரதானமான வகைகளுக்கு இடையிலுள்ள நிலைகளைக் காட்டும் பொருட்டு + அல்லது - அடையாளத்தின் மூலம் வகைப்படுத்திக் காட்டலாம். NR குறியீட்டின் மூலம் நிறுவனம், ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ், பிச் றேட்டிங்ஸ் மற்றும் மூடிஸ் தரமிடலுக்கு உள்ளாக்கப்படவில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

| கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | கொடுகடன் தரமிடல் | 2013 ரூபா 000 | % | 2012 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ரிசர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | **226,880,575** | **20.57%** | 192,558,429 | 16.29% |
| | AA | **-** | **0.00%** | 284,060 | 0.02% |
| | AA- | **118,832,685** | **10.77%** | 26,457,182 | 2.24% |
| | A+ | **79,727,931** | **7.23%** | 15,875,460 | 1.34% |
| | A | **95,905** | **0.01%** | 157 | 0.00% |
| | BBB+ | **31,729** | **0.00%** | 29,561 | 0.00% |
| | NR | **107,938** | **0.01%** | 73,284 | 0.02% |
| | | **425,676,763** | **38.59%** | 235,278,133 | 19.91% |
| **வெளிநாட்டு நாணய விற்பனை/ விற்பனைக்குள்ள முதலீடுகள்** | | | | | |
| பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | **235,865** | **0.02%** | | |
| | AAA | **164,474,689** | **14.91%** | 297,153,071 | 25.14% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | AA+ | 171,570,378 | 15.55% | 196,972,123 | 16.67% |
| | AA- | 20,121,914 | 1.82% | 10,347,101 | 0.88% |
| | A+ | 17,281,309 | 1.57% | 19,184,259 | 1.62% |
| | A | 3,624,296 | 0.33% | - | 0.00% |
| | A- | 3,692,426 | 0.33% | - | 0.00% |
| | BBB+ | 1,233,964 | 0.11% | - | 0.00% |
| | CC | - | - | - | - |
| | NR | 49,461,563 | 4.48% | 17,621,979 | 1.49% |
| | | 431,696,404 | 39.13% | 541,278,533 | 45.80% |
| இலாப நட்டங்களினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | AA- | 19,972,714 | 1.81% | 14,795,761 | 1.25% |
| | | 19,972,714 | 1.81% | 14,795,761 | 1.25% |
| **பெறுதி நிதியியல் சாதனங்கள்** | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | - | 0.00% | 0 | 0.00% |
| | AA- | 6,773 | 0.00% | - | - |
| | NR | - | 0.00% | 1,605,296 | 0.15% |
| | AAA | 3,103,634 | 0.28% | 1,064,600 | 0.09% |
| | AA+ | 260,648 | 0.02% | 37,250 | 0.00% |
| | AA | 866,706 | 0.08% | 630,600 | 0.05% |
| உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை | AA- | 1,029,765 | 0.09% | 599,325 | 0.05% |
| | A | - | 0.00% | 52,630 | 0.00% |
| | A- | 325,982 | 0.00% | - | - |
| | BBB | 76,750 | 0.00% | - | - |
| | | 5,670,258 | 0.48% | 3,989,701 | 0.34% |
| ப.நா.நி. தொடர்புடைய சொத்துக்கள் | AAA | 85,400,764 | 7.74% | 81,352,282 | 6.88% |
| | | 85,400,764 | 7.74% | 81,352,282 | 6.88% |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | | | | | |
| | AAA | 590 | 0.00% | 600 | 0.00% |
| | AA+ | - | - | - | 0.00% |
| | AA | - | 0.00% | 46,231 | 0.00% |
| | A+ | - | - | - | 0.00% |
| | BBB | - | 0.00% | 2,529,308 | 0.21% |
| | B+ | 1 | 0.00% | - | 0.00% |
| | NR | - | 0.49% | 5,667,373 | 0.49% |
| | | 591 | 0.00% | 8,243,512 | 0.70% |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | 968,417,494 | 87.79% | 884,937,922 | 74.87% |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | B+ | 15,853,513 | 1.44% | 175,251,772 | 14.83% |
| அரசுக்கான கடன்கள் | B+ | 109,167,071 | 9.90% | 111,291,843 | 9.42% |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | AA+ | 1,350,298 | 0.12% | 1,756,213 | 0.15% |
| | AA- | 17,795 | 0.00% | 62,921 | 0.01% |
| | A- | 6,213 | 0.00% | 23,572 | 0.00% |
| | BBB+ | - | 0.00% | 1 | 0.00% |
| | BB+ | - | 0.00% | 440 | 0.00% |
| | NR | 1,090 | 0.00% | 1,090 | 0.00% |
| ஏனைய உள்நாட்டுப் பெறத்தக்கவைகள் | B+ | 1,398,221 | 0.13% | 2,501,728 | 0.21% |
| | NR | 431,491 | 0.04% | 468,371 | 0.04% |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள் | NR | 41,095 | 0.00% | 41,095 | 0.00% |
| ஏனைய சொத்துக்கள் | B+ | 6,435,297 | 0.58% | 1,794,642 | 0.15% |
| | NR | 8,237 | 0.00% | 3,779,089 | 0.32% |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 134,710,321 | 12.21% | 296,972,777 | 25.13% |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | 1,103,127,815 | 100.00% | 1,181,910,699 | 100.00% |

42.1 கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை

(ஈ) பிரதானமான கொடுகடன் வகைப்படுத்தலின்படி

| | கொடுகடன் தரமிடல் | 2013 ரூபா 000 | % | 2012 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களின் சாராம்சம்** | | | | | |
| ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசேர்வ் வங்கி, அவுஸ்திரேலியாவின் ரிசேர்வ் வங்கி/ பன்னாட்டு தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து ரிசேர்வ் வங்கி | | **227,116,440** | **20.59%** | 192,558,429 | 16.29% |
| ப.நா. நிதியம் தொடர்பான சொத்துக்கள் | | **85,401,354** | **7.74%** | 81,352,282 | 6.88% |
| | AAA | **164,474,689** | **14.91%** | 297,153,671 | 25.14% |
| | AA+/- | **330,504,464** | **29.96%** | 234,106,698 | 19.81% |
| | A+/- | **104,421,867** | **9.47%** | 49,855,636 | 4.22% |
| | BBB+/- | **1,265,693** | **0.11%** | 2,558,869 | 0.22% |
| | B+/- | **1** | **0.00%** | - | 0.00% |
| | NR | **49,569,501** | **4.49%** | 24,967,932 | 2.12% |
| **உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை** | AAA | **3,103,634** | **0.28%** | 1,064,600 | 0.09% |
| | AA+ | **260,648** | **0.02%** | 37,250 | 0.00% |
| | AA | **866,706** | **0.08%** | 630,600 | 0.05% |
| | AA- | **1,029,765** | **0.09%** | 599,325 | 0.05% |
| | A | **-** | **0.00%** | 52,630 | 0.00% |
| | A- | **325,982** | **0.00%** | - | 0.00% |
| | BBB | **76,750** | **0.00%** | - | 0.00% |
| **மொத்த வெளிநாட்ட நாணய நிதிச் சொத்துக்கள்** | | **968,417,494** | **87.75%** | 884,937,922 | 74.87% |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| | AA+ | **1,350,298** | **0.12%** | 1,756,213 | 0.15% |
| | AA- | **17,795** | **0.00%** | 62,921 | 0.01% |
| | A- | **6,213** | **0.00%** | 23,572 | 0.00% |
| | BBB+ | **-** | **0.00%** | 1 | 0.00% |
| | BB+ | **-** | **0.00%** | 440 | 0.00% |
| | B+ | **132,854,102** | **12.04%** | 290,839,985 | 24.61% |
| | NR | **481,913** | **0.04%** | 4,289,645 | 0.36% |
| **மொத்த உள்நாட்ட நாணய நிதிச் சொத்துக்கள்** | | **134,710,321** | **12.21%** | 296,972,777 | 25.13% |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | | **1,103,127,815** | **100.00%** | 1,181,910,699 | 100.00% |

**42.2 வட்டி வீத இடர்நேர்வு**

**(அ) வெளிநாட்டு நாணய வட்டி வீதக் கூருணர்திறன்**

**வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற இழப்புக்களின் இடர்நேர்வாகும்.**

நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத கூருணர் திறனானது, வட்டி வீதம் 10 அடிப்படைப்புள்ளிகளினால் அதிகரிப்பதன் காரணமாக உருவாகக் கூடிய இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுவதோடு, கீழே தரப்பட்டுள்ள நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியல் கூறுகளைப் பயன்படுத்தி வங்கியானது இடர்நேர்வுக் கூருணர்திறனை அளவிடுகின்றது.

| பட்டியல் பிரிவு | நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.) 2013 | 2012 |
|---|---|---|
| வர்த்தகம் | **3.11** | 7.1 |
| விற்பனைக்குள்ளவை | **11.69** | 16.54 |
| மொத்தம் | **14.80** | 23.64 |

பின்வரும் உபாய முறைகளைப் பயன்படுத்தி பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் மத்திய அலுவலகம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வினை முகாமை செய்கின்றது.

(i) வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வட்டி வீத மாற்றங்களின் தாக்கத்தினை வட்டி வீத கூருணர்திறன் அளவிடுகின்ற அதேவேளை, வட்டி வீதத்தினையும் அதேநேரம் முதலீட்டுக் காலவரையறையையும் கவனத்திலெடுக்கின்றதான மாற்றப்பட்ட காலவரையறையை வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுவதற்காக இ.ம.வ. பயன்படுத்துகின்றது. மாற்றப்பட்ட காலவரையானது வழங்கப்பட்டுள்ள வட்டி வீதத்திலான மாற்றத்திற்கான (விளைவு) பிணையங்களின் விலையிலான மாற்றத்தை அளவிடுகின்றது. உயர்ந்தளவு மாற்றப்பட்ட காலவரையறையானது உயர்ந்தளவு இடர்நேர்வினைக் குறிக்கின்றது. ஆதலால் வங்கியானது நிதிச் சந்தையிலான அபிவிருத்தி, பட்டியலின் பண்புகள் மற்றும் வங்கியின் இடர்நேர்வு விருப்பினைக் கவனத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் பொருத்தமான மாற்றப்பட்ட காலவரையறையை விதிக்கின்றது. பொதுவான நடைமுறையாக, மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்தின் உயர்ந்தபட்ச எல்லையை ஏறத்தாழ 2.5 (ஒட்டுமொத்தம்) ஆக குறித்துரைக்கின்றது. அதேநேரம் இது சந்தை நிலைமை மற்றும் மத்திய வங்கியின் இடர்நேர்வு விருப்பின் அடிப்படையில் கீழ் நோக்கியதாக மாற்றமடையலாம். வங்கியினால் விதிக்கப்படுகின்ற உயர்ந்தபட்ச எல்லையினுள் மாற்றப்பட்ட காலவரையறையைப் பேணி வருகின்ற அதேவேளை வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வும், காலவரையறை இடர்நேர்வும் கட்டுப்படுத்தப்படுகின்றன. உயர்ந்தபட்ச எல்லையுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்ற வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் மாற்றப்பட்ட காலவரையறை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**மாற்றப்பட்ட காலவரையறை**

| முதலீட்டுப் பிரிவு | மாற்றப்பட்ட காலவரையறை 2013 | 2012 |
|---|---|---|
| பணச் சந்தை (நிலையான மற்றும் அழைப்பு வைப்புக்கள்) | **-** | 0.01 |
| மூலதனச் சந்தை (நிலையான வருமானப் பிணையங்கள்) | **4.64** | 5.55 |
| ஒட்டுமொத்தம் | **-** | 3.58 |

(ii) மாற்றப்பட்ட காலவரையானது விலையிலான அதிகளவு மாற்றத்தினைக் கணிப்பிடாததால், வெளிநாட்டு ஒதுக்குப் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு புறக்குவிவான அளவீடொன்று பயன்படுத்தப்படுகின்றது. காலவரையறையை குறிக்கும் நேர்கோட்டிலிருந்து முறி விலை விளைவு வளையின் வேறுபாட்டினை புறக்குவிவு அளவிடுகின்றது. முறி விலையின் மாற்றத்திற்கான சராசரிக் காலவரையறையின் மேம்பாட்டினை இது அனுமதிக்கின்றது. புறக்குவிவு என்பது விளைவு மாற்றத்திற்கான காலப்பகுதி மாற்றமாகும். இது மாற்றப்பட்ட காலப்பகுதிக்கான ஊகத் தவறுகளை அளவிடுகின்றது. மறுசொல்லில் விளக்குவதாயின் இது, இதன் பிணைய விலைகளினால் வகுக்கப்பட்ட விளைவு தொடர்பான பிணைய விலைகளின் இரண்டாவது பெறுதியாகும். இதன் விலைகள் கீழ் நோக்கிய போக்குகளுக்காக இதன் விலையில் காணப்படும் சமமான அசைவில் விலை வீழ்ச்சிகளிலும் பார்க்க உயரும் பொழுது பிணையமானது சாதகமான புறக்குவிவினை எடுத்துக்காட்டுகிறது.

**கூறாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் புறக்குவிவு**

| பட்டியல் பிரிவு | நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2013 | 2012 |
| வர்த்தகம் | **0.42** | 0.45 |
| விற்பனைக்குள்ளவை | **0.32** | 0.42 |
| **மொத்தம்** | **0.34** | 0.43 |

(iii) **இடர்நேர்வேற்புப் பெறுமதி**

இடர்நேர்வேற்புப் பெறுமதியானது நிதியியல் சந்தை அசைவுகளிலிருந்தான சாதாரண சந்தை நிலைமைகளின் கீழ் சொத்துப்பட்டியலின் கீழ் நோக்கிய இடர்நேர்வை தனி இலக்கத்தில் சுருக்குகின்றது. எனவே, இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இலக்கிடப்பட்ட அசைவு மீதான உயர்ந்தபட்ச இழப்பாக இருப்பதனால், உண்மையான இழப்பு அதிகமாக இருப்பதற்குரிய முற்குறிப்பிடப்பட்ட நிகழ்தகவு குறைவாகும்.

இழப்பு: இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இடர்நேர்வுகள் மற்றும் நிலைமைகளுக்கிடையில் கூட்டக்கூடிய, பணத்தின் நியதிகளிலான ஒரு இலக்கத்தை எமக்குத் தருகின்றது.

நிகழ்தகவு: உண்மையான இழப்புக்கள் இடர்நேர்வேற்புப் பெறுமதியிலும் பார்க்க அதிகமாக இருப்பதற்கு 5 சதவீத நிகழ்தகவு இருக்குமாயின், 'சாதாரண' வியாபார நாட்களில் 100 இற்கு 5 இழப்புக்கள் மட்டுமே இடர்நேர்வேற்புப் பெறுமதியை மிஞ்சும். அதாவது, அத்தகைய 5 நாட்களில் இழக்கப்படக்கூடிய மிகச் சிறிய அளவு இடர்நேர்வேற்புப் பெறுமதியாகும். இது மிகவும் மோசமான சாத்தியமுள்ள இழப்பை அளவிடாது, ஏனெனில், அது கணிக்கக்கூடிய இலக்கு எல்லை இல்லை.

ஒழுங்குமுறையான சொத்துப்பட்டியல் கலைப்பிற்காக தேவைப்படும் நீண்ட காலத்துடன் ஒத்திருக்க வேண்டும். எனவே, அளவுக்காக சொத்துப்பட்டியல் முடக்கப்பட்டது. சொத்துப்பட்டியல் ஒன்றிற்கான இடர்நேர்வேற்புப் பெறுமதியை கணிப்பதிலுள்ள பல்வேறு முறைகளிலிருந்து, வங்கியானது 99 சதவீத நம்பக இடைவெளியில் 2 வாரங்களுக்கான இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு மொன்டெகார்லோ உருவகப்படுத்தல் முறைமையைப் பயன்படுத்துகின்றது. இவ்வுபாயத்தினை வங்கி 2011 மாச்சிலிருந்து பயன்படுத்தியது.

| பட்டியல் பிரிவு | இடர்நேர்வேற்புப் பெறுமதி (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2013 | 2012 |
| வர்த்தகம் | 10.78 | 17.01 |
| விற்பனைக்குள்ளவை | 37.20 | 36.62 |
| **மொத்தம்** | 47.98 | 53.63 |

(iv) **வர்த்தகப்படுத்தல் மற்றும் திறந்த நிலைமை வரையறைகள்**

தனிப்பட்ட வணிகர்களுக்காக "வணிகப்படுத்தல் அதிகாரி" என்ற முறை மூலம் வங்கியானது ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓரிரவு நிலை வரையறை மீது குறிப்பிட்ட வணிக வரையறைகளை வழங்கியுள்ளது.

**(ஆ) உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன்**

உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் கடன்களைக் குறிப்பதால் அவை இ.ம. வங்கியின் நிதி நிலைமை பற்றிய கூற்றில் கடன்தீர் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. வட்டி வருமானமொன்றை ஈட்டும் நோக்கத்துடன் வங்கி திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யாததால் இந்தப் பட்டியல் ஒரு முதலீட்டுப்பட்டியல் அல்ல. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் என்னும் அதன் மையக் கருப்பொருட்கள் தொடர்பாக நாணயத் தொழிற்பாட்டுக் கொள்கைகளை மேற்கொள்கையில் திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையில் ஏற்படுத்துவதற்காக அல்லது திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையிலிருந்து உள்ளீர்ப்பதற்காக வங்கி திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்கின்றது அல்லது விற்பனை செய்கின்றது. ஆதலால், வங்கியின் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்கள் அதன் நாணயச் கொள்கைத் தொழிற்பாடுகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. அத்துடன், பணச் சந்தையில் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகியவை வங்கியின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அதனால் நிர்ணயிக்கப்படும் கொள்கை வீதங்களாகும். மேலும், சந்தையிலிருந்து ரூபாய் திரவத்தன்மையை ஏற்படுத்துவதில் அல்லது திரவத்தன்மையை உள்ளீர்ப்பதில் வங்கியின் நடவடிக்கைகள் பொதுவான ரூபாய் சந்தை வட்டி வீதங்களில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதன்படி, வங்கியின் திறைசேரி உண்டியல்களின் பட்டியலில் இருந்தும் அவ்வாறே வட்டி வீதங்களின் மாற்றங்களிலிருந்தும் எழுகின்ற திறைசேரி உண்டியல் பட்டியலிலிருந்து ஈட்டப்படும் வட்டி வருமானத்தின் மாற்றங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக உருவாவதேயன்றி முதலீட்டுத் தீர்மானங்கள் காரணமாக அல்ல. எனவே, வங்கியானது உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வட்டி வீதக் கூருணர்திறனைக் கவனத்திற் கொள்வதில்லை.

42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள் விலையிடப்படும்

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2013 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.76 | 425,676,763 | 425,676,763 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 2.19 | 431,696,404 | 12,292,861 | 23,856,111 | 63,591,175 | 121,712,081 | 210,244,176 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.12 | 11,668,079 | 11,668,079 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 869,041,246 | 449,637,703 | 23,856,111 | 63,591,175 | 121,712,081 | 210,244,176 |
| **வட்டிக்கு கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 73,732,685 | - | - | - | 128,430 | 73,604,255 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 5,670,258 | 5,670,258 | - | - | - | - |
| பெறத்தக்கவை | | 591 | 591 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | | 19,972,714 | 19,972,714 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 99,376,248 | 25,643,563 | - | - | 128,430 | 73,604,255 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 968,417,494 | 475,281,266 | 23,856,111 | 63,591,175 | 121,840,511 | 283,848,431 |
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 0.0000 | 268,796,339 | 45,088,418 | 50,290,928 | 72,835,137 | 100,581,856 | - |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 0.07 | 37,301,553 | 37,301,553 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 306,097,892 | 82,389,971 | 50,290,928 | 72,835,137 | 100,581,856 | - |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் | | 21,504,196 | 21,504,196 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | | 16,183,282 | 16,183,282 | - | - | - | - |
| ப.நா.நி. தொடர்புடைய பொறுப்புக்கள் | | 153,235,673 | - | - | - | - | 153,235,673 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கி மூலதனம் | | 1,784,046 | - | - | - | - | 1,784,046 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 45,437,073 | 45,437,073 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 238,144,270 | 83,124,551 | - | - | - | 155,019,719 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 544,242,162 | 165,514,522 | 50,290,928 | 72,835,137 | 100,581,856 | 155,019,719 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | **562,943,354** | **367,247,732** | **(26,434,817)** | **(9,243,962)** | **21,130,225** | **210,244,176** |

## 42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | நிறையேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2013 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 9.36 | 2,923,513 | 2,923,513 | - | - | - | - |
| திறைசேரி உண்டியல் மற்றும் முறி நேர்மாற்று மீள்கொள்வனவு | 8.50 | 12,930,000 | 12,930,000 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 7.52 | 1,375,396 | 378,840 | 361,206 | 513,530 | 121,820 | - |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 4.18 | 4,400,751 | 45,406 | 46,435 | 96,054 | 315,483 | 3,897,373 |
| - ஏனையவை | 7.65 | 2,042,783 | 779,988 | 60,760 | 369,112 | 832,923 | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 23,672,443 | 17,057,747 | 468,401 | 978,696 | 1,270,226 | 3,897,373 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான முற்பணங்கள் | | 109,167,071 | 109,167,071 | - | - | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 1,829,712 | 1,829,712 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய சொத்துக்கள்** | | 111,037,878 | 110,996,783 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | 134,710,321 | 128,054,530 | 468,401 | 978,696 | 1,270,226 | 3,938,468 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 7.25 | 84,601,000 | 84,601,000 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 84,601,000 | 84,601,000 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களுடனான நிலுவைகள் | | 148,809,893 | 148,809,893 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | | 416,230 | 416,230 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள் | | 2,419,087 | 2,419,087 | - | - | - | - |
| ஏனைய செலுத்த வேண்டியவை | | 5,659,719 | 5,659,719 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | 157,304,929 | 157,304,929 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 241,905,929 | 241,905,929 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | (60,928,557) | (67,543,253) | 468,401 | 978,696 | 1,270,226 | 3,897,373 |

42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள்விலையிடப்படும்.

2012 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறையேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2012 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.59 | 235,278,133 | 235,278,133 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 1.32 | 541,278,533 | 8,317,820 | 13,352,336 | 30,504,343 | 182,321,351 | 306,782,683 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.02 | 9,837,987 | 9,837,987 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 786,394,653 | 253,433,940 | 13,352,336 | 30,504,343 | 182,321,351 | 306,782,683 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 71,514,295 | - | - | - | - | 71,514,295 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 3,989,701 | 3,989,701 | - | - | - | - |
| பெறத்தக்கவை | | 8,243,512 | 8,243,512 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | | 14,795,761 | 14,795,761 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 98,543,269 | 27,028,974 | - | - | - | 71,514,295 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 884,937,922 | 280,462,914 | 13,352,336 | 30,504,343 | 182,321,351 | 378,296,978 |
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 0.0023 | 319,006,144 | 21,271,614 | 37,006,552 | 92,516,379 | 168,211,599 | - |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 0.17 | 28,953,955 | 28,953,955 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 347,960,099 | 50,225,569 | 37,006,552 | 92,516,379 | 168,211,599 | - |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளும் ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | | 2,619,847 | 2,619,847 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 3,257,119 | 3,257,119 | - | - | - | - |
| ப.நா.நி. | | 148,636,052 | - | - | - | - | 148,636,052 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கி மூலதனம் | | 1,547,781 | - | - | - | - | 1,547,781 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 62,972,881 | 62,972,881 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 219,033,680 | 68,849,847 | - | - | - | 150,183,833 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 566,993,779 | 119,075,416 | 37,006,552 | 92,516,379 | 168,211,599 | 150,183,833 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 438,434,554 | 203,208,371 | (23,654,216) | (62,012,036) | 14,109,752 | 306,782,683 |

42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

**(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள்விலையிடப்படும்.**

2012 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2012 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 11.95 | 148,672,772 | 138,508,882 | 10,163,890 | - | - | - |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் - நேர்மாற்று மீள்கொள்வனவு | 9.50 | 26,579,000 | 26,579,000 | - | - | - | - |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 7.27 | 1,844,237 | 387,906 | 358,126 | 665,457 | 432,748 | - |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன் | 4.00 | 3,767,064 | 67,431 | 68,566 | 140,707 | 452,432 | 3,037,928 |
| - ஏனையவை | 7.32 | 1,806,667 | 240,892 | 77,207 | 596,426 | 884,869 | 7,273 |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 182,669,740 | 165,784,111 | 10,667,789 | 1,402,590 | 1,770,049 | 3,045,201 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான முற்பணங்கள் | | 111,291,843 | 111,291,843 | - | - | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 2,970,099 | 2,970,099 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய சொத்துக்கள்** | | 114,303,037 | 114,261,942 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | 296,972,777 | 280,046,053 | 10,667,789 | 1,402,590 | 1,770,049 | 3,086,296 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 7.50 | 7,015,000 | 7,015,000 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 7,015,000 | 7,015,000 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களுடனான நிலுவைகள் | | 166,288,378 | 166,288,378 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | | 699,628 | 699,628 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள் | | 1,341,268 | 1,341,268 | - | - | - | - |
| ஏனைய செலுத்தப்பட வேண்டியவை | | 31,934,646 | 31,934,646 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | 200,263,920 | 200,263,920 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 207,278,920 | 207,278,920 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 175,654,740 | 158,769,111 | 10,667,789 | 1,402,590 | 1,770,049 | 3,045,201 |

42.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு

வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மூலமாக வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் பிரதானமாக உருவாகின்றன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாற்றங்கள் உருவாகக்கூடிய போக்கின் காரணமாக வங்கியானது செலாவணி இடர்நேர்வுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு உள்ளது. நாணயச் சபையினாலும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினாலும் வங்கியின் பன்னாட்டு ஒதுக்கங்களில் பல்வேறு நாணய வகைகளும் வைத்திருக்கப்பட வேண்டிய வீதத் தொகைகள்

தீர்மானிக்கப்பட்டுள்ளன. நாணயங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது அரச கடன்களை மீளச் செலுத்துவதன் தேவைப்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கிணங்க வங்கியானது பிரதானமான நாணய வகைகள் பலவற்றை, அதாவது ஐக்கிய அமெரிக்கா டொலர், ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர், யப்பான் யென், யூரோ மற்றும் நியூசிலாந்து டொலர் ஆகியவற்றை வைத்திருக்கின்றது. வெளிநாட்டு நாணயங்களின் நிலைமைகள் வரையறுக்கப்பட்ட எல்லைகளை அடைகின்ற போது கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது.

### வெளிநாட்டு நணயங்களுக்கான தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை

2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு:

**நாணயம்**

| 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | ஸ்ரேலிங் பவுண் ரூ.000 | சிஎஉ ரூ.000 | அவுஸ்திரேலிய டொலர் ரூ.000 | ஏனைய நாணயங்கள் ரூ.000 | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | (55,000,132) | (1,747,078) | 56,010,411 | (16,772,840) | - | 123,785,851 | 319,400,551 | 425,676,763 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 180,357,566 | 70,242,132 | 25,488,744 | 75,000,363 | - | 77,770,996 | 22,809,317 | 451,669,118 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 6,773 | - | - | - | - | - | 5,663,485 | 5,670,258 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 85,400,764 | - | - | 85,400,764 |
| ஏனைய வெளிநாட்டுப் பெறத்தக்கவை | - | - | 1 | - | 590 | - | - | 591 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | 125,364,207 | 68,495,054 | 81,499,156 | 58,227,523 | 85,401,354 | 201,556,847 | 347,873,353 | 968,417,494 |
| விகிதம் | 13% | 7% | 8% | 6% | 9% | 21% | 36% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகளுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய தொகைகள் | 29,115 | 9,051,040 | 2,478,696 | 2,397 | 608,315 | 9,334,633 | - | 21,504,196 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,179,409 | - | - | - | - | - | 15,003,873 | 16,183,282 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 37,156,289 | 145,264 | - | - | - | - | - | 37,301,553 |
| ப.நா.நி. | - | - | - | - | 422,032,012 | - | - | 422,032,012 |
| ஏனையவை | 46,530,204 | - | - | - | - | - | 690,915 | 47,221,119 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | 84,895,017 | 9,196,304 | 2,478,696 | 2,397 | 422,640,327 | 9,334,633 | 15,694,788 | 544,242,162 |
| விகிதம் | 16% | 2% | 0 | 0 | 78% | 2% | 0 | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | 40,469,190 | 59,298,750 | 79,020,460 | 58,225,126 | (337,238,973) | 192,222,214 | 332,178,565 | 424,175,332 |

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு இருக்கும்

| | இலங்கை ரூபா ரூ.000 | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | ஸ்ரேலிங் பவுண் ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | அவுஸ்திரேலிய டொலர் ரூ.000 | நியூசிலாந்து டொலர் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | | |
| கொள்வனவு | 314,641,828 | 55,095,905 | - | - | - | - | - |
| விற்பனை | (2,411,633) | (312,230,195) | (25,277,612) | (29,818,293) | - | - | - |
| **2012 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | | |
| கொள்வனவு | 209,694,909 | 14,188,614 | - | 2,060,425 | 1,267,999 | 16,313,617 | - |
| விற்பனை | (4,333,349) | (214,670,483) | - | (14,407,127) | - | (10,114,605) | - |

## 42.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு (தொடர்ச்சி)

2012 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு

### நாணய இன வகைகள்

| 2012 திசெம்பர் 31இல் உள்ளவாறு | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | ஸ்ரேலிங் பவுண் ரூ.000 | சிஎஉ ரூ.000 | அவுஸ்திரேலிய டொலர் ரூ.000 | ஏனைய நாணயங்கள் ரூ.000 | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 114,524,648 | 7,020,467 | 68,061,818 | 3,294,152 | - | 40,866,045 | 1,511,003 | 235,278,133 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 242,692,634 | 69,668,432 | 33,212,068 | 125,259,746 | - | 70,515,587 | 14,725,827 | 556,074,294 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,605,296 | - | - | - | - | - | 2,384,405 | 3,989,701 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 81,352,282 | - | - | 81,352,282 |
| ஏனைய வெளிநாட்டுப் பெறத்தக்கவை | 2,529,308 | 3,613,310 | - | 2,100,294 | 600 | - | - | 8,243,512 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | 361,351,886 | 80,302,209 | 101,273,886 | 130,654,192 | 81,352,882 | 111,381,632 | 18,621,235 | 884,937,922 |
| விகிதம் | 41% | 9% | 11% | 15% | 9% | 13% | 2% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகளுக்கும் நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய தொகைகள் | 958,779 | 172,754 | 1,485,866 | 2,093 | - | 355 | - | 2,619,847 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 43,937 | - | - | - | - | 6,182 | 3,207,000 | 3,257,119 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 28,943,027 | 10,928 | - | - | - | - | - | 28,953,955 |
| ப.நா.நி. | - | - | - | - | 467,642,196 | - | - | 467,642,196 |
| ஏனையவை | 64,520,662 | - | - | - | - | - | - | 64,520,662 |
| **மொத்த வெளிநாட்டு நாண நிதியப் பொறுப்புக்கள்** | 94,466,405 | 183,682 | 1,485,866 | 2,093 | 467,642,196 | 6,537 | 3,207,000 | 566,993,779 |
| விகிதம் | 17% | 0% | 0% | 0% | 82% | 0% | 0% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | 266,885,481 | 80,118,527 | 99,788,020 | 130,652,099 | (386,289,314) | 111,375,095 | 15,414,235 | 317,944,143 |

### 42.4. நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள்

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6-1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டு களுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 425,676,763 | - | - | - | - | 425,676,763 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 104,105,563 | - | - | - | - | 104,105,563 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 12,929,296 | 20,413,029 | 67,917,803 | 136,130,521 | 161,748,684 | 399,139,332 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 11,668,079 | - | - | 128,430 | 73,604,255 | 85,400,764 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | 591 | - | - | - | - | 591 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 554,380,292 | 20,413,029 | 67,917,803 | 136,258,951 | 235,352,939 | 1,014,323,013 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 15,985,640 | - | - | - | - | 15,985,640 |
| அரசுக்கான முற்பணங்கள் | 109,167,071 | - | - | - | - | 109,167,071 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 429,931 | 399,568 | 552,877 | 144,913 | - | 1,527,289 |
| உள்நாட்டில் பெறத்தக்க ஏனையவை | 1,829,712 | - | - | - | - | 1,829,712 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள் | - | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 721,285 | 92,126 | 555,410 | 1,270,660 | 3,910,923 | 6,550,404 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 128,133,639 | 491,695 | 1,108,287 | 1,415,573 | 3,952,018 | 135,101,211 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்** | 682,513,931 | 20,904,724 | 69,026,090 | 137,674,524 | 239,304,957 | 1,149,424,225 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் | 23,181,098 | 1,281,220 | 1,806,400 | 1,249,856 | 1,038,652 | 28,557,225 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 37,301,553 | - | - | - | - | 37,301,553 |
| ப.நா.நி. | 45,088,418 | 50,290,928 | 72,835,137 | 100,581,856 | 153,235,672 | 422,032,012 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்தத்தக்கவை | - | | | | 1,784,046 | 1,784,046 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 105,571,069 | 51,572,148 | 74,641,537 | 101,831,712 | 156,058,369 | 489,674,836 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 148,809,893 | - | - | - | - | 148,809,893 |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | 416,230 | - | - | - | - | 416,230 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 84,601,000 | - | - | - | - | 84,601,000 |
| ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள் | 2,419,087 | - | - | - | - | 2,419,087 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 5,659,719 | - | - | - | - | 5,659,719 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதிதியியல் பொறுப்புக்கள்** | 241,905,929 | - | - | - | - | 241,905,929 |
| **மொத்த கழிவுறப்படாத நிதிதியியல் பொறுப்புக்கள்** | 347,476,998 | 51,572,148 | 74,641,537 | 101,831,712 | 156,058,369 | 731,580,765 |
| **தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | 335,036,932 | (30,667,424) | (5,615,447) | 35,842,812 | 83,246,587 | 417,843,460 |

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6-1 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|
| **2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | |
| **பெறுதி நிதியியல் சொத்துக்கள்** | 272,936,121 | 96,790,456 |
| **பெறுதி நிதியியல் பொறுப்புக்கள்** | (270,565,621) | (92,955,576) |

**வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்**

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய அனைத்து எதிர்கால காசுப்பாய்ச்சல்களும், நிதியியல் நிலைமைக் கூற்று தயாரிக்கப்படும் திகதியிலுள்ள செலாவணி வீதத்தை பயன்படுத்தி அறிக்கையிடும் நாணயத்திற்கு மாற்றப்பட்டன.

**42.5 திரவத்தன்மை இடர்நேர்வு**

நிதியியல் சாதனங்களுக்கான கடப்பாடுகளை நிறை வேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைக் குறுகிய கால அறிவித்தலின் மீது பெற்றுக் கொள்கின்ற போது நிறுவனமொன்று முகம் கொடுக்கின்ற இடர்ப்பாடு திரவத்தன்மை இடர்நேர்வாகும். நிறுவனம் தனது நிதிச் சொத்துக்களை விரைவாக, சந்தைப் பெறுமதியைவிட மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி நேரிடுவதும் திரவத்தன்மை இடர்நேர்வொன்றாகும்.

(அ) வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் உள்ளமைப்பைத் தீர்மானிக்கின்ற போது முக்கியமாக திரவத்தன்மை தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களில் தலையீடு செய்கின்ற போது மற்றும் அரச கடன்கள் மற்றும் ப.நா.நி. கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டு ஒதுக்கங்களை ஒழிக்கின்ற போது இது ஒரு உள்ளார்ந்த தேவைப்பாடாகும். நிதியங்களை விரைவாக அடைவதை உறுதி செய்து கொள்ளும் நோக்கத்துடன் வங்கியானது பின்வரும் அளவீடுகளை மேற்கொள்கிறது.

- வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் திரவத்தன்மை இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட திரவச் சொத்து வீதங்கள்.
- ஒரு இணைத்தரப்பினருடன் ஒரு நாணயத்தில் வைத்திருக்கப்படக்கூடிய ஒதுக்குகளின் உச்சமட்ட விகிதத்தின் மீதான வரையறை

(ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற சந்தைப்படுத்தக்கூடிய அதிக திரவத்தன்மையுடனான கருவிகளை மேலதிகப் பிணையங்களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, மீள்கொள்வனவு/நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கிப் பிணையங்கள் மற்றும் ஐ.அ. டொலர்/ரூபா பரஸ்பர பரிமாற்றல்கள் போன்ற நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி முறைமையினுள் நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப் பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலையைக் கட்டுப்படுத்துகிறது.

**43. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும்**

அனைத்து ஊழியர்களும் உள்ளடங்கக் கூடியவாறான குறித்துரைக்கப்பட்ட ஐந்து நலவுரிமைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றன. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட பணிக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். ஊழியர் ஓய்வூதியத் திட்டமானது பங்களிப்பில்லாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதுடன் இதன் நன்மைக் கிரயச் செலவுகளை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. இத் திட்டத்திற்குத் தகுதி பெற்ற 1994 ஓகத்து 01இற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வதுடன் 1994 ஓகத்து 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தினை பங்களிப்புச் செய்வர்.

வங்கியில் ஐந்து ஆண்டு கால பணியைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெறாத ஊழியர்களுக்காக பணிக் கொடை நன்மைகள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப்பொறுப்புபைப் பூர்த்தி செய்வதற்காக காப்புறுதி மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட, அதற்குச் சமமானதொரு தொகை நிதி நிலைமைகள் பற்றிய கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

தொழில்நிலைக்குப் பிந்திய மருத்துவ நலத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற ஊழியர்களால் அவர்கள் பெயரில் அல்லது அவர்களது துணைவர் பெயரில் மற்றும் ஊழியர்களது விதவைகள்/விதுரர்களாலும் ஏற்கப்படுகின்ற ஒரு சில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், பணிக் கொடைகள் திட்டம் மற்றும் மருத்துவ நலத் திட்டம் என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட நன்மைகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைப் பணிச் செலவுகள் தொடர்பான காப்புறுதி மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான காப்புறுதி மதிப்பீட்டாளரான கே.ஏ.பன்டிற், ஆலோசகர் மற்றும் காப்புறுதி மதிப்பீட்டாளர் (மும்பாய்) ஆண்டுக் காலத்தில் பணியின் பொருட்டு வங்கியினால் அமர்த்தப்பட்டார்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் என்பனவற்றின் நிதியங்கள் தனித்தனியாக முகாமைப்படுத்தப்படுவதுடன் தனித்தனியாக ஏடுகளும் பேணப்படுகின்றன. எனினும், பணிக்கொடைத் திட்டமும் மருத்துவ நன்மைகள் திட்டமும் வங்கியின் கணக்கேடுகளிலிருந்து வேறாக்கப்படவில்லை. மேலும் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் வங்கி ஏடுகளில் இந்நிதியத்திற்காக தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றதுடன், முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் பங்கிடப்படாமல் மீள முதலிடப்படுகின்றன.

உரிய திட்டங்களுக்கான காப்புறுதி மதிப்பீட்டின்படி, நடைமுறைப் பணிச் செலவு, வட்டிச் செலவு, திட்டச் சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட தேறிய வருமானம், காப்புறுதி இலாபம்/(நட்டங்கள்) மற்றும் இடைக்காலத் திருத்தங்களும் வரையறுக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடுகளும் தொடர்பாக வங்கியினால் வருமானக் கூற்றில் காட்டப்பட்ட தேறிய நன்மைகள் செலவுத் தொகையின் ஆக்கக் கூறுகளைப் பின்வரும் அட்டவணை சுருக்கமாகத் தருகின்றது.

அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் மொத்தச் சந்தைப் பெறுமதி ரூ.28,575,636 மில்லியனாக (2012 - ரூ.26,122.416 மில்லியன்) அமைந்து ரூ.33,511.975 மில்லியன் (2012 - 29,955.104 மில்லியன்) கொண்ட தற்போதைய அனைத்து நன்மைகள் கடப்பாடுகளினதும் மொத்தத்திலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டதன் மூலம் ரூ.4,936.339 மில்லியன் (2012 - ரூ.3,832.688 மில்லியன்) கொண்ட பற்றாக்குறை தோன்றியது.

43.1 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும் (தொடர்ச்சி)

| 2013<br>நன்மைப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | பணிக் கொடைத் திட்டம்<br>ரூ.000 | மருத்துவ நலன்கள்<br>ரூ.000 | மொத்தம் 2013<br>ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| நன்மைக் கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதி | 26,890,798 | 4,012,787 | 659,706 | 184,040 | 1,764,644 | 33,511,975 |
| திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | (21,381,994) | (4,504,946) | (1,394,026) | (105,787) | (1,188,883) | (28,575,636) |
| இனங்காணப்படாத தேறிய காப்புறுதி இலாபம் / (நட்டம்) | - | - | - | - | - | - |
| **நன்மைப் பொறுப்பு/ (சொத்து) நடைமுறையற்ற** | 5,508,804 | (492,159) | (734,320) | 78,253 | 575,761 | 4,936,339 |
| **நன்மைப் பொறுப்பு/ (சொத்து)களிலான அசைவு** | | | | | | |
| 2013 சனவரி 01இல் உள்ளவாறு | 4,576,066 | (650,436) | (646,013) | 70,224 | 482,847 | 3,832,688 |
| நன்மைகளுக்கான செலவு | 919,024 | (65,044) | (64,601) | 33,325 | 106,613 | 929,317 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 335,057 | 247,277 | (14,080) | (5,586) | 29,749 | 592,417 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (321,343) | (23,956) | (9,626) | (19,710) | (43,448) | (418,083) |
| **2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான நடைமுறையல்லாதவை** | 5,508,804 | (492,159) | (734,320) | 78,253 | 575,761 | 4,936,339 |
| **நன்மைகளுக்கான செலவுகள்** | | | | | | |
| நன்மைக் கடப்பாடுகளின் மீது வட்டிச் செலவினம் | 457,606 | (65,044) | (64,601) | 7,022 | 48,285 | 383,268 |
| திட்டச் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் வருவாய் | - | - | - | - | - | - |
| ஆண்டினுள் இனங்காணப்பட்ட தேறிய கணிக்கப்பட்ட (இலாபம்) /நட்டம் | - | - | - | - | - | - |
| நிலைமாறுகால சீர்செய்தல்கள் | - | - | - | - | - | - |
| தேறிய நடைமுறைப் பணிச் செலவினங்கள் | 461,418 | - | - | 26,303 | 58,328 | 546,049 |
| கடந்த காலப் பணிச் செலவுகள் | - | - | - | - | - | |
| **தேறிய நன்மைகளுக்கான செலவுகள்** | 919,024 | (65,044) | (64,601) | 33,325 | 106,613 | 929,317 |
| **திட்டமிடப்பட்ட சொத்துக்கள் மீதான உண்மையான வருமானம்** | 2,677,443 | 610,533 | 187,353 | 11,693 | 170,945 | 3,657,967 |
| **சராசரி நிலுவையின் சதவீதமாக திட்டமிடப்பட்ட சொத்தின் உண்மையான வருவாய்** | 13.06% | 14.19% | 14.39% | 12.90% | 14.92% | 13.38% |
| **செலுத்தப்பட்ட நன்மைகள் மீது ஈட்டிய மிகை வட்டி** | 1,425,146 | 382,691 | 174,056 | 10,599 | 42,645 | 2,035,137 |
| **ப.க.நி. 19 இற்கிணங்க அடுத்த ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட வருவாய்கள்** | 2,138,199 | 450,495 | 139,403 | 10,579 | 118,888 | 2,857,564 |
| **அடுத்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவு** | 1,223,134 | 249,140 | 25,319 | 7,303 | 135,485 | 1,640,381 |

| | ஊழியர் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | பணிக் கொடைத் திட்டம்<br>ரூ.000 | மருத்துவ நலன்கள்<br>ரூ.000 | மொத்தம் 2013<br>ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள்** | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | 19,635,505 | 4,098,299 | 1,210,344 | 75,478 | 1,102,790 | 26,122,416 |
| திட்டச் சொத்துக்களின் உண்மை வருவாய் | 2,677,443 | 610,533 | 187,353 | 11,693 | 170,945 | 3,657,967 |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | 321,343 | 23,956 | 9,626 | 19,710 | 43,448 | 418,083 |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | (1,252,297) | (227,842) | (13,297) | (1,094) | (128,300) | (1,622,830) |
| **ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி** | 21,381,994 | 4,504,946 | 1,394,026 | 105,787 | 1,188,883 | 28,575,636 |

43.1 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும் (தொடர்ச்சி)

| 2012 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | பணிக் கொடைத் திட்டம் | மருத்துவ நலன்கள் | மொத்தம் 2012 |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **நன்மைப் பொறுப்புக்கள்/(சொத்து)** | | | | | | |
| நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி | 24,211,571 | 3,447,863 | 564,331 | 145,702 | 1,585,637 | 29,955,104 |
| திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | (19,635,505) | (4,098,299) | (1,210,344) | (75,478) | (1,102,790) | (26,122,416) |
| **நன்மைப் பொறுப்புக்கள்/(சொத்துக்கள்) நடைமுறையல்லாதவை** | 4,576,066 | (650,436) | (646,013) | 70,224 | 482,847 | 3,832,688 |
| **நன்மைப் பெறுப்புக்களின் அசைவு/(சொத்து)** | | | | | | |
| 2012 சனவரி 01இல் உள்ளவாறான | 1,630,200 | (2,015,903) | (773,683) | 35,238 | 103,223 | (1,020,925) |
| நன்மைகளுக்கான செலவு | 334,040 | (201,591) | (77,369) | 19,710 | 29,071 | 103,861 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (398,608) | 369,983 | 172,232 | (14,362) | 1,265 | 130,510 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 3,010,434 | 1,197,075 | 32,807 | 29,638 | 349,288 | 4,619,242 |
| **2012 திசெம்பர் 31இல் உள்ளவாறான நடைமுறையல்லாதவை** | 4,576,066 | (650,436) | (646,013) | 70,224 | 482,847 | 3,832,688 |
| **நன்மைகளுக்கான செலவு** | | | | | | |
| நன்மைக் கடப்பாடுகளின் மீது வட்டிச் செலவினம் | 163,020 | (201,591) | (77,369) | 3,524 | 10,322 | (102,094) |
| தேறிய நடைமுறைப் பணிச் செலவினங்கள் | 171,020 | - | - | 16,186 | 18,749 | 205,955 |
| **தேறிய நன்மைகளுக்கான செலவுகள்** | 334,040 | (201,591) | (77,369) | 19,710 | 29,071 | 103,861 |
| **திட்டச் செலவுகள் மீதான உண்மையான வருவாய்** | 1,112,722 | (46,328) | 75,266 | 6,699 | 54,208 | 1,202,567 |
| **திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள்** | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | 19,281,669 | 4,724,335 | 1,320,757 | 54,417 | 1,177,086 | 26,558,264 |
| திட்டச் சொத்துக்களின் உண்மை வருவாய் | 1,112,722 | (46,328) | 75,266 | 6,699 | 54,208 | 1,202,567 |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | 398,608 | (369,983) | (172,232) | 14,362 | (1,265) | (130,510) |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | (1,157,494) | (209,725) | (13,447) | - | (127,239) | (1,507,905) |
| **ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி** | 19,635,505 | 4,098,299 | 1,210,344 | 75,478 | 1,102,790 | 26,122,416 |

அனைத்துத் திட்டங்களுக்குமான ஊழியர் நன்மைகளின் கடப்பாடுகளைத் தீர்மானிக்கின்ற போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான எடுகோள்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன:

| | **2013** | **2012** |
|---|---|---|
| கழிவு வீதம் | **10.00%** | 10.00% |
| சொத்துக்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் வீதம் | **10.00%** | 10.00% |
| எதிர்காலச் சம்பள அதிகரிப்பு | **8.50%** | 8.50% |
| எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு | **7.50%** | 7.50% |
| எஞ்சியுள்ள சராசரி பணி ஆண்டுகள் | | |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| விதவை அனாதை ஓய்வூதியத் திட்டம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| விதுரர் அநாதை ஓய்வூதியத் திட்டம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| பணிக் கொடைத் திட்டம் | **21 ஆண்டுகள்** | 21 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி மருத்துவ நலத் திட்டம் | **31 ஆண்டுகள்** | 31 ஆண்டுகள் |
| ஓய்வுபெறும் வயது | **60 ஆண்டுகள்** | 60 ஆண்டுகள் |

| | 2013 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியம் | விதவைகள் அநாதைகள் | விதுரர்கள் அநாதைகள் | பணிக் கொடை | மருத்துவம் | மொத்தம் |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும்** | | | | | | |
| தேறிய ஊழியர் கட்டாய நன்மைகள் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் | 5,508,804 | (492,159) | (734,320) | 78,253 | 575,761 | 4,936,339 |
| 2013இல் தேறிய நன்மைகள் செலவு (இலாபம் அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்பட்டது | | | | | | |
| நடைமுறைப் பணிச் செலவு | 461,418 | | | 26,303 | 58,328 | 546,049 |
| கட்டாய நன்மைகள் சொத்து/ கடப்பாடுகளின் மீதான வட்டி வருமானம்/ செலவு | 457,606 | (65,044) | (64,601) | 7,022 | 48,285 | 383,268 |
| | 919,024 | (65,044) | (64,601) | 33,325 | 106,613 | 929,317 |
| **கட்டாய நன்மைகள் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு:** | | | | | | |
| **சனவரி 01இல் உள்ளவாறு கட்டாய நன்மைகள் கடப்பாடு** | 24,211,571 | 3,447,863 | 564,331 | 145,702 | 1,585,637 | 29,955,104 |
| வட்டிச் செலவு | 2,421,157 | 344,786 | 56,433 | 14,570 | 158,564 | 2,995,510 |
| நடைமுறைப் பணிச் செலவு | 461,418 | - | - | 26,303 | 58,328 | 546,049 |
| நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட நன்மைகள் | (1,252,297) | (227,842) | (13,297) | (1,094) | (128,300) | (1,622,830) |
| கடப்பாடுகள் மீதான கணிக்கப்பட்ட இலாபங்கள்/ நட்டங்கள் | 1,048,949 | 447,980 | 52,239 | (1,441) | 90,415 | 1,638,142 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு கட்டாய நன்மைகள் கடப்பாடு** | 26,890,798 | 4,012,787 | 659,706 | 184,040 | 1,764,644 | 33,511,975 |
| **மொத்தத் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியின் திட்டச் சொத்துக்களினது முக்கிய வகைகள் பின்வருமாறு** | | | | | | |
| **செயற்படும் சந்தைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட முதலீடுகள்** | | | | | | |
| அரச முறிகள் | 20,899,505 | 4,474,898 | 1,371,874 | 105,787 | 1,188,883 | 28,040,947 |
| நிலையான வைப்புக்கள் | 169,949 | 2,478 | 1,432 | - | - | 173,859 |
| **விலைக்குறிப்பீடு செய்யப்படாத முதலீடுகள்** | | | | | | |
| தொகுதிக் கடன்கள் | 312,540 | 27,570 | 20,720 | - | - | 360,830 |
| | 21,381,994 | 4,504,946 | 1,394,026 | 105,787 | 1,188,883 | 28,575,636 |

| | 2012 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியம் | விதவைகள் அநாதைகள் | விதுரர்கள் அநாதைகள் | பணிக் கொடை | மருத்துவம் | மொத்தம் |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| அரச முறிகள் | 19,634,960 | 4,097,978 | 1,210,344 | 61,262 | 1,105,278 | 26,109,822 |
| நிலையான வைப்புக்கள் | - | - | - | - | - | - |
| **விலைக்குறிப்பீடு செய்யப்படாத முதலீடுகள்** | | | | | | |
| தொகுதிக் கடன்கள் | - | - | - | - | - | - |
| | 19,634,960 | 4,097,978 | 1,210,344 | 61,262 | 1,105,278 | 26,109,822 |

**குழுமத்திற்கான கட்டாய கடப்பாடுகளை நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்பட்ட முதன்மை எடுகோள்கள் கீழே காட்டப்படுகிறது:**

| | 2013 | | | | |
|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியம் | விதவைகள் அநாதைகள் | விதுரர்கள் அநாதைகள் | பணிக் கொடை | மருத்துவம் |
| கழிவிடல் வீதம் | 10.00% | 10.00% | 10.00% | 10.00% | 10.00% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | 8.50% | 8.25% | 8.50% | 8.50% | 8.50% |

**குறிப்பிடத்தக்க எடுகோள்களுக்கான கணியம்சார் உணர்திறன் பகுப்பாய்வுகள் 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு கீழே காட்டப்படுகின்றன:**

| | கழிவிடல் வீதம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியம் | | விதவைகள் அநாதைகள் | | விதுரர்கள் அநாதைகள் | | பணிக் கொடை | | மருத்துவம் | |
| | அதிகரிப்பு | வீழ்ச்சி | அதிகரிப்பு | வீழ்ச்சி | அதிகரிப்பு | வீழ்ச்சி | அதிகரிப்பு | வீழ்ச்சி | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| உணர்திறன் மட்டம் | 5% | 5% | 5% | 5% | 5% | 5% | 5% | 5% | 5% | 5% |
| கட்டாய நன்மைகள் கடப்பாடுகள் மீதான தாக்கம் | (1,419,645) | 1,554,063 | (218,458) | 241,353 | (49,187) | 55,115 | (12,926) | 14,323 | (68,166) | 73,738 |

**எதிர்வரும் ஆண்டுகளில் பின்வரும் கொடுப்பனவுகள் கட்டாய நன்மைகள் திட்ட கடப்பாடுகளுக்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

| | ஓய்வூதியம் | விதவைகள் அநாதைகள் | விதுரர்கள் அநாதைகள் | பணிக் கொடை | மருத்துவம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| அடுத்த 12 மாதங்களில் | 1,223,134 | 249,140 | 25,319 | 7,303 | 135,485 | 1,640,381 |
| 2 தொடக்கம் 5 ஆண்டுகளுக்கிடையில் | 6,746,844 | 1,100,891 | 125,415 | 33,545 | 643,398 | 8,650,093 |
| 5 தொடக்கம் 10 ஆண்டுகளுக்கிடையில் | 14,293,628 | 1,625,952 | 226,390 | 97,425 | 1,065,869 | 17,309,264 |
| மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவுகள் | 22,263,606 | 2,975,983 | 377,124 | 138,273 | 1,844,752 | 27,599,738 |

## 44. நிதியியல் சாதனங்கள்

### (அ) நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி

நிதியியல் சந்தைப் பெறுமதி என்பது புரிந்துணர்வும் விருப்பமுமுள்ள தரப்பினர்களிடையே நடைபெறுகின்ற சுதந்திரமான கொடுக்கல்வாங்கலின் போது, சொத்தொன்றைப் பரிமாறிக் கொள்வதற்கு அல்லது பொறுப்பொன்றைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்புடைத்தான பணத் தொகையாகும். விற்பனை செய்பவருக்கு எதிராக விலை அசைவொன்று ஏற்படாத விதத்தில் குறிப்பிடத்தக்கதொரு கொடுக்கல்வாங்கலை உள்ளீர்த்துக் கொள்ள முடியுமானவாறு ஒழுங்கமையப் பெற்றதும் திரவத் தன்மையுடன் கூடியதுமான சந்தையில் நிதியியல் சாதனமொன்று விற்பனை செய்யப்படுகின்ற போது குறிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமதி சந்தைப் பெறுமதியாகும்.

நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதியினை மதிப்பீட்டு தொழில் நுணுக்கத்தின்படி தீர்மானிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமாக வங்கி பின்வரும் படிமுறையினைப் பயன்படுத்துகிறது.

மட்டம் 1: ஒத்த தன்மையான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்காக தீவிரமான சந்தைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) விலைகள்.

மட்டம் 2: பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை கொண்டுள்ள அனைத்து உள்ளீடுகளுக்குமான ஏனைய தொழில் நுணுக்கங்கள் ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கப்படுகின்றன.

மட்டம் 3: பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ள உள்ளீடுகளைப் பயன்படுத்தும் தொழில் நுணுக்கம் அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

பின்வரும் அட்டவணை சந்தைப் பெறுமதிப் படிமுறையில் பதிவு செய்யப்பட்ட நிதியியல் சாதனங்களின் பகுப்பாய்வொன்றினைத் தருகின்றது.

| | மட்டம் 1 ரூ.000 | மட்டம் 2 ரூ.000 | மட்டம் 3 ரூ.000 | மொத்தம் |
|---|---|---|---|---|
| **2013 திசெம்பர் 31** | | | | |
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டமூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 94,137,368 | - | - | 94,137,368 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | 357,531,750 | - | - | 357,531,750 |
| பெறுதிகள் | - | 5,670,258 | - | 5,670,258 |
| | 451,669,118 | 5,670,258 | - | 457,339,376 |
| **வெளிநாட்டு நாணயம் நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 95,601,221 | | | 95,601,221 |
| | 95,601,221 | - | - | 95,601,221 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 5,433,100 | 5,433,100 |
| கட்டடம் | | | 7,707,380 | 7,707,380 |
| | - | - | 13,140,480 | 13,140,480 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | - | - | 10,162,977 | 10,162,977 |
| பெறுதிகள் | | 6,020,305 | - | 6,020,305 |
| | - | 6,020,305 | 10,162,977 | 16,183,282 |
| **2012 திசெம்பர் 31** | | | | |
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டமூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 169,312,604 | - | - | 169,312,604 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | 386,761,690 | - | - | 386,761,690 |
| பெறுதிகள் | - | 3,989,701 | - | 3,989,701 |
| | 556,074,294 | 3,989,701 | - | 560,063,995 |
| **வெளிநாட்டு நாணயம் நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 77,688,838 | | | 77,688,838 |
| | 77,688,838 | - | - | 77,688,838 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 5,180,100 | 5,180,100 |
| கட்டடம் | | | 7,151,979 | 7,151,979 |
| | - | - | 12,332,079 | 12,332,079 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | | | | |
| பெறுதிகள் | - | 3,257,119 | - | 3,257,119 |
| | - | 3,257,119 | - | 3,257,119 |

**காணி மற்றும் கட்டடம்**

**மதிப்பிடப்படும் முறை**

தலைமை அலுவலகக் கட்டடத்தின் உயர்ந்த வர்த்தகத் தன்மையினைப் பரிசீலனையில் கொண்டு தலைமை அலுவலகத்தினை மதிப்பீடு செய்வதற்கு கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் முறை பயன்படுத்தப்பட்டது. மற்றைய கட்டடங்கள் குறிப்பிட்ட மேம்பாடுகளுக்குப் பதிலாக நடைமுறைச் செலவுகளைக் கணிப்பதன் மூலமும் தேய்மானத்திற்காக கிட்டத்தட்ட ஏற்படும் தொகையினைக் கழிப்பதன் மூலமும் மதிப்பிடப்படுகிறது.

தற்போதைய சந்தைப் பெறுமதியைப் பெறுவதன் மூலம் காணி மதிப்பிடப்படுகிறது. நியூயோர்க் கட்டடத்தின் ஏட்டுப் பெறுமதி சந்தைப் பெறுமதிக்குச் சமமானது எனக் கருதப்படுகிறது.

**மதிப்பீட்டிற்காக பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள்**

காணி மற்றும் கட்டடத்தின் உணர்திறன் பகுப்பாய்விற்குப் பயன்படுத்தப்பட்ட முதன்மை எடுகோள்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | |
|---|---|
| கழிவிடல் வீதம் | 6.5% |
| வாடகை அதிகரிப்பு | 5% |
| வெளிச்செல்லல் | 45% |

**தலைமை அலுவலக காணி மற்றும் கட்டடத்திற்கான உணர்திறன் பகுப்பாய்வு**

| கழிவிடல் வீதம் | வாடகை அதிகரிப்பு | வெளிச் செல்லல் | காணி ரூ.000 | கட்டடம் ரூ.000 |
|---|---|---|---|---|
| 5% | 5% | 45% | 3,548,316 | 6,386,765 |
| 6% | 5% | 45% | 2,906,605 | 5,231,722 |
| 7% | 5% | 45% | 2,453,546 | 4,416,242 |
| 7% | 4% | 45% | 2,297,649 | 4,135,637 |
| 6% | 4% | 45% | 2,714,813 | 4,886,508 |
| 6% | 5% | 45% | 2,906,605 | 5,231,722 |
| 6% | 6% | 45% | 3,112,269 | 5,601,906 |
| 6% | 5% | 40% | 3,170,842 | 5,707,333 |
| 6% | 5% | 45% | 2,906,605 | 5,231,722 |
| 6% | 5% | 50% | 2,642,368 | 4,756,111 |

**உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள்**

உள்ளடக்கப்பட்ட பெறுதிச் சாதனங்களின் சந்தைப் பெறுமதி பிளாக் ஸ்கூல்ஸ்சின் மாதிரியைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டது.

| | தேர்வுகள் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|
| தொடக்க மீதி | - | - |
| பெறுதிப் பொறுப்புக்கள் | 10,162,977 | 10,162,977 |
| முடிவு மீதி | 10,162,977 | 10,162,977 |
| வருவாய்கள் உட்பட மொத்தத் தேறல் செய்யப்படாத இலாபங்கள் | 15,725,740 | 15,725,740 |

**பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்களவிற்கு அவதானிக்கப்படாத உள்ளீடு**

| | |
|---|---|
| கழிவிடல் வீதம் | 10% |
| தளம்பல் | 6% |

| | கழிவிடல் வீதம் | | தளம்பல்கள் | |
|---|---|---|---|---|
| உணர்திறன் பகுப்பாய்வு | 9% | 11% | 5% | 7% |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் | 10,536,088 | 9,848,731 | 10,059,639 | 10,515,221 |

| கொடுக்கல் வாங்கலில் நுழையும்போது சந்தைவிலை | 2013 ரூ.000 | 2012 ரூ.000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு மீதி | - | - |
| புதிய கொடுக்கல்வாங்கல்களின் மீதான பிற்போடப்பட்ட இழப்பு | (27,578,100) | - |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு மீதி | (27,578,100) | - |

**(ஆ) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்**

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2013 திசெம்பர் 31இல் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி ரூ.84,601 மில்லியனாக இருந்ததுடன் (2012 - ரூ.7,015 மில்லியன்) மீள்கொள்வனவிற்கான உடன்படிக்கையின் கீழ் மத்திய வங்கிப் பிணையங்கள் எதுவும் விற்கப்படவில்லை (2012இல் ஒன்றுமில்லை). மீள் விற்பனைக்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி 2013 திசெம்பர் 31இல் ரூ.12,930 மில்லியனாக இருந்தது (2012 - ரூ.26,579 மில்லியன்).

**(இ) சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் சந்தைப் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருப்படுகிறது.

**(ஈ) வைப்புக்கள்**

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் ஏட்டுப் பெறுமதியானது சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

44. நிதியியல் சாதனங்கள் (தொடர்ச்சி)

(உ) சந்தைப் பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதி படிநிலைகளை நிர்ணயித்தல்

வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதிகளும் சந்தைப் பெறுமதிகளும் வகையின்படியான ஒப்பீட்டுடன் கீழே தரப்பட்டுள்ளன:

| சந்தைப் பெறுமதி | எடுத்துச் செல்லப்படும் தொகை | | சந்தைப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2013 ரூ.000 | 2012 ரூ.000 | 2013 ரூ.000 | 2012 ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 425,676,763 | 235,278,133 | 425,676,763 | 235,278,133 |
| வெளிநாட்டு நாணய வர்த்தகம்/ விற்பனைக்கான பிணையங்கள் | 451,669,118 | 556,074,294 | 451,669,118 | 556,074,294 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 5,670,258 | 3,989,701 | 5,670,258 | 3,989,701 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 85,400,764 | 81,352,282 | 85,400,764 | 81,352,282 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | 591 | 8,243,512 | 591 | 8,243,512 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 968,417,494 | 884,937,922 | 968,417,494 | 884,937,922 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 15,853,513 | 175,251,772 | 15,810,695 | 175,262,622 |
| அரசுக்கான கடன்கள் | 109,167,071 | 111,291,843 | 109,167,071 | 111,291,843 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 1,375,396 | 1,844,237 | 1,215,303 | 1,401,574 |
| உள்நாட்டில் பெறத்தக்க மற்றையவை | 1,829,712 | 2,970,099 | 1,829,712 | 2,970,099 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள் | 41,095 | 41,095 | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 6,443,534 | 5,573,731 | 3,972,492 | 3,226,959 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 134,710,321 | 296,972,777 | 132,036,368 | 294,194,192 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | 1,103,127,815 | 1,181,910,699 | 1,100,453,862 | 1,179,132,114 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஒதுக்கப்பட்ட தங்கம் | 95,601,221 | 77,688,838 | 95,601,221 | 77,688,838 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | 95,601,221 | 77,688,838 | 95,601,221 | 77,688,838 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்குச்செலுத்தப்பட வேண்டிய தொகைகள் | 21,504,196 | 2,619,847 | 21,504,196 | 2,619,847 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 16,183,282 | 3,257,119 | 16,183,282 | 3,257,119 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 37,301,553 | 28,953,955 | 37,301,553 | 28,953,955 |
| ப.நா.நி. | 422,032,012 | 467,642,196 | 422,032,012 | 467,642,196 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்தத்தக்கவை | 47,221,119 | 64,520,662 | 47,221,119 | 64,520,662 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 544,242,162 | 566,993,779 | 544,242,162 | 566,993,779 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வர்த்தக வங்கிகளும் ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | 148,809,893 | 166,288,378 | 148,809,893 | 166,288,378 |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | 416,230 | 699,628 | 416,230 | 699,628 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 84,601,000 | 7,015,000 | 84,601,000 | 7,015,000 |
| ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள் | 2,419,087 | 1,341,268 | 2,419,087 | 1,341,268 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 5,659,718 | 31,934,646 | 5,659,718 | 31,934,646 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | 241,905,928 | 207,278,920 | 241,905,928 | 207,278,920 |
| **மொத்த நிதிப் பொறுப்புக்கள்** | 786,148,090 | 774,272,699 | 786,148,090 | 774,272,699 |

## 45. ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

அ) முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு

| | 2012 ரூ.000 |
|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | |
| ஏனைய சொத்துக்கள் | 5,578,483 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | |
| ஏனைய பெறத்தக்கவை | 31,939,398 |

| தற்போதைய சமர்ப்பிப்புக்கள் | 2013 ரூ.000 | 2012 ரூ.000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | |
| ஏனைய சொத்துக்கள் | **6,443,534** | 5,573,731 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | |
| ஏனைய வெளிநாட்டுப் பெறத்தக்கவை | **5,659,718** | 31,934,646 |

2012இன் ஏனைய கொடுபடத்தக்கவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூ.4.752 மில்லியன் கொண்ட அலுவலர் கடனின் மீது ஏற்பட்ட ஒன்றுசேர்ந்த பெறுமதி இழப்புக்கள் அலுவலர் கடன்களின் மூலம் எதிரீடு செய்யப்பட்டு சிறந்த சமர்ப்பிப்புக்களுக்காக 2013இன் ஏனைய சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பரஸ்பர பரிமாற்றச் இலாபமான ரூ.2,066.692 மில்லியனும் செலவினம் ரூ.972.897 மில்லியனும் கழிக்கப்பட்டு 2012இன் வட்டிச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2013இல் சுவப் இலாபம் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டு சிறந்த சமர்ப்பிப்பதற்காக ஒப்பீட்டுத் தகவல்கள் சீராக்கப்பட்டன.

ஆ) முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு

| | 2012 ரூ.000 |
|---|---|
| **நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | |
| தேறிய பரஸ்பர பரிமாற்றச் செலவு | (1,093,795) |

| தற்போதைய சமர்ப்பிப்புக்கள் | 2013 ரூ.000 | 2012 ரூ.000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| பரஸ்பர பரிமாற்ற இலாபம் | **6,817,308** | 2,066,692 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| பரஸ்பர பரிமாற்றச் செலவு | **113,672** | 972,897 |

## 46 தொடர்புடைய தரப்பினர்கள்

### 46.1 அரச மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

மத்திய வங்கியின் வழமையான வியாபாரத்தின் போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்பினரால் இலங்கை அரசாங்கம் (அரசு: வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 24 - திருத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களுக்கமைய வங்கியினால் அரசுடனும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்ததும் தனித்தனியாக முக்கியத்துவமில்லாத ஏனைய ஒன்றுசேர்ந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏற்பாடுகளின் விபரங்கள் பின்வருமாறு:

| கொடுக்கல்வாங்கலின் இயல்பு | 2013 ரூ.000 | 2012 ரூ.000 |
|---|---|---|
| கொடுக்கல்வாங்கல்கள்: | | |
| மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் (அ) | **2,923,513** | 148,672,772 |
| அரச பிணையங்களின் உடனடி விற்பனை | **61,099,000** | 260,000 |
| மீள்கொள்வனவு/விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள் | **2,605,097,956** | 1,550,252,513 |
| 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவினம் (ஈ) | **954,259** | 1,205,091 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான இ.ம. வங்கியினால் வழங்கப்பட்ட பிணையங்கள் (குறிப்பு 47.2) | **2,561,264** | 2,306,711 |
| 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள் (உ) | **405,650** | 1,167,992 |
| இவ்வாண்டில் அரசிற்கு செலுத்தப்பட்ட மிகை (குறிப்பு 30) | **25,000,000** | 33,000,000 |
| அரசுக்கான முற்பணங்கள் (குறிப்பு 9) | **109,167,071** | 111,291,843 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | **1,219,657** | 1,201,292 |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் (ஏ) | | |
| - விற்பனை | **43,991,178** | 209,530,618 |
| - கொள்வனவு | **40,884,447** | 32,975,250 |
| - பரஸ்பர பரிமாற்றல்கள் | **277,458,818** | 110,783,700 |
| மீள்நிதியிடல் (ஐ) | **6,492,418** | 5,452,617 |
| இவ்வாண்டில் கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக பெறப்பட்ட நிதியம் | **-** | 136,500 |
| லங்கா கிளியர் மற்றும் கொடுகடன் தகவல் பணியத்திலிருந்து பெற்ற பங்கிலாப வருமானம் | **14,811** | 14,267 |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | **643** | 667 |

**நிலுவைகள்:**

| | | |
|---|---|---|
| சுசகன கட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் | **1,242,405** | 1,711,019 |
| அ.நே.மொ.தீ. நிலுவைகள் - வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுடன் | **77,899,164** | 84,679,924 |
| இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள் | **106,922** | 72,320 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிடமிருந்து பெறத்தக்கவை | **1,394,987** | 2,403,335 |
| பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறத்தக்கவை (ஓ) | **333,114** | 480,814 |
| நிதி திட்டமிடல் அமைச்சிற்கு கொடுபடத்தக்கவை (குறிப்பு 18) | **29,052,050** | 43,324,799 |
| அரச அரச முயற்சிகளுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள் 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு | **172,571** | 393,691 |
| லங்கா கிளியரிலான முதலீடுகள் | **29,500** | 29,500 |
| கொடுகடன் தகவல் பணியகத்திலான முதலீடுகள் | **5,845** | 5,844 |
| ஏனைய கொடுக்கல்வாங்கல்களும் நிலுவைகளும் (ஔ) | **1,076,631** | 1,142,497 |

அ) உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது வங்கியின் நிதிக் கொள்கையை அமுல்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 90 - 92ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நிதி ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் அமுல்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வணிக நிறுவனங்களினதும் வேறும் சில நிதி நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2013 திசெம்பர் 31ஆம் திகதியன்று இந்தத் தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 21 மற்றும் 22இல் தரப்பட்டுள்ளன. முதலீட்டுப் பட்டியலிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 31 இல் தரப்பட்டுள்ளது.

ஆ) நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 7 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இந்தத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தன.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களமானது வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது நிதியிடப்பட்ட வங்கிகள் வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

இ) நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின் பிரகாரம் நிதிச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பணிகளையும் மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் கடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதித் தேவைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் அதனுடைய பணம் செலுத்துதல் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கக் கடனை இது முகாமைத்துவம் செய்கிறது.

ஈ) நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தையும் ஏக உரிமையையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஒரே அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டிலாறூ லங்கா கரண்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

உ) வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பண்டங்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

ஊ) மத்திய வங்கியானது, குறிப்பு 48இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

எ) வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்குள்ளா தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறத்திலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

ஏ) வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

ஐ) வங்கியானது 47.2இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கடன் பிணையங்கள் வழங்கப்பட்டுள்ள இ.ம. வங்கியினால் நிதியிடப்பட்ட கருத்திட்டங்களுக்கு ரூ.6,492.418 மில்லியன் (2012இல் ரூ.5,542.617 மில்லியன்) தொகை மற்றும் அரசினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களுக்கு ரூ.3,359.770 மில்லியன் (2012இல் ரூ.2,879.460 மில்லியன்) தொகை என்றவாறு மீள்நிதியிடல் கடன்களை வழங்குகின்றது.

ஒ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான 10 சதவீதமான குறைந்தபட்ச முற்பண வரையறையினைப் பேணாத வங்கிகள், வங்கியின் பிரதேச

அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள் நிதியிடல் நிதியத்திற்கு அப்பற்றாக்குறையாகவுள்ள தொகையினை செலுத்துதல் வேண்டும். இவ்வாண்டில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூ.555.071 மில்லியனை உருவாக்கியது. மக்கள் வங்கி (275.618 மில்லியன்), இலங்கை வங்கி (55.488 மில்லியன்), பிரதேச அபிவிருத்தி வங்கி (192.913 மில்லியன்) மற்றும் லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி (31.052 மில்லியன்) என்பனவற்றிற்குள் நிதியிடலை வழங்கியது. இதன் மூலம் ரூ.57,6042 மில்லியன்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வட்டியாகப் பெற்றுக் கொண்டது.

ஓ) மாண்புமிகு சட்டமா அதிபர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் ஆஜரான வெளிநாட்டுச் சட்ட அறிஞர்களின் சட்டக் கட்டணத்தினை இ.ம. வங்கி செலுத்தியது. ரூ.333.114 மில்லியன் தொகை கொண்ட இக்கொடுப்பனவுகள் (2012இல் ரூ.480.814 மில்லியன்) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறக் கூடியதாக இருக்குமென கருதப்படுகிறது.

மேலும் இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கி, இலங்கை சனநாயக சோசலிச் குடியரசிற்கெதிராக டியூச் வங்கி ஏ.ஜி. இனால் தொடுக்கப்பட்ட காப்பீட்டுக் கணக்கின் நீதி விசாரணையின் பொருட்டு ஆஜரான வெளிநாட்டுச் சட்ட அறிஞர்களுக்கான சட்டக் கட்டணமாக ரூ.25.099 மில்லியனைச் (2012இல் ரூ.27.674 மில்லியன்) செலுத்தியது (குறிப்பு 35).

ஔ) ஏனைய கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும் தனிப்பட்டவர்கள், அரசாங்கம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களையும் மீதிகளையும் உள்ளடக்குகிறது. கொடுக்கல்வாங்கல்களின் தன்மை இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களான ரூ.177.627 மில்லியன் (2012 - ரூ.155.466 மில்லியன்) இலங்கை அரசாங்கத்தின் ரூ.19.484 மில்லியனையும் (2012இல் 23.082 மில்லியன்) செலாவணிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட ரூ.22.602 மில்லியன் (2012 - ரூ.14.172 மில்லியன்) குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் ரூ.83.531 மில்லியன் (2012 - ரூ.76.235 மில்லியன்), தேசிய சேமிப்பு வங்கியின் நிதி முகாமைத்துவ அதேநேர மொத்தத் தீர்ப்பனவான ரூ.0.203 மில்லியன் (2012 - ரூ.0.242 மில்லியன்) சுசகன 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் ரூ.142.499 மில்லியன் (2012 - ரூ.77.468 மில்லியன்). 2013 திசெம்பர் 31ஆம் நாள் முடிவடைந்த ஆண்டுப் பகுதியில் பொருட்கள், பணிகள் மற்றும் வரிகள் ரூ.316.460 மில்லியன் (2012 - ரூ.249.309 மில்லியன்), அரச, அரச முயற்சிகளின் நடைமுறைக் கணக்கு நிலுவைகள் ரூ.243.659 மில்லியன் (2012 - ரூ.305.937 மில்லியன் கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக (ரூ.45.468 மில்லியன் (2012 - ரூ.55.805) வெளிநாட்டு சட்டச் செலவுகள் ரூ.25.099 மில்லியன் (2012 - ரூ.27.674 மில்லியன்) தொகை நிதியம் பெறப்பட்டது.

க) 2011ஆம் ஆண்டுப்பகுதியில் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 9இன் படி வங்கி நியூயோர்க்கில் சொத்தொன்றினைக் கொள்வனவு செய்து அதனை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு 2012 யூன் 01 தொடக்கம் ஐ.அ.டொலர் 68,000 மாதாந்த வாடகைக்கு கையளித்தது. 2013இன் 8 மாத காலப்பகுதிக்கு ஒன்றுசேர்ந்த பெறத்தக்க வாடகை (மே - திசெம்பர்) ரூ.71.130 மில்லியன் காணப்பட்டதுடன் நானாவிதச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ங) நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெறத்தக்க ரூ.88 மில்லியனையும் பல்வகைச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. இத்தொகை இலங்கை மத்திய வங்கியினால் ஊர்திகள் தரிப்பிடமாகப் பயன்படுத்தப்படும் ரான்ஸ்வேர்க் சதுக்கம் - கொழும்பு 01 இல் உள்ள குத்தகை உடமைச் சொத்தினைப் பிரதிபலிக்கிறது. இந்நிலக் குத்தகைக் காலம் முடிவடைவதற்கு முன்பே குத்தகையாளரினால் பொறுப்பேற்கப்பட்டதுடன் எஞ்சிய குத்தகைக் காலப்பகுதிக்கு ஏற்புடைத்தான ஆரம்ப கொடுப்பனவிலிருந்து பெறப்பட்ட ரூ.88 மில்லியன் நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெறத்தக்கவையென எதிவு செய்யப்பட்டுள்ளன.

ச) இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையும் வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களமும் இரண்டு தரப்பினரினதும் நன்மைக்காக சோமாவதியில் பரிசோதனை பங்களாவொன்றையும் வனவிலங்குகள் பாதுகாப்பு அலுவலகமொன்றினையும் ஒருவர் மற்றொருவரின் ஒத்துழைப்புடன் நிருமாணித்து, நிறுவிப் பேணுவதற்காக 2008 நவெம்பர் 20ஆம் நாளன்று புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினைச் செய்து கொண்டன. வங்கியினால் பயன்படுத்தப்பட்ட பரிசோதனை பங்களாவின் செலவு, சொத்து, பொறி மற்றும் கருவியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் புரிந்துணர்வு காலப்பகுதியில் (30 ஆண்டுகளில்) தேய்வடைந்தது. மேலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உறுப்புரை 3இன்படி, இலங்கை மத்திய வங்கி வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகத்தின் உரிமையினை கட்டுமானத்தின் பின் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கையளிக்க உடன்பட்டது. வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகத்தினை நிருமாணிப்பதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்பட்ட செலவான ரூ.6.2 மில்லியன் வங்கியினால் பயன்படுத்தப்பட்ட பரிசோனை பங்களாவினைப் பயன்படுத்துவதற்கான உரிமையாக அடையாளம் காணப்பட்டிருப்பதுடன் நானாவிதச் சொத்துக்களின் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன் புரிந்துணர்வு காலப்பகுதியில் பதிவழிப்பு செய்யப்பட்டது.

**46.2 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்**

ஆளுநர், துணை ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுப் பணிப்பாளர் (அவ்வாறான அங்கத்தவர்கள் ஏதேனுமொரு வங்கி நிறுவனத்தில் பணிப்பாளராக, அலுவலராக, ஊழியராக அல்லது பங்குரிமையாளராயிருத்தலை நாணய விதிச் சட்டம் வரையறுக்கின்றது) உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

**46.3 பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு**

| | 2013 ரூ.000 | 2012 ரூ.000 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நலன்கள் | **57,534** | 58,189 |

மேற்படி பணிக் கொடைகளுக்கு மேலதிகமாக பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடனான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய கம்பனியினால் காசலலாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

**46.4 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2013 ரூ.000 | 2012 ரூ.000 |
|---|---|---|
| பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான கடன்கள் | **32,076** | 45,458 |

அனைத்துக் கடன்களும் கடன் வகை மற்றும் மாதாந்த மீளச் செலுத்துகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 12 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பாதுகாப்பினைக் கொண்டுள்ளது.

**46.5 தொழில் நிலைக்குப் பிந்திய நலவுரிமைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2013 ரூ.000 | 2012 ரூ.000 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **49,776** | 33,805 |

குறிப்பு 43இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத் திட்டத்திற்கும் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளையும் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.426.580 மில்லியன் (2012இல் ரூ.147.174 மில்லியன்) பங்களிப்புச் செய்துள்ளது. வழமையான வியாபார காலப்பகுதியில் வங்கியானது அதன் தொழில்நிலைக்குப் பின்னைய திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது. அத்தகைய திட்டங்களுடனான மீதிகளின் தொகை குறிப்பு 24இல் தரப்பட்டுள்ளது.

**47. எதிர்பாராப் பொறுப்புக்களும் மூலதனக் கடப்பாடுகளும்**

**47.1 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்**

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய தீர்க்கப்படாத பிணைகள் எதுவும் இருக்கவில்லை.

**47.2 கொடுகடன் உத்தரவாதங்கள்**

பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற வெளிவாரியான கடன் தொகைகளின் மூலம் சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகளுக்கு நிதியிடல், இத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கான உத்தரவாதப் பத்திரங்களை வெளியிடல், உத்தரவாதப் பத்திர தவணைப் பணங்களைச் சேகரித்தல், கடன் உத்தரவாதப் பத்திர நிதியத்தின் நிர்வாகம் மற்றும் செலுத்தத் தவறுதல்கள் நடைபெறாதென்பதை உறுதி செய்தல், கடன் நிதியம் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுகின்றதென்பதை உறுதி செய்வதற்காக கடன் வழங்கியதன் பின்னர் கடன் விசாரணைகளை நடத்துதல் ஆகிய மூலம் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மீள்நிதியிடல் கடன் வசதித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது. ஆண்டினுள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொடர்ந்து மீள்நிதியிடல் கடன் வசதிகள் வழங்கப்பட்டனவென்பதோடு, இத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குகின்ற பங்கேற்புக் கடன் நிறுவனங்களில் உருவாகின்ற நட்டங்கள் தொடர்பாக வங்கியானது கடன் உத்தரவாதப் பத்திரங்களை ஏற்பாடு செய்தது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுதல்களுக்கான ஒரு உத்தரவாதப்பத்திரமல்லவென்பதோடு நட்டங்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்புக் கடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற நட்டங்களுக்காக மாத்திரம் உரிமைகள் கோரப்படுதல் வேண்டும். இவ் ஏற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கடன் உத்தரவாதங்கள் தொடர்பானது:

| | உத்தர வாத மளிக்கப் பட்ட நாணயம் | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை 2013 ரூ.000 | 2012 ரூ.000 |
|---|---|---|---|
| **தொடர்புடைய தரப்பினர்கள்** | ரூபா | | |
| - வங்கி நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள் | | **177,627** | 318,421 |
| - இலங்கை அரசாங்கம் நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள் | | **2,580,748** | 2,166,839 |
| **ஏனையோர்** | ரூபா | | |
| - வங்கி நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள் | | **135,803** | 584,615 |
| - அரசாங்கம் நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள் | | **690,295** | 2,997,200 |
| **மொத்தக் கடன் உத்தரவாதங்கள்** | | **3,584,473** | 6,067,075 |

**47.3 நம்பகமான செயற்பாடுகள்**

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது நம்பகமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ் வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது இடம்பெறச் செய்கின்றது. ஆனாலும் அச் செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

**47.4 சட்ட ரீதியான உரிமைக் கோரல்கள்**

சட்ட உரிமையுடன் ரூ.36 மில்லியன் கோரல் சம்மந்தப்பட்ட ஈடுபாடுடையோரின் நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட 01 வழக்கில் வங்கியொரு எதிர்த்தரப்பாகவுள்ளது. வங்கியினால் இவ்வழக்கு எதிர்த்து வாதாடப்படுவதுடன் நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்குகளும் மேற்கொள்ளப்படவில்லை. வங்கியினால் இவ் வழக்குகள் எதிர்த்து வாதாடப்படுவதுடன் நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

வங்கி 03 வழக்குகளின் வழக்காளியாக இருந்ததுடன் சட்ட ரீதியாக ரூ.9.495 மில்லியன் நட்ட ஈடாகக் கோரியது. ஏற்கனவே முடிவடைந்துவிட்ட 2 வழக்குகளின் மூலம் ரூ.2.7 மில்லியனைப் பெறுவதற்கு வங்கி எதிர்பார்க்கிறது. நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை

மேலும் 2013 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஒதுக்குகளும் மேள்கொள்ளப்படவில்லை.

**47.5 கடப்பாடுகள்**

(அ) 2013 திசெம்பர் 31ஆம் திகதியுள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கடப்பாட்டு வசதி ரூ.7.954 மில்லியனையும் ஐ.அ.டொலர் 1.805 மில்லியனையும் (2012 - ரூ.710.887 மில்லியன்) நாணயத் தாள்கள் மற்றும்

குத்திகளின் கையேற்புத் தொடர்பில் ரூ.103.253 மற்றும் ஐ.அ.டொலர் 13.486 மில்லியனையும் (2012இல் இல்லை) வங்கி கொண்டிருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31ஆம் நாளன்று வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள் | | 2013 ரூ.000 | 2012 ரூ.000 |
|---|---|---|---|
| முன்னோக்கிய செலாவணி விற்பனை | | | |
| | ஸ்ரேலிங் பவுண் | **139,000** | 35,000 |
| | யூரோ | **141,000** | - |
| | ஐ.அ.டொலர் | **2,337,998** | 1,368,000 |
| முன்னோக்கிய செலாவணிக் கொள்வனவு | இலங்கை ரூபா | - | 25,432,160 |

**47.6 பிணையிடப்பட்ட சொத்துக்கள்**

பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு யூரோ கிளியர் வங்கிக்கு, வங்கியினால் பிணையங்கள் எதுவும் வழங்கப்படாததுடன் (2012இல் பிரிட்டன் பவுண் 25 மில்லியன் - ஏட்டுப் பெறுமதி பிரிட்டன் பவுண் 25.434) ஐ.அ.டொலர் 30 மில்லியன் (2012இல் ஐ.அ.டொலர் 35 மில்லியன்) கொடுகடன் வசதி பெறப்பட்டது. பிணையிடப்பட்ட பிணையங்கள் யூரோ கிளியரில் தனியான கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

அப்பிணையங்கள் நிதியியல் நிலைமையின் நிதியியல் கூற்றுக்களில் "விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்கள்" என காட்டப்பட்டுள்ளன. வங்கி இக்கொடுக்கல்வாங்கல்களை "யூரோ முறைமையில் பங்கேற்கின்றவர்களினால் மேற்கொள்ளப்படும் பிணையிடப்பட்ட கடப்பாடுகளை நிருவகிக்கின்ற பிணைய உடன்படிக்கை" இனையும் "யூரோ கிளியர் முறைமையிலுள்ள பங்கேற்பாளர்களுக்கான கொடுகடன் வழங்கலை நிருவகிக்கின்ற பொது நிபந்தனைகள்" யும் அடிப்படையாகக் கொண்ட நியதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**47.7 சவறின் றெசிடென்சிக்கு எதிரான எதிர்பாராப் பொறுப்புக்கள்**

சவறின் றெசிடென்சியைத் தொழிற்படுத்துதல் தொடர்பிலான இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கும் எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கா ஞாபகார்த்த நிதியத்திற்குமிடையிலான குத்தகை உடன்படிக்கையைத் தொடர்ந்து இரண்டு தரப்பினராலும் இணங்கப்பட்ட பணிமனைகளுக்கு குத்தகை பெற்றவர் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். உடன்படிக்கையை முடிவுறுத்துகின்ற போது குத்தகைக்கு விடுபவர் என்ற வகையில் இ.ம. வங்கி, தொழிற்படு ஆண்டில் முதலீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் இணங்கப்பட்டதொரு வீதாசாரத்தினை செலுத்த வேண்டியிருந்தது. ஐந்தாவது தொழிற்பாட்டு ஆண்டின் இறுதியில் 2013ஆம் ஆண்டு திசெம்பர் 31இல் குத்தகைக்கு விடுபவரான, இலங்கை மத்திய வங்கியின் எதிர்பாராப் பொறுப்புகளாக, முதலாவது தொழிற்படு ஆண்டின் இறுதியில் மதிப்பிடப்பட்டிருந்த முதலீட்டுப் பெறுமதியில் 30 சதவீதமான ரூ.13.159 மில்லியன் (2012 - ரூ.15.352 மில்லியன்) கருதப்பட்டது.

**47.8 முறிக் கடன்பாடுகள்**

வங்கியானது 30 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட தரகு அடிப்படையில் திசெம்பர் மாதத்தில் ஊழியர் சேம நிதியத்திலிருந்து ரூ.79,500 மில்லியன் முகப்புப் பெறுமதியில் கடன்பட்டது.

இம்முறிகள் மீள்கொள்வனவு வசதிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதுடன் 2013 திசெம்பர் 31இல் ரூ.5,940.023 மில்லியன் முகப்புப் பெறுமதி (சந்தைப் பெறுமதி ரூ.3,593.676 மில்லியன்) (2012இல் இல்லை) மீள்கொள்வனவு வசதிகளுக்காக ஒதுக்கப்படாமல் காணப்பட்டது.

**48. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நம்பகத் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

அ) வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதி உதவியின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கடன் முறைகளின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைக்கிணை நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

ஆ) வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் ஆகும். இச் சட்டத்தின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல், அங்கத்தவர்களுக்கு நலக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

இ) மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கியியல் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

ஈ) நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களைக் மேற்கொள்கின்றது. இத் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் தவறும் நிதிக் கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதுடன் கடன் தீராற்றலற்ற முறிவு நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களை கையாளப்படுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உ) 2010 செத்தெம்பர் 28ம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி வங்கி 2010 ஒத்தோபர் 01 ஆம் நாள் தொடக்கம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரில் கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்தியது. அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும். காப்புறுதி செய்யப்படவுள்ள வைப்புக்கள் மேலே சொல்லப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 5.2 இன்படி விசேட விலக்கல்களுடன் காப்புறுதி செய்யப்பட்ட அனைத்துக் கடன்பாட்டுக் கருவிகளும் நீங்கலான அங்கத்துவ நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களை உள்ளடக்கும். வைப்புக் காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீடான ரூ.331.653 மில்லியன் மாற்றல் மற்றும் கைவிடப்பட்ட சொத்தாக உரிமம் பெற்ற வர்தக வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.282.337 மில்லியன் மாற்றல்களின் மூலமும் உருவாக்கப்பட்டது. வைப்பாளருக்கு செலுத்தப்படவுள்ள இழப்பீட்டுத் தொகை ரூ.0.2 மில்லியனை

விஞ்சுமிடத்து ரூ.0.2 மில்லியனிற்கு அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச் சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு நாணயச் சபையோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும்.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள பிரிவு இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருப்பதுடன் வங்கியின் நிதியம் கூற்றுக்களிலிருந்தும் வேறாக தனித்தனியாக ஏடுகளையும், கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வாளாராக இருத்தல் வேண்டும். இத்திட்டமானது 2013 நவம்பர் 22ம் நாளிலிருந்து “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்” எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஊ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான குறைந்தபட்ச முற்பணமான 10 சதவீதம் வரையறையினைப் பேணாத வங்கிகள், மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பாற்றாக்குறையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச சங்வர்த்தன வங்கி மற்றும் லங்கா புத்திர டெவலப்மென்ட் வங்கி என்பனவற்றினூடாகத் திரட்டப்பட்ட அத்தகைய தொகையை விஸ்கம் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வேளாண்மைக்கு மீள்நிதியிடலாக வழங்கியது. 2013 திசெம்பர் 31இல் வெளிநின்ற மொத்த சேகரிப்பு ரூ.390.686 மில்லியனாக (2012 - 641.433 மில்லியன்) காணப்பட்டது. 2013 திசெம்பர் 31இன் இறுதியில் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ரூ.555.071 மில்லியனைக் கடனாக வழங்கியதுடன், வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டியாக ரூ.57.604 மில்லியனைப் பெற்றுக் கொண்டது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அரச பிணையங்களில் ரூ.49.105 மில்லியன் (2012 - 4.117 மில்லியன்) முதலீடுகளை வைத்திருந்தது. மேலும், முதலீட்டிலிருந்து ரூ.188.178 மில்லியனை (2012 - 188.067 மில்லியன்) உழைத்துக் கொண்டது.

எ. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், வங்கியின் நாணயச் சபையின் சார்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் வெளிநாட்டுக் கொடையாளர்களின் நிதியிடல் செயற்றிட்டங்கள் தொடர்பாக, இலங்கை அரசாங்கத்தின் பிரத்தியேக முகவராகத் தொழிற்படுகிறது. இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்துகிறது.

முடிவடைந்த செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப் பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 24.50 | தேயிலை சிறு உடமையாளர் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலை மேம்படுத்துதல் | 2,550.90 | அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிலிருந்து மீள் நிதியிடலை சேகரித்தல் மற்றும் முடிவில் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்தல் | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | நிதியில் கூற்றுக்கள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | நீண்ட கால பயிர் துறையினை வர்த்தகப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான கையாளல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் | 1,453.11 | | | | |
| பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 40.00 | உற்பத்தித்திறனையும் இலாபத் தன்மையினையும் அதிகரிப்பதற்காக மரப் பயிர் துணைத் துறையில் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உதவியளித்தல் மற்றும் இலங்கையின் மரப் பயிர் தொழில் துறையில் போட்டி அநுகூலங்களைப் பேணுதல் | 5,200.00 | | | | |
| சுசகன நிதி மற்றும் குத்தகைக் கம்பனி | இல.ரு | 352.69 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 351.06 | | | | |
| சிறிய வியாபாரங்களை மீள எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | இல.ரு | 2,656.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 2,663.40 | | | | |
| சிறிய வியாபாரங்களை மீள் எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 150.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 122.72 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம் | இல.ரூ | 94.31 | உயர்தர தொழிற்படையை உருவாக்குவதற்காகவும் தேர்ச்சி பொருத்தப்பாடின்மையை நீக்குவதற்காகவும் தரம் மற்றும் தேர்ச்சிப் பயிற்சியின் பொருத்தப்பாட்டை மேம்படுத்தல் | 94.59 | அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிலிருந்து மீள் நிதியிடலை சேகரித்தல் மற்றும் முடிவில் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்தல் | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | நிதியில் கூற்றுக்கள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 4.00 | நகரத்திலும் நகர்ப் புறங்களிலும் வசிக்கும் மக்களின் சூழல் வசதிகள், நலம் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துதல் | 369.15 | | | | |
| வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான வீடமைப்பு புகலிடச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 25.00 | நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளைக் கட்ட, புதுப்பிக்க, வாழிடங்களை விரிவாக்க உதவுதல் | 1,362.00 | | | | |
| நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் | சிஎஉ | 15.10 | வீடமைப்பினை முன்னேற்றுவதற்காக குறைந்த வருமான குடியிருப்பாளர்களுக்கு மூலதனத்தினை வழங்குவதற்கு | 1,915.76 | | | | |
| வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 1.80 | செயற்றிட்டப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொருளாதார, சமூக, ஊட்டச்சத்து நலனோம்புகைகளை மேம்படுத்துதல் | 102.76 | | | | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.00 | சிறிய தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தினை நிரந்தரமாக உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்தல் | 249.06 | | | | |
| மத்திய மலைநாட்டு நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | மத்திய மலைநாட்டுப் பகுதியில் நீண்ட காலப் பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல் | 642.00 | | | | |
| வேளாண்மை புத்தாக்க செயற்றிட்டம் | சிஎஉ | 17.05 | வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் ஐந்து எல்லை மாவட்டங்களிலுமுள்ள சிவில் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கும் சொத்துக்களின் புனரமைப்பிற்கும் உதவுதல் | 843.00 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிறுஉடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 12.60 | சிறு உடமையாளர் தேயிலை துறையினை அபிவிருத்தி செய்யவும் தேயிலைக்கான வசதிகளை புனரமைக்கவும் | 645.93 | அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிலிருந்து மீள்நிதியிடலை சேகரித்தல் மற்றும் முடிவில் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்தல் | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | நிதியில் கூற்றுக்கள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | யென் | 1,155.50 | வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக வழமையான கொடுகடன் வழிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறை யொன்றினை ஏற்படுத்துதல் | 1,031.28 | | | | |
| சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 17.40 | குறைந்த வருமானம் மற்றும் மக்களிடையே தொழில் உருவாக்கத்தினையும் சேமிப்புப் பழக்கத்தினையும் மேம்படுத்தவும் செலவுச் சிக்கனமானதும் உறுதியானதுமான நுண்பாக கொடுகடன் விநியோக முறைமையை நிறுவுதல் | 345.69 | | | | |
| கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 1.50 | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழக்கை நிலைமைகளைத் தரமுயர்த்துதல் | 148.00 | | | | |
| தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 27.90 | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழக்கைத் தரத்தினை மேம்படுத்துதல் | 564.00 | | | | |
| கட்டுமானத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | யூரோ | 9.00 | சுனாமிக்குப் பின்னைய மீள்கட்டுமானங்களில் கட்டுமானம் மற்றும் பொதுப் பணிகளில் வினைத்திறனுடன் பங்கேற்பதற்காக தனியார் உள்நாட்டு வியாபாரங்களின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப இயலுமைகளை உறுதிப்படுத்துதல் | 1,399.73 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் | இல.ரு | 252.95 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்குதல் | 252.92 | | | | |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 1,200.00 | நாட்டின் நீண்ட காலப் பயிர்த் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 1,200.00 | | | | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 77.00 | மாத்தளை மாவட்டத்தில் கிராமிய மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துவதற்கும் பண்ணையல்லாத தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்காக நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியங்களை வழங்குவதற்கும் அத்துடன் ஏற்கனவேயிருக்கும் செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கும் | 77.00 | அட்டவணையிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிலிருந்து மீள்நிதியிடலை சேகரித்தல் மற்றும் முடிவில் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்தல் | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | நிதியில் கூற்றுக்கள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 100.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 100.00 | | | | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் கட்டம் II | இல.ரு | 70.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 70.00 | | | | |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் பீ | யூரோ | 10.00 | சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளக் கட்டியெழுப்புதல் | 1,553.27 | | | | |
| விஸ்கம் (வேளாண்மைத் துறை அபிவிருத்திக்கான சிறப்புக் கடன் திட்டம்) | இல.ரு | 1,325.60 | நாட்டில் வர்த்தக வேளாண் வியாபாரத்தின் முதலீடு, பன்முகப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்திற்கான கொடுகடனின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல் | 882.01 | பங்களிக்கும் வங்கிகளால் சட்டப்படியான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் போது நிதியங்கள் திருப்பி அளிக்கப்படும் | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சுசகன | இல.ரு | 3,000.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,750.00 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து மீள்நிதியச் சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடை கையில் நிதித் திணைக் களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | நிதியில் கூற்றுக்கள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| சுசகன II | இல.ரு | 500.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 105.54 | | | | |
| மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம் | இல.ரு | 2,900.00 | நாட்டில் சிறிய நடுத்தர தொழில்முயற்சியின் துறையில் நடுத்தர மற்றும் நீண்ட கால செயற்றிட்டங்களுக்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,900.00 | | | | |
| வடக்கின் எழுச்சி | இல.ரு | 2,000.00 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,000.00 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து மீள்நிதியச் சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடை கையில் பிரதேச அபிவிருத்தித் திணைக் களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | | | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் | இல.ரு | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவு துறைகளின் நடவடிக்கைகளுக்கு கடன்களை வழங்குதல் | 1,000.00 | | | | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் II | இல.ரு | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,000.00 | | | | |

நடைபெற்று வரும் செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,100.00 | நாட்டின் தேயிலைத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 925.44 | அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிலிருந்து மீள் நிதியிடலை சேகரித்தல் மற்றும் முடிவில் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்தல் | | | |
| சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டம் | இல.ரூ | 250.00 | நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் சித்தியடைந்து பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களை தொடங்குவதற்கு நிதியியல் உதவிகளை வழங்குதல் | 153.37 | | | | |
| சிறிய பெருந்தோட்டத் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம் | சிஎஉ | 1.75 | மொனராகலை, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 249.63 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து மீள்நிதியச் சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடை கையில் பிரதேச அபிவிருத்தித் திணைக் களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) | யென் | 2,100.00 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 2,880.07 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதி II | இல.ரூ | 1,901.62 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 956.07 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சுனாமிக்குப் பின்னைய கரையோர மூலவள முகாமைத்துவச் செயற்றிட்டம் | இல.ரு | 190.80 | சுனாமி அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அவர்களுடைய சொத்துக்களை மீளப்பெறுவதற்கும் அவர்களுடைய வழமையான பொருளாதார நடவடிக்கைகளுக்கான அடித்தளத்தை மீளக்கட்டியெழுப்பும் அதேநேரம் புதிய இலாபமுள்ள வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு பன்முகப்படுத்துவதற்கும் உதவி வழங்குதல் | 190.77 | அட்டவணையிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து மீள்நிதியச் சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடை கையில் பிரதேச அபிவிருத்தித் திணைக் களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | | | |
| சிறிய வேளாண்மையாளர்கள், நிலமற்றோர் கொடுகடன் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 345.69 | சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் சிறு அளவு வேளாண்மையல்லா கிராமிய தொழில்முயற்சி நிறுவனங்களினாலும் வேளாண்மை உற்பத்தியை செறிவுபடுத்துவதற்கு ஊக்குவித்தல் | 1,025.24 | | | | |
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 252.95 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 123.43 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 1,031.28 | | 2,529.78 | | | | |
| சௌபாக்கிய | இல.ரு | 7,960.00 | நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகள் மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வழங்குதல் | 7,959.12 | | | | |
| வடக்கின் எழுச்சி - கட்டம் II | இல.ரு | 2,000.00 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,438.26 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் III | இல.ரூ | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 428.43 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து மீள்நிதியச் சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடை கையில் பிரதேச அபிவிருத்தித் திணைக் களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | | | |
| வடக்கு மற்றும் கிழக்கில் சேதடைந்த வீடுகளைத் திருத்துதல் | இல.ரூ | 600.00 | வட மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரின் போது சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 295.51 | | | | |
| இலங்கை கைப்பணிச் சபை | இல.ரூ | 200.00 | இலங்கை கைப்பணிச் சபையின் தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் | 200.00 | | | | |
| தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஐ.அ.டொலர் | 32.9 | சந்தை/ பெறுமதிச் சங்கிலித் தொடர் அபிவிருத்தியில் நன்மைபெறுநர்களின் வருமானத்தினை அதிகரிப்பதன் மூலம் சிறு உடமை உற்பத்தி யாளர்கள் மற்றும் நிலமற்றோரின் குறிப்பாக இளைஞர்களுக்கு உதவியளிப் பதற்கும் நிலமற்றோருக்கு குறிப்பாக இளைஞர்கள் தமது வருமானத்தினை மேம்படுத்தும் விதத்தில் தொழில்பெறும் விதத்தில் நிதியினையும் பயிற்சியையும் வழங்குவதற்கும் | 113.13 | | | | |

## 49. ஏனைய நிறுவனங்களிலுள்ள நலவுரித்துக்கள்

பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கடன் திட்டங்களான சுசகன, சுசகன கட்டம் II, மாகாண ரீதியான அபிவிருத்திக் கடன் திட்டம் என்பன வங்கியினால் நிதியிடப்பட்டதுடன் வங்கியின் மீதிச் சொத்துக்களும் வருமானமும் வங்கியின் வருமானத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன.

வங்கியும் நிருவாச் செலவுகளை ஈடுசெய்வதற்காக, இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் செயற்றிட்டங்களிலிருந்து குறிப்பிட்ட சதவீத வருமானத்தினை ஈட்டிக் கொண்டது.

பிரதேச அபிவிருத்தித் திணைக் களத்தினால் தொழிற் படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களுக்காக வங்கியினால் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்களிலிருந்து தோன்றுகின்ற எதிர்பாராத பொறுப்புக்கள் குறிப்பு 47.2இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 50. நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களைச் சீர்செய்தல் அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதாயுள்ள திடமான நிகழ்வுகள் எதுவும் நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னர் நடைபெறவில்லை.

## 2. வங்கி மேற்பார்வை

நாணய விதிச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திடம் வங்கிகள் தொடர்பான தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் காலாந்தரப் பரீட்சைகள் என்பவற்றை மேற்கொள்ளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில், நாணயச் சபை, வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பரீட்சகர்கள் ஆகியோர் நாணயச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மற்றும் பலவீனமான வங்கிகளை மறுசீரமைத்தல் உள்ளடங்கலாக உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை மேற்பார்வை செய்வதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றனர். மேலும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பன குறிப்பிட்ட சில தொழிற்பாடுகளை அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாணயச் சபையிடம் அல்லது வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரிடம் முன்னொப்புதல் பெறுமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளன. வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நாணயச் சபை, புதிய உரிமங்கள், முன்மதியுடைய பணிப்புரைகள், தீர்மானங்கள் மற்றும் ஏனைய அறிவுறுத்தல்கள் என்பவற்றை வழங்குகின்றது. வளர்ந்துவரும் வியாபாரச் சூழலிலுள்ள சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மையைப் பேணுதல், வங்கித்தொழில் துறை மீதான பொதுமக்கள் நம்பிக்கையை மேம்படுத்துவதற்காக ஒழுங்கமைப்புக் கட்டமை பலப்படுத்தல் ஆகிய பிரதான குறிக்கோள்களுக்கமைய வங்கிகள் தொடர்பிலான தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் காலாந்தரப் பரீட்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வங்கிகளின் மேற்பார்வையானது வங்கி மேற்பார்வைக்கான பாசல் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகள்/ நியமங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

2.1 2013ஆம் ஆண்டு இறுதியில், இலங்கையில் வங்கித்தொழில் துறை 24 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும் மற்றும் 9 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் கொண்டிருந்தது. இவ்வங்கிகளின் பெயர்கள் இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளன. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் 2013இல் ஆற்றப்பட்ட முக்கிய நடவடிக்கைகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

### 2.1.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் வழங்கல்

விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன. முக்கியமான முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

அ. **உரிமம் பெற்ற வங்கிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டிறுதி கணக்கறிக்கைகள் மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்கள் என்பவற்றைத் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் பிரசுரித்தல்:** இலங்கையில் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் இணைக்கப்பட்டதனைத் தொடர்ந்து நிதியியல் அறிக்கைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களின் காரணமாக உரிமம் பெற்ற வங்கிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டிறுதி கணக்கறிக்கைகள் மற்றும் காலாண்டு நிதியியல் அறிக்கைகள் என்பவற்றைத் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் பிரசுரித்தல் தொடர்பில் புதிய சிறப்புப் படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஆ. **உரிமம் பெற்ற வங்கிகளின் பங்குச் சந்தை வெளிப்படுத்துகை தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்கள்:** அனைத்து வங்கிகளும் தத்தமது வெளிப்படுத்துகை மூலம் ஏற்படும் ஏதாவது சாத்தியமான இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களை நிறுவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இடர்முகாமைத்துவ நியமங்களையும் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஒப்புதலளிக்குமாறும், சம்பந்தப்பட்ட தரவுகளைத் தொடர்ந்து மதிப்பிடுமாறும் உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபைக்கு அறிவுறுத்தப்பட்டது.

இ. **அசையாச் சொத்துக்களின் விற்பனை, மாற்றல், ஒப்படை அல்லது அகற்றல் தொடர்பான வரையறைகள்:** உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் சந்தைப் பெறுமதிக்குக் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனை, மாற்றுல், ஒப்படை அல்லது அகற்றல் அல்லது அச்சொத்துக்களின் பெறுமதியை சந்தைப் பெறுமதிக்கு மேல் உயர்த்துதல் என்பவற்றுக்கு முன்னைய பணிப்புரையில் கோரப்பட்ட நாணயச் சபையின் எழுத்து மூலமான முன்னொப்புதல் மாற்றப்பட்டு வங்கிகள் இந்நடவடிக்கைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளரின் எழுத்து மூலமான முன்னொப்புதலுடன் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டன.

ஈ. **திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம்:** நிறைகாப்புடைய கூறு நம்பிக்கைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பவற்றிலான வங்கிகளின் முதலீடுகள் நிபந்தனைகளுக்குட்பட்டு, சட்ட ரீதியான திரவச்சொத்து விகிதத்தினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்கான திரவச் சொத்துக்களாக தீர்மானிக்கப்பட்டன.

உ. **கம்பனி ஆளுகை:** குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனத்தில் அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் பணிப்பாளரது பொறுப்புக்களின் மட்டத்தில் வேறுபாடுகள் எதுவும் இல்லையென்பதைக் கருத்திற்கொண்டு 10 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு மேலதிகமாக பணிப்பாளர் பதவி வகிக்ககூடாது என்ற கட்டுப்பாட்டை மீளப் பெறுவதற்காக உரிமம் பெற்ற வங்கிகளுக்கான தற்போதைய கம்பனி ஆளுகை பணிப்புரைகள் திருத்தப்பட்டன.

ஊ. **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகள்:** 2013 வரவு செலவுத்திட்டத்தின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் விதத்தில் 2013 தொடக்கம் 2015 வரையிலான காலப்பகுதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் ஒவ்வொன்றினதும் ஐக்கிய அமெரிக்க டொலர் 50 மில்லியன் வரையிலான வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்கும் தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சியின் ஐக்கிய அமெரிக்க டொலர் 250 மில்லியன் வரையிலான வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்கும் ஒப்புதலளிக்கப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட நிதியத்தினைப் பயன்படுத்தியதனூடாக வங்கிகளினால் வழங்கப்பட்ட வேளாண்மையல்லாக் கொடுகடன் வசதிகள், வேளாண்மைத் துறைக்கான கட்டாயக் கடன் வழங்கலைக் கணிக்கும் பொழுது விலக்களிக்கப்பட்டன.

எ. **முதலீட்டு நிதியக் கணக்கு:** குறைந்த செலவிலான வீட்டு அபிவிருத்தித் திட்டம், நிலைபேறுடைய வலு மூலங்களிலான முதலீடுகள் மற்றும் மகளிர் தொழில்முயற்சியாண்மை துணிகர தொழில்முயற்சி முதலீட்டுச் செயற்திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் விதத்தில் முதலீட்டு நிதியக் கணக்கின் பயன்பாடு விரிவாக்கப்பட்டது.

ஏ. **வேளாண்மைத் துறைக்கான கட்டாய கடன் வழங்கல்:** வேளாண்மைத் துறைக்கான கட்டாய கடன் வழங்கல் தொடர்பான தற்போதைய வழிகாட்டல்கள் பின்வருமாறு திருத்தப்பட்டன:

(i) உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகளை பயன்படுத்தும் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வேளாண்மைத் துறைக்கு இடையேற்பாட்டாளர்களாகச் செயற்படும் கம்பனிகள் என்பவற்றுக்கு வங்கிகள் வழங்கிய கடன்களை உள்ளடக்க அனுமதியளித்தல்.

(ii) ஏனைய வங்கிகளுக்கும் நிதிக் கம்பனிகளுக்கும் வேளாண்மை கடன் வழங்கல்களுக்காக வங்கிகள் வழங்கிய கடன்களை உள்ளடக்குவதற்கு, வங்கிகளினால் அத்தகைய கடன்கள் பேணப்படுவதனை அடையாளம் காண்பதற்குப் பொருத்தமான கண்காணிப்புப் பொறிமுறையொன்று இருக்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு அனுமதியளித்தல்.

(iii) கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளினாலும் வெளிநாட்டுக் கிளைகளினாலும் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட கடன்கள், முற்பணங்கள் மற்றும் அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்படும் பாரிய அரச மற்றும் ஏனைய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கான நேரடி நிதியிடல் என்பவற்றை நீக்குதல்.

ஐ. **கொடுகடன் அட்டைகள், ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்கள்:** அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வீதங்களிலான குறைப்பு மற்றும் நாணயக் கொள்கைகளிலான தளர்வு என்பவற்றைக் கருத்திற்கொண்டு, தற்போது நிலவும் வட்டி வீதங்கள் சந்தை வீதங்களை விட ஒப்பீட்டளவில் உயர்வாக இருப்பதனால் கொடுகடன் அட்டை முற்பணங்கள் மற்றும் ஏனைய அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்களைக் குறைக்குமாறு உரிமம் பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. அதேநேரம், ஏற்கனவே வழங்கப்பட்ட கடன் வசதிகள் உள்ளடங்கலாக அனைத்துக்

கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு விதிக்கப்படும் தண்ட வட்டி வீதங்களை, செலுத்தத் தவறிய காலப்பகுதியில் நிலுவையிலுள்ள தொகையின் மீது ஆண்டொன்றுக்கு 2 சதவீதத்திற்கு விஞ்சாததொரு மட்டத்திற்குக் குறைக்குமாறு வங்கிகள் கோரப்பட்டன.

ஒ. **நிதிக் கம்பனிகளுக்கான நிதியியல் கடன் வசதிகள்:** உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான மேற்பார்வைகளின் முன்மதியான அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் நிதிக் கம்பனிகளுக்கு அரச பிணையங்கள், இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள், நிலையான வைப்புக்கள் ஆகியவற்றை பிணைகளாகப் பெற்றுக் கடன் வசதிகள் வழங்க வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் முன்அனுமதி பெறவேண்டும் என்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டது.

ஓ. **பாசல் II இன் தூண் 2இன் மேற்பார்வை மீளாய்வுச் செயன் வமுறையை நடைமுறைப்படுத்தல்:** அனைத்து இடர்நேர்வுகளின் வெளிப்படுத்துகைகளையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் போதுமான மூலதனத்தை தூண் I இல் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுக்கு மேலாகப் பேணுமாறும் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துமாறும் உரிமம் பெற்ற வங்கிகளைத் தேவைப்படுத்தும் மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறை (பாசல் II இன் தூண் 2) மீதான பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

ஔ. **நிதியியல் கூற்றுக்களையும் ஏனைய வெளிப்படுத்துகைகளையும் இணையத்தளத்தில் வெளியிடுதல்:** வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கை/ நிதியியல் கூற்றுக்கள், காலாண்டு நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத் தரம் தொடர்பான வெளிப்படுத்துகைகளை உரிமம் பெற்ற வங்கிகளின் இணையத்தளத்தில் வெளியிடுமாறு கோரப்பட்டன.

க. **தவறாக வழிநடத்தக் கூடியதும் ஒழுக்கவிழுமியங்களற்றதுமான விளம்பரங்கள்:** 2008 நவெம்பர் 6ஆம் திகதியிடப்பட்ட முன்னைய சுற்றறிக்கையுடன் இணங்குமாறும் தவறாக வழிநடத்தக் கூடியதும் தார்மீக ஒழுங்கற்றதுமான விளம்பரங்களை தவிர்க்கும் அதேவேளை அனைத்து முக்கியமான தகவல்களுக்கும் முக்கியத்துவம் வழங்குமாறும் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

ங. **நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் முதலீடு செய்வதற்கு அனுமதித்தல்:** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டன.

### 2.1.2 வங்கிகள், கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்களுக்கான ஒப்புதல்கள்

அ. 2013ஆம் ஆண்டுப் பகுதியில், 119 புதிய கிளைகள், 247 மாணவர் சேமிப்புப் பிரிவுகள், 13 நடமாடும் வங்கிப் பிரிவுகளை ஆரம்பித்தல், 91 கிளைகளை மீள் இடம்மாற்றல் மற்றும் 114 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை தலத்திற்கு வெளியே நிறுவுதல் என்பவற்றுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. இவை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திறக்கப்பட்ட 5 கிளைகளுக்கான ஒப்புதல்களையும் உள்ளடக்குகின்றன. இதன்படி, 2013ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 3,433 கிளைகள், 3,039 மாணவர் சேமிப்புப் பிரிவுகள் மற்றும் 2.508 தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் என்பன தொழிற்பாட்டிலிருந்தன.

ஆ. மாண்புமிகு நிதி திட்டமிடல் அமைச்சரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரையறுக்கப்பட்ட கார்கிள்ஸ் வங்கிக்கு வங்கித்தொழில் உரிமம் வழங்குவதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், இந்தியன் ஓவசீஸ் வங்கி மீண்டும் கரைகடந்த வங்கி வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக அதன் தற்போதைய உரிமத்திற்கு பிற்சேர்க்கை ஒன்றும் வழங்கப்பட்டது.

### 2.1.3 வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வை

வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கிகளின் நிதியியல் ஆற்றல் வாய்ந்த தன்மையை மதிப்பிடுவதற்காகவும், தனிப்பட்ட வங்கியொன்றினை அல்லது வங்கித்தொழில் முறைமை முழுவதனையும் மோசமாகப் பாதிக்கக்கூடிய நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் சமிக்ஞைகளை அடையாளம் காண்பதற்காகவும் அவற்றினைத் தொடர்ச்சியான அடிப்படையில் மேற்பார்வை செய்வதைத் தொடர்ந்தது. தனியார் வங்கிகளுக்கான உள்ளக மேற்பார்வை தரப்படுத்தல் முறைமை ஒன்றும் தொடர்ச்சியான மேற்பார்வைச் செயன்முறைக்குத் துணை நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக, நியதிச் சட்ட பரீட்சிப்புக்களின் போது அடையாளம் காணப்பட்ட கரிசனைகளை உடன்பட்ட காலப்பகுதிக்குள் சீர்செய்வது தொடர்பான முன்னேற்றங்கள் காலாண்டுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படுகின்றது. சரியான மேற்பார்வை மற்றும் தகுந்த நேரத்தில் சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடனும் வங்கியின் பணிப்பாளர்கள் மற்றும் மூத்த முகாமைத்துவத்துடனும் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன.

தொடர்ச்சியான மேற்பார்வையின் ஒரு பகுதியாக இவ்வாண்டில் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களுக்கான கோரிக்கைகளையும் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பரீட்சித்ததுடன் நிறுவன அமைப்பு அகவிதிகளை திருத்தல், அடுக்கு II மூலதனத்தில் துணைத் தொகுதிக் கடன்களை உள்ளடக்குதல், கடன் வசதி வழங்கல்களின் உயர்ந்தபட்சத் தொகையினை விஞ்சும் விதத்தில் கடன் வசதிகளை வழங்குதல், வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்படுதல், நடமாடும் வங்கிப் பணிகளில் ஈடுபடுதல், துணைக் கம்பனிகளிலும் ஏனைய கம்பனிகளிலும் முதலீடு செய்தல், வெளிநாடுகளில் வியாபாரத்தினை விரிவாக்குதல், வியாபார நடவடிக்கைகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல், பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரை நியமித்தல் மற்றும் வங்கிகளில் குறிப்பிடத்தக்க உரிமைகளைக் கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்கான ஒப்புதல்களும் வங்கிகளுக்கு வழங்கப்பட்டன.

வங்கிகளின் செயலாற்றம் தொடர்பான மாதாந்த அறிக்கை மற்றும் வங்கித்தொழில் துறையின் செயலாற்றம் தொடர்பான காலாண்டு அறிக்கை என்பவற்றுக்கு மேலதிகமாக, கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ள வசதியளிப்பதற்காக இலங்கையிலுள்ள வங்கிகளின் வைப்பு வட்டி வீதங்களின் ஆய்வு, தண்ட வட்டி வீதம், அடகுக் கடன்களின் செயலாற்றம், செயற்படாக் கடன்கள் மற்றும் கடன் பெறுமதி விகிதம் போன்ற குறிப்பிட்ட விடயங்கள் மீதான பல அறிக்கைகளும் 2013இல் தயாரிக்கப்பட்டன.

### 2.1.4 வங்கிகளின் பரீட்சிப்பு

நாணய விதிச் சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க, தொடர்பான வங்கிகளின் முகாமைத்துவத்துடன் வழமையான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதன் மூலமாக 2013இல் 29 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் முடிவடைந்து நாணயச் சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட அதேவேளையில் 9 பரீட்சிப்புக்கள் முடிவடையும் செயற்பாட்டு நிலையில் காணப்படுகின்றன. 2013இல் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்கள் கடந்த ஆண்டிலிருந்து தொடரப்பட்ட 12 வங்கிகளின் பரீட்சிப்புக்களையும் 2013இல் தொடங்கப்பட்ட 26 வங்கிகளின் பரீட்சிப்புக்களையும் உள்ளடக்கியிருந்தன. இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான மூலவளங்களை மதிப்பிடுதல் என்பவற்றை முக்கிய கவனத்தில் கொண்டு இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை பின்பற்றப்பட்டது. கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம், திறைசேரி தொழிற்பாடுகள், தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம், ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம், கம்பனி ஆளுகை, புதிய கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுதல், சட்டம் மற்றும் தேவைப்பாடுகளுடன் இணங்காமை போன்ற முக்கிய கரிசனைகள் பரீட்சிப்புக்களில் எடுத்துக்காட்டப்பட்டன. இதற்கு மேலதிகமாக, குறிப்பிடப்பட்ட பிரச்சனைகளுக்காக பல வரையறுக்கப்பட்ட நோக்கங்களைக் கொண்ட பரீட்சிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. முக்கியமான மேற்பார்வை கரிசனைகளை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சரிசெய்வதற்கான நடவடிக்கைகளின் முன்னேற்றம் காலாண்டுக்கொரு முறை தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டது.

### 2.1.5 வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான கூட்டங்கள்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம், உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான ஆளுநரின் மாதாந்த கூட்டத்திற்கான செயலகமாக தொடர்ந்தும் செயலாற்றியதுடன் இக்கூட்டங்கள் மத்திய வங்கிக்கும் வங்கித்தொழில் துறைக்குமிடையிலான கருத்துக்களைக் கலந்துரையாடுவதற்கும் பகிர்ந்து கொள்ளுவதற்குமான அரங்கமாக தொழிற்படுகின்றது. இத்தகைய கூட்டங்களின் போது உள்நாட்டுப் பொருளாதார மற்றும் நாணய அபிவிருத்திகள், வங்கித்தொழில் துறையின் செயலாற்றம் மற்றும் வங்கித்தொழில் துறையில் உள்ளார்ந்த தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய உலகளாவிய

சூழலின் அபிவிருத்திகள் என்பன பற்றி முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்குத் தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, மேற்பார்வை மீளாய்வு செய்தல் நடைமுறையின் நடைமுறைப்படுத்தல், பங்குச் சந்தைக்கு வங்கித்தொழில் துறையின் வெளிப்பாடு மீதான ஒழுங்குமுறைகளைச் சீராக்குதல், புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடுதல் நியமங்கள் என்பனவற்றிற்கமைவாக வங்கிகளின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலை சீர்ப்படுத்தல், கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான தண்ட வட்டி உள்ளடங்கலாக வட்டி வீதங்களை நாட்டில் தற்போதுள்ள தாழ்வான வட்டி வீத நடைமுறைக்கமைவாகக் குறைத்தல், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் கட்டுப்பாட்டுத் தளர்வு மற்றும் இலங்கை அரசினால் வழங்கப்படும் அரச முறிகளில் முதலீடு செய்வதற்கு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அனுமதியளித்தல் என்பன உள்ளடங்கலாக 2013இல் கடைப்பிடிக்கப்பட்ட ஒழுங்குமுறைகள் தொடர்பாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பாசல் II மூலதனப் போதுமைக் கட்டமைப்பின் கீழ் உயர்தரமான அணுகுமுறைக்குச் செல்லுதல், பாசல் III மூலதன நியமங்களைக் கடைப்பிடித்தல் மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளின் அசையாச் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான ஒழுங்குமுறைக் கட்டமைப்பு என்பன உள்ளடங்கலாக 2014இலும் அதன் பின்னரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாட்டுக் கணக்குகள் வரி இணக்கச் சட்டத்தின் கீழான தேவைப்பாடுகள், முதன்மை அரச பிணைகள் விற்பனையாளர்களாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை நியமித்தல், "பிம் சவிய" திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணி உரிமை தொடர்பான சட்ட உறுதிப்பாடு, இலங்கை நாணயத் தாள்களின் மீள்உற்பத்தி மற்றும் தூய நாணயத் தாள் கொள்கை, வங்கிகளால் வழங்கப்படும் மற்றும் பணமாக மாற்றப்படும் பயணிகள் காசோலைகளின் இடைநிறுத்தம், பொதுவான அடிப்படைத் தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு நியமங்களின் உருவாக்கம், வங்கித்தொழில் முறைமையூடாக ஊழியர் சேம நிதிக்கான இணையத்தள மூலமான கொடுப்பனவு முறைமை, வைப்புக்களைக் கவருவதற்காக வங்கிகளினால் வழங்கப்படும் பரிசுச் சீட்டுக்களின் செயற்பாடுகளின் நிறுத்தம், தவறாக வழிநடத்தும் மற்றும் ஒழுக்கவிழுமியங்களற்ற விளம்பரங்கள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் திட்டங்களை அறிமுகப்படுத்துதல், வங்கிகளால் வழங்கப்படும் தொகுதிக்கடன்களின் வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் மேற்கொள்ளப்படும் முதலீடு, ஊழியர் சேம நிதியினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன்கள் மற்றும் ஏனைய மீள்நிதியீட்டுத் திட்டங்கள் மீதான கடன் வழங்கல் வீதங்கள் மற்றும் அரசகருமமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளித்தல் ஆகியன பற்றி கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**2.1.6 வங்கிகளின் தலைவர்களுடனான கூட்டங்கள்:**

வங்கிகளின் தலைவர்களுடனான ஒழுங்கான உரையாடலின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கி ஆளுநரினால் தலைமை தாங்கப்பட்ட வங்கித் தலைவர்களுடனான காலாண்டுக் கூட்டங்களைத் தொடர்ந்தும் நடாத்தி வந்தது. இக்கூட்டங்களில், தலைவர்கள் தீர்மானம் எடுப்பதை வசதிப்படுத்தும் விதத்தில் வங்கித்தொழில் துறையின் செயலாற்றம், உள்நாட்டு மற்றும் உலகளாவிய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்களின் அபிவிருத்திகள் மற்றும் பொருளாதார மற்றும் நாணய அபிவிருத்திகள் என்பன பற்றித் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களாக 2013 ஆண்டிற்கும் அதற்குப் பின்னருக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள், 2012இல் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளிலிருந்து வங்கித்தொழில் துறையினால் முகங்கொடுக்கப்பட்ட சவால்கள் மற்றும் முன்னோக்கிய பயணம், உலகளாவிய மூலதனச் சந்தையின் அபிவிருத்திகள் மற்றும் உள்நாட்டு அனுபவங்கள், வங்கிகளில் ஆளுகை நடைமுறைகளை வலுப்படுத்துதல், கம்பனி ஆளுகை பணிப்புரையை மீளாய்வு செய்தல், வங்கிகளின் திட்டமிடல் செயற்பாட்டில் பாசல் II மற்றும் பாசல் III தேவைப்பாடுகளை உறுதிசெய்தல், கசிவு விளைவுகளைக் குறைக்கும் முகமாக குழும ரீதியான இடர்நேர்வுகளைக் கருத்தில் கொள்ளல், முறைமை ரீதியான இடர்நேர்வைக் கருத்தில் கொள்வதற்கான பேரின முன்மதியான ஒழுங்குமுறைகளை வலுப்படுத்தல் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் ஒன்றுசேர்த்தல் மற்றும் கையகப்படுத்தல் மூலமான ஒருங்கிணைத்தலின் தேவை மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை வசதிப்படுத்தல் ஆகியன காணப்பட்டன.

**2.1.7 இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினை நிருவகித்தல்:**

2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் வைப்புக் காப்புறுதிப் பிரிவு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் தொழிற்பாட்டிற்கும் முகாமைத்துவ ஒழுங்குகளுக்கும் பொறுப்பாக இருக்கின்றது.

வைப்புக் காப்புறுதிப் பிரிவு உறுப்பு நிறுவனங்களிலிருந்தான சரியான நேரத்திலான காப்புறுதிக் கட்டணங்கள் மற்றும் தண்டப் பணங்களின் சேகரிப்பு மற்றும் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்ட நிதிகளைப் பெறுதல் ஆகியவற்றைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்தி வந்தது. அதன்படி, 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் உறுப்பு நிறுவனங்களிடமிருந்து ரூ.4.3 பில்லியன் காப்புறுதிக் கட்டணமாகவும் தண்டப் பணங்களாகவும் சேகரிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, திட்டத்தின் சீரான தொழிற்பாட்டை உறுதிசெய்யும் முகமாக வைப்புக் காப்புறுதிப் பிரிவு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட தரவு/ தகவல்களைப் பரீட்சித்துப் பார்த்தல், தகுதியான வைப்புக்களின் வைப்பாளர் வாரியான விபரங்கள் மீதான அவர்களின் தரவு சமர்ப்பித்தலின் நடைமுறைகள்/ செயல்முறைகளின் ஆற்றல்தன்மையை மதிப்பீடு செய்தல் மற்றும் வைப்புக் காப்புறுதிப் பிரிவின் உள்ளகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை மீளாய்வு செய்து மேம்படுத்துதல் என்பவற்றை மேற்கொண்டது.

திட்டத்தின் கீழ் திரவத்தன்மை ஆதரவின் கிடைக்கத்தக்க தன்மையை வெளிப்படுத்தும் நோக்கிலும் அதன் மூலம் நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையை மேலும் அதிகரிப்பதுடன் நாட்டின் ஒட்டுமொத்த நிதியியல் உறுதித்தன்மையை வலுப்படுத்தும் நோக்கிலும் 2013.11.22 இலிருந்து "இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்" என்பது "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன் "வைப்புக் காப்புறுதி நிதி" என்பது "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம்" எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2013.04.01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு திட்டமும் வருமான வரியிலிருந்து விலக்குப் பெற்றுள்ளது.

2013 திசெம்பர் 31இல் திட்டம் 81 உறுப்பு நிறுவனங்களைக் கொண்டிருந்தது. நிதியியல் சொத்துக்கள் மற்றும் வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம் என்பன முறையே ரூ.12.7 பில்லியனாகவும் ரூ.12.5 பில்லியனாகவும் இருந்தன.

**2.1.8 ஏனைய நடவடிக்கைகள்:**

**அ. வழக்குகளைக் கையாளல்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்கள் ஆகியோரின் உதவியுடன் முறிவடைந்த பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி லிமிடெட்டின் செயற்பாடுகள், செலாவணிக் கட்டுப்பாடு, பிணக்கிற்குரிய மசகு எண்ணெய் காப்பீடு கொடுக்கல்வாங்கல்கள், தடை செய்யப்பட்டவை எனக் கருதப்படும் திட்டங்கள் மற்றும் தவறான வங்கித்தொழில் நடைமுறைகள் என்பன தொடர்பான 19 வழக்குகளைக் கையாண்டது.

**ஆ. ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களுக்கிடையேயான சபை**

நிதியியல் துறையின் ஒழுங்குமுறையான அபிவிருத்திக்குப் பொருத்தமான கொள்கைப் பணிப்புரைகளை உருவாக்குதல், பரந்தளவில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் நலன்களுக்காக அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் முகவர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல் என்பனவற்றை உறுதிப்படுத்துவதை மையக் குறிக்கோளாகக் கொண்டு ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களுக்கிடையேயான சபை உருவாக்கப்பட்டது. நாட்டிலுள்ள அனைத்து நிதியியல் துறை ஒழுங்குபடுத்துநர்களும் இச்சபையின் உறுப்பினர்களாகவுள்ளதுடன் இச்சபை மேற்பார்வை ஒத்துழைப்பு மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல் ஆகியவற்றினூடாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை நோக்கி செயற்படுகின்றது. ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களுக்கிடையேயான சபையின் கூட்டங்களுக்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் வசதியளித்தது. சபையானது, "நிதியியல் துறை ஒழுங்குபடுத்துநர்களிடையே

தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல்" மீதான வரைவுச் சட்டத்தை ஆலோசித்து இறுதிப்படுத்தியுள்ளது. மேலும், பங்குதரகர்களுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு, உரிமம் பெற்ற வங்கிகளின் பங்குடமை வரையறை, கம்பனிப் படுகடன் சந்தை அபிவிருத்தி, நெருக்கடி நிலைமையினை தளர்த்தும் செயற்பாடுகளில் ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் பங்கு, உரிமம் பெற்ற நிறுவனங்களில் கம்பனி ஆளுகையைப் பலப்படுத்துதல் மற்றும் நிதியியல் அறிக்கையிடுதலை மேம்படுத்தல் அத்துடன் கணக்காய்வாளர்களின் வகிபாகத்தை ஒழுங்குபடுத்தல் என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

**இ. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல்**

சவால்களை எதிர்நோக்கும் விதத்தில் வங்கிகளின் மீளெழுச்சியினை வலுப்படுத்தும் பொருட்டு உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழ்நிலையில் புதிய அபிவிருத்திகளைப் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் "பத்து றில்லியன் வங்கித்தொழில் துறைக்கு அப்பால்" என்ற தொனிப்பொருளில் ஆறாவது தொடர்ச்சியான வங்கிப் பணிப்பாளர் மாநாடு 2013 திசெம்பரில் நடாத்தப்பட்டது. கலந்துரையாடல்களின் போது விரிவாக்கம் மற்றும் மீளெழுச்சி ஆகியவற்றை சமநிலைப்படுத்தலில் வங்கிகளின் வகிபாகம் மற்றும் வங்கியின் பணிப்பாளர் ஒருவரின் மாறுபடும் பொறுப்புக்கள் என்பனவற்றிற்கு முக்கியமான கரிசனை கொடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பன மீதான அறிவை மேம்படுத்தும் நோக்கிலும் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கிலும் உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்களுக்கும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கும் தொழில்நுட்பக் கூட்டமொன்று நடத்தப்பட்டது. உரிமம் பெற்ற வங்கிகளின் கணக்காய்வாளர்கள் வங்கிகளில் கணக்காய்வு மேற்கொள்ளும் போதான அவர்களின் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் அவர்களுக்கு உணர்த்தும் முகமாகப் பல கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. மத்திய வங்கியின் மற்றைய திணைக்களங்களினாலும் மற்றும் வெளிமுகவர்களாலும் நடத்தப்பட்ட அநேக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்கள் மூலவள ஆளணியினராகக் கலந்து கொண்டனர்.

2013ஆம் ஆண்டு காலப்பகுதியில், தடை செய்யப்பட்ட திட்டங்களில் பங்குபற்றுவதனால் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு அறிவூட்டும் முகமாக வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைந்து பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. பொதுமக்களிலிருந்து வைப்புக்களை ஏற்பதற்கு மத்திய வங்கியினால் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் பெயர் பட்டியல் தொடர்பான பல அறிவித்தல்கள் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டன.

ஒழுங்குமுறைப்படுத்தல் துறையில் இடம்பெற்ற மாற்றங்கள் மற்றும் அபிவிருத்திகள் மீதான தகவல்களைப் பரப்புவதற்காக வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பத்திரிகை வெளியீடுகளைத் தொடர்ந்து வழங்கியது.

**ஈ. தரவு வழங்கலும் தொழில்நுட்ப உதவியும்:**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஏனைய திணைக்களங்களுக்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு, தேசிய கொடுப்பனவு சபை மற்றும் அரச மதிப்பீடு இற்றைப்படுத்தல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய முகவர்களுக்கும் தகவல்களையும் தொழில்நுட்ப அறிவையும் தொடர்ந்தும் வழங்கி வந்தது.

**2.2** 2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் அவற்றின் கடப்பாடுகள் அவர்களது வைப்பாளர்களுக்கு அல்லது ஏனைய கடன்பெறுநர்களுக்கு இடர்ப்பாடுகளை ஏற்படுத்தாத விதத்தில் அவற்றின் வியாபாரத்தை மேற்கொள்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அதன் மேற்பார்வை நடவடிக்கைகளை காத்திரமான முறையில் மேற்கொண்டது.

## இணைப்பு I உரிமம் பெற்ற வங்கிகளின் பட்டியல்

| | |
|---|---|
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்** | |
| 1. | அமானா பாங்க் லிமிடெட் |
| 2. | அக்சிஸ் பாங்க் லிமிடெட் |
| 3. | இலங்கை வங்கி |
| 4. | சிற்றி பாங்க் என்.ஏ |
| 5. | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி |
| 6. | டொயிஷ் பாங்க் ஏஜி |
| 7. | டிஎவ்சிசி வர்தன பாங்க் பிஎல்சி |
| 8. | கபீப் பாங்க் லிமிடெட் |
| 9. | அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி |
| 10. | ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட் |
| 11. | இந்தியன் பாங்க் |
| 12. | இந்தியன் ஓவசீஸ் பாங்க் |
| 13. | எம்சிபி பாங்க் லிமிடெட் |
| 14. | நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி |
| 15. | நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி |
| 16. | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி |
| 17. | மக்கள் வங்கி |
| 18. | பப்ளிக் பாங்க் பெர்காட் |
| 19. | சம்பத் பாங்க் பிஎல்சி |
| 20. | செலான் பாங்க் பிஎல்சி |
| 21. | ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க் |
| 22. | ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா |
| 23. | த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் |
| 24. | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** | |
| 25. | டிஎவ்சிசி பாங்க் |
| 26. | இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி |
| 27. | லங்காபுத்ர டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட் |
| 28. | எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட் |
| 29. | தேசிய சேமிப்பு வங்கி |
| 30. | பிரதேசிய சங்வர்த்தன பாங்க் |
| 31. | சணச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி |
| 32. | சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட் |
| 33. | அரச ஈட்டு முதலீட்டு வங்கி |

**3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம்**

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையமானது இலங்கை மத்திய வங்கியின் பயிற்சிக்கான ஒரு மையமாகும். இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் மற்றும் இலங்கையிலும் இப்பிராந்தியத்திலுமுள்ள நிதியியல் தொழில் துறையிலுள்ள தொழில்சார் நிபுணர்கள் ஆகியோரின் தேர்ச்சிகளை முன்னேற்றுதல், அறிவுத்திறனை மேம்படுத்தல் போன்றவற்றிற்கான பொறுப்பு வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இது

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆய்வரங்குகள் மற்றும் செயலமர்வுகளை வடிவமைத்து நடத்துகின்றது. பிராந்திய நிறுவனங்களிலிருந்தான வங்கித்தொழில் துறை மற்றும் நிதியியல் துறைகளிலுள்ள கற்கைகளுக்கான பங்கேற்பாளர்களும் இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுநர்கள் பங்குபற்றினர். வங்கித்தொழில் ஆய்வுநிலையம், சமகாலத்தில் முக்கியத்துவம் பெறும் விடயங்களில் பொதுமக்களுக்கான ஆய்வரங்குகளையும் நடத்துகின்றது. பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் நடைமுறைப் பொருளாதாரம் மீதான அறிவை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் நடாத்துகின்றது.

2013இல் வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநிலையத்தின் கவனமானது பன்னாட்டு தரங்களுக்கு இணையாக இதன் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வசதிகளின் தரத்தை உயர்த்துவதன் மீது குவிந்திருந்தது. உயர்ந்தளவில் வளர்ந்துவரும் நிதியியல் உலகில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம், வசதியானதொரு பயிலும் சூழலில் புத்தம் புதிய முறைகளினூடாக இற்றைப்படுத்தப்பட்ட அறிவினை வழங்கும் தேவையினை அடையாளம் கண்டு கொண்டது. இம்மாற்றங்களின் பெறுபேறுகளின் சான்றுகளை 2013ஆம் ஆண்டிற்கான செயலாற்றத்தில் காணமுடிந்தது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் வங்கித்தொழில் தொழிற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகள், நிதியியல் முகாமைத்துவம், பொருளாதாரம், கிராமியத் துறை அபிவிருத்தி, மனிதவளம் மற்றும் பொது முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், மொழிகள் மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சி ஆகிய துறைகளில் ஆய்வரங்குகள், செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளை நடத்தியது. நிதியியல் நிறுவனங்களின் மைய நடவடிக்கைகள் மற்றும் துணைப் பணிகள் ஆகிய இரண்டு நியதிகளிலும் அவற்றின் பயிற்சித் தேவைகளை அனைத்தையுமுள்ளடக்கிய விதத்தில் பூர்த்திசெய்யும் நோக்குடன் பரந்தளவு செயற்பரப்பினைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் ஏனைய உலகளாவிய மூலவள நிலையங்களுடனான அதன் இணைப்புக்களை விரிவுபடுத்திக் கொண்டதன் மூலம் அதன் பிரசன்னத்தினைத் தொடர்ந்தும் விரிவாக்கிக் கொண்டது. பன்னாட்டு இணங்குவிப்பு அமைப்பினதும் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்தினதும் ஒத்துழைப்புடன் இணங்கியொழுகும் தன்மையில் பன்னாட்டு டிப்ளோமா தொடங்கப்பட்டமையானது அத்தகைய அபிவிருத்திகளில் தலையாயதாகும்.

2013ஆம் ஆண்டுப் பகுதியில், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் 60 கலண்டர் நிகழ்ச்சித்திட்டங்கள், 73 சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், (நிதியியல் நிறுவனங்களிலிருந்து எழுந்த கேள்வியினதும் ஆய்வுநிலையத்தினால் அடையாளம் காணப்பட்ட அறிவு இடைவெளிகளினதும் அடிப்படையில்) 12 பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், 03 டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள், 04 சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 02 பயிற்சியாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. மேலும், 2013இல் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்வுகளாக 12 பகிரங்க விரிவுரைகள், 03 மாலைநேர காட்சிப்படுத்தும் விரிவுரைகள், 61 பள்ளிக்கூட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 06 பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தில் நடத்தப்பட்டன. இந்நிகழ்வுகளில் 191 வெளிநாட்டுப் பங்கேற்பாளர்கள் உட்பட மொத்தமாக 6,832 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இலங்கையிலுள்ள உயர்தர மாணவர்களை இலக்காகக் கொண்டு "ரக்சிலாவ" என்ற தலைப்பிலான தொலைக்காட்சித் தொடரொன்று வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் அதிகார வரம்பின் கீழ் 2013இல் மீண்டுமொரு முறை நடத்தப்பட்டது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் தொடர்ச்சியான பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. 2013இல் அனைத்து மாகாண அலுவலகங்கள் 05 இனதும் ஈடுபாட்டுடன் மொத்தமாக 09 அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. விடயப்பரப்புக்கள் கடன் வழங்கல் மற்றும் கொடுகடன் மதிப்பிடல் போன்ற மைய வங்கித்தொழில் நடவடிக்கைகளிலிருந்து அடகுபிடித்தல் போன்ற துணைப் பணிகள் வரையில் பரந்த வீச்சினைக் கொண்டிருந்தது.

இப்பிராந்தியத்தில் அறிவாற்றல் மற்றும் தேர்ச்சியினை மேம்படுத்துவதற்கு மிகச் சிறந்த மையமாக விளங்கக்கூடிய விதத்தில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது "தரத்தினையும் பாரிய செயல்விளைவுகளையும் உயர்த்துவோம்" என்ற கருப்பொருளுடன் இசைந்த விதத்தில் 2014இற்கும் அதற்கு அப்பாலுக்குமான அதன் கலண்டர் மற்றும் சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தது. தலைசிறந்த வளவாளர்களினால் நடத்தப்படும் பகிரங்க விரிவுரைகளை அடிப்படையாகக் கொண்ட விரிவுரைத் தொகுப்பு வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 4. தொடர்பூட்டல்

ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்பூட்டல் திணைக்களத்தின் அதிகாரவரம்பின் கீழ் "இலங்கையின் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை" இன் முதலாம் கட்டம் அமைக்கப்பட்டதன் மூலம், இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டானது தொடர்பூட்டல் திணைக்களத்திற்கு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக அமைந்தது. மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு எதிராக சதாம் வீதியிலுள்ள புதுப்பிக்கப்பட்ட சென்றல் பொயின்ட் கட்டிடத்தில் நிர்மாணிக்கப்பட்ட அரும்பொருட்காட்சிச்சாலையானது பொதுமக்கள் தொடர்புகளுக்கான வங்கியின் மிகப் பிந்திய நுழைவாயிலாகும். நாட்டின் கடந்த கால பொருளாதாரத்தின் முழுமையான நிலமைகளை ஒரே கூரையின் கீழ் கொண்டுவருவதற்கு இலங்கையின் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சி சாலையினை ஒரு முழுத்தர பொருளாதார வரலாற்று காட்சிசாலையாக மாற்றுவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அரும்பொருட்காட்சி சாலையின் முதலாவது கட்டத்தின் ஒரு பகுதியான "நாணயப் பொருட்காட்சி" ஆனது, இராஜகிரிய வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநிலையத்தில் அமைந்திருந்த நாணய அரும்பொருட்காட்சிச்சாலையினை இடமாற்றியதன் மூலம் சென்றல் பொயின்ட் கட்டிடத்தில் நிர்மாணிக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட சென்றல் பொயின்ட் கட்டிடமும் நாணயப் பொருட்காட்சியும், 2013 நவம்பர் 11ம் நாளன்று இலங்கையின் சனாதிபதி மேதகு மகிந்த ராஜபக்ஷ அவர்களால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இப்பொருட்காட்சிச்சாலையானது "நாணய பொருட்காட்சி", பொதுநலவாய நாடுகள் பகுதி மற்றும் 1950 ஆண்டு இலங்கை மத்திய வங்கி உருவாக்கப்பட்டதிலிருந்து நாட்டின் பொருளாதார, நிதியியல், கலாச்சார மற்றும் அரசியல் போன்றவை தொடர்பாக இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளின் மீதான பின்னோக்கிய பார்வையினை வழங்கும் மலரும் நினைவுகள் ஆகிய பிரிவுகளைக் கொண்டுள்ளது.

பொருட்காட்சிச்சாலை திறத்தலுடன் தொடர்புடைய விதத்தில் இலங்கை நாணயங்களின் வரலாறு தொடர்பான நூலானது விசேடமாக மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டது. இலங்கைப் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையானது தொடர்பூட்டல் திணைக்களத்தின் ஒரு மைல்கல்லாக விளங்குவதுடன், இது நாட்டின் பொருளாதார மற்றும் நிதியியல் விடயங்கள் மீதான பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான திணைக்களத்தின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டும் அதேவேளையில் எதிர்கால சந்ததியினரின் நன்மைகளுக்காக அத்தகைய அறிவினைப் பேணிப் பாதுகாக்கும் இடமாகவும் காணப்படுகிறது.

இலங்கைப் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை போன்ற மிகப் பெரிய செயற்றிட்டத்தினை செயற்படுத்தும் வேளையில், தொடர்பூட்டல் திணைக்களமானது உயர்தரத்துடனும் உரிய நேரத்திலும் உள்வாரியான மற்றும் வெளிவாரியான ஆர்வலர்களுடன் அதன் வழமையான தொடர்பூட்டல்களையும் தொடர்ந்து மேற்கொண்டது.

### 4.1 வெளிவாரித் தொடர்பூட்டல்

வங்கியின் கம்பனி இணையத்தளமான www.cbsl.gov.lk ஆனது அதனது இடத்தை இந்த ஆண்டும் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டதுடன் இலங்கை மத்திய வங்கியின் அதிக முனைப்பு மிக்க வெளிவாரி தொடர்பூட்டல் வழியாக விளங்கி முன்னைய ஆண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 67.7 மில்லியன் பார்வையாளர்களுக்கு மேலாக, 23.5 சதவீத அதிகரிப்புடன் 2013ஆம் ஆண்டில் 83.6 மில்லியன் பார்வையாளர்களைப் பதிவு செய்தது.

ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்பூட்டல் திணைக்களமானது முகநூலில் 714 பதிவுகளையும் டுவிட்டரில் 786 டுவிடுகளையும் உருவாக்கியதன் மூலம் அதன் வெளிவாரித் தொடர்பூட்டலுக்காக சமூக ஊடக சக்தியினை, காத்திரமான முறையில் பயன்படுத்திக் கொண்டது. ஆண்டுக்காலப்பகுதியில் 40 காணொளிகள் யு ரியூப்பில் பதிவேற்றப்பட்டதுடன் இது 17,780 பார்வையாளர்களைக் கவர்ந்து

கொண்டது. முகநூல் மற்றும் டுவிட்டரிலான பதிவுகளானது சமூக வலையமைப்புக்களில் இலங்கை மத்திய வங்கியின் பிரபல்யமான தன்மையினைப் பிரசன்னப்படுத்தும் சிறந்த குறிகாட்டிகளாகக் காணப்படுகின்றன.

மக்களுக்கான துல்லியமான தகவல்களின் விரைவான பாய்ச்சலினை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான கடப்பாட்டை உறுதிசெய்யும் நோக்குடன் ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்பூட்டல் திணைக்களமானது வங்கியின் கம்பனி வலைத்தளத்தினூடாக ஒரு மின்னஞ்சல் அலேட் முறைமையினை அறிமுகப்படுத்தியது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பான அறிவிப்புக்கள், நாளாந்த செலாவணி வீதங்கள், பணவீக்க எண்தொகைகள் போன்ற வங்கியால் வழங்கப்படும் நாளாந்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான மின்னஞ்சல் பட்டியலில் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வங்கியின் வலையமைப்பு ஊடாக விஜயம் செய்வோருக்கு வழங்கப்படுகின்றது. இது பொது மக்களுக்கு இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்படும் இலவச சேவையாகும். தற்பொழுது இப்பணிக்கு 684 வாடிக்கையாளர்கள் காணப்படுகின்றனர்.

2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட எஸ் எம் எஸ் அலேட் முறைமைக்கான வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையானது, முன்னைய ஆண்டின் முடிவில் பதிவுசெய்யப்பட்ட 435 இலிருந்து 840 இற்கு அதிகரித்தது. இந்த முறைமையானது பத்திரிகையாளர்கள், நிதியியல் சந்தையுடன் தொடர்புடைய மக்கள் மற்றும் சந்தைத் தகவல்கள் வெளியிடப்படும் போதே எந்தவித நேர தாமதமுமின்றி அவற்றைப் பெறத் தேவையுடைய பெருமளவிலான பொதுமக்கள் போன்றோருக்கு பயனுள்ளதாக இருக்கிறது.

மின்னஞ்சல், எஸ் எம் எஸ் மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற பாரம்பரியமற்ற தளங்கள் மீதான தொடர்பூட்டலினை மேம்படுத்தும் வேளையில் தொடர்பூட்டல் திணைக்களமானது அதன் ஒழுங்கான பாரம்பரிய தொடர்பூட்டல்களை பராமரிப்பதிலும் வெற்றி கண்டுள்ளது. இதன் கீழ் ஆண்டுக்காலப் பகுதியில் 1,792 பத்திரிகை வெளியீடுகளையும் 22 வர்த்தமானி அறிவித்தல்களையும் வெளியிட்டது.

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஐந்து ஊடக மாநாடுகளும் 28 ஊடக ஒழுங்குபடுத்தல்களும் நடத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, தொடர்பூட்டல் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கி வழிகாட்டலின் காட்சிப்படுத்தலுடனான விரிவுரை, “லங்கா பே” பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி வசதி, 18ஆவது வருடாந்த வரி சொற்பொழிவில் ஆளுநரின் விரிவுரை, பாற்பண்ணை அபிவிருத்தி கடன்திட்ட தொடக்கவிழா, வங்கியின் 63ஆவது ஆண்டுச் சொற்பொழிவு, பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையின் திறப்பு விழா, வங்கிப் பணிப்பாளர்களின் மாநாடு போன்ற பல நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபடுத்தியது. நாணயத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட நாணயங்களை மீள சேகரித்தல் செயற்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்காக, உள்ளூர் தொலைக்காட்சி வலையமைப்புக்களுடன் இணைந்து ஒரு பிரச்சார நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது.

கடந்த காலங்களைப் போல, தொடர்பூட்டல் திணைக்களமானது அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற “தேசத்தின் மகுடம்” கண்காட்சியிலும், பண்டாரநாயக்கா பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி போன்ற இரண்டு தேசிய நிகழ்ச்சிகளில் வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றியிருந்தது.

### 4.2 உள்ளக தொடர்பூட்டல்

இந்த ஆண்டிலும் திணைக்களத்தால் தொழிற்படுத்தப்படும் உள்ளக இணையத்தளமான “cbsldaily” ஆனது, வங்கி ஊழியர்களுக்கான தகவல்களை வழங்குகின்ற ஒரு இணைய நுழைவாயிலாக அதன் பிரபல்யத்தினை தொடர்ந்தும் பேணியது. இந்த இணையத்தளமானது ஆண்டுக்காலத்தில் 495 இலங்கை வங்கிகளுக்கிடையிலான கடன் வழங்கல் வீத மற்றும் செலாவணி வீத இற்றைப்படுத்தல்கள், 169 பத்திரிகை வெளியீடுகள் என்பனவற்றைக் கொண்டிருந்தது. இந்த இணையத்தளமானது ஒரு செய்தித்தளமாகவும் அறிவிப்பு பலகையாகவும் அதேபோன்று உள்ளக வலையமைப்புக்கான நுழைவாயிலாகவும் தொழிற்படுகிறது. ஆண்டுக்காலப் பகுதியில் வங்கியின் அலுவல்சார் உள்ளக செய்திமடலான “கவுளுவ” இன் ஆறு தொகுதிகள் வெளியிடப்பட்டன. பொருளாதாரம் தொடர்பான நடப்பு விடயங்கள் மற்றும் வங்கி தொடர்பான விடயங்கள் பற்றி மூத்த முகாமைத்துவத்திற்கு உடனுக்குடன் தெரியப்படுத்தும் நோக்குடன், மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட பதினைந்து தேசிய செய்திதாளிலிருந்து சேகரிக்கப்பட்ட 1,392 செய்தி நறுக்குகள், கட்டுரைகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் என்பவற்றை ஊடகக் கண்காணிப்பு பிரிவு சமர்ப்பித்தது.

### 4.3 பொதுமக்கள் விழிப்புணர்வு

பொருளாதார மற்றும் நிதியியல் அறிவு தொடர்பாக பொதுமக்களின் விழிப்புணர்வினை பரப்பும் முயற்சிக்கு வசதியளிப்பது தொடர்பூட்டல் திணைக்களத்தின் உயர் முன்னுரிமைப்படுத்தல் விடயங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களின் தொலைதூர பிரதேசங்கள் உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தான பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக 30 பயிற்சி வகுப்புக்களை ஒருங்கிணைத்ததன் மூலம் திணைக்களமானது பொதுமக்கள் விழிப்புணர்வுக்கான தனது கடப்பாட்டினை வெளிப்படுத்தியது. மேலும், மத்திய வங்கியின் வெளியீடுகள் மற்றும் ஞாபகார்த்த குற்றிகளை பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதற்காக 2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்பூட்டல் திணைக்களமானது வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தி 04 தேசிய மட்டத்திலான அரும்பொருட்காட்சிகளில் பங்குபற்றியது.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தின் ஊடாக கணனி வழியில் அதேநேர முறையில் வெளியீடுகளை பெற்றுக் கொள்ளக் கூடியதான சந்தர்ப்பம் காரணமாக ஆண்டுக்காலப்பகுதியில் மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனையானது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இருப்பினும் ஆண்டுக் காலப்பகுதியில் ஆண்டறிக்கை 2012, உட்பட 16,335 பல்வேறு வெளியீடுகளின் பிரதிகளை பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இலவசமாக வழங்கியதுடன், உயர்தர வகுப்பு மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் இலக்கிடப்பட்ட படைகள் மற்றும் அலுவலர்களின் பயிலுநர்கள் போன்றவர்களை இலக்காகக் கொண்டு 30 பொதுமக்கள் விழிப்புணர்வு, கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தியது.

### 4.4 தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகள்

தகவல்களை மும்மொழியிலும் சமமாக வழங்குவது என்ற திணைக்களத்தின் பணிக்கு தமிழ் மொழிபெயர்ப்பு பிரிவானது தனது பங்கின் பங்களிப்பை தொடர்ச்சியாக வழங்கியது.

### 4.5 அச்சகம்

2013 காலப்பகுதியில் அச்சகத்தினால் உயர்ந்த தரத்திலமைந்த 145 எண்ணிக்கையான அச்சிடல் ஒப்படைகள் பொறுப்பேற்கப்பட்டிருந்தன. ஆண்டுக்காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்ட அச்சிடல் ஒப்படைகள், 2014 ஆம் ஆண்டிற்காக இலங்கை மத்திய வங்கி நாட்குறிப்பு, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதியியல் நிறுவனங்கள் மற்றும் உரிமம் பெற்ற குத்தகைக்குவிடும் கம்பனிகள் போன்றவற்றுக்கான வழிகாட்டிகள், வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கான படிப்படியான வழிகாட்டல், 2014 - 2018 இற்கான இலங்கை மத்திய வங்கியின் உபாயத்திட்டம், பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் செய்தித் திரட்டின் 5 வெளியீடுகள், இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்களின் மும்மொழிமூல வெளியீடுகள் மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவ செய்தித் திரட்டு போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன.

பல்வேறுபட்ட மத்திய வங்கி வெளியீடுகளான மத்திய வங்கியின் உதவி ஆளுநர் முனைவர் டபிள்யூ. எம். ஹேமச்சந்திர அவர்களால் எழுதப்பட்ட “வட்டி வீதங்கள் - கொள்கைகளும் நடைமுறைகளும்”, மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திரு. பி. சமரசிறி அவர்களால் எழுதப்பட்ட “பொருளியல் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகள்” மற்றும் “பொருளாதாரத்தின் அடிப்படைத் தத்துவங்கள் பற்றிய பகுப்பாய்வு” (சிங்களம்/தமிழ்), வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநிலையத்தின் பணிப்பாளர் திரு. சி. பி. ஜே. கருணாதிலக அவர்களினால் எழுதப்பட்ட “பொருளியல் கோட்பாடுகளுக்கு ஓர் அறிமுகம்”, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு அறிக்கை - 2013, “சென்தேவ”, “கவுளுவ”, “சட்டகன”, பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள், வரி தொடர்பான சொற்பொழிவில் ஆளுநரின் காட்சிப்படுத்தும் விரிவுரைகள் மற்றும் வியாபாரம் செய்தல் - 5ம் பதிப்பு ஆகியன அச்சகத்தால் அச்சிடப்பட்டு குறித்த நேரத்தில் வெளியிடப்பட்ட சில வெளியீடுகளாகும்.

### 4.6 வங்கியின் முக்கிய நிகழ்வுகளை புகைப்படமெடுக்கும் வசதிகள்

தொடர்பூட்டல் திணைக்களத்தின் புகைப்படம் எடுக்கும் பிரிவானது நிழற்படம் மற்றும் கட்புலக் காட்சிகளிலான காட்சி ஊடகங்கள் ஊடாக மத்திய வங்கியினை வர்ண மயமாக உலகிற்குக் காட்டுவதில் அளப்பரிய பங்களிப்பினை வழங்கியது. இப்பிரிவானது வங்கியின் 435 நிகழ்வுகளுக்குப் பணி வழங்கியதுடன், புகைப்படங்களை தொகுத்தல் மற்றும் அச்சிடல், கட்புலக்காட்சிகளின் தொகுப்பு, அல்பங்களை தயாரித்தல் மற்றும் இறுவட்டுக்கள் மற்றும் புகைப்படங்களுக்கு சட்டம் இடுதல் போன்ற அனைத்துத் தொடர்பான பணிகளும் உயர் தொழில்சார் நிபுணத்துவத் தரத்தில் வழங்கப்பட்டன.

### 4.7 நூலகமும் தகவல்நிலையமும்

கடந்த ஆண்டு காலப்பகுதியில், 27,585 நூல்கள், 18,328 அறிக்கைகள், 1,813 இறுவட்டுக்கள் மற்றும் 185 சஞ்சிகை தலைப்புக்கள் மற்றும் 07 இணையவழி அதேநேர தரவுத் தளங்கள் போன்ற சேகரிப்புக்களுடன் நூலகமும் தகவல் நிலையமும் வங்கி அலுவலர்களுக்கும் அதேபோன்று கோரிக்கையின் பேரில் வெளிவாரியான பாவனையாளர்களுக்கும் வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினால் சந்தாத் தொகை செலுத்தப்படும் இரண்டு இணைய வழி அதேநேர தரவுத் தளங்களான "சயன்ஸ் டிரெக்ட்" மற்றும் "எப்சோகொஸ்ட்" என்பன அளவுசார் பொருளாதாரம், பொருளாதாரம் மற்றும் நிதி என்பன உள்ளடங்கலாக பல துறைகளில் முறையே 115 மற்றும் 350 முழுமையான சஞ்சிகைகளை/ கட்டுரைகளை பெறும் வழிகளை வழங்கியது. மேலும், மத்திய வங்கித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்பான விடயங்களில் தகவல்களைப் பெறுவதற்காக நூலகமும் தகவல் நிலையமும் மேலும் பல இணையவழி அதேநேர தரவுத் தளங்களுக்குச் சந்தாக்களைச் செலுத்தியது.

நூலகம் மற்றும் தகவல் நிலையத்தால் சந்தா செலுத்தப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சஞ்சிகைகளின் மொத்த எண்ணிக்கையானது முறையே 119 மற்றும் 63 ஆக விளங்கியது. நூலகம் மற்றும் தகவல் நிலையமானது அண்மையில் புதிதாக சேர்க்கப்பட்டவை (அதாவது புதிய நூல்கள்), நடைமுறை விடயங்களின் உள்ளடக்கம், செய்தி அலேட், பொருளாதாரம், வங்கியியல் மற்றும் நிதியியல் மீதான உள்ளூர் பத்திரிகை அறிக்கைகள் போன்ற இலத்திரனியல் வெளியீடுகளை தொகுப்பதனை தொடர்ந்து மேற்கொண்டதுடன் அவற்றை உள்ளக இணையமூடாக பரப்பியது. தெரிந்தெடுக்கப்பட்ட தகவல் பணிகளை பரப்பும் பணிகளும் பேணப்பட்டன. நூலகம் மற்றும் தகவல் நிலையமானது இலங்கையின் பொருளாதார மற்றும் வங்கியியல் நூலக வலையமைப்பான "Ebanklibnetsl" இனை தொடர்ந்து பேணியதுடன் மின்னஞ்சல் மூலம் தகவல்களை பரப்புவதன் ஊடாக, 24 அங்கத்துவ நூலகங்களுக்கு பணிகளை வழங்கியது. மேலும், மூல வளங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டதன் ஊடாக, நூலகம் மற்றும் தகவல் நிலையமானது உலகளாவிய மத்திய வங்கி தகவல் தொழில்சார் நிபுணத்துவ வலையமைப்பில் (cbfa பட்டியல்) ஒரு செயற்படும் அங்கத்தவர் என்ற நிலையை தொடர்ந்ததுடன் ஆராய்ச்சி வேண்டுகோள்களை பூர்த்தி செய்வதற்கான உதவிகளையும் பெற்றுக் கொண்டது. நூலகத்தின் உள்ளக இணையத்தளத்தினூடாக வங்கி அலுவலர்கள் அணுகுவதற்கான வசதியை வழங்கியதன் மூலம் இலத்திரனியல் நூலக சேவையினை தொடர்ந்தும் பேணியது.

## 5. நாணயம்

நாணய விதிச் சட்டத்தின் 48 இலிருந்து 59அ வரையான நியதிகளில், நாணயச்சபை இலங்கையில் கொடுப்பனவிற்கான கருவியான நாணயத்தினை வெளியிடுவதற்கான அதிகாரசபையாக இருக்கிறது. நாணயச் சபையின் இவ்வதிகாரம் நடைமுறைக்கிடப்படுவதனை வசதிப்படுத்துவதற்காக ஆரம்பத்தில் நாணயத் திணைக்களம் வங்கித்தொழில் மற்றும் நாணயத் திணைக்களமாக 1950 யூலையில் நிறுவப்பட்டது. இதற்கமைய, நாணயத் திணைக்களத்தின் தற்போதைய தொழிற்பாடுகளாக பொதுமக்களின் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக நாணயத் தாள்களையும் குத்திகளையும் வெளியிடுதல், தாள்களை அச்சிடுவதற்கும் நாணயக் குத்திகளை வார்ப்பதற்குமான அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொள்ளுதல், நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஞாபகார்த்த நாணயத் தாள்களையும், நாணயக் குத்திகளையும் வெளியிடுதல், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்வதன் மூலமும் அவ்வங்கிகளின் தேவைப்பாடுகளுக்கேற்ப வைப்புக்களை விடுவிப்பதன் மூலமும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் நாணயத் தொழிற்பாடுகளை நடத்துதல், பயன்படுத்த முடியாத பொருத்தமற்ற நாணயத் தாள்களையும் குத்திகளையும் சுற்றோட்டத்திலிருந்து புறக்கீடு செய்தல் மற்றும் நாணயம் தொடர்பான நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைக் கையாள்வதற்கு சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு உதவுதல் என்பன காணப்படுகின்றன.

### 5.1 நாணய வெளியீடு

(அ) நாட்டில் நாணயத்திற்கான கேள்வியை ஈடுசெய்யும் பொருட்டு, நாணயத் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினூடாக புதிய நாணயத் தாள்களையும் குத்திகளையும் மற்றும் பொருத்தமான (பயன்படுத்தத்தக்க) நாணயத் தாள்களையும் குத்திகளையும் மீளவழங்குதல் என்பன மூலம் அவற்றைப் பொருளாதாரத்திற்கு வழங்கி வருகின்றது (அட்டவணை II-1 ஐப் பார்க்க). இது, பொதுமக்கள் விரும்புகின்ற நாணய இனங்களை அவர்களுடன் பரிமாற்றிக் கொள்ளும் நோக்குடன் நாணயத் திணைக்களம் இலங்கை வங்கியின் புறக்கோட்டைக் கிளையில் பேணும் நாணயப் பரிமாற்றல் பீடங்களினூடாக பொதுமக்களுக்கு நாணயங்களை வழங்கி வருகின்றமையினை உள்ளடக்குகிறது. 2013இல் ரூ.3,264 மில்லியன் பெறுமதியான நாணயத் தாள்களும் ரூ.79.9 மில்லியன் பெறுமதியான நாணயக் குத்திகளும் வெளியிடப்பட்டன.

**அட்டவணை II-1** நாணய வழங்கல்

| வழங்கல்கள் | பெறுமதி | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 |
| தாள்கள் (ரூ. பில்.) | 335.1 | 355.4 | 401.9 | 29.4 | 6.1 | 13.1 |
| குத்திகள் (ரூ. மில்.) | 472.4 | 748.7 | 541.3 | 12.7 | 58.5 | (27.7) |
| **மொத்தம் (ரூ. பில்.)** | **335.6** | **356.1** | **402.4** | **29.4** | **6.1** | **13.0** |

(ஆ) 2013.12.31இல் உள்ளவாறு, சுற்றோட்டத்திலிருந்த மொத்த நாணயம் ரூ.339.7 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2012.12.31இல் சுற்றோட்டத்திலிருந்த நாணயத்தினைவிட 6.8 சதவீதம் அதிகமானதாகும் (பார்க்க அட்டவணை II-2) (நாணய இனங்களின் அடிப்படையிலான விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி IV இலுள்ள புள்ளிவிபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன). சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் மொத்தப் பெறுமதியானது அதிகரித்த பொருளாதாரக் கொடுக்கல்வாங்கல்களின் விளைவாக அதிகரித்தது. இருப்பினும், சுற்றோட்டத்திலுள்ள மொத்தப் பண நிரம்பலில் (விரிந்த பணம்) பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயத்தின் பங்கானது, வங்கித்தொழில் முறைமையூடாக பயன்படுத்தப்படும் நிதியியல் வசதிகள், நவீன கொடுப்பனவுக் கருவிகள் என்பன அதிகரித்தமை காரணமாக 2008ஆம் ஆண்டு முடிவில் 10.2 சதவீதத்திலிருந்து 2013ஆம் ஆண்டு முடிவில் 7.7 சதவீதத்திற்கு கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை II-2** சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள்

| சுற்றோட்டத் திலுள்ள நாணயங்கள் | பெறுமதி | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 |
| தாள்கள் (ரூ. பில்.) | 287.1 | 311.2 | 332.4 | 14.8 | 8.4 | 6.8 |
| குத்திகள் (ரூ. பில்.) | 6.1 | 6.9 | 7.3 | 7.0 | 13.1 | 5.8 |
| **மொத்தம் (ரூ. பில்.)** | **293.2** | **318.1** | **339.7** | **14.7** | **8.5** | **6.8** |

(இ) நாணயத்திற்கான கேள்வியை பூர்த்தி செய்யும் பொருட்டும், சுற்றோட்டத்தில் சிறந்த தரமான நாணயத் தாள்கள் இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டும் 2013இல் நாணயத் திணைக்களம் 189.5 மில்லியன் நாணயத் தாள் துண்டுகளை அச்சிடவும் 82.9 மில்லியன் துண்டு நாணயக் குத்திகளை வார்ப்பதற்குமான ஒழுங்குகளைச் செய்திருந்தது. நாணயத் திணைக்களம், 2013 - 2015 காலப்பகுதியில் ரூ.10, ரூ.5, ரூ.2, ரூ.1 என்பனவற்றைக் கொண்ட மொத்தமாக 550 மில்லியன் துண்டுகளை வார்ப்பதற்காக பன்னாட்டு விலைக்கோரல் முறையினூடாக தெரிவு செய்யப்பட்ட வார்ப்பாளர்களுடனான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.

(ஈ) 2013 நவெம்பர் 15ஆம் நாளிலிருந்து 17ஆம் நாள் வரை இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டத்தினைக் குறிக்கு முகமாக ரூ.500 இன ஞாபகார்த்த நாணயத் தாளொன்று வெளியிடப்பட்டது. மத்திய வங்கி நிறுவப்பட்டதிலிருந்து அதனால் வெளியிடப்பட்ட மூன்றாவது ஞாபகார்த்த நாணயத் தாள் இதுவாகும்.

(உ) ஒவ்வொரு மாவட்டத்தினதும் சிறப்பியல்புகளுடன் கூடிய அத்தகைய 25 மாவட்டங்களினையும் பிரசன்னப்படுத்தும் ரூ.10 இன புதிய நாணயத் தொடர்களை வார்க்கும் வேலைகள் தொடங்கியிருப்பதுடன் வடிவமைப்பு மாண்புமிகு நிதி அமைச்சரினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இந்நாணயக் குத்திகளை 2014இல் சுற்றோட்டத்திற்கு விடுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.2 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடனான நாணயத் தொழிற்பாடுகள்

(அ) நாணயத் திணைக்களம், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து முக்கியமாக வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளைப் பேணுவதற்காக நாணய வைப்புக்களை ஏற்றுக் கொள்கிறது. நாணயத் திணைக்களம் பொருத்தமான (பயன்படுத்தத்தக்க) மற்றும் பொருத்தமற்ற (பயன்படுத்த முடியாத) நாணயத் தாள்களையும் குத்திகளையும் உரிமம் பெற்ற வர்த்தக வங்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது (பார்க்க அட்டவணை II-3). வைப்புச் செய்யப்பட்ட பொருத்தமான நாணயத் தாள்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கூடாக மீளச் சுற்றோட்டப்படுத்தப்படுகின்ற வேளையில் பொருத்தமற்ற நாணயத் தாள்கள் அழித்துவிடப்படுகின்றன.

**அட்டவணை II-3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயம்**

| நாணய வைப்புக்கள் | பெறுமதி | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 |
| தாள்கள் (ரூ. பில்.) | 297.9 | 331.2 | 381.0 | 34.1 | 11.2 | 15.0 |
| குத்திகள் (ரூ. மில்.) | 13.8 | 3.0 | 1.4 | 115.0 | (78.3) | (53.3) |
| **மொத்தம் (ரூ. பில்.)** | **297.9** | **331.2** | **381.0** | **34.1** | **11.2** | **15.0** |

(ஆ) அதிகரித்த நாணய வைப்புக்களின் வினைத்திறனும் விரைவும் மிக்க செயன்முறைக்கு வசதியளிப்பதற்காக, நாணயத் தொழிற்பாடுகளை மேலும் தன்னியக்கப்படுத்துவதற்காக நாணயத் திணைக்களத்தினால் மேலும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, சிநேகபூர்வ சூழல் முறையில் நாணயங்களைச் சரிபார்த்தல், கணக்கிடல் மற்றும் அழித்துவிடல் தொடர்பிலான வினைத்திறனை அதிகரிப்பதற்காக இரண்டு தன்னியக்கப்படுத்தப்பட்ட நாணயத் தாள் செயன்முறைப்படுத்தல் எந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 5.3 சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட உதவி

போலி நாணயம் தொடர்பாக நாணய விதிச் சட்டம் மீறப்பட்டமை தொடர்பாக சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு 2013இல் நாணயத் திணைக்களம் பின்வரும் விதத்தில் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது.

(அ) போலி நாணயத் தாள்களைத் தயாரிக்கும் முயற்சி தொடர்பில் பொலிஸ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணய பணியகத்துடனும் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுடனும் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயற்பட்டது. 2013இல் கண்டுபிடிக்கப்பட்ட போலி நாணயத் தாள்கள் 5,133 ஆகக் காணப்பட்டதுடன் இது, 2012இன் அதே மட்டத்தில், சுற்றோட்டத்திலிருந்த ஒவ்வொரு மில்லியன் உண்மையான தாள்களுக்கும் ஆறு தாள்களாகக் காணப்பட்டது.

(ஆ) நீதிமன்றங்களின் வழக்கு விசாரணைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் நாணயத் தாள்களின் போலித் தோற்றம் பற்றிய முடிவுச் சான்றுகளாக ஆளுநரின் கையொப்பத்துடன் கூடிய 141 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(இ) போலி நாணய வழக்குகளில் சாட்சியமளிப்பதற்காக 18 நீதிமன்ற வழக்குகளில் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

(ஈ) போலி நாணயத் தாள்கள் சுற்றோட்டத்தில் கலப்பதனைத் தடுக்கும் நோக்குடன் போலி நாணயத் தாள்களைக் கண்டுபிடிப்பதற்காக நாணயத் திணைக்களம் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் அவற்றின் நாணயத் தெழிற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக தொழிற்பாட்டு சுற்றறிக்கைகளை விடுத்தது. அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் போலி நாணயங்களை கண்டறியும் வசதிகளுடன் கூடிய காசு எண்ணும் பொறிகளை வைத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

### 5.4 ஏனைய நடவடிக்கைகள்

**(அ) தூய நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்**

2007 மார்ச்சில் தொடங்கப்பட்ட தூய நாணயத் தாள் கொள்கை 2013இல் மிகத் தீவிரமாகத் தொடரப்பட்டது. தோற்றும் பெற்றுவருகின்ற மத்திய தர வருமானப் பொருளாதாரத்தில் இலங்கையின் சிறந்த நன்மதிப்பிற்கேற்ப சிறந்த தரமான நாணயத் தாள்கள் சுற்றோட்டப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதே தூய நாணயத் தாள் கொள்கையின் முக்கிய குறிக்கோளாகும். நாணயத் திணைக்களம், நாணயத் தாள்களின் வாழ்நாள் காலத்தினை நீடிப்பதற்கும் அதன் மூலம் புதிய தாள்களின் அச்சிடல் செலவினைக் குறைப்பதற்குமாக சிறந்த நாணயக் கையாளல் நடைமுறைகளை ஊக்குவித்ததுடன் தூய நாணயத் தாள் கொள்கையை வலுப்படுத்துவதற்காக 2013இல் பின்வரும் வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

(i) பொருத்தமான மற்றும் பொருத்தமற்ற நாணயத் தாள் வகைகளுக்கிடையேயான “நாணயத் தாள்களை தரம் பிரிப்பதற்கான நியமங்கள்” என்பது பற்றி அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டதுடன் சுற்றறிக்கைகள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக 331 வங்கிக் கிளைகள் பரீட்சிக்கப்பட்டன.

(ii) நாணயத் தாள்களைத் தரம் பிரித்தல் மற்றும் நாணயத் தாள்களைக் கையாளல் நடைமுறைகள் தொடர்பில் காசு முகாமையாளர்களுடன் 4 கூட்டங்கள் நடத்தப்பட்டன.

(iii) வழிகாட்டல்களுக்கு இணங்கியொழுகின்றமை பற்றி பரீட்சிப்பதற்காக வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயத் தாள்களின் எழு மாறான மாதிரிகள் தொடர்பில் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(iv) பொருத்தமாற்ற நாணயத் தாள்களை வங்கித்தொழில் முறைமையூடாக மாற்றிக் கொள்வதற்கும் நாணயத் தாள்களைக் கையாள்வதில் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் பொதுமக்களை ஊக்குவிப்பதற்காக பொதுமக்களுக்கு கல்வியூட்டுவதற்காக தொலைக்காட்சி விளம்பரங்கள் மற்றும் வானொலி கலந்துரையாடல்கள் என்பனவற்றினூடாக தீவிரமான விளம்பரப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(v) பொருத்தமற்ற நாணயத் தாள் அனைத்தையும் நாணயத் திணைக்களம் பெற்றதன் பின்னர் 2013இல் அது ரூ.67.7 பில்லியன் மொத்தப் பெறுமதியினைக் கொண்ட 157.7 மில்லியன் நாணயத் தாள்களை அழித்துவிட்டது.

**(ஆ) நாணயக் குத்திகளின் சேகரிப்பு**

நாணயக் குத்திகளை வெளியிடுவது, ஒவ்வோராண்டும் கணிசமானளவு வெளிநாட்டுச் செலாவணி வார்ப்புச் செலவினை ஏற்படுத்துகின்றது. எனினும், இந்நாணயக் குத்திகளில் பெரும் தொகையானவை சமய நிறுவனங்கள் மற்றும் உண்டியல்களுக்குள் சுற்றோட்டப்படுத்தப்படாமல் எவ்வித பயனுமின்றி இருக்கின்றன. ஆகவே, நாணயத் திணைக்களம் வெறுமனே இருக்கும் நாணயக் குத்திகளைச் சேகரித்து மீண்டும் சுற்றோட்டப்படுத்துவதற்காக அனைத்தையும் உள்ளடக்கிய நாணயச் சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை மேற்கொண்டது. இதற்கமைய, நாடு முழுவதும் 125 நாணயக் குத்தி சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு ரூ.67.1 மில்லியன் பெறுமதியான 24.8 மில்லியன் நாணயக் குத்திகள் சுற்றோட்டத்திற்காக சேகரிக்கப்பட்டன.

**(இ) பொதுமக்கள் விழிப்புணர்வு**

நாணயத் தாள்களின் பாதுகாப்புப் பண்பு, சிறந்த தரமான நாணயத் தாள்களின் பயன்பாடு மற்றும் நாணயத் தாள்களையும் குத்திகளையும் சிறந்த முறையில் கையாளும் நடைமுறைகள் என்பன தொடர்பாக

பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடன் நாணயத் திணைக்களம் கீழே விபரிக்கப்பட்டவாறு முக்கிய நிகழ்வுகளைக் கொண்ட பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

(i) 47 ஆய்வரங்குகள்/ செயலமர்வுகள் நடத்தப்பட்டன. 13 வானொலி/ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றதுடன் 5 தொலைக்காட்சி விளம்பரங்களும் ஒளிபரப்பப்பட்டன. வங்கி அலுவலர்கள், காசினைக் கையாள்வோர், பள்ளிக்கூடப் பிள்ளைகள், அரச, தனியார் துறை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

(ii) நாணய சுற்று வட்டத்தில் இணைந்து கொண்டுள்ள 03 பள்ளிக்கூடங்களின் மாணவர்களுக்காக நாணயம் தொடர்பான தகவல் பிரசுரங்கள் பகிர்தளிக்கப்பட்டதுடன் நாணயப் பொருட்காட்சியை நடத்திய பள்ளிக்கூடமொன்றில் செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

(iii) 2013 மாச்சு 23ஆம் திகதி தொடக்கம் மாச்சு 30ஆம் திகதி வரை அம்பாறையில் நடத்தப்பட்ட தேசிய அபிவிருத்திப் பொருட்காட்சியான "தேசத்தின் மகுடம்-2013" என அழைக்கப்படும் தேசத்திற்கு மகுடம் பொருட்காட்சியில் கலந்து கொண்டதுடன் நடமாடும் நாணய அரும்பொருட்காட்சிச்சாலையுடன் சேர்த்து வேறு 5 பொருட்காட்சிகளையும் நடத்தியது.

(iv) இலங்கை மத்திய வங்கியின் மூன்று அரும் பொருட்காட்சிச் சாலைகளுக்கும் 15,754 பேர் விஜயம் செய்தனர்.

**(ஈ) நாணயத் தாளினை மீளத் தயாரிப்பதற்கான ஒப்புதல்**

இலங்கை நாணயத் தாள்களின் நகல்களை உருவாக்குவதன் மீதான நாணயச் சபையின் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கையின் நியதிகளில் விளம்பரங்களில் நாணயத் தாள்களை மீளத் தயாரிப்பதற்காக மூன்று ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

**(உ) பொருளாதார வரலாற்று அரும்பொருட்சாட்சிச்சாலை நிறுவப்பட்டமை**

இலங்கை மத்திய வங்கி 2013.11.11 அன்று கொழும்பு கோட்டையிலுள்ள சென்றல் பொயின்ட் கட்டடத்தில் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையை நிறுவியதும் இராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தில் பேணப்பட்ட நாணய அரும்பொருட்காட்சிச்சாலை பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையில் அநுராதபுரம் (கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1000 வரையான காலம்) பொலனறுவை, கோட்டே மற்றும் கண்டி இராச்சியங்களிலும் அதேபோன்று போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானிய குடியேற்ற காலங்களிலும் சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையிலும் பயன்படுத்தப்பட்ட குத்திகளும் நாணயத் தாள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட பாதுகாப்புப் பண்புகளை தொடுவதன் மூலம் நாணயத் தாள்களின் பாதுகாப்புப் பண்புகள் பற்றி தகவல்களை ஒருங்கு திரட்டிக் கொள்வதற்காக பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையில் தொடு-திரை தொலைக்காட்சியும் பொருத்தப்பட்டிருக்கிறது.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடத்துவதற்காகவும், நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளை நடைமுறைக்கிடுவதற்காகவும் வர்த்தக வங்கிகளுக்கும் அரசாங்கத்திற்கும் வங்கித்தொழில் வசதிகளை வழங்குவதற்காகவும் நாணய விதிச் சட்டத்தின் பகுதி அத்தியாயம் V மற்றும் VI இல் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் முக்கிய தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது.

2013இல் திணைக்களம், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழ், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகளின் சுமுகமான தொழிற்பாடுகளுக்காக, வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளை வழங்குவதன் மூலம் வினைத்திறன் மிக்கதும் காத்திரமானதுமான உள்நாட்டு இ-கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையைப் பேணுவதற்கும் வசதியளித்தது.

### 6.1 உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கை வட்டி வீத வீச்சிற்குள் விரும்பத்தக்க மட்டத்தில் குறுங்கால வட்டி வீதங்களை வழிநடத்திச் செல்லும் குறிக்கோளுடன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொண்டது. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் என அறியப்படுகின்ற கொள்கை வட்டி வீதங்கள் நாணயச் சபையினால் மாதாந்த அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதுடன், அத்தகைய திருத்தங்களின் போது தீர்மானிக்கப்படுகின்ற வட்டி வீத வீச்சு திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான அடிப்படையினை உருவாக்குகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட கொள்கை வீதங்களில் அமைந்த துணைநில் வசதிகளும் நாளாந்த அடிப்படையினை வழங்குவதுடன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான கீழ்மட்ட மற்றும் உச்சமட்ட வீதங்களை உருவாக்குகின்றன. தற்போதைய துணைநில் மீள்கொள்வனவு வசதி துணைநில் வைப்பு வசதி என மீளப் பெயரிடப்பட்டதுடன் வங்கித்தொழில் முறைமைகளின் மிகையான நிதிகளை வைப்புச் செய்வதற்கான கீழ்மட்ட வீதத்தினை வழங்குவதுடன் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி துணைநில் கடன் வழங்கல் வசதி என மீளப் பெயரிடப்பட்டதுடன் வங்கித்தொழில் முறைமைக்கு வழங்கப்படும் கடன் நிதியங்களுக்கான உச்ச வீதத்தினையும் வழங்குகின்றது. தற்போதைய கொள்கை வீத வீச்சும் துணைநில் வீத வீச்சு என மீளப் பெயரிடப்பட்டதுடன் தற்போதைய துணைநில் மீள்கொள்வனவு வீதமும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதமும் முறையே துணைநில் வைப்பு வசதி வீதம் எனவும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் எனவும் 2014 சனவரி 02ஆம் திகதியிலிருந்து மீளப் பெயரிடப்பட்டன. திணைக்களம், நாணயச் சபையினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்பட்டவாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக நியதிச் சட்ட ஒதுக்குத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதுடன் அரசாங்கம் மற்றும் வர்த்தக வங்கிகளுக்கான வங்கியாளராகவும் விளங்குவதுடன் பணத் தரகர்களையும் மேற்பார்வை செய்கிறது.

### 6.2 நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்


2013இல் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் நாணயக் கொள்கை நிலைக்குப் பொருத்தமான விதத்தில், குறுங்கால வட்டி வீதங்களைப் பேணுவதற்காக, திரவத்தன்மையின் நிரம்பல் மற்றும் கேள்வியைப் பொறுத்து சந்தைக்கு திரவத்தன்மையினை விடுவிப்பதற்கும் அதிலிருந்து திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்குமாக முக்கியமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினூடாக நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

2013இல் திரவப் பற்றாக்குறையுடன் ஆரம்பித்த உள்நாட்டுப் பணச் சந்தையானது இலங்கை வங்கியின் வெளிநாட்டு முறிகளின் பெறுகைகள் இலங்கை மத்திய வங்கியினால் மாற்றப்பட்டமையின் காரணமாக முதல் கிழமைக்குள்ளேயே மிகையான தன்மைக்கு மாற்றமடைந்தது, அதன் பின்னர் திரவத்தன்மையின் மிகை நிலைமை பெரும்பாலும் ஆண்டு முழுவதும் காணப்பட்டது. மிகையான திரவத்தன்மைக்கான மற்றைய முக்கிய மூலங்களாக இலங்கை மத்திய வங்கியூடாக தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு முறிகளின் பெறுகைகள் மாற்றப்பட்டமை, நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் 200 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டமை, இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயங்களின் நேரடிக் கொள்வனவுகள் மற்றும் அரசாங்கத்திற்கு இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அரசிறை மிகைகளின் மாற்றல் என்பன விளங்கின. மிகையான சந்தைத் திரவத்தன்மையானது ஆண்டு முழுவதும் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினூடாக அகற்றப்பட்டது. ஓரிரவு மீள்கொள்வனவு காணப்பட்டமைக்கிடையிலும் குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்களினூடாக திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்குக் கூடியளவு வலியுறுத்தல்கள் வழங்கப்பட்டன. எனினும், சந்தைத் திரவத்தன்மை பற்றாக்குறையாகக் காணப்பட்ட ஒரு சில சந்தர்ப்பங்களில் சந்தைத் திரவத்தன்மை தேவைப்பாட்டினை வழங்குவதற்கான ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் துணைநில் வசதி என்பனவற்றிற்குப் புறம்பாக கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களும் முன்வைக்கப்பட்டன. 2013இல் மத்திய வங்கியின் உடைமையிலிருந்த திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்தமையின் மூலம் நிரந்தரமான அடிப்படையில் ரூ.128.8 பில்லியன் தொகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கு உடனடி ஏலங்கள் நடத்தப்பட்டன. மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கு மத்திய வங்கி வசமிருந்த அரச பிணையங்கள் போதுமானதாக இருக்காமையினால், திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான முறிக் கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன்பட்ட திறைசேரி முறிகளை இலங்கை மத்திய வங்கி பயன்படுத்திக் கொண்டது.

திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பலப்படுத்தப்பட்ட அதேவேளையில் திரவத்தன்மை முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கு பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 2013 மேயில், இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து நிலவி வந்த நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டுக் கட்டமைப்பிற்கு பாரிய திருத்தங்களை இலங்கை மத்திய

வங்கி அறிமுகப்படுத்தியது. இதன்படி, 7 நாள் ஒதுக்கு கணிப்பு மற்றும் பேணல் காலங்கள் 1ஆம் நாளிலிருந்து 15ஆம் நாள் வரையிலும், 16ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு மாத இறுதி வரையுமாக மாதமொன்றிற்கு இரண்டு தடவைகள் அதிகரிக்கப்பட்டன. இத்திருத்தத்துடன் இசைந்து செல்லும் விதத்தில், 2013 ஓகத்தில் சிறந்த சந்தைத் திரவத்தன்மை முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் அதே நாளன்று தீர்ப்பனவு செய்யும் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி 7 நாட்கள் வரையிலான குறுங்கால ஏலங்களை அறிமுகப்படுத்தியது. மேலும், நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை இலங்கை மத்திய வங்கி வழங்குகின்ற நாட்களில் மீள்கொள்வனவு துணை வசதிகளின் மீது காணப்பட்ட ரூ.100 மில்லியன் கட்டுப்பாட்டினையும் இலங்கை மத்திய வங்கி நீக்கிவிட்டது. கொள்கை வீதங்களும் நியதி ஒதுக்கு வீதமும் கூட கீழ் நோக்கித் திருத்தப்பட்டன. இக்கொள்கை மாற்றங்களின் விளைவாக, ஆண்டின் தொடக்கத்தில் குறிப்பிடத்தக்களவு தளம்பல்களையும் கொள்கை வீத உச்சமட்டத்திற்கு மேலே ஊசலாடிக் கொண்டிருந்த ஓரிரவு சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதங்கள் தொடர்ந்து உறுதியடைந்து கொள்கை வீத வீச்சின் நடுப்பகுதியினை நோக்கிப் படிப்படியாக நிலைபெற்றன.

**வரைபடம் II-1 ஒட்டுமொத்த திரவத்தன்மையும் கொள்கைவீத வீச்சு**




### 6.2.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

#### அ) ஓரிரவு ஏலங்கள்

**(i) மீள்கொள்வனவு ஏலங்கள்**

2013 செப்தம்பர் 20வரை வங்கித்தொழில் முறைமைக்குள் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையானது ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக நாளாந்த அடிப்படையில் ஈர்த்துக் கொள்ளப்பட்டது. சராசரியாக நாளொன்றிற்கு ரூபா 22.4 பில்லியன் மீள்கொள்வனவு ஏலங்கள் வழங்கப்பட்ட அதேவேளை மிகையான நாட்களின் உண்மையான மிகைத் திரவத்தன்மையின் 48 சதவீதத்தினை ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையானது பிரதிபலித்திருந்தது. ஓரிரவு மீள்கொள்வனவு ஏலத்தின் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதமானது 6.98 சதவீதத்திற்கும் 8.50 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டிருந்தது. ஓரிரவு மீள்கொள்வனவு ஏலத்தின் நிறையேற்றப்பட்ட சராசரி வீதமானது கொள்கை சதவீதத்தின் கீழ் எல்லையினை நோக்கி அசைவடைந்திருந்தது.

**(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

2013இல் சந்தைத் திரவத்தன்மையானது ஒரு சில சந்தர்ப்பங்களில் பற்றாக்குறையாகக் காணப்பட்டது. எனவே, ஓரிரவு வட்டி வீதங்கள் மீதான மேல் நோக்கிய அழுத்தத்தினைத் தளர்த்துவதற்காக நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. சராசரியாக, 8.25 சதவீதத்திற்கும் 9.31 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் நாளொன்றிற்கு ஏறத்தாழ ரூ. 6.1 பில்லியன் கொண்ட ஏலங்கள் முன்வைக்கப்பட்டன. மேலும், சந்தைத் திரவத்தன்மைப் பற்றாக்குறையாகக் காணப்பட்ட நாட்களில் சந்தைத் திரவத்தன்மைத் தேவைப்பாட்டில் 51.7 சதவீதம் ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களினூடாக நிரம்பல் செய்யப்பட்டது.

#### ஆ) தவணைக் கொடுக்கல்வாங்கல்கள்

**(i) குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள்**

குறுங்கால அதேநாள் தீர்ப்பனவு அடிப்படையில் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கானதொரு உபாயமாக திறைசேரி உண்டியலை விற்பதற்காக 2013 ஓகத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்களை அறிமுகப்படுத்தியது. சராசரியாக நாளொன்றுக்கு ஏலங்களின் பொருட்டு ரூ.18.5 பில்லியன் முன்வைக்கப்பட்ட வேளையில், மதிப்பிடப்பட்ட மிகையான திரவத்தன்மையில் 31.7 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்திய ரூ.765.3 பில்லியன் குறுங்கால மீள்கொள்வனவு ஏலத்தின் மூலம் ஈர்க்கப்பட்டது. குறுங்கால மீள்கொள்வனவு ஏலத்தின் காலம் ஒரு கிழமை வரையிலானதாகக் காணப்பட்ட வேளையில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 7.00 சதவீதத்திலிருந்து 7.98 சதவீதம் வரையிலான வீச்சில் வேறுபட்டது.

**(ii) குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் குறுங்கால அதேநாள் தீர்ப்பனவு அடிப்படையில், திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் கொள்வனவு செய்வதற்காக இரண்டு குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை மட்டும் நடத்தியது. ஒரு ஏலத்தின் கீழ் ரூ.5.0 பில்லியன் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் 8.20 சதவீதம் கொண்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் சந்தைக்கு நிதியம் உள்ளீடு செய்யப்பட்டது.

**(iii) நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள்**

இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கி மிகைச் சந்தைத் திரவத்தன்மையில் ரூ.51.6 பில்லியன் பெறுமதியான தொகையினை ஈர்த்துக் கொண்டது. தவணை மீள்கொள்வனவு ஏலங்களின் காலம் 7 நாட்களிலிருந்து 63 நாட்கள் வரை வேறுபட்டது. இவ்வாண்டுப் பகுதியில் நிறையேற்றப்பட்ட சராசரி விவைு வீதங்கள் 7.45 சதவீதத்திற்கும் 8.95 சதவீதத்திற்குமிடையில் அசைந்து கொண்டிருந்தன.

**(iv) நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

2013ஆம் ஆண்டுப் பகுதியில், ஒப்பீட்டு அடிப்படையில் நீண்ட கால அடிப்படையில் சந்தைக்கு திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்காக நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை மத்திய வங்கி நடத்தியது. கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களின் காலம் 11 நாட்களிலிருந்து 30 நாட்கள் வரையில் வேறுபட்ட வேளையில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 8.25 சதவீதத்திற்கும் 9.56 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டது. ஆண்டு முழுவதும் உட்செலுத்தப்பட்ட மொத்த அளவு ரூ.40.5 பில்லியனாகக் காணப்பட்டது.

#### இ) துணைநில் வசதிகள்

வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை மற்றும் நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களூடாக தமது குறுங்கால நிதித் தேவைப்பாடுகளை முழுமையாக முகாமைப்படுத்த முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களூடாக ஆண்டு முழுவதும் துணைநில் வசதிகள் வழங்கப்பட்டன. துணைநில் வசதியின் கீழான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் நாளொன்றிற்கு ஏறத்தாழ ரூ.9.0 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரியினைப் பதிவு செய்ததுடன் இவ்வாண்டுப் பகுதியின் மொத்தத் தொகை ரூ.2,192.2 பில்லியனாகக் காணப்பட்டது. 2013இல் துணைநில் வசதியின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்தம் ரூ.105.4 பில்லியனாகக் காணப்பட்டது.

#### ஈ) உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள்

மிகையான திரவத்தன்மையினை நிரந்தர அடிப்படையில் ஈர்த்துக் கொள்ளும் பொருட்டு, மத்திய வங்கி அதன் சொந்த சொத்துப்பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்வதற்காக உடனடி விற்பனை ஏலங்களை நடத்தியது. 2013இல் உடனடி விற்பனை ஏலங்களினூடாக விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி ரூ.128.8 பில்லியனாக விளங்கியது. விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் காலம் 7 நாட்களிலிருந்து 64 நாட்கள் வரையில் வேறுபட்ட வேளையில் விளைவு வீதங்கள் 7.28 சதவீதத்திலிருந்து 9.10 சதவீதம் வரையில் வேறுபட்டன.

### 6.2.2 நியதி ஒதுக்குத் தேவைப்பாடு

நியதி ஒதுக்குத் தேவைப்பாடு என்பது, இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க, ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அவற்றின் மொத்த வைப்புப் பொறுப்புக்களில் ஒரு பகுதியினை மத்திய வங்கியுடனான ஒதுக்குக் கணக்கில் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்ற குறைந்தபட்ச ஒதுக்கொன்றாகும். உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் நிருவாகம் மற்றும் பேணல் அத்துடன் வர்த்தக வங்கிகளின் இணங்குவிப்பைக் கண்காணித்தல் ஆகிய இரண்டிற்கும் பொறுப்பாக இருக்கின்றது. நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் ஏற்புடைத்தான வீதமானது 2013 யூலை 01ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு வர்த்தக வங்கியினதும் ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 8 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

### 6.2.3 வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) 15 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், வங்கி வீதத்தில் இலங்கை மத்திய வங்கியிலிருந்து கடன்பாடுகளை வங்கிகள் எதுவும் நாடாமையினால், இவ்வட்டி வீதமானது கருத்துப்படியான வீதமாக மாத்திரமே இருந்தது.

## 6.3 வர்த்தக வங்கிகள் மற்றும் அரசிற்கான வங்கியாளர்

### 6.3.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்


வினைத்திறன் மிக்க வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகளையும் தீர்ப்பனவு முறைகளையும் உறுதிப்படுத்துவதற்காக, வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் நடைமுறைக் கணக்கு வசதிகளை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வழங்கியதன் மூலம் வர்த்தக வங்கிகளுக்கான வங்கியாளர் என்ற மத்திய வங்கியின் வகிபாகத்திற்கு வசதியளித்தது. 2013 இறுதியில் இலங்கை மத்திய வங்கி 24 வர்த்தக வங்கிகளுக்கும் 7 முதனிலை வணிகர்களுக்குமான கணக்குகளைப் பேணியது. இக்கணக்குகள் வங்கியின் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப் பேரேட்டு முறைமைக்குள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன.

### 6.3.2 அரச கணக்குகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அரச திணைக்களங்கள், அரச முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைப் பேணியதுடன், தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் வழங்கி அரசிற்கான வங்கியாளராக அதன் தொழிற்பாடுகளை ஆற்றியது. இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுகின்ற கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2013 இறுதியில் 55 ஆகக் காணப்பட்டது. நாணய விதிச் சட்டத்தின் 89ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கி, குறிப்பிட்ட இறையாண்டில் மதிப்பிடப்பட்ட அரச அரசிறையில் 10 சதவீதம் என்ற உச்சமட்ட வரையறைக்குட்பட்டு கட்டணங்களெதுவுமின்றி அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களை வழங்குகிறது. 2013ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட உயர்ந்த அரச அரசிறையின் காரணமாக 2013இல் தற்காலிக முற்பணங்களின் உச்ச எல்லை ரூ.15.3 பில்லியனால் ரூ.128.3 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் 2013 இறுதியில் தற்காலிக முற்பணங்கள் 2012 இறுதியின் ரூ.111.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.109.2 பில்லியனாகக் காணப்பட்டது.

## 6.4 ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடு

வரைபடம் II-2 ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி எடுப்பனவு - 2013




பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாட்டினை வழங்குவதன் மூலம் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமானதும் வினைத்திறன் மிக்கதுமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தியது. இவ்வசதியானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பிணையங்களுக்கெதிராகக் கட்டணமெதுவுமின்றி வழங்கப்பட்டதுடன் அவை அதேநாளில் சந்தை விலைகளில் ஏற்படக்கூடிய ஏதேனும் வேறுபாடுகளை ஈர்த்துக் கொள்வதற்கேதுவாக போதுமான இலாபமொன்றுடன் அவற்றின் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்டன.

இவ்வாண்டுப் பகுதியில், எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மொத்தப் பெறுமதியும் சராசரி நாளாந்தப் பெறுமதியும் முறையே ரூ.4,674.1 பில்லியனாகவும் ரூ.19.2 பில்லியனாகவும் காணப்பட்டது. இது ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிப் பயன்பாடு முன்னைய ஆண்டின் முறையே மொத்தத் தொகையான ரூ.3,692 பில்லியன் மற்றும் சராசரியான ரூ.15 பில்லியனை விட அதிகரித்துள்ளமையைக் காட்டியது.

## 6.5 பணத் தரகர்களின் மேற்பார்வை

உள்நாட்டுப் பணம் மற்றும் வெளிநாட்டு நாணயச் சந்தையின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கி, பொருளாதாரத்தில் தொழிற்படுகின்ற நிதியியல் நிறுவனங்களின் வேறுபட்ட வகைகளின் அடிப்படையில் கண்காணிப்பு நடவடிக்கைகளின் செயற்பரப்பினை அதிகரித்தது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்கான வசதிகளை அடையும் விதத்தில், 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 10(இ) இன் கீழ் “2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணத்தரகு ஒழுங்குவிதிகள்” விடுக்கப்பட்டதுடன் அவை 2013 பெப்புருவரி 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தன. புதிய ஒழுங்குவிதிகளின் கீழ், ஏற்கனவேயுள்ள பணத்தரகர்களும் பணத்தரகு நடவடிக்கைகளில் நுழைவதற்கு எண்ணியுள்ள புதிய நிறுவனங்கள்/ தனி நபர்களும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்படும் “அதிகாரச் சான்றிதழை”ப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒழுங்குவிதிகள் மற்றைய பல விடயங்களுடன் குறைந்தபட்ச தகைமைப் பிரமாணம் சட்ட ரீதியாக அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகள், தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகள், அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகள், உள்ளகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், கம்பனி ஆளுகை, அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மற்றும் இணங்கியொழுகாமைக்கான தண்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. ஒழுங்குவிதிகள் பணத்தரகர்களின் தொழிற்பாடுகளுக்கு மதிப்பினை வழங்குமெனவும் பணத்தரகுப் பணிகளை ஆற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு தன்னம்பிக்கையினை ஊட்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோன்று இது விலை கண்டறியும் செயற்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்துகின்ற வேளையில், நாட்டின் ஒட்டுமொத்த பணச் சந்தை மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் ஆரோக்கியமான அபிவிருத்தியை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் திறந்த சந்தை நடைமுறைகளின் தொழில்சார் நிபுணத்துவத் தரங்களைப் பேணுவதற்கும் வசதியளித்தது.

# 7. பொருளாதார ஆராய்ச்சி

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் 1950இல் இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்ட அதே காலத்தில் நிறுவப்பட்டது. மத்திய வங்கியின் “பொருளாதார சிந்தனைக் குதமாக” விளங்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பணம் மற்றும் வங்கித்தொழில் மற்றும் பொதுவான ஈடுபாடு மிக்க ஏனைய பொருளாதார விடயங்களின் கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை வடிவமைத்தல், நடைமுறைக்கிடல் மற்றும் நிறைவேற்றுதல் என்பனவற்றில் நாணயச் சபைக்கும் ஆளுநருக்கும் வழிகாட்டுவதற்காகவும் பொதுமக்களின் தகவல்களுக்காகவும் தரவுகளைத் தயாரிக்கின்ற மற்றும் பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்ற தொழிற்பாடுகள் அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. திணைக்களத்தின் சட்ட ரீதியான பொறுப்புக்களை ஆற்றும்போது அவசியமானது எனக் கருதுகின்ற ஏதேனும் தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஆளிடம் கேட்டுக் கொள்வதற்கான அதிகாரத்தை நாணய விதிச் சட்டம் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளருக்கு அல்லது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்கு வழங்கியுள்ளது.

திணைக்களம், ஆண்டுக் காலத்தில், நிலைத்திருக்கத்தக்க உயர் பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்கு பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணல் மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையினை

வலுப்படுத்தும் வேளையில் வெளிநாட்டு அதிர்வுகளுக்கு தாக்குப் பிடிக்கும் தன்மையினை மேம்படுத்தும் விதத்தில் வெளிநாட்டுத்துறை உறுதிப்பாட்டினை பேணல் போன்ற தனது இலக்குகளை அடைவதில் முன்னேற்றமடைந்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம் காத்திரமான கொள்கை வடிவமைப்பு மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளான ஆண்டறிக்கை மற்றும் ஏனைய அறிக்கைகளை வெளியிடுதல் போன்றவற்றுக்கு வசதியளிக்கும் விதத்தில் கொள்கை ஆராய்ச்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. திணைக்களம் அரசாங்கம் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கு கொள்கை தொடர்பான மதியுரைகளை வழங்குவதிலும் முனைப்பாகச் செயற்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் உபாயக் குறிக்கோள்களை அடையும் விதத்தில் 2013இல் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### 7.1 பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணல்

விலை உறுதிப்பாட்டினைப் பேணும் நோக்குடன், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆண்டின் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார விருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நாணய விரிவாக்கத்திற்கான விரும்பிய பாதையை அமைப்பதற்கான அத்திவாரத்தினை இட்டதுடன் அதன் பின்னர் கொள்கை தலையீட்டினைத் தேவைப்படுத்தும் ஏதேனும் விலகல்களைக் கண்டறிவதற்காக போக்குகள் மற்றும் அபிவிருத்திகளை நுணுக்கமாக கண்காணித்தது. இவ் முக்கிய பொறுப்பாண்மையை மேற்கொள்கையில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் உண்மைத்துறை, வெளிநாட்டுத்துறை, இறைத்துறை மற்றும் நாணயத்துறை என்பவற்றிக்குரிய பேரண்டப் பொருளாதார புள்ளிவிபரங்களை தொகுத்தல் மற்றும் உள்நாட்டு அத்துடன் பன்னாட்டு பொருளாதார அபிவிருத்திகள் மீதான அனைத்தையும் உள்ளடக்கிய பகுப்பாய்வுகளை, நாணயக் கொள்கை தொடர்பாக நாணயச் சபைக்கு மதியுரைகளை வழங்கும் நாணயக் கொள்கை குழுவின் மாதாந்தக் கூட்டங்களிற்கு வழங்குதல் போன்ற கடமைகளை மேற்கொண்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் முன்கூட்டிய மற்றும் உரிய நேரத்தில் நாணயக் கொள்கை தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறையை வசதிப்படுத்தும் பொருட்டு பொருளியல் மாதிரிகளைப் பயன்படுத்தி முதன்மை மற்றும் மையப் பணவீக்கங்களை தொடர்ந்தும் எறிவு செய்தது. நாணயச் சபையும் உண்மைத்துறை, வெளிநாட்டுத்துறை, இறை மற்றும் நாணயத்துறை அபிவிருத்திகளிலிருந்து தோன்றக்கூடிய இடர்நேர்வுகள் மற்றும் இவ் அபிவிருத்திகளினால் பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் மீது ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கங்கள் போன்றவற்றை மதிப்பீடு செய்வதன் மூலம் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட்டது. மேலும், தனியார் துறையின் பிரதிநிதிகளின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதன் மூலம் நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறையினைப் பலப்படுத்திக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவுடன் மாதந்தோறும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

நாணயச் சபையினால் மேற்கொள்ளப்படும் நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் மாதாந்த நாணய கொள்கை பத்திரிகை வெளியீடுகளினூடாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டன. இப்பத்திரிகை வெளியீடுகள் பணவீக்க எதிர்பார்ப்புக்களை முகாமைசெய்வதற்கான கொள்கையினை பயனுறு விதத்தில் தொடர்பூட்டுவதில் உதவியாக உள்ளதுடன் கொள்கையின் நம்பகத்தன்மையினை பேணும் அதேவேளை பொதுமக்களின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பவும் உதவுகிறது. இதற்கிணங்க, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தனது முக்கிய குறிக்கோள்களான பணவீக்கத்தினை நடு ஒற்றை இலக்க மட்டத்தில் பேணல் மற்றும் ஆண்டுக் காலத்தில் குறுங்காலச் சந்தை வட்டி வீதங்களை விரும்பிய மட்டத்தில் பேணுதல் ஆகியவற்றினை அடைவதில் வெற்றியடைந்துள்ளது. மேலும், பொருளாதாரம் மெதுவான உலகளாவிய மீட்சி மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் நிலவிய மீளப்புதுப்பிக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மை என்பனவற்றிற்கு மத்தியிலும் பொருத்தமான நாணயக் கொள்கை வழிமுறைகளின் உடனடியான நடைமுறைக்கிடலினால் ஓர் திருப்திகரமான பொருளாதார வளர்ச்சியினை பதிவு செய்தது.

### 7.2 வெளிநாட்டுத் துறை உறுதியினைப் பேணுதல்

நாட்டின் வெளிநாட்டுத்துறை உறுதிப்பாடு செலாவணிவீத நிர்ணயிப்பில் அனுமதிக்கப்பட்ட அதிகளவான தளர்வுகளின் உதவியினால் பேணப்பட்டது. வெளிநாட்டுத் துறையின் ஆற்றல் மற்றும் உறுதியினை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளின் குறிப்பிடப்பட்ட இற்றைப்படுத்தல்களின் ஏற்பாட்டிற்கு மேலதிகமாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் செலாவணி வீதம் மற்றும் சென்மதி நிலுவைக்கான வெளியக பாதிக்கக்கூடியதன்மை மற்றும் சாத்தியமான அதிர்வுகளை இனங்கண்டுகொண்டதுடன் நாணயச் சபைக்கு கொள்கை பரிந்துரைகளுடன் விரிவான பகுப்பாய்வுகளையும் வழங்கியது. நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிக் கடப்பாட்டினைப் பூர்த்திசெய்வதற்கு போதுமானளவு வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்க மட்டத்தினைக் கணிக்கும்பொருட்டு சாத்தியமான இடர்நேர்வுக்கு காரணிகளை ஒருங்கிணைத்த ஓர் புதிய இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட ஒதுக்கு போதுமை அளவு முறை விருத்தி செய்யப்பட்டது. ஏற்றுமதித் துறையினை மேம்படுத்துவதற்கும் அவற்றின் செயலாற்றத்தினை தடுக்கும் விடயங்களை இனங்காண்பதற்குமாக ஏற்றுமதியாளர்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. அத்தகைய முன்னெடுப்புக்கள் வெளிநாட்டுத்துறை செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கான முன்கூட்டிய கொள்கை மதியுரைகளை வழங்குவதில் உதவின. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளை மாதாந்த வெளிநாட்டுத்துறை பத்திரிகை வெளியீடுகளினூடாக தொடர்பூட்டியது.

ப.நா. நிதியத்திடமிருந்து பெற்றுக்கொண்ட தொழில்நுட்ப உதவிகளுடன் ஆண்டுக் காலத்தில் சென்மதி நிலுவைக் கைநூல் 5 இலிருந்து சென்மதி நிலுவைக் கைநூல் 6 இற்கான மாறுதல் இறுதிப்படுத்தப்பட்டதுடன், இவ்வாண்டறிக்கையுடன் சென்மதி நிலுவைக் கைநூல் 6இன் கீழான புள்ளிவிபரங்களின் வெளியீடு தொடங்கும். சென்மதி நிலுவைக் கைநூல் 6 இற்கான மாற்றம் பணிகள் துறை தொடர்பான மேற்கொள்ளப்பட்ட 8 அளவீடுகளிற்குப் புறம்பாக, 1,200 தனியார் கம்பனிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான தகவல்களைச் சேகரிப்பதற்காக நடாத்தப்பட்ட வருடாந்த பன்னாட்டு முதலீடு அளவீடுகளின் மூலம் உதவப்பட்டது. மேலும், ஆண்டுக்காலத்தில் பன்னாட்டு முதலீட்டு நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் ஒதுக்க தரவுகளை சென்மதி நிலுவைக் கைநூல் 6 வடிவமைப்பின் கீழ் தொகுக்கும் செயற்பாடு முடிவுறுத்தப்பட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இலங்கைக்கான சுற்றுலா செய்மதிக் கணக்கு முறைமையின் நடைமுறைக்கிடலை ஒருங்கிணைத்தது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, தொகைமதிப்புப் புள்ளிவிபரங்கள் திணைக்களம் மற்றும் மத்திய வங்கியின் புள்ளிவிபரவியல் திணைக்களம் என்பனவற்றின் பங்கேற்புடன் சுற்றுலாத் துறை செய்மதிக் கணக்கினை நடைமுறைப்படுத்துவதற்காக தொழில்நுட்ப மட்ட வேலைக்குழு ஒன்றும் மதியுரை குழுமம் ஒன்றும் அமைக்கப்பட்டன.

### 7.3 முன்கூட்டிய கொள்கை மதியுரை வழங்குதல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொருளாதார விடயங்கள் மீதான கொள்கை மதியுரைகளை அரசாங்கத்திற்கும் மற்றும் பல்வேறு ஏனைய ஆர்வலர்களிற்கும் வழங்கியது. 2013 இன் முதல் அரைப்பகுதியின் பொருளாதார செயலாற்றத்தின் பகுப்பாய்வுடன் இணைத்து மத்திய வங்கி அதனது முக்கிய குறிக்கோள்களை அடைதலில் அரசாங்கத்தின் தற்போதைய இறைக் கொள்கை கொண்டுள்ள தாக்கத்தினைக் கணிப்பிடும் செத்தெம்பர் 15 ஆம் திகதி அறிக்கை மற்றும் 2014 அரசின் வரவுசெலவுத்திட்டத்தினை தயாரித்தலுக்குப் பயன்படுத்தப்படவுள்ள கொள்கை முன் மொழிவுகளுடனான நடுத்தர கால தோற்றப்பாடு என்பன நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆண்டுக்காலத்தில் 124 அமைச்சரவைப் பத்திரங்கள் மீது பேரண்ட பொருளாதார தாக்கங்கள் மீதான தனித்துவமான கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்கியது. மேலும், பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வங்கியின் ஏனைய திணைக்களங்களினால் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்பாக கோரப்பட்ட விடயங்கள் மீது அவதானிப்புக்களும் கருத்துக்களும் வழங்கப்பட்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் ஆண்டுக்காலத்தில் அரசாங்கத்தினால் பெறப்பட்ட 20 வெளிநாட்டு கடன்கள் மீதான நாணயத் தாக்கங்கள் பற்றிய மதிப்பீடுகள் மற்றும் துணைநில் அமைச்சரவை நியமனம்பெற்ற மீளாய்வு குழுமத்தின் தேவைபடுத்தல்களிற்கேற்ப தொடர்பான அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கப்படாத 25 கடன் முன்மொழிவுகள் மீதான அவதானிப்புக்கள் என்பவற்றை வழங்கியது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் அரசாங்கம் மற்றும் ஏனைய முகவர்களினால் அமைக்கப்பட்ட கொள்கை மதியுரைக் குழுமங்களில் பங்குபற்றி பொருத்தமான கொள்கை வழிகாட்டல்களை வழங்கினர். அத்தகைய வெளியே பிரதிநிதித்துவப்படுத்திய குழுமங்கள் வளமாக்கியின் வர்த்தக விலையினைத் தீர்மானிக்கும் குழுமம், இலங்கையிலுள்ள தொழிலாளர் மற்றும் சமூக போக்குகளைப் பகுப்பாய்வு செய்யும் குழுமம்-2012, உலகளாவிய வியாபார மையத்தினை உருவாக்குவது மீதான துணைக்குழு, வர்த்தக மையத்தின் தொழிற்பாட்டுமயமாக்கலுக்கான வழிகாட்டல் குழு, மன்னார் வளை குடாவில் இரண்டாம் கட்ட எண்ணெய் அகழ்வு மீதான சூழல் தாக்கக் கணிப்பீட்டுக் குழு மற்றும் சுற்றுலா செய்மதி கணக்கு திட்டம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் சந்தைத் தொழிற்பாடுகள் குழுமம், நிதியியல் முறைமை உறுதிப்பாடு குழுமம், உள்நாட்டுப் பொதுப்படுகடன் முகாமைத்துவக் குழுமம், வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுமம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் குழுமம் போன்ற முக்கிய உள்ளக குழுமங்களில் பங்குபற்றியதுடன் உள்ளீடுகளையும் வழங்கினர். மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் வங்கியின் ஏனைய உள்ளக குழுமங்களின், குறிப்பாக வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் கண்காணிப்பு குழுமம், லங்கா தீர்ப்பனவு முறைமைக்கான எதிர்பாராத நிகழ்வுகள் மற்றும் அனர்த்த மீட்புக் குழுமம், நூலக மதியுரைக் குழுமம், சிறப்பு தரவுப் பரப்பல் நியமக் குழு, ஐந்து மையங்களை உருவாக்குதலின் தொழிற்படுத்தல் வேலைக்காக ஒதுக்கப்பட்ட குழுமம், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மீதான தேசிய இடர்நேர்வுக் கணிப்பீட்டிற்காக நியமிக்கப்பட்ட பணியாற்றல் குழுமம், கொழும்பு வர்த்தக வியாபார மாவட்டத்தில் உட்கட்டமைப்பு இயலளவு இடைவெளிகளை ஆய்வு செய்வதற்கு ஓர் நிபுணரை நியமிப்பதற்கான தொழில்நுட்ப குழு மற்றும் நாட்டிற்கான முறி வழங்கல் மீதான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுமம் போன்றவற்றில் பங்குபற்றியதுடன் பகுப்பாய்வுகளை வழங்கியது.

### 7.4 நியதிச்சட்ட மற்றும் ஏனைய அறிக்கைகளின் வெளியீடுகளினூடாக தகவல்களைப் பரப்பல்

நியதிச்சட்ட அறிக்கைகள் மற்றும் "அண்மைக்காலப் பொருளாதார அபிவிருத்திகள்", "வழிகாட்டல்" போன்ற பல்வேறு ஏனைய அறிக்கைகளை மும்மொழிகளிலும் தயாரிக்கும் முக்கிய பொறுப்பாண்மை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாடு, துறை ரீதியான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், மத்திய வங்கியின் கணக்குகள் மற்றும் தொழிற்பாடுகள் மற்றும் புள்ளிவிபரவியல் இணைப்புகள் என்பனவற்றை வெளிக்காட்டும் 2012 இற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கை வங்கியின் ஏனைய திணைக்களங்களின் உதவியுடன் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் தயாரிக்கப்பட்டு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சருக்கு அளிக்கப்பட்டது. "அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் - 2013 இன் முக்கிய பண்புகளும் 2014இற்கான வாய்ப்புக்களும்" எனும் வெளியீடு வரவு செலவுத்திட்ட உரை - 2014 உடன் வெளியிடப்பட்டது. மத்திய வங்கியின் இணையத்தளத்தில் மாதத்தின் "நிகழ்வுகள்" உள்ளடங்கலாக பொருளாதாரத்தின் அனைத்து துறைகளின் மீதான புள்ளிவிபரவியல் தகவல்களைக் கொண்டுள்ள மாதாந்த செய்தித் திரட்டுக்களும் பத்திரிகை வெளியீடுகளும் வெளியிடப்பட்டன.

தொடர்ந்து ஏழாவது ஆண்டாக மத்திய வங்கியின் கொள்கை அறிக்கையான "வழிகாட்டல் 2013 - 2013 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்" 2013 சனவரி 2ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. வழிகாட்டலானது ஆர்வலர்களின் எதிர்வரும் காலத்திற்கான அவர்களது சொந்தத் திட்டங்களையும் உபாயங்களையும் வடிவமைப்பதற்கும் சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கும் உதவக்கூடிய மத்திய வங்கியின் கொள்கைகளின் எதிர்வுகூறலளையும் வெளிப்படைத் தன்மையினையும் உயர்த்தும் நோக்குடன் அறிவிக்கப்பட்டது. வழிகாட்டல் 2014 இற்கான தயார்படுத்தல்கள் 2013 திசெம்பர் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு 2014 சனவரி 02ஆம் நாள் அறிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்டவைக்கு மேலதிகமாக திணைக்களம் பொதுமக்களின் நலனுக்காக பொருளாதார மற்றும் நிதியியல் தகவல்களை நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த குறிகாட்டிகளை ஊடகங்கள் மற்றும் மத்திய வங்கியின் வெப்தளத்தினூடாகப் பரப்பியது. மாதாந்த நாணயக் கொள்கை மற்றும் வெளிநாட்டுத்துறைச் செயலாற்ற பத்திரிகை வெளியீடுகளுக்குப் புறம்பாக தோற்றம் பெற்றுவரும் விடயங்கள் மீதான பொதுமக்களின் அறிவினை உயர்த்தும் நோக்குடன் பத்திரிகை அறிக்கைகளை வெளியிட்டது.

### 7.5 கொள்கை ஆய்வு மற்றும் அறிவாற்றலைப் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

சமகால முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்வதனை ஊக்குவிக்கும் நோக்குடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் வங்கியின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் அவர்களது சொந்த முயற்சிகளுக்காகவும் பல ஆராய்ச்சிக் கற்கைகளை நடாத்தினர். திணைக்களத்திற்குள்ளான ஆராய்ச்சி நடவடிக்கைகளை வசதிப்படுத்தல் மற்றும் வங்கியின் ஆராய்ச்சிக்கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட "ஆராய்ச்சி மதியுரைக் குழுமம்" 2013 இலும் தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களும் அத்துடன் வங்கியின் ஏனைய திணைக்கள அலுவலர்களும் பொருளாதாரம் தொடர்பான தலைப்புக்களில் ஆராய்ச்சிகளினை மேற்கொள்வதினை வசதிப்படுத்துவதற்காக "பேரண்டப் பொருளாதார மாதிரிப்படுத்தல் அலகு" 2012இல் உருவாக்கப்பட்டது. இம் முயற்சியின் கீழ் நான்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவை 2014இல் வெளியிடப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட வெளியக "பட்டதாரி பயிலுநர்களின்" இரண்டு ஆராய்ச்சித் திட்டங்களும் "பேரண்டப் பொருளாதார மாதிரிப்படுத்தல்" அலகினால் மேற்பார்வை செய்யப்பட்டது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் பட்டப்பின் படிப்பிற்கு செல்கின்றவர்களின் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு வழிகாட்டல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் மூலம் தொடர்ச்சியாக உதவினர். இதன்படி ஆண்டுக்காலத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் 25 ஆராய்ச்சிக் கட்டுரைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

2013 செத்தெம்பரில் வெளியிடப்பட்ட அலுவலர் ஆய்வுகள் என்ற மத்திய வங்கியின் ஆராய்ச்சி வெளியீடு அதன் 42 ஆவது பாகத்தில் மூன்று அனைத்தையுமுள்ளடக்கிய ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டிருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2013 திசெம்பரில் தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டாகவும் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டை ஒழுங்குபடுத்தியது. பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு பிராந்தியத்தில் கொள்கை ரீதியானதும் மற்றும் அனுபவ ரீதியானதுமான ஆராய்ச்சிகளைச் சமர்ப்பிப்பதற்கும் கலந்துரையாடுவதற்கும் ஆராய்ச்சியாளர்களிடையே கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கும் சந்தர்ப்பமொன்றினை வழங்கியது. பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டில் மலேசியா, பாகித்தான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளிலிருந்து ஆராய்ச்சியாளர்கள் தமது ஆராய்ச்சி முடிவுகளை சமர்ப்பித்தனர். முன்னைய வருடங்களினைப் போன்று பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் நிலையத்துடனான இணைந்த ஆராய்ச்சிகளை நடாத்துவதில் ஈடுபட்டிருந்தனர். பன்னாட்டு நாணய நிதியத்துடனான வெளியீட்டு இடைவெளிப் பகுப்பாய்வு மீதான இணைந்த ஆராய்ச்சிக் கட்டுரை வேலை ஆண்டுக்காலத்தில் முன்னேற்றமடைந்துள்ளதுடன் 2014 இல் வெளியிடப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்குள்ளான அறிவாற்றலைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை இற்றைப்படுத்தல் தொடர்பாக திணைக்களத்தில் அதன் அலுவலர்களினால் வாராந்த கருத்தரங்குகள் நடாத்தப்பட்ட அதேவேளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களின் அறிவாற்றலை வளர்த்துக் கொள்வதற்காக நிபுணர்கள் மற்றும் சிறந்த பேச்சாளர்கள் விரிவுரைகளை நடாத்துவதற்காக அழைக்கப்பட்டனர். திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் மத்திய வங்கித்தொழில் மற்றும் நாணயக் கொள்கை போன்ற விடயங்களில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் தமது அறிவாற்றலையும் அனுபவத்தினையும் பகிர்ந்து கொள்வதில் பெரும் பங்களித்தனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மனிதவளத் திணைக்களத்துடன் இணைந்து பொருளாதாரத்தின் குறிப்பிட்ட துறைகளில் விரிவுரைகளை ஆற்றுவதற்காக கைத்தொழில் துறைகளிலிருந்து நிபுணர்களை வரவழைத்து "மாதாந்த பொருளாதார அரங்கத்தினை" நடாத்தியது. இணைக்கப்பட்ட திணைக்கள அலுவலர்களும் விரிவுரைகளை நடாத்தினார்கள் திணைக்கள அலுவலர்கள் வங்கித் தொழில் கற்கைகளிற்கான ஆய்வுநிலையம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், பல்கலைக்கழகங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு கல்விசார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களில் வள ஆளணியினராக பணியாற்றினர். மேலும், அலுவலர்கள் மத்திய வங்கிக்கு வருகைதரும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விருந்தினர்களுக்கு மத்திய வங்கித் தொழில் மற்றும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் பற்றி காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளைத் தொடர்ந்தும் ஆற்றினர். மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் சுதந்திர தொலைக்காட்சி வலையமைப்பினால் உயர்தர மாணவர்களிற்காக நடாத்தப்பட்ட "தக்சிலாவ" கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கு வள ஆளணியினராகப் பணியாற்றினர்.

### 7.6 பன்னாட்டு அமைப்புக்களுடனான தொடர்புகளை வலுப்படுத்தல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இலங்கையின் உறவுகளை பன்னாட்டு நாணய நிதியம், தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையம், சியென்ஸா குழுமம் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் நிதிச் செயலாளர்களின் சார்க் நிதியம் என்பவற்றுடன் ஒருங்கிணைத்த அதேவேளை உலகவங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய பல்புடை மற்றும் இருபுடை முகவர்களுடன் ஒருங்கிணைப்பதற்கு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிற்கு உதவியது. மத்திய வங்கியினைப்

பிரதி நிதித்துவப்படுத்தும் கற்கை குழுவில் உள்ள பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் உள்ள மூத்த அலுவலர்கள் குறிப்பிட்ட நாடுகள், பிராந்தியங்கள் மற்றும் பொதுவான விடயங்களிலான ஆய்வுக் குழுக்களில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் பன்னாட்டுக் கூட்டங்கள், அரங்குகள் மற்றும் மாநாடுகளில் கொள்கை உரையாடல்களில் கலந்து கொள்வதன் மூலம் மத்திய வங்கியினைப் பிரதிநிதித்துவம் செய்தனர். அலுவலர்கள் சமூகமளித்த அத்தகைய சில கூட்டங்கள் மற்றும் மாநாடுகளாவன: தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்கள் சபைக் கூட்டங்கள், தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் - சிம்லா மாநாடு, சார்க் நிதிய ஆளுநர்களின் மாநாடு, சார்க் மத்திய வங்கி மூத்த பொருளியலாளர்களின் கூட்டம், சார்க் நிதியச் செயலாளர்கள் மற்றும் அமைச்சர்களின் கூட்டம், சார்க் நிதிய ஒருங்கிணைப்பாளர்களின் கூட்டம், சார்க் பொதுப்படுகடன் முகாமையாளர்களின் அரங்கம் மற்றும் தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பணிப்பாளர்களின் கூட்டம்.

பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, பன்னாட்டு முதலீட்டாளர்கள், தரமிடல் முகவர்கள் மற்றும் ஆலோசகர்கள், வெளிநாட்டுத் தூதர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கான பொருளாதார இற்றைப்படுத்தலின் ஏற்பாடுகள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் கிரமமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பன்னாட்டு முகவர்கள் பன்னாட்டு நாணய நிதியத் தளத்திலிருந்து ஒப்பிடக் கூடிய தகவல்களைப் பெறுவதை வசதிப்படுத்துவதற்காக 2014இல் பொதுவான பன்னாட்டு நாணய நிதியத்தின் தரவுப் பரப்பல் முறைகளிலிருந்து விசேட தரவுப் பரப்பல் நியமங்களிற்கு மாறுவதற்கான வேலைகளை ஆரம்பித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2013இல் நாட்டிற்கான தரமிடலை உயர்த்துவதற்காக மூன்று பன்னாட்டு நாட்டிற்கான தரமிடல் முகவர்களான பிட்ஸ் ரேடிங், ஸ்டான்ட் அன்ட் புவர் ரேட்டிங்ஸ் மற்றும் மூடிஸ் ரேட்றிங் என்பவற்றுடன் நெருக்கமாகப் பணியாற்றியது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2014 சனவரியில் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்ட ஆறாவது நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கலிற்கான அனைத்துக் கொள்கை தொடர்பான விசாரணைகளை பொறுப்பேற்றுக் கொண்டதுடன் அனைத்து ஆவணப்படுத்தல் உதவிகளையும் பொருளாதார இற்றைப்படுத்தல்களையும் வழங்கியது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் “பன்னாட்டு நாணய நிதிய அகவிதி IV” குழு, “துணைநில் ஒழுங்குபடுத்தல்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னைய மதிப்பீட்டுக் குழு” மற்றும் “நிகழ்ச்சித்திட்டத்திற்கு (துணைநில் ஒழுங்குபடுத்தல்கள்) பின்னைய கண்காணிப்பு குழு” என்பவற்றை உள்ளடக்கிய பல்வேறு பன்னாட்டு முகவர்களின் பிரதிநிதிகளின் வருகைகளை வசதிப்படுத்தியது.

### 8. ஊழியர் சேம நிதியம்

அரசுசார் மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளை வழங்கும் பொருட்டு இலங்கையின் மிகப்பெரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேம நிதியம் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. சட்டத்தின் ஏற்பாட்டு நிதியங்களுக்கிணங்க, நிதியத்தின் அனைத்து நிர்வாக அதிகாரங்களும் செயற்பாடுகளும் தொழில் ஆணையாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதேவேளையில் நிதிய முகாமைத்துவத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற முறையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாணயச்சபை அதன் தொழிற்பாட்டினை ஆற்றுவதில் ஒரு தொழிற்பாட்டு சக்தியாக தொழிற்படுவதற்காக ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திற்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது.

#### 8.1 திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திடம் உறுப்பினர் பங்களிப்புக்களையும் மேலதிகக் கட்டணங்களையும் சேகரித்தல், உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல், உறுப்பினர் கணக்குகளுக்கு வட்டியை வரவு வைத்தல், நிதியத்தின் பயனாளிகளுக்கு நன்மைகளைக் கொடுப்பனவு செய்தல், மிகையான நிதியங்களை முதலீடு செய்தல், நாணயச்சபையும் தொழில் ஆணையாளரும் தமது கடமைகளையும் தொழிற்பாடுகளையும் மேற்கொள்ளும் வேளையில் ஏற்படும் செலவினங்களை விதித்தல் ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேம நிதியத் திணைக்களம், நாணயச்சபையின் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகளின்படி 2012ஆம் ஆண்டுப்பகுதியில் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதுடன் தொழில் ஆணையாளருடன் நெருங்கிய விதத்தில் ஒத்துழைத்தது.

#### 8.2 நடவடிக்கைகளின் செயலாற்றம்

##### அ) உறுப்புரிமை, உறுப்பினர் நிலுவைகள் மற்றும் மீளளிப்புக்கள்

2013 இறுதியில் உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 15.0 மில்லியனை அடைந்தது. இது, 2012ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 14.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகக் காணப்பட்டது. பங்களிப்புச் செலுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 2012 இறுதியின் 2.3 மில்லியனிலிருந்து 2013 இறுதியில் 2.4 மில்லியனுக்கு அதிகரித்தது (அட்டவணை II - 4).

**அட்டவணை II-4 நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய குறிகாட்டிகள்**

| விடயம் | 2012 | 2013(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 14.6 | 15.0 | 2.7 |
| பங்களிப்புச் செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் (மில்) | 2.3 | 2.4 | 4.3 |
| பங்களிப்புச் செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் (மில்) | 12.3 | 12.6 | 2.4 |
| பங்களிப்புச் செலுத்தும் தொழில்தருநர் | 68,140 | 70,392 | 3.3 |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 70.2 | 80.5 | 14.7 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்.) | 48.7 | 50.2 | 3.1 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 115,654 | 114,103 | (1.3) |
| தேறிய வருமானம் (ரூ.பில்.) | 111.8 | 125.6 | 12.3 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்.) | 1,124.5 | 1,281.9 | 14.0 |
| நிதியின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்.) | 1,144.4 | 1,300.0 | 13.6 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

நிதியத்தின் மொத்தப் பெறுமதியானது 2012 இறுதியின் ரூ.1,144.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 இறுதியில் ரூ.1,300 பில்லியனாக விளங்கியது. இது 13.6 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பிற்கு, உறுப்பினர்களின் தேறிய பங்களிப்பின் (மீளளிப்புக் கொடுப்பனவுகளைக் கழித்த பங்களிப்புக்கள்) வளர்ச்சியும் நிதியத்தின் காத்திரமானதும் முன்மதியுடையதுமான முகாமைத்துவமூடாக வருமானம் உயர்த்தப்பட்டமையே காரணமாகும். உறுப்பினர்களின் வட்டி உட்பட உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு 2013 இறுதியில் ரூ.1,281.9 பில்லியன்களாக விளங்கியதுடன், 2012 இறுதியின் ரூ.1,124.5 பில்லியன்களிலிருந்து 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது (அட்டவணை II-4). தேறிய பங்களிப்பு முன்னைய ஆண்டின் ரூ.21.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.30.3 பில்லியனுக்கு அதிகரித்தது. உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்டரீதியான வாரிசுகளுக்கும் செய்யப்பட்ட மீளளிப்புக்களின் மொத்தத் தொகை 2013இல் ரூ.50.2 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2012இனைவிட 3.1 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். 2013இற்கான நிதியத்தின் தேறிய வருமானம் முன்னைய ஆண்டின் தேறிய வருமானமான ரூ.111.8 பில்லியனுடன் ஒப்பிகையில் ரூ.125.6 பில்லியனுக்கு அதிகரித்து 12.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.

##### ஆ) நிதியங்களின் முதலீடும் வருமானமும்

(i) முதலீட்டுச் சொத்துப்பட்டியல்:

நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ஏட்டுப்பெறுமதி) 2012இன் ரூ.1,105.5 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.1,257.3 பில்லியனுக்கு 13.7 சதவீதத்தினால் அதிகரித்தது (அட்டவணை II-5). நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது உறுப்பினர்களுக்கு நீண்டகால நேர்க்கணிய உண்மை வருமானத்தினை வழங்குவது தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தியவேளையில் நிதியத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதுடன் மீளளிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் நிதியத்தின் ஏனைய செலவுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் போதுமான மட்டத்தில் திரவத்தன்மை பேணப்பட்டது.

முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 92.5 சதவீதமான அரச

பிணையங்களையும் 5.8 சதவீதமான உரிமை மூலதனத்தினையும் 1.2 சதவீதமான கம்பனி படுகடன் மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்களையும் உள்ளடக்கியிருந்தது. மீதியான 0.5 சதவீதமும் நாளாந்தத் திரவத் தன்மை தேவைப்பாடுகளை பேணுவதற்காக நேர்மாற்று மீள் கொள்வனவு போன்ற உயர் திரவச் சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. விளைவு வீதத்துடன் சேர்த்து அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு அட்டவணை II-6 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II-5 முதலீட்டுச் சொத்துப்பட்டியல்**

| முதலீட்டின் வகை | 2012 | | 2013(அ) | |
|---|---|---|---|---|
| | தொகை ரூ. பில் | பங்கு (%) | தொகை ரூ. பில் | பங்கு (%) |
| திறைசேரி முறிகள், உண்டியல்கள் | 1,012.1 | 91.5 | 1,140.5 | 90.7 |
| அரசிற்கான ரூபாக் கடன்கள் | 23.1 | 2.1 | 23.1 | 1.8 |
| கம்பனிப் படுகடன்கள் | 8.0 | 0.7 | 14.3 | 1.2 |
| உரிமை மூலதனம் | 59.2 | 5.4 | 72.8 | 5.8 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகள் | 3.1 | 0.3 | 6.6 | 0.5 |
| **மொத்தம்** | **1,105.5** | **100.0** | **1,257.3** | **100** |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II-6 அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு (2013 இறுதியிலுள்ளவாறு) (அ)**

| முதிர்ச்சிக் காலம் | முதிர்ச்சியில் பெறுமதித் தொகை ரூ. பில் | பங்கு (%) | நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு (%) |
|---|---|---|---|
| 1 ஆண்டுக்குக் குறைந்தது | 139.5 | 10.0 | 9.79 |
| 1 - 2 ஆண்டுகள் | 195.7 | 14.1 | 9.84 |
| 3 - 4 ஆண்டுகள் | 216.2 | 15.5 | 10.75 |
| 5 ஆண்டுகளுக்கும் கூடியது | 842.0 | 60.4 | 11.92 |
| **மொத்தம்** | **1,393.4** | **100.0** | **11.23** |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(ii) முதலீட்டு வருமானம்:**

2013இல் நிதியம் உழைத்த மொத்த வருமானம் ரூ.136.7 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.6 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது (அட்டவணை II-7). வட்டி வருமானம் நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக (வருமானத்தின் 76.9 சதவீதம்) காணப்பட்டது. வட்டி வருமானம் 2012இன் ரூ.90.9 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.105.0 பில்லியனுக்கு 15.5 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், மூலதன இலாபம் மற்றும் பங்கிலாபம் என்பனவற்றை உள்ளடக்கிய உரிமை மூலதனச் சொத்துப்பட்டியல் 2012இல் உழைத்த ரூ.3,016 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.3,339 மில்லியன் கொண்ட வருமானத்தினை உருவாக்கி 10.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. எனினும், 2013இல் கழிவிடப்பட்ட திறைசேரி முறிகளிலிருந்தான கடன் பதிவழிப்பு இலாபம் 2012இன் ரூ.27.8 பில்லியனிலிருந்து ரூ.26.9 பில்லியனுக்கு 3.0 சதவீதத்தினால் குறைவடைந்தது (அட்டவணை II-7).

**அட்டவணை II-7 முதலீடு மீதான வருமானம்**

| வருமானத்தின் மூலம் | 2012 | | 2013 (அ) | |
|---|---|---|---|---|
| | தொகை ரூ. மில் | பங்கு (%) | தொகை ரூ. மில் | பங்கு (%) |
| வட்டி | 90,904 | 74.9 | 105,038 | 76.9 |
| கடன் தீர்ப்பனவு இலாபம் | 27,792 | 22.9 | 26,956 | 19.7 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம் | 34 | - | 1,019 | 0.7 |
| சந்தைப்படியான இலாப இழப்புக்கள் | (388) | (0.3) | (45) | .. |
| பங்குகளிலிருந்தான மூலதன இலாபம் | 1,020 | 0.8 | 113 | 0.1 |
| பங்கு இலாபங்கள் | 1,996 | 1.6 | 3,226 | 2.4 |
| கட்டுப்பணம் - ஈடுமீட்கப்படும் போது கழிவிடல் | - | - | (4) | - |
| ஏனையவை | 55 | 0.1 | 354 | 0.2 |
| **மொத்தம்** | **121,413** | **100.0** | **136,657** | **100.0** |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(iii) செலவினம்:**

2013இல் நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டு செலவினம் 2012இன் ரூ.948 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.979 மில்லியனாக விளங்கி 3.3 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்த போதும் 2013இல் மொத்த வருமானத்தின் விகிதம் 2012இன் 0.78 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.72 சதவீதமாகப் பேணப்பட்டது. (அட்டவணை II-8). கடந்த ஆண்டுகளில் நிதியமானது அதன் தொழிற்பாட்டுச் செலவினத்தினை மொத்த வருமானத்தில் 1 சதவீதத்திற்குக் குறைவானதொரு அளவில் பேணியது.

**அட்டவணை II-8 தொழிற்பாட்டுச் செலவினங்கள்**

| விடயம் | தொகை (ரூ.மில்.) | | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | 2012 | 2013(அ) | |
| ஆளணிச் செலவினங்கள் | 514 | 569 | 10.6 |
| நிர்வாகச் செலவினங்கள் | 397 | 364 | (8.3) |
| ஏனைய செலவினங்கள் | 37 | 46 | 24.3 |
| **மொத்தம்** | **948** | **979** | **3.3** |
| **மொத்த வருமானத்தின் % ஆக மொத்தச் செலவினங்கள்** | **0.78** | **0.72** | **-** |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**இ) உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவு**

2013ஆம் ஆண்டின் இறுதியில் உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவாக பகிர்ந்தளிப்பதற்கு கிடைக்கத்தக்கதாக இருந்த தொகை 2012இன் ரூ.110.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.123.4 பில்லியனாகக் காணப்பட்டது (அட்டவணை II-9). ஒதுக்கங்களுக்கு ரூ.3.7 பில்லியன் மாற்றல் செய்யப்பட்ட பின்னர் நிதியமானது 2013இல் உறுப்பினர் நிலுவைகளின் மீது 11.0 சதவீதங்கொண்ட வட்டியை செலுத்தக் கூடியதாக இருந்தது (அட்டவணை II-10).

**அட்டவணை II-9 உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவு**

| விடயம் | தொகை (ரூ.மில்.) 2012 | 2013(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| மொத்த வருமானம் | 121,413 | 136,657 | 12.6 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (948) | (979) | 3.3 |
| வருமான வரி | (8,637) | (10,069) | 16.6 |
| ஆண்டுக்கான தேறிய வருமானம் | 111,828 | 125,610 | 12.3 |
| நடைமுறை மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி | (2,098) | (2,233) | 6.4 |
| பகிர்ந்தளிப்புக்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் (நடைமுறை மீளளிப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுக்குப் பின்) | 110,099 | 123,433 | 12.1 |
| ஒதுக்குகளில் இருந்து/(இற்கு) மாற்றல்கள் | 5,700 | 3,700 | (35.1) |
| ஒதுக்குகளிலிருந்து(இற்கு)மாற்றல்களுக்குப் பின் பகிர்ந்தளிப்புக்காகக் கிடைக்கத்தக்க தாகவுள்ள தேறிய வருமானம் | 115,799 | 127,133 | 9.8 |
| பிடித்துவைத்த தேறிய வருமானத்தின் செலுத்தப்பட்ட வட்டி | (115,771) | (126,992) | 9.7 |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 28 | 141 | 403.6 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி % | 11.5 | 11.0 | - |

(அ) தற்காலிகமானவை　　மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II-10 உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம்**

| ஆண்டு | வழங்கப்பட்ட வட்டிவீதம் (%) | பயனுறு வட்டிவீதம் (%) |
|---|---|---|
| 2002 | 12.10 | 12.26 |
| 2003 | 12.00 | 12.07 |
| 2004 | 9.50 | 9.59 |
| 2005 | 9.00 | 9.13 |
| 2006 | 10.10 | 10.30 |
| 2007 | 11.20 | 11.40 |
| 2008 | 13.20 | 13.44 |
| 2009 | 13.75 | 13.92 |
| 2010 | 12.50 | 12.65 |
| 2011 | 11.50 | 11.58 |
| 2012 | 11.50 | 11.62 |
| 2013 (அ) | 11.00 | 11.14 |

(அ) தற்காலிகமானவை　　மூலம்: ஊசேநி திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

### 8.3 உறுப்பினர் பணிகள்

#### அ) உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள்

2013ஆம் ஆண்டின் முதலரைப் பகுதிக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் அவர்களின் தொழில்தருநர்களூடாக வழங்கும் பணி 2013 திசெம்பரில் தொடங்கியது. 2013இன் பின்னரைப்பகுதிக்கான கணக்குக் கூற்றுக்களை 2014 மே இறுதியளவில் வழங்குவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

#### ஆ) வீடமைப்புக் கடன் வசதி

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஆகிய பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் குறிக்கோளுடன் 1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டம் 2013இலும் தொடர்ந்தது. இத்திட்டத்தின் கீழ் ஊழியர் சேம நிதியம் அவர்களது ஊழியர் சேம நிதிய நிலுவைகளுக்கெதிராக உறுப்பினர்களுக்கு உத்தரவாதச் சான்றிதழ்களை தொடர்ந்தும் வழங்கியது. இவ்வாண்டுப் பகுதியில் ரூ.6,914 மில்லியன் தொகை கொண்ட வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு 16,268 உறுப்பினர் நிலுவைச் சான்றிதழ்களை வழங்கியது (அட்டவணை II-11). மேலும் 2012ஆண்டுப் பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக 2013இல் தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து ஏறத்தாழ ரூ.2,178 மில்லியன்கள் கழிக்கப்பட்டு பங்கேற்கும் கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**அட்டவணை II-11 வீடமைப்புக் கடன் வசதி**

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் ரூ.மில் | கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|
| 2000 | 12,938 | 1,648 | 262 |
| 2001 | 16,066 | 2,091 | 381 |
| 2002 | 19,502 | 2,673 | 541 |
| 2003 | 18,689 | 2,792 | 670 |
| 2004 | 14,307 | 2,452 | 735 |
| 2005 | 14,600 | 2,766 | 900 |
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 (அ) | 16.268 | 6,914 | 2,178 |
| மொத்தம் | **208,500** | **47,785** | **16,737** |

(அ) தற்காலிகமானவை　　மூலம்: ஊசேநி திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

#### இ) பொதுமக்கள் விழிப்புணர்வு

விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இ-ஊடகம் தொடர்பான நடமாடும் சேவைகளை நடத்துதல், பதிவு செய்தல் மற்றும் உறுப்பினர்களுடன் தொடர்பான ஏனைய பணிகள் என்பன 2013இல் திணைக்களத்தின் பணிகளாகக் காணப்பட்டன. உறுப்பினர்கள், ஊழியர்கள், தொழில் சந்தைக்குள் நுழைவோர், தொழில் அலுவலர்கள், கிராமிய வங்கி அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் போன்ற ஆர்வலர்களின் பல்வேறு வகைப்பட்டவர்களை இலக்காகக் கொண்டு ஒன்பது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடமாடும் பணிகளும் நடத்தப்பட்டன. இவ்வனைத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் பெருமளவு எண்ணிக்கை தளத்தினைக் கொண்ட நிறுவனங்களை உள்ளடக்குவதற்காக நடத்தப்பட்டன.

நடமாடும் சேவைகள் மாஸ் இன்டிமேட்ஸ் - துறுளி, மாநகரசபை - சிறிஜெயவர்த்தனபுர கோட்டை, தேசத்தின் மகுடம் பொருட்காட்சிச்சாலை - அம்பாறை மருத்துவ சனசமூக விருந்தோம்பல் தினம் - மொறட்டுவை, கிறிஸ்டல் மார்டின் (பிறைவேற்) லிமிடெட் - கலேகெதர, தேசிய மனிதவளப் பணிகள் வழங்குவோர் பொருட்காட்சி - கொழும்பு, நமுனகுல பிளான்டேசன் பிஎல்சி - ஊவா பிரிவு பசறை, லங்கா டைல்ஸ் - பாதுக்கை, டயனாகுறோ (பிறைவேற்) லிமிடெட் - பத்திரமுல்லை ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன.

இந்நடமாடும் பணிகளின் பல்வேறு பணிகளை வழங்குவதற்காக தொழில் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் போன்ற மற்றைய தொடர்பான அமைப்புக்களின் ஒத்துழைப்பும் உதவியும் பெறப்பட்டன. இதன்படி, நடமாடும் பணிகளினூடாக பின்வரும் பணிகள் வழங்கப்பட்டன.

i. உறுப்பினர்களுக்கு ஊழியர் சேம நிதிய நிலுவைக் கூற்றுக்களை வழங்குதல்
ii. உறுப்பினர்களின் கணக்குகளைத் திருத்துதல்
iii. உறுப்பினர்களை மீளப் பதிவு செய்தல்

iv. குறுஞ்செய்தி மற்றும் இணையத்தளம் போன்ற கணனி வழி உடனடி வசதிகளுக்காக உறுப்பினர் பதிவுகளை ஊக்குவித்தல்
v. உறுப்பினர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.
vi. ஆட்பதிவுத் திணைக்கள அலுவலர்களினால் ஊழியர் சேம நிதிய உறுப்பினர்கள் தேசிய அடையாள அட்டையினை பெறுவதற்கான விண்ணப்பங்களை வழங்குதல்
vii. பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் பிறப்புச் சான்றிதழ்/ வயது ஊகச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்காக ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு விண்ணப்பங்களை வழங்குதல்

மேலும், பொதுமக்கள் தொடர்பு விசாரணைப்பீடம் மற்றும் ஊ.சே. நிதிய உதவிப்பீடம் என்பனவும் தொலைபேசிகளினூடாகவும் தனித்தனியாகவும் ஊ.சே. நிதிய நடைமுறைகள் தொடர்பில் உறுப்பினர்களுக்கு அறிவூட்டுவதில் ஈடுபட்டிருந்தன. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் பொதுமக்கள் தொடர்பு மற்றும் விசாரணைப்பீடங்களும் உதவிப்பீடங்களும் 222,498 உறுப்பினர்களின் விசாரணைகளுக்கு பதிலிறுத்தின. இதில் 118,380 உறுப்பினர்களுக்கு பீடங்களிலேயே பணிகள் வழங்கப்பட்டதுடன் 76,916 தொலைபேசி விசாரணைகளுக்கும் பதிலிறுத்தப்பட்டது. 16,057 மின்னஞ்சல்களுக்கும் 10,185 கடிதங்களுக்கும் 960 தொலைநகல்களுக்கும் பதிலளிக்கப்பட்டது.

**ஈ) ஊ.சே. நிதியக் கொடுப்பனவுகளுக்கான இ-கூற்று முறைமை**

கைகளினால் செய்யப்படும் கொடுப்பனவு முறைமைகளுக்கு ( சி மற்றும் சி3) பதிலாக உறுப்பினர் பங்களிப்பு விபரங்களை இலத்திரனியல் முறையில் (இ-கூற்று) சமர்ப்பிப்பதற்கு தொழில்தருநர்களை ஊக்குவிப்பதற்காக இ-கூற்று முறைமைகள் தொடர்பில் ஊ.சே. நிதியத் திணைக்களம் பல்வேறு முயற்சிகளை படிப்படியாக மேற்கொண்டது. உறுப்பினர்களுக்குச் சிறந்த பணிகளை வழங்கும் பொருட்டு மொத்தமாக பத்திரங்களற்ற தீர்வொன்றான இ-கூற்றுக்களைச் சமர்ப்பிப்பது செலவினையும் தாமதங்களையும் குறைத்து தொழிற்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்கும். மேலும், பங்களிப்புக்களின் விபரங்களுடன் சேர்த்து ஊ.சே. நிதிய பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கான கணனி வழி உடனடி முறைமையின் கிடைப்பனவானது வியாபாரத்தினைச் செய்யுங்கள் சுட்டெண்ணின் கீழான இலக்கிடலை எய்துவதற்கு முற்தேவைப்பாடான ஒன்றாகும். இது வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டிற்குள் கவர்வதற்கு மிக இன்றியமையாததாகும்.

இ.-கூற்று முறைமை 2012 இறுதிவரை சுயவிருப்பு அடிப்படையில் தொழிற்பட்டு வந்தது. 2012இல் இம்முறைமையினை தொழில்தருநர்களுக்கு கட்டாயமாக்கும் விதத்தில் 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க சட்டத்திற்கான திருத்தமொன்றாக ஊ.சே.நிதிய சட்டத்திற்கு சட்ட ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்பட்டன. திருத்தங்கள் மீதான ஒழுங்குவிதிகள் 2013 மேயில் வர்த்தமானப்படுத்தப்பட்டன.

மேலும், ஊ.சே. நிதியம், இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கும் முகவர்களாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை நியமிப்பதன் மூலம் அவற்றின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை எடுத்தது. இதற்கமைய, கொமர்ஷல் பாங் ஒவ் சிலோன் பிஎல்சியும் இலங்கை வங்கியும் முறையே 2011 ஒத்தோபரிலிருந்தும் 2012 செத்தெம்பரிலிருந்தும் நடைமுறைக்குவரும் விதத்தில் தமது வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல் கொடுப்பனவு வசதிகளை அறிமுகப்படுத்தின. 2013இல் மக்கள் வங்கி, சம்பத் வங்கி பிஎல்சி மற்றும் அட்டன் நஷனல் வங்கி பிஎல்சி என்பன தமது முறைமைகளை அறிமுகப்படுத்தியதுடன் ஊ.சே. நிதியத்திற்குப் பங்களிக்கின்ற தொழில்தருநர்களை அவற்றின் வாடிக்கையாளர்களாகக் கொண்டவர்களுக்கு பெறுமதிகூட்டப்பட்ட பணிகளை வழங்குவதற்காக ஊ.சே. நிதியத் திணைக்களத்துடன் சேகரிப்பு முகவர்களாக இணைந்து கொண்டன. எனவே, மற்றைய பல வர்த்தக வங்கிகளும் கூட இதே பணிகளைத் தமது வாடிக்கையாளர்களுக்கும் வழங்குவதற்காக, தேவையான தகவல் தொழில்நுட்பப் பணிகளை வழங்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. 2013 இறுதியில் 1,868 தொழில்தருநர்கள் உறுப்பினர்களின் பங்களிப்பு விபரங்களையும் கொடுப்பனவுகளையும் கணனி வழியூடாக உடனடியாக அனுப்புவதற்காக பதிவு செய்திருக்கின்றனர். மொத்த 2.4 மில்லியன் செயற்படும் உறுப்பினர்களில் தற்பொழுது 40 சதவீதத்தினரை உள்ளடக்கியுள்ள இவ்வசதியானது உறுப்பினர் கணக்குகளை உடனடியாகவும் துல்லியமாகவும் இற்றைப்படுத்துவதற்கு ஊ.சே. நிதியத்தினை இயலச் செய்கிறது.

மேலும், தொழில்தருநர்கள் மாதாந்த பங்களிப்புக்களை அவர்களின் வங்கியிலிருந்து நேரடியாக ஊ.சே.நிதியத்தின் வங்கிக் கணக்கிற்கு மாற்றல் செய்வதற்கு இயலச் செய்த வேளையில் பங்களிப்பு விபரங்களை மின்னஞ்சலூடாக நேரடியாக ஊ.சே.நிதியத்திற்கு அனுப்புவதனையும் இயலச் செய்தது.

2013ஆம் ஆண்டுப் பகுதியில் தொழில் திணைக்களம் ஊழியர்களுக்கும் அலுவலர்களுக்கும் இ-கூற்று முறைமை பற்றி ஊ.சே. நிதியத் திணைக்களம் 19 விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. இதன் விளைவாக, முறைமைகளுடன் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 2012இல் 1,385 இலிருந்து 2013 இறுதியில் 1,868 இற்கு அதிகரித்தது.

**உ) ஊழியர் சேமநிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு**

ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு வினைத்திறன் மிக்க பணியினை வழங்கும் நோக்குடன் அவர்களின் பெயரினை அவர்களது தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு மீள்பதிவு செய்து கொள்வதற்காகவும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை தனித்துவ அடையாள இலக்கமாக அவர்களுக்கு வழங்குவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டுவரும் ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு, ஊ.சே. நிதியத் திணைக்களத்தினாலும் தொழில் திணைக்களத்தினாலும் கூட்டாக மேற்கொள்ளப்பட்டுவரும் சிறப்புச் செயற்றிட்டமாகும். இது, இரண்டு நிறுவனங்களும் பொதுவான உறுப்பினர் மையத் தரவுத் தளத்தினைப் பயன்படுத்துவதனை இயலச் செய்யும்.

2013 இறுதியில் ஏறத்தாழ 1.4 மில்லியன் செயற்படும் ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் (பங்களிக்கும் உறுப்பினர்) தேசிய அடையாள அட்டை விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இதில் 79 சதவீதமான உறுப்பினர் கணக்குகளுக்கு (1.1 மில்லியன் கணக்குகள்) தனித்துவமான அடையாள அட்டை இலக்கங்கள் வழங்கப்பட்ட வேளையில் மீதி உறுப்பினர்கள் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கும் ஏற்கனவேயிருந்த தகவல்களுக்குமிடையில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையின் காரணமாக அவர்களின் தொழில்தருநர்களிடமிருந்து சரிபார்ப்புக்கள் பெறப்பட்டவுடன் செயன்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

புதிதாக இணைந்த ஊ.சே.நிதிய அங்கத்தவர்களை அதேநேர அடிப்படையில் தேசிய அடையாள அட்டை விபரங்களின் கீழ் பதிவு செய்வது 2010 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு மாதமும் புதிதாக இணைந்து ஊ.சே.நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கும் உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டை விபரங்கள் மாதாந்த கண்காணிப்பு முறைமையிலிடப்பட்டன. 2013இல், 130,000 புதிய அங்கத்தவர்கள் பதிவு செய்யப்பட்டதுடன் புதிய அங்கத்தவர் பதிவு இற்றைப்படுத்தப்பட்டது.

செயற்படும் உறுப்பினர்களின் முன்னைய உறுப்பினர் கணக்குகளை தனித்துவ அடையாள அட்டையுடன் இணைக்கும் வேலைகள் 2013ஆம் ஆண்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் 16,000 முன்னைய உறுப்பினர் கணக்குகள் தனித்துவ அடையாள அட்டையுடன் இணைக்கப்பட்டன. இவ்வசதியானது உறுப்பினர்கள் தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை வழங்குவதன் மூலம் இணையத்தளம் அல்லது குறுந்தகவல் செய்தியூடாக அவர்களது பல்வேறு கணக்குகளினதும் நிலுவைகளை அணுகுவதனையும் பார்வையிடுவதனையும் இயலச் செய்தது.

2013இல் ஊ.சே. நிதியம், செயற்படாத ஊ.சே. நிதிய கணக்குகளைக் கொண்டிருப்பவர்கள் தேசிய அடையாள அட்டை விபரங்களின் கீழ் மீளப் பதிவு செய்து கொள்வதற்காக புதிய பிரிவொன்றினை ஏற்படுத்தியுள்ளது.

**ஊ) பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம்**

பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம், தற்போதுள்ள காகிதாதிகளை அடிப்படையாகக் கொண்ட ஊ.சே. நிதிய முறைமைகளை ஏறத்தாழ காகிதாதிகளற்றதொரு முறைமைக்கு மாற்றியமைப்பதன் மூலம் உறுப்பினர்களுக்கும் ஏனைய ஆர்வலர்களுக்கும் வினைத்திறன் மிக்கதும் காத்திரமானதுமான பணிகளை வழங்குகின்ற உபாய குறிக்கோள்களிலொன்றை அடைவதற்காக தொடங்கப்பட்டிருக்கிறது. பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம் காகிதாதி வேலைகளைக் கையாள்வதுடன் தொடர்பான நேரம், இடப்பரப்பு, செலவு மற்றும் மனித வளங்களைக் குறைப்பதன் மூலம் திணைக்களத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.

இச்செயற்றிட்டத்தினை நான்கு கட்டங்களில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது:

(I) **ஏற்கனவேயுள்ள ஆவணங்களை இலத்திரனியல் வடிவமைப்பிற்கு மாற்றுதல்**

பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டத்திற்கான விலைக்கோரல், பணி வழங்குமொருவருக்கு வழங்கப்பட்டதுடன் ஒப்பந்த உடன்படிக்கை 2013 யூலை 29ஆம் நாள் கையொப்பமிடப்பட்டது. நேர அட்டவணை திட்டத்தின்படி தற்போதுள்ள முதன்மைக்

கோவை, படிவம் டி (தொழில்தருநர் பதிவுப் படிவம்) மற்றும் மீள் பதிவு செய்தல், ஆவணம் ஸ்கான் செய்தல் 2014 ஒகத்தில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(II) **அதேநேரத்தில் ஆவணங்களை ஸ்கான் செய்தல்**

ஆவணங்களைப் பெறுகின்ற மையத்தில் காகிதாதி ஆவணங்கள் குவிவதை ஒழிப்பதற்காக அம்மையத்தில் ஆவணங்களை ஸ்கான் செய்யும் வேலைகள் 2014இன் இரண்டாம் காலாண்டில் தொடங்கவுள்ளது. 2013இல் திணைக்களத்தின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான மென்பொருட்களை பழக்கப்படுத்துவதற்காக குறிப்பிட்ட மாதிரியான மென்பொருள் தேவைப்பாடுகளை விருத்தி செய்யும் செயன்முறையில் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

(III) **இ-பதிவேட்டு அறையினை நிறுவுதல்**

இ-பதிவேட்டு அறையினை நிறுவுவதற்கான வன்பொருளைக் கொள்வனவு செய்வதற்கான விலைக்கோரல் 2013 நவெம்பர் 12ஆம் நாள் மூடப்பட்டதுடன் தொழில்நுட்ப மதிப்பீடு இப்பொழுது இறுதிக் கட்டத்தில் காணப்படுகிறது. வன்பொருட்கள் 2014இன் முதற் காலாண்டில் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

(IV) **ஆவண முகாமைத்துவ முறைமையினை ஏற்கனவேயுள்ள ஊ.சே. நிதிய கணனி முறைமையுடன் இணைத்தல்**

இந்தக் கட்டமானது, மேலே விபரிக்கப்பட்ட மூன்று முக்கிய கட்டங்களும் நிறைவடைந்த பின்னர் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும்.

2014இல் இச்செயற்றிட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்ததும் ஆவணங்களை சமகாலத்தில் பெறக்கூடிய விதத்தில் பரவலாக்குதல், உறுப்பினர் மையப்படுத்தல் மற்றும் ஆவணங்களை வினைத்திறன் மிக்க விதத்தில் சீர்செய்யக்கூடிய மற்றும் மேம்பட்ட செயன்முறைகள் போன்ற நன்மைகள் திணைக்களத்திற்குக் கிடைக்கும் ஆவணங்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான வாடகைச் செலவு மற்றும் ஆவணங்களைக் கையாள்வது தொடர்பாக ஏற்படும் அலுவலர் செலவு என்பன ஒழிக்கப்படுவதன் மூலமாக ஏற்படும் செலவுச் சேமிப்பு நன்மைகள் ஊ.சே. நிதியத் திணைக்களத்திற்கு கிடைக்கும்.

## 9. செலாவணிக் கட்டுப்பாடு

1950இல் நிறுவப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அதற்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களைத் தொடர்ந்தும் ஆற்றியது. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் முக்கிய தொழிற்பாடுகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகளை விடுத்தல், அரச வர்த்தமானி அறிவித்தல்களை விடுத்தல், குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மீது அனுமதிகளையும் உரிமங்களையும் வழங்குதல், பல்வேறுபட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின்மீது கண்காணிப்புக்களை மேற்கொள்ளுதல், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது தொடர்பிலான புலனாய்வுகள் என்பனவற்றினூடாக பொருளாதாரத்தின் நலன்கருதி வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மீது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கொள்கைகளை வடிவமைப்பதாக இருக்கிறது. (2013இல் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் அரச வர்த்தமானி அறிவித்தல்களின் விபரங்கள் ஆண்டறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன).

கடந்த அண்மைக் காலத்தினைப் போன்றே, 2013 இலும் அனைத்துத் தொழிற்பாடுகளும் முதலீட்டாளர் நம்பிக்கையினை உயர்த்துகின்றதும் வெளிநாட்டு ஒதுக்குகளைப் பலப்படுத்துகின்றதும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டினைத் தோற்றுவிக்கின்றதுமான உலகளாவிய வியாபார நடவடிக்கைகளில் இலங்கையின் போட்டித்தன்மை மிக்க அநுகூலங்களை மேம்படுத்துவதற்கான தற்போதைய பேரண்டப் பொருளாதாரக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை மேலும் தளர்த்துவதன் மீது கவனத்தினைச் செலுத்தியிருந்தன.

### 9.1 பணிப்புரைகளை விடுத்தல்

2013இல் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளவாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இருபத்துமூன்று புதிய பணிப்புரைகளை விடுத்தது.

(அ) **வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு:** வெளிநாட்டுச் செலாவணியினை உழைப்பவரின் பெயரில் ஏதேனுமொரு வெளிநாட்டு நாணயத்தில் நடைமுறை, சேமிப்பு அல்லது தவணை வைப்புக்கள் வடிவில் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினைத் திறக்க அனுமதித்தல்.

(ஆ) **வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகளும் கொள்வனவுகளும்:** வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை அத்துடன்/ அல்லது கொள்வனவு தொடர்பில் காலக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு புதிய நியதிகளும் நிபந்தனைகளும் குறித்துரைக்கப்பட்டன.

(இ) **வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு:** வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அதே கணக்கு வைத்திருப்பவரின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து நிதியங்களை மாற்றல் செய்வதன் மூலம் வரவு வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

(ஈ) **சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு:** சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கிற்கு அதே கணக்கு வைத்திருப்பவரின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து நிதியங்களை மாற்றல் செய்வதன் மூலம் வரவு வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

(உ) **வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்:** வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அதே கணக்கு வைத்திருப்பவரின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து நிதியங்களை மாற்றல் செய்வதன் மூலம் வரவு வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

(ஊ) **வதிவற்ற, இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு:** வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அதே கணக்கு வைத்திருப்பவரின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து நிதியங்களை மாற்றல் செய்வதன் மூலம் வரவு வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

(எ) **உள்முக முதலீட்டுக் கணக்கு:** உள்முக முதலீட்டுக் கணக்குகளின் மீது முன்னர் விடுக்கப்பட்ட பணிப்புரை இரத்துச் செய்யப்பட்டது. முன்னர் சொல்லப்பட்ட பணிப்புரையின் கீழ் திறக்கப்பட்ட கணக்குகள் இலங்கை ரூபா கணக்குகளாகத் தொடர்ந்தும் தொழிற்பட முடியுமென அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

(ஏ) **வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு:** வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன்பட்ட தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் பெயரில் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினைத் திறக்க அனுமதிக்கப்பட்டது.

(ஐ) **வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கு:** வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன் தொகைகளை ஏதேனும் வங்கிக் கணக்கொன்றில் வரவு வைக்க அனுமதிக்கப்பட்டதுடன் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டு கணக்கொன்றினைத் திறக்க வேண்டுமென்ற தேவைப்பாடும் நீக்கப்பட்டது.

(ஒ) **இலங்கைக்கு வெளியே வதியும் முதலீட்டாளர்களினால் கூறு நம்பிக்கைகளில் முதலீடு செய்தல்:** வதிவற்றவர்களினால் கூறு நம்பிக்கையில் முதலீடு செய்வது தொடர்பாக 2013 சனவரி 31ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1795/39 கொண்ட அரச வர்த்தமானியில் (அதிவிசேடம்) விடுக்கப்பட்டவாறு கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

(ஓ) **வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு:** வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளின் அறிக்கையிடும் தேவைப்பாடுகள் திருத்தப்பட்டன.

(ஔ) **சுங்கம் செலுத்தப்படாத துறைமுகத்திலான வர்த்தகம்:** சுங்கம் செலுத்தப்படாத துறைமுகத்திலான வர்த்தகத்திற்காக பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளுக்கான கோரிக்கைகளுக்கு வசதியளிக்கும் பொழுது இதற்காக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்பற்றுதல் வேண்டும்.

(க) **புலம்பெயர்வோருக்கான வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை:** தனிப்பட்ட புலம்பெயருமொருவருக்கு ஐ.அ.டொலர் 150,000 வரையிலான ஆரம்ப புலம்பெயர்விற்கான படியினை வழங்குவதற்கும் புலம்பெயர் தடுத்துவைத்தல் கணக்கிலுள்ள உரித்துடைய தொகையிலிருந்து வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது புலம்பெயர்பவரினால் இலங்கைக்கு

வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு புலம்பெயர்வோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்கு உடமையாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி வரவு வைப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

(ங) **வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்:** நாணய வகையினைக் கருத்திற் கொள்ளாது, இன்னொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் பேணப்படும் ஏற்கனவேயுள்ள வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதியத்தினைப் பயன்படுத்தி புதிய வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கினைத் திறக்க அனுமதியளிக்கப்பட்டது.

(ச) **அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் நொஸ்ரோ கணக்குகளைத் திறந்து பேணுதல்:** இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளில் அல்லது இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்டுள்ள அத்தகைய வங்கிகளின் கிளைகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நொஸ்ரோ கணக்குகளைத் திறந்து பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

(ஞ) **பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு:** பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு நிதியங்களைப் பெறவும் அதிலிருந்து நிதியங்களை வெளியே அனுப்புவதற்குமான வழிவகைகளுக்கு கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையினை வழங்கும் நோக்குடன் பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பது மற்றும் தொழிற்படுத்துவது தொடர்பில் புதிய நியதிகளும் நிபந்தனைகளும் குறித்துரைக்கப்பட்டன.

(ட) **வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் இலங்கையர்களுக்கு வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல்:** வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் இலங்கையர்களுக்கான பயணப்படியின் ஒரு பகுதியாக, ஐ.அ.டொலர் 5,000 அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க ஏதேனும் வேறு வெளிநாட்டு நாணயங்களை நாணயத் தாள்களாக வழங்குவதற்கு அனுமதித்தல்.

(ண) **வதிவற்றோர் வசமிருந்த அசையாச் சொத்துக்களின் விற்பனைப் பெறுகைகளை தாய்நாட்டிற்கு அனுப்புதல்:** மூலதன இலாபம் உட்பட விற்பனைப் பெறுகைகள் ஏதுமிருப்பின் அவற்றையும் வதிவற்றவர்களினால் இலங்கையிலுள்ள அசையாச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்டவற்றையும் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது இலங்கைக்கு வெளியே பேணப்படுகின்ற ஒரு கணக்கிற்கு வரவு வைக்க அனுமதித்தல்.

(த) **வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு உடமையாளர்களுக்கு கடன் வசதியளித்தல்:** வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினைப் பேணுகின்ற ஆட்களுக்கு உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கடன் வசதிகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது.

(ந) **வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்:** புலம்பெயர் தடுத்துவைத்தல் கணக்கிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதியத்தினை வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கவும் நாணய வகையினை கருத்திற்கொள்ளாது இன்னொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் பேணப்படும் ஏற்கனவேயுள்ள வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதியங்களைப் பயன்படுத்தி புதிய வதிவற்றோர் வெளிநாட்டுக் கணக்குகளை திறப்பதற்கும் அனுமதிக்கப்பட்டது.

(ப) **அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் நொஸ்ரோ கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்:** நொஸ்ரோ கணக்குகள் தொடர்பிலான விபரங்களை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பும் தேவைப்பாடு இல்லை என்பது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

(ம) **அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் இரண்டாந்தரச் சந்தையில் நாட்டிற்கான இலங்கை முறிகளைக் கொள்வனவு செய்தல்:** 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் இரண்டாந்தரச் சந்தையில் இலங்கை அரசாங்கத்தினால் இலங்கைக்கு வெளியே வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்யவும் வைத்திருக்கவும் மற்றும் மாற்றல் செய்யவும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

(ய) **வெளிநாட்டுக் கப்பல் கம்பனி/ வானூர்தி நிறுவனங்களினால் பேணப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கு, வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் கம்பனி/ வானூர்தி நிறுவனங்களின் முகவருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு என மீளப் பெயரிடப்பட்டது:** இலங்கையில் தொழிற்படுகின்ற கப்பற்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் வானூர்தி நிறுவனங்களின் முகவர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் "வெளிநாட்டு கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வானூர்தி நிறுவனங்களின் முகவர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்" என மீளப் பெயரிடப்பட்டதுடன் வெளிநாட்டு கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வானூர்தி நிறுவனங்களின் முகவர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் தொழிற்படுத்தல் தொடர்பிலான நியதிகளும் நிபந்தனைகளும் குறித்துரைக்கப்பட்டன.

## 9.2 வர்த்தமானி அறிவித்தல்களின் வெளியீடு

2013இல் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் எட்டு புதிய அரச வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டது.

(அ) **வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டம் (2013 சனவரி 01ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1791/15 கொண்ட அரச வர்த்தமானி):** குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்குட்பட்டு, வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து கடன்படுவதற்கு அனுமதியளித்தல்.

(ஆ) **வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ள அனுமதித்தல் (2013 சனவரி 01ஆம் திகதியிடப்பட்ட இலக்கம்** 1791/16) கொண்ட அரச வர்த்தமானி): இலங்கையில் வதியுமொருவர், இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு பொருட்களையும் பணிகளையும் வழங்கியமை தொடர்பில் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ள அனுமதித்தல்.

(இ) **இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை வழங்கவும் மாற்றல் செய்வதற்குமான அனுமதி (2013ஆம் ஆண்டு சனவரி 4ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1791/43 கொண்ட அரச வர்த்தமானி):** குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்குட்பட்டு ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை ஒப்புதலளிக்கப்பட்ட நாட்டு நிதியம், ஒப்புதலளிக்கப்பட்ட பிராந்திய நிதியம், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதியும் தனிப்பட்டவர்கள் ஆகியோருக்கு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் அனுமதித்தல்.

(ஈ) **2010 நவெம்பர் 22ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1681/10 கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தலுக்கான திருத்தங்கள் (2013 சனவரி 10ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1792/28 கொண்ட அரச வர்த்தமானி):** 2010 நவெம்பர் 22ஆம் திகதியிடப்பட்ட இல. 1681/10 கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தலிலுள்ள "உள்முக முதலீட்டுக் கணக்கு" இற்குப் பதிலாக அதன்பாலுள்ள நோக்கத்திற்காக "பிணைய முதலீட்டுக் கணக்கு" என்ற சொற்களை இடுவதன் மூலம் திருத்தப்பட்டது.

(உ) **2011 ஓகத்து 18ஆம் திகதியிடப்பட்ட இல.1719/24 கொண்ட அரச வர்த்தமானிக்கான திருத்தம் (2013 சனவரி 30ஆம் திகதியிடப்பட்ட இல.1795/32 கொண்ட அரச வர்த்தமானி):** இலங்கை வம்சாவழியினரான வதிவற்ற ஆட்கள் உள்ளடங்கலாக வதிவற்ற இலங்கையர்களுக்கு இலங்கை ரூபாவில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக இலங்கையிலுள்ள ஆட்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொதுவான அனுமதி நீடிக்கப்பட்டது.

(ஊ) **கூறு நம்பிக்கையிலுள்ள கூறுகளை வழங்கவும் மாற்றல் செய்வதற்குமான அனுமதி (2013 சனவரி 31ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1795/39 கொண்ட அரச வர்த்தமானி):** குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்குட்பட்டு, வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள், இலங்கைக்கு வெளியேயுள்ள தனிநபர்கள் (இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர்கள் உட்பட) ஆகியோருக்கு கூறு நம்பிக்கையிலுள்ள கூறுகளை வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் அனுமதித்தல்.

(எ) **வதிவற்றோர் வசமுள்ள அசையாச் சொத்தினைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வதிவோருக்கு அனுமதியளித்தல் (2013 யூன் 12ஆம் திகதியிடப்பட்ட இல. 1814/39 கொண்ட அரச வர்த்தமானி):** இலங்கையிலுள்ள அசையாச் சொத்துக்களின் விற்பனை மூலம் கிடைத்த தொகையினை, வெளிநாட்டில் வதியும் நபர் ஒருவருக்கு இலங்கை ரூபாவில் கொடுப்பனவுகளை செய்ய இலங்கையில் வதிவோருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஏ) **2010 மாச்சு 11ஆம் திகதியிடப்பட்ட இல.1644/26 கொண்ட அரச வர்த்தமானிக்கான திருத்தம் (2013 யூன் 12ஆம் திகதியிடப்பட்ட இல. 1814/40 கொண்ட அரச வர்த்தமானி):** மற்றொரு நாட்டிலிருந்து செல்லுபடியாகக் கூடிய நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருக்கும் நபர்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமையுள்ளவர்கள் இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிகளுடன் கணக்குகளை ஆரம்பிப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதித்தல்.

### 9.3 ஒப்புதல்கள்/ அனுமதிப்பத்திரங்கள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்வரும் கொடுக்கல்வாங்கல்களுக்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளவாறு ஒப்புதல்களையும் அனுமதிப்பத்திரங்களையும் வழங்கியது.

**(அ) ஒப்புதல்கள்**

(i) வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்வதற்காக சிறப்பு அனுமதியைக் கோரி வதியும் கம்பனிகளிடமிருந்து 15 கோரிக்கைகள் பெறப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 26.43 மில்லியனை முதலீடு செய்வதற்கு 09 கம்பனிகளுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. ஒரு கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுடன் 05 கோரிக்கைகளை இறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) வெளிநாடுகளிடமிருந்து கடன்படுவதற்காக வதியும் கம்பனிகளிடமிருந்து 16 கோரிக்கைகள் பெறப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 335.50 மில்லியனைக் கடன்படுவதற்கு 14 கம்பனிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இரண்டு கோரிக்கைகளை இறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஆ) அனுமதிப்பத்திரங்கள்/ உரிமங்களை வழங்குதல்**

(i) 8 புதிய நாணய மாற்று அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் எண்ணிக்கை 90இற்கு அதிகரித்தது.

(ii) ஆண்டிற்கு ஐ.அ.டொலர் 4 மில்லியனுக்கும் கூடுதலான வெளிநாட்டு நாணயத்தினை வெற்றிகரமாகக் கொள்வனவு செய்த 5 நாணய மாற்றுநர்களுக்கு வெளிநாட்டு நாணயங்களை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டதனையடுத்து வெளிநாட்டு நாணயங்களை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் எண்ணிக்கை 24ஆக விளங்கியது.

(iii) 34 புதிய கம்பனிகள் சரக்கு அனுப்பும் கம்பனிகளாக பதிவு செய்யப்பட்டதுடன் சரக்கு அனுப்புவோரின் மொத்த எண்ணிக்கை 538 இற்கு அதிகரித்தது.

(iv) 2013 சனவரி 01ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1791/16 கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பொதுவான அனுமதி வழங்கப்பட்டமையின் காரணமாக தீர்வையற்ற கடைகள், சுற்றுலா விடுதிகள்/ உணவகங்கள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணக்கடைகள், பயண முகவர்கள் போன்ற ஏனைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக்கொள்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவது செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் நிறுத்தப்பட்டது.

### 9.4 கண்காணிப்பு மற்றும் புலனாய்வுகள்

2013ஆம் ஆண்டுப் பகுதியில் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் தொடர்பில் 74 புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய மீறல்கள் தொடர்பில் தண்டப் பணமாக சேகரிக்கப்பட்ட ரூ. 8.4 மில்லியன் கொண்ட தொகை திரட்டிய நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. அத்தகைய புலனாய்வுகளில் பெரும்பாலானவை வதிவோரினால் வதிவற்றோருக்குச் செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள் தொடர்பானதாகவும், கட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களினால் அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகள் மீறப்பட்டவை தொடர்பானதாகவும் பொதுவான அனுமதிகளில் எடுத்துக்காட்டப்பட்ட நடைமுறைகளுக்கு மாறாக பிணையங்கள் வழங்கப்பட்டமை மற்றும் மாற்றல் செய்யப்பட்டமை தொடர்பாகவும் காணப்பட்டன.

### 9.5 பொதுமக்கள் விழிப்புணர்வு

செலாவணிக் கட்டுப்பாடுகள் தொடர்ச்சியாக தளர்த்தப்பட்டு வருவதன் விளைவாக, நடைமுறை வெளிநாட்டுச் செலாவணிக் கொள்கைகள் மற்றும் மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களின் அண்மைய தளர்த்தல்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் அறிவினை அதிகரிப்பதற்காக பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பொதுமக்களின் நலன்கருதி "வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்கான படிப்படியான வழிகாட்டல்" என்ற தலைப்பிலான ஏடொன்று வெளியிடப்பட்டது. இவ்வெளியீடானது தற்போதைய நடைமுறைகளுக்கான இன்றியமையாததொரு வழிகாட்டியாக திகழச் செய்யும் குறிக்கோளுடன் பயன்படுத்துநர்களுக்கு சிநேகபூர்வ முறையில் உதவக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மற்றும் தகவல்களுக்கான பிரத்தியேகமான புதிய இணையதளமொன்று (www.ecd.lk) திறக்கப்பட்டுள்ளது.

நிதியியல் நிறுவனங்கள், சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரசபைகள், அரச திணைக்களங்கள் மற்றும் பொதுமக்களுக்காக, ஆய்வரங்குகள் மூலமாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. 2013ஆம் ஆண்டு அத்தகைய நாற்பத்து மூன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

## 10. வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம்

2013இல் வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் இன்றியமையாத பணிகளின் தொழிற்பாட்டு நம்பகத்தன்மையினையும் இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோளை அடையும் விதத்தில் அலுவலவலர்கள் பணியாற்றக்கூடிய வசதியும் அமைதியும் நிறைந்த வேலைச் சூழலையும் உறுதிப்படுத்தியது.

உபாயத்திட்டத்துடன் இணங்கிச் செல்லும் விதத்தில் 2013இல் வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் அதன் இலக்குகளை அடையும் நோக்குடன், வங்கிப் பணிமனையைப் பேணுதல் மற்றும் சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் ஏற்பாட்டு வசதிகளின் வழங்கல், மின்வலு, குளிரூட்டல், நீர் வழங்கல், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் போன்ற அனைத்து இன்றியமையாத பணிகளிலும் தொழிற்பாட்டு நம்பகத் தன்மையினை உயர்ந்த தரத்தில் பேணுதல் உட்பட அதனது முக்கிய தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. திணைக்களம் அத்தகைய வசதிகளை வழங்குவதில் பெரும்பாலும் 100 சதவீத நம்பகத்தன்மையினை அடையக்கூடியதாக இருந்தமையின் மூலம் வங்கியின் தடங்கலற்ற வியாபாரத்தினை உறுதிப்படுத்துவதற்கும் பங்களித்தது. வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் செயற்திட்டங்களின் தொழில்சார் நிபுணத்துவம் மிக்க மதிப்பீட்டு பொறிமுறை, செலவுச் சிக்கனமானதும் உயர்ந்த தரமானதுமான ஒப்பந்தக்காரர்களின் தெரிவு மற்றும் உடன்பட்ட கால இலக்குகளில் தேவைப்பட்ட தரங்களில் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக நெருக்கமான கண்காணிப்பு என்பவற்றின் ஊடாக வினைத்திறன், செலவு சிக்கனம் மற்றும் உரிய காலத்திலான விநியோகம் என்பவற்றின் மூலம் "பணத்திற்கான பெறுமதி" கொண்ட பணிகளை வழங்கக் கூடியதாகவிருந்தது. வசதிகள் முகாமைத்துவ திணைக்களமானது தலைமை அலுவலகத்தின் நுழைவாயில் மற்றும் வரவேற்புப்பீடம் ஆகியவற்றினை நவீனமயப்படுத்திமையின் மூலம் சிநேகபூர்வச் சூழலையும் கவர்ச்சிகரமான தன்மையினையும் தோற்றுவித்தது. மேலும், பல்வேறு நோக்கங்களுக்காக வங்கிக்கு விஜயம் செய்யும் பொதுமக்களுக்காக நுழைவாயிலின் ஒரு பகுதி ஒலி, ஒளி வசதிகளுடன் கூடிய தங்கும் அறையாக மாற்றப்பட்டது. மேலும், நுழைவுக் கட்டுப்பாடுகளுக்குச் சேர்க்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் மேம்பட்ட பண்புகளுடன் இலங்கை மத்திய வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் காணப்பட்ட ஒன்றிணைந்த பாதுகாப்பு முறை தரமுயர்த்தப்பட்டது.

சென்றல் பொயின்ட் கட்டடத்தினை* (தேசிய சமவாயக் கட்டடம் என முன்னர் அழைக்கப்பட்டது) புதுப்பிக்கும் வேலைகள் 2013இல் பூர்த்தியாக்கப்பட்டதன் மூலம் சொத்தின் பெறுமதியில் கணிசமான அதிகரிப்பொன்று ஏற்பட்டது. கொழும்பிலிருந்து நாட்டின் எந்தவொரு இடத்திற்குமான தூரத்தினை அளவிடுகின்ற இடமான கொழும்பு கோட்டையின் மத்தியில் இது அமையப் பெற்றிருப்பதனைக் கருத்திற்கொண்டு இந்தக் கட்டடமானது சென்றல் பொயின்ட் கட்டடம் என மீளப் பெயரிடப்பட்டது. கட்டட நிர்மாணத்தின் உயர்தகுதி தரத்துடன் கூடிய புகழ்மிக்க இதன் நேர்த்திமிக்க பழைய தோற்றத்திற்கு மீண்டும் புனரமைக்கப்பட்டமையானது வசதிகள் முகாமைத்துவ திணைக்களத்தின் தொழில் நிபுணத்துவமிக்க அலுவலர்கள் மற்றும் வெளியிலிருந்து பணிகள் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டட ஒப்பந்தக்காரர்கள் ஆலோசனையாளர்களின் ஒட்டுமொத்த முயற்சியினதும் மூத்த

முகாமைத்துவத்தின் வழிகாட்டல்களினதும் வெளிப்பாடாகக் காணப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட சென்றல் பொயின்ட் கட்டடத்தில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை 2013 நவம்பர், 11 அன்று அதிமேதகு சனாதிபதி அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. வசதிகள் முகாமைத்துவ திணைக்களமானது அதன் தலைமை அலுவலக வளாகத்தில் பல்மாடி ஊர்தி தரிப்பிடத்தின் கட்டட நிர்மாணத்தின் பகுதி - I இனை பூர்த்தி செய்து 2013 ஒக்தோபர், 25 அன்று திறந்துவைத்ததுடன், வங்கியின் உயர் பயிற்சி பெற்ற மூத்த அலுவலர்களின் பெறுமதியான நேரம் வீணடிக்கப்படுவதனை தடுக்கும் விதத்தில் கணிசமான அளவு வாகனங்களிற்கு தரிப்பிட வசதிகள் வழங்கப்பட்டன.

2013 ஓகத்து, 12 அன்று, அபிவிருத்தி நிதி, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நடவடிக்கைகள் மற்றும் தொடர்பான நடவடிக்கைகளிலான பொதுமக்களின் விழிப்புணர்வு என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை வசதிப்படுத்தும் நோக்கோடு வடமாகாண அலுவலகத்திற்கான கட்டடத் தொகுதியை நிருமாணிப்பதற்கான அடிக்கல்லினை வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் கிளிநொச்சியில் நாட்டியது.

ஆண்டுக் காலப்பகுதியில், பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிடமிருந்து இலங்கை மத்திய வங்கியால் கையேற்கப்பட்ட, சேர் பாரன்ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01 இல் அமைந்துள்ள "வைட்எவெய்ஸ் கட்டடத்தின்" திருத்த வேலைகளை வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் ஆரம்பித்தது. மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் கதிர்காமம் மற்றும் நுவரெலியா போன்ற இடங்களிலுள்ள விடுமுறை இல்லத்திற்கான மேலதிக தொடர்மாடியினை நிர்மாணிப்பதற்காகவும் இராஜகிரியாவின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலைய கட்டடத்தை விரிவாக்கம் செய்வதற்காகவும் வசதிகள் முகாமைத்துவ திணைக்களமானது அடிக்கல்லை நாட்டியது.

2013இல், வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைக் குறைக்கும் விதத்தில் ஊர்திகளின் நிலைமைகளை உயர்த்தியதன் மூலம் அதன் ஊர்தி தொகுதியை வலுப்படுத்திக் கொண்டது. வங்கியின் வழமையான தொழிற்பாடுகளுக்கான போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தடங்கலற்ற போக்குவரத்து சேவையை வழங்கியமைக்கு புறம்பாக, இலங்கை மத்திய வங்கியின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட பல்வேறு பன்னாட்டு மாநாடுகளுக்கும் திணைக்களம் போக்குவரத்து வசதிகளை வழங்கியது.

## 11. நிதி

நிதித் திணைக்களம் பன்னாட்டு கணக்கியல் நியமங்கள்/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள், மற்றும் நாணய விதிச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது. நிதித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளக அறிக்கையிடலுக்கான முறைமைகளைப் பேணல், நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், மத்திய வங்கியின் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், மத்திய வங்கியின் உள்ளக மற்றும் வெளிவாரி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஓர் கொடுப்பனவு முறைமையைப் பேணுதல், 12 உள்ளக நிதியங்களின் முகாமைத்துவம், நிலையான சொத்துக்களின் பதிவேட்டைப் பேணுதல் மற்றும் ஊழியர் கடன்களின் தரவுத்தளத்தை பேணுதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 11.1 நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு

அ) **மாதாந்த ஐந்தொகை:** 2013 ஆண்டுக் காலப்பகுதியில் நாணய விதிச்சட்ட தேவைப்பாடுகளின்படி 2012 திசெம்பர் மற்றும் 2013 இன் சனவரி தொடக்கம் நவம்பர் வரையான மாதாந்த ஐந்தொகைகள் தயாரிக்கப்பட்டு அரச வர்த்தகமானியில் வெளியிடப்பட்டன.

ஆ) **வருடாந்த நிதியியல் கூற்றுக்கள்:** 2003 இலிருந்து இந்நோக்கத்திற்காக பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களும் பின்பற்றப்பட்டு வருகின்றன. இக்கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் வெளியிடப்படுகின்றன. 2013 ஆண்டு காலப்பகுதியில் நிதித் திணைக்களம் இந்நியமங்கள் மற்றும் சட்டத்துடன் இணங்கிச் செல்வதற்காக கணக்கீட்டு முறைமைகள் மற்றும் நடைமுறைகளையும் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளையும் தொடர்ச்சியான முறையில் இற்றைப்படுத்தியது. 2013ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஆண்டறிக்கையில் இப்பகுதியின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ளன.

### 11.2 வருடாந்த வரவு செலவுத்திட்டம் மற்றும் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல்

இலங்கை மத்திய வங்கியின் 2014ஆம் ஆண்டிற்கான வருமான மற்றும் செலவின வரவு செலவுத்திட்டம் மற்றும் மூலதன வரவு செலவுத்திட்டம் என்பன இலங்கை மத்திய வங்கியின் ஒவ்வொரு திணைக்களத்தினதும் உபாயத் திட்டத்தின் கீழான செயல் நடவடிக்கைத் திட்டங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டன. இவ்வரவு செலவுத்திட்டத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கை ரீதியான செலவினையும் தொழிற்பாட்டு ரீதியான செலவினையும் காட்டுவதற்காக நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்ட மற்றும் தொழிற்பாட்டு ரீதியான வரவு செலவுத்திட்டமும் தயாரிக்கப்பட்டது. இச் செயற்பாடு 2013 ஓகத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2013 திசம்பரில் இறுதிப்படுத்தப்பட்டது. நாணயச் சபையின் ஒப்புதல் 2013 திசம்பரில் பெறப்பட்டதுடன் 2014 முதலாம் நாளன்று வரவு செலவுத்திட்டம் திணைக்களங்களுக்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்தது. வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாட்டின் வினைத்திறன்மிக்க கண்காணிப்பினைக் கருத்திற்கொண்டு 2013 ஆம் ஆண்டிற்கான காலாண்டு வரவு செலவுத்திட்ட செயலாற்றக் கூற்றுக்கள் திணைக்களங்களுக்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

### 11.3 உள்ளக மற்றும் வெளிவாரி நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவு முறைமை

அ) ஊழியர் ஊதியங்கள், அலுவலர் கடன்கள், தொழிற்பாட்டுச் செலவினங்கள் போன்றவற்றுக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் 2013 இல் நேர இலக்குகளுக்குள் துல்லியமான முறையில் மேற்கொள்ளப்பட்டன.

ஆ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கான அனைத்து வெளிவாரிக் கொடுப்பனவுகளும் இலங்கை மத்திய வங்கியின் நடைமுறைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. 2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 4,916 உள்நாட்டு வழங்குநர்களையும் 258 வெளிநாட்டு வழங்குநர்களையும் உள்ளடக்கிய மொத்த கொடுப்பனவுகள் 5,174 ஆகக் காணப்பட்டது.

இ) பொது திறைசேரி மற்றும் தொடர்பான செயற்றிட்டங்களுக்கான ஏறத்தாழ 3,183 பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளின் 555 தவணைக் கொடுப்பனவுகள் என்பன 2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை II-12 நிதிய முகாமைத்துவத்தின் செயலாற்றம் - 2013**

(தொகை ரூ. மில்லியனில்)

| நிதியங்கள் | உட் பாய்ச்சல்கள் | வெளிப் பாய்ச்சல்கள் | முதலீடுகள் | முதலீடுகள் ஆண்டு இறுதி | சராசரி விளைவு (ஆண்டுக்கு %) |
|---|---|---|---|---|---|
| ஓய்வூதிய நிதியங்கள் | 12,531.8 | 3,254.6 | 9,189.6 | 35,350.9 | 11.29 |
| மருத்துவ நிதியங்கள் | 44.9 | 1.8 | 42.8 | 105.7 | 11.05 |
| சிறப்பு நிதியங்கள் | 968.7 | 19.9 | 949.3 | 1,615.0 | 11.16 |
| மொத்தம் | **13,545.4** | **3,276.3** | **10,181.7** | **37,071.6** | **11.17** |

### 11.4 உள்ளக நிதியங்களின் முகாமைத்துவம்

நிதித் திணைக்களம், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்றவர்களின் 6 ஓய்வூதிய நிதியங்கள், 3 மருத்துவ நன்மை நிதியங்கள் மற்றும் 3 சிறப்பு நிதியங்கள் என்பவற்றை உள்ளடக்கி 12 உள்ளக நிதியங்களை முகாமை செய்தது. காசுப் பாய்ச்சலை முகாமைப்படுத்தல், நிதியங்களின் முதலீடுகள், தீர்ப்பனவுகள் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்,

* இந்தக் கட்டடமானது 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த காலணித்துவ யுகத்தின் கட்டடக்கலையினைக் கொண்டதாகக் காணப்படுவதுடன் 2010ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்டது.

கணக்குகளின் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் வருடாந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் என்பன இது தொடர்பான முக்கிய தொழிற்பாடுகளாகக் காணப்பட்டன. நிதியங்கள் முக்கியமாக அரச பிணையங்கள், வங்கி வைப்புக்கள் மற்றும் உயர் வீதம் கொண்ட கம்பனித் தொகுதிக் கடன்களில் முதலீடு செய்யப்பட்டதுடன் 2013ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் மீதான சராசரி விளைவு வீதம் 11.17 சதவீதமாகக் காணப்பட்டது. அந்நிதியங்களின் விதிகளின் படி 2012 இற்கான இந்நிதியங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

### 11.5 நிலையான சொத்துக்களின் பதிவேடுகளைப் பேணுதல்

நிதித் திணைக்களம் நிலையான சொத்துக்களின் பதிவேட்டினை இலங்கை மத்திய வங்கி பேரேட்டு முறைமையின் நிலையான சொத்துக்கள் நிரலில் பேணுகின்றது. புதிய கொள்வனவுகள் மற்றும் அமைவிடங்கள், அமைவிடங்களின் மாற்றங்கள், மீள்மதிப்பீடுகள், தேய்மானம் மற்றும் அகற்றல்கள் போன்ற அனைத்து மாற்றங்களும் இப் பதிவேட்டில் 2013 காலப்பகுதியில் பதியப்பட்டன. 2013 ஆண்டுக் காலப்பகுதியில் இப்பதிவேடு 1,662 பொருட்களின் கொள்வனவுடனும் 645 பொருட்களின் அகற்றல்களுடனும் இற்றைப்படுத்தப்பட்டது.

### 11.6 அலுவலர் கடன்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்

2013 காலப்பகுதியில் நிதித் திணைக்களம் கடன்களின் அறவிடல் செயன்முறையை வசதிப்படுத்துவதற்காகவும் ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் தகவல்களை வழங்குவதற்காகவும் தகவல் தொழிநுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் கடன் தரவுத் தளத்தை தொடர்ச்சியாகப் பேணியது.

### 11.7 ஏனைய தொழிற்பாடுகள்

#### அ) கொள்வனவுச் செயன்முறை

இலங்கை மத்திய வங்கியின் விதிகளின்படி, நிதித் திணைக்களத்தின் அலுவலர்கள் பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான அனைத்து தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலைக்கோரல் சபைகளிலும் அளவீட்டுச் சபைகளிலும் கலந்து கொள்வதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். 2013இல் அக்கொள்வனவுகள் தொடர்பாக ஏறத்தாழ 360 விலைக்கோரல் சபைகளிலும் அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிலும் கலந்து கொண்டனர்.

#### ஆ) அறிக்கையிடல் மேம்பாடுகள்

2013இல் பொதுப் பேரேட்டில் அறிக்கையிடல் மற்றும் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவம் தொடர்பில் இரண்டு பாரிய மேம்பாடுகள் இடம்பெற்றன. நிதித் திணைக்களத்தின் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் தொடர்பான உதவிகளுடன் கணக்கீட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் புதிய பொதுப் பேரேட்டு முறைமையொன்று இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தினால் உள்ளக ரீதியாக விருத்தி செய்யப்பட்டதுடன் இது 2014 சனவரி 01இல் நடைமுறைக்கிடப்பட்டது. இப்புதிய முறைமை 2003இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிக் கம்பனியினால் (டி.எம்.எஸ் மென்பாக தொழில்நுட்பங்கள்) விருத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்ட ஒரக்கிள் பொதுப் பேரேட்டு முறைமையினை பதிலீடு செய்கின்றது. வெளிநாட்டு ஒதுக்கு வணிக மற்றும் முகாமைத்துவத்திற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுச் சபை மூலம் கொள்வனவு செய்யப்பட்ட குவாவா எனப்படும் ஓர் புதிய திறைசேரி முகாமைத்துவ முறைமை பன்னாட்டுப் பணி வழங்குநரால் விருத்தி செய்யப்பட்டு 2013 நவெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கிடப்பட்டது. இது 2004ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பாட்டிலிருந்த திறைசேரி வணிக அறை முகாமைத்துவ முறைமையினை பதிலீடு செய்தது. கடந்த 10 ஆண்டுகளில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் ரூ.891.4 பில்லியனாலும் (2003இன் ரூ.354.6 பில்லியனிலிருந்து) வெளிநாட்டு ஒதுக்குகள் 2003இன் ஐ.அ.டொலர் 2.3 பில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 7.2 பில்லியனாக அதிகரித்தமையில் பிரதிபலிக்கப்பட்டவாறு மத்திய வங்கியின் கொடுக்கல்வாங்கல்களின் அதிகரித்த அளவு மற்றும் அவற்றின் சிக்கல்தன்மை என்பவற்றினைக் கருத்திற்கொண்டு இவ்விரண்டு மேம்பாடுகளும் மத்திய வங்கியின் தரம், நிதியியல் அறிக்கையிடலின் தரம் மற்றும் வேகம் என்பவற்றை அதிகளவில் உயர்த்தும்.

#### இ) முதலீட்டு மேற்பார்வைக் குழு

நாணயச் சபையால் நிறுவப்பட்ட முதலீட்டு மேற்பார்வைக் குழுவின் வகிபாகம் என்னவெனில் மத்திய வங்கியின் நான்கு திணைக்களங்களால் முகாமை செய்யப்படும் பதினாறு நிதியங்களின் முதலீட்டைக் கண்காணிப்பதும் மதியுரை வழங்குவதுமாகும். இம் முதலீட்டுக் குழுமம் உதவி ஆளுநரினால் தலைமை தாங்கப்படுவதுடன் தொடர்பான திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களுடன் இக்குழுவின் மாதாந்தக் கூட்டங்களுக்கு நிதித் திணைக்களம் செயலகப் பணிகளை வழங்குகின்றது. 2013ஆம் ஆண்டு காலத்தில் குழு 12 கூட்டங்கள் கூடியதுடன் முதலீடுகளின் சரிபார்ப்புக்களுக்காக நாணயச் சபைக்கு காலாண்டு ரீதியில் அறிக்கைகளையும் சமர்ப்பித்தது. 2013இன் இறுதியில் நிதியங்களின் மொத்தப் பெறுமதி ரூ.50.7 பில்லியனாக விளங்கியது.

## 12. நிதியியல் உளவறிதல் பிரிவு

நிதியியல் உளவறிதல் பிரிவு 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின் கீழ் நிறுவப்பட்டுள்ளதுடன் 2007ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மத்திய வங்கியில் தொழிற்பட்டும் வருகிறது. நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகள் பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள ஏனைய சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகள் என்பனவற்றுடனான சாத்தியமான தொடர்புகளைக் கண்டறியும் நோக்கத்தின் பொருட்டு நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல், மேற்குறிப்பிட்டவற்றுடன் தொடர்பான சந்தேகத்திற்குரிய நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய புலனாய்வுகள் மற்றும் அத்தகைய புலனாய்வுகளின் தகவல்களையும் விபரங்களையும் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக தொடர்பான சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அத்துடன்/ அல்லது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளிடம் பரப்புதல் மற்றும் அறிக்கையிடும் நிறுவனங்களின் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான, 2013ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளினதும் ஏனைய நடவடிக்கைகளினதும் முக்கிய பண்புகள் பின்வருமாறு தரப்படுகின்றன.

### 12.1 தகவல்களை திரட்டுதல், புலனாய்வு செய்தல் மற்றும் பரப்புதல்

தற்போதைய நடைமுறைகளின்படி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், பங்குத்தரகர் நிறுவனங்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் என்பன ரூ.1.0 மில்லியன் அல்லது அதற்குக் கூடுதலான அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களிலான காசுக் கொடுக்கல்வாங்கல்களையும் இலத்திரனியல் நிதிய மாற்றல்களையும் (உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டும்) நிதியியல் உளவறிதல் பிரிவின் அதேநேர கணனி வழியூடான தகவல் முகாமைத்துவ முறைமையான "லங்கா பின்" இனூடாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்குத் தொடர்ந்தும் அறிக்கையிட்டன. 2013 சனவரியிலிருந்து அறிக்கையிடும் நிறுவனங்களாக குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்கள், தமது கொடுக்கல்வாங்கல்களை அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் ஒழுங்குமுறைப்படுத்துகின்ற செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கூடாக அறிக்கையிட்டன. அதற்கமைய, 2013ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.3.8 மில்லியனுக்கு மேற்பட்ட காசு/ நிதிய மாற்றல்களும் 498 ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களும் அறிவிக்கப்பட்டன. பூர்வாங்கப் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 73 ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள், மேலதிகப் புலனாய்வுகளுக்காக சட்ட நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட புலனாய்வுகளின் அடிப்படையில் 2013இல் தொகுக்கப்பட்ட நான்கு குற்றச்சாட்டுக்கள் உட்பட சட்ட மா அதிபர் திணைக்களம் இதுவரை பணம் தூயதாக்கலுக்கெதிராக ஏழு குற்றச்சாட்டுக்களையும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான மூன்று குற்றச்சாட்டுக்களையும் தாக்கல் செய்துள்ளது.

### 12.2 அறிக்கையிடும் நிறுவனங்களின் பரீட்சிப்புக்கள்

2013ஆம் ஆண்டுப் பகுதியில் அறிக்கையிடும் நிறுவனங்கள் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றின் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை மற்றும் நிதிசார் கொடுக்கல்வாங்கல் சட்டம் மற்றும் ஏனைய விதிகள் மற்றும் நிதியியல் உளவறிதல்

பிரிவினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாமை என்பனவற்றை மதிப்பிடுவதற்காக அவற்றின் மீது இருபத்தாறு பரீட்சிப்புக்களை நடத்தியது. இதன் பெறுபேறாக, கண்டறியப்பட்ட இணங்காமை தொடர்பில் ஆறு நிதி நிறுவனங்களின் மீது ரூ.2.9 மில்லியன் கொண்ட தண்டம் விதிக்கப்பட்டது.

**12.3 ஏனைய நடவடிக்கைகள்**

**(அ) புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடல்:**

நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க, ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கும் வழக்குத் தொடுப்பதற்குமான நோக்கங்களின் பொருட்டு தகவல்களையும், புலனாய்வினையும் பகிர்ந்து கொள்வதற்கு வசதியளிக்கும் ஒரு பொறிமுறையாக நிதியியல் உளவறிதல் பிரிவு இவ்வாண்டுப் பகுதியில் யப்பான் நிதியியல் உளவறிதல் மையம், லெபனான் சிறப்பு புலனாய்வுகள் ஆணைக்குழு மற்றும் கோஸ்டாரிக்கா மற்றும் டென்மார்க் நிதியியல் உளவறிதல் பிரிவுகள் என்பனவற்றுடன் நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. இதற்கமைய, அத்தகைய கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மொத்த எண்ணிக்கை 2013 இறுதியில் 24 இற்கு அதிகரித்தது.

**(ஆ) ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் ஏற்பட்ட முன்னேற்றம்:**

பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பன மீதான பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துகின்ற நோக்குடன், நிதியியல் உளவறிதல் பிரிவின் சட்ட மீளாய்வுக் குழுவின் ஆலோசனையுடன் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதி நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்திற்கு, குறிப்பாக “பயங்கரவாதி” மற்றும் “பயங்கரவாதிச் சட்டம்” ஆகிய வரைவிலக்கணங்களை உள்ளடக்குவதற்காக அநேக திருத்தங்கள் செய்யப்பட்டன. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களுக்கு உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளரை நெருக்கமாக அவதானியுங்கள் தொடர்பான விதிகளை விடுத்தது.

**(இ) நிறுவன ரீதியாக இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்:**

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் கொடுக்கல்வாங்கல்கள் என்பனவற்றைக் கண்டுபிடித்தல், அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பன தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிக்கும் தொடர்ச்சியான முயற்சிகளாக இவ்வாண்டுப் பகுதியில் 36 விழிப்புணர்வு/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், இலங்கைப் பொலிஸ், கல்வி சார்ந்த மற்றும் பொது நிறுவனங்களிலிருந்து 2,540 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். அவுத்திரேலியாவின் நிதியியல் உளவறிதல் பிரிவான அவுத்திரேலிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு நிதியத்திடமிருந்து பெற்ற உதவியுடன் அத்தகைய நான்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும் நிதியியல் உளவறிதல் பிரிவு, மேல்நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் உயர் நீதிமன்றங்களின் மாண்புமிகு நீதிபதிகளுக்கு சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது.

**(ஈ) பன்னாட்டு உறவுகள்:**

(i) **எக்மன்ட் குழுமம்:** நிதியியல் உளவறிதல் பிரிவு புலனாய்வுகளை மேற்கொள்ளவும், உறுப்பு நாடுகளின் புலனாய்வு மீதான சான்றுகளைத் திரட்டிக் கொள்வதற்காக உறுப்பு நாடுகளை ஒன்றிணைப்பதற்குமாக உலகளாவிய ரீதியில் 132 நிதியியல் உளவறிதல் (2013.12.31இல் உள்ளவாறு) பிரிவுகளைக் கொண்ட சங்கமான எக்மன்ட் குழுவின் உறுப்பினர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொண்டது.

(ii) **பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமம்:** பணம் தூயதாக்கல் தொடர்பாக, ஆசிய பசுபிக் குழுமத்தின் நிறுவன உறுப்பினரென்ற முறையில் இலங்கை, 2013 யூலையில் சீனாவில் நடைபெற்ற 16ஆவது ஆண்டுக் கூட்டத்திலும் 2013 செத்தெம்பரில் மொங்கோலியாவில் நடைபெற்ற இலாபமற்ற அமைப்புக்கள் துறை மற்றும் உண்மையான நாணயங்களின் பாதிக்கப்படக் கூடிய தன்மைகளை மையமாகக் கொண்ட 16ஆவது ஆண்டு மரபுரிமைகள் மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்பும் செயலமர்விலும் கலந்து கொண்டது. 2013 யூலையில் நடைபெற்ற ஆண்டுக் கூட்டத்தில் இலங்கை 2016/2018 காலப்பகுதிக்கான ஆசிய பசுபிக் குழுமத்தின் சுழற்சி முறையில் இணைத் தலைமை நாடாகவும் 2017இல் நடைபெறும் ஆண்டுக் கூட்டத்திற்கும் அனுசரணை வழங்கும் நாடாகவும் தெரிவு செய்யப்பட்டது. இது இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கெதிரான கட்டமைப்பினை வெளிப்படுத்துவதற்கும் பன்னாட்டு முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்தும் பொருட்டு உலகளாவிய நியமங்களுடன் பெருமளவிற்கு இணங்கிச்செல்லும் தன்மைக்கும் குறிப்பிடத்தக்கதொரு நிகழ்வாக அமையும்.

**13. நிதியியல் உறுதிப்பாட்டு ஆய்வுகள்**

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பேணுவது, நாணயவிதிச் சட்டத்தின்படி மத்தியவங்கியின் இரண்டு மையக்குறிக்கோள்களில் ஒன்றாகும். நிதியியல் உறுதிப்பாட்டு ஆய்வுகள் திணைக்களம் தொடர்புடைய ஆராய்ச்சிகளை நடத்துதல் மற்றும் கண்காணிப்பு தொழிற்பாடுகளின் மூலம் இக் குறிக்கோளுக்கு வசதியளித்து வருகின்றது.

நிதியியல் உறுதிப்பாட்டு ஆய்வுகள் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் நிதியியல் உறுதிப்பாட்டுத் துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புக் கட்டமைப்பினூடாக நிதியியல் முறைமையிலான இடர்நேர்வுகளையும் பாதிக்கக்கூடிய தன்மைகளையும் மதிப்பிடுதல், அத்தகைய ஆராய்ச்சிகள் மற்றும் கண்காணிப்பின் அடிப்படையில் பொருத்தமான கொள்கை வழிமுறைகளை முன்மொழிதல் மற்றும் கொள்கை வகுப்போர் மற்றும் ஆர்வலர்களிடையே நிதியியல் உறுதிப்பாடு தொடர்பான விழிப்புணர்வினை மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

**13.1 இவ்வாண்டின் நடவடிக்கைகள்**

**(அ) ஆராய்ச்சி**

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 05 ஆராய்ச்சி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளானது தங்க விலை இடர்நேர்வுக்கு வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உள்ளாகும் தன்மை, இலங்கையின் கம்பனி படுகடன் சந்தை அபிவிருத்தி: பிராந்தியத்திலுள்ள சந்தைகளின் ஒப்பீடு, வங்கிகளின் செயற்படாக் கடன்கள் மீதான பேரண்ட பொருளாதார மாறிகளின் தாக்கங்கள், முறையியல் நிதியியல் சந்தை உட்கட்டமைப்பு மீதான ஆய்வுக் கட்டமைப்பு மற்றும் ஈட்டு நிதி மற்றும் நுகர்வோர் கொடுகடன் என்பவற்றின் மதிப்பீடு: நிதியியல் உறுதிப்பாடு மீதான தாக்கம் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

**(ஆ) பேரண்ட - முன்மதியுடைய கண்காணிப்பு**

பேரண்ட - முன்மதியுடைய கண்காணிப்பின் கீழ், கீழ்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முக்கிய நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத நிறுவனங்களின் ஆரோக்கியத்தை கண்காணிப்பதற்காக காலாந்தர அடிப்படையில் வங்கித்தொழில், வங்கியல்லா, நிதியியல் சந்தைகள் மற்றும் கம்பனித் துறைகளின் நிதியியல் ஆற்றல் குறிகாட்டிகளை தொகுத்தல்.

(ii) நிதியியல் துறை தொடர்பான அனைத்துத் துறைகளிலும் காணப்பட்ட அபிவிருத்திகள், இடர்நேர்வு மற்றும் பாதிக்கக்கூடிய தன்மைகள் என்பவற்றை முக்கியமாகக் காட்டும் நிதியியல் துறை இடநேர்வு மதிப்பீட்டு அறிக்கைகளை கிரமமான முறையில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவிற்கு சமர்பித்தல்.

(iii) நாணயச் சபைக்கு மூன்று சபைப் பத்திரங்கள் சமர்பிக்கப்பட்டன. இவை, தங்கத்தின் விலையில் ஏற்பட்ட தளம்பல்களுக்கு வங்கி, நிதியியல் மற்றும் குத்தகை கம்பனிகள் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை மற்றும் தங்கத்தின் விலையானது அண்மைக் காலங்களில்

வீழ்ச்சியடைந்தமையால் ஏற்பட்ட தாக்கம், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு குறிகாட்டிகள் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழுவினால் முன்மொழியப்பட்ட முன்மொழிவுகள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன.

(iv) காலாண்டு அடிப்படையில் வங்கித்தொழில் துறையின் கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு அதிர்வுகளுக்காக உணர்திறன் பகுப்பாய்வினை பயன்படுத்தி அழுத்தப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டது.

(v) காலாண்டு அடிப்படையில், தனியார் வங்கிகளுக்காக குழுமத் தரவுகளுடன் கூடிய கொடுகடன் இடர்நேர்வு மாதிரியைப் பயன்படுத்தி பேரண்ட அழுத்தப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(vi) ஒவ்வொரு இடர்நேர்வு தொடர்பான அளவுமட்டங்களை அடையாளம் காண்பதற்கு காலாண்டு அடிப்படையில் அழுத்தப் பரீட்சிப்பு அளவுகள் தொகுக்கப்பட்டன. அதாவது, மூலதனப்போதுமை விகிதத்தின் தேவையான மட்டத்திற்கு கீழாக மேலுமொரு வங்கி செல்வதனை தூண்டுகின்ற அதிர்வு மட்டமாகும்.

(vii) வங்கித்தொழில் ஆற்றல் சுட்டெண் காலாண்டு அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டது.

(viii) பணம் மற்றும் முறி, பங்குரிமை மூலதனம் மற்றும் வெளிநாட்டு செலாவணி சந்தைகள் என்பவற்றின் உறுதிப்பாட்டினை மதிப்பிடுவதற்கான நிதியியல் சந்தை உறுதிப்பாட்டு குறிகாட்டியானது மாதாந்த அடிப்படையில் இற்றைப்படுத்தப்படுகிறது.

(ix) இறை, உண்மை, நாணயம் மற்றும் வெளிநாட்டுத் துறைகள் போன்ற பேரண்டப் பொருளாதார துறைகளின் உறுதிப்பாட்டையும் அதேபோன்று உலகளாவிய சூழலையும் காலாண்டு அடிப்படையில் மதிப்பிடுவதற்காக பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டு குறிகாட்டி இற்றைப்படுத்தப்படுகிறது.

(x) நாட்டின் நிதயியல் உறுதிப்பாடு தொடர்பான பொதுவான தோற்றப்பாடு ஒன்றினை வழங்குவதற்காக கைத்தொழில் ஆற்றல் சுட்டெண், நிதியியல் சந்தை உறுதிப்பாட்டுக் குறிகாட்டி, மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டு குறிகாட்டி என்பவற்றை பயன்படுத்தி தொகுக்கப்பட்ட கலப்புக் குறியாட்டியான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குறிகாட்டி காலாண்டு அடிப்படையில் இற்றைப்படுத்தப்படுகிறது.

(xi) கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் முறிவடையக்கூடிய சாத்தியங்களை மதிப்பிடுவதன் மூலம் இலங்கையிலுள்ள கம்பனித்துறையின் கொடுகடன் நம்பகத் தன்மையினை பகுப்பாய்வு செய்யும் கம்பனித்துறை கொடுகடன் நம்பகத்தன்மை குறிகாட்டி காலாண்டு அடிப்படையில் இற்றைப்படுத்தப்படுகிறது.

**(இ) வெளியீடுகள்**

2012ற்கான வருடாந்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு, 2013 ஏப்பிறலில் வெளியிடப்பட்டது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு திணைக்களமானது ஆண்டறிக்கை - 2012 இல் உள்ள "நிதியியல் துறை செயலாற்றம் மற்றும் முறைமை உறுதிப்பாடு" எனும் அத்தியாயத்தையும், அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் - 2013 இல் உள்ள நிதியியல் துறை அபிவிருத்திகள் மற்றும் உறுதித்தன்மை எனும் அத்தியாயத்தையும் தயாரிப்பதில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

**(ஈ) நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீதான குழுக்களை ஒருங்கிணைத்தல்**

நிதியியல் உறுதிப்பாட்டு ஆய்வுகள் திணைக்களம் உள்ளகக் குழுவான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக்குழு மற்றும் தனியார் துறையிலிருந்தான ஆட்களை உள்ளடக்கிய நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக்குழு ஆகிய இரண்டு நிதியியல் உறுதிப்பாட்டுக் குழுக்களின் செயலகமாக தொடர்ந்தும் பணியாற்றியது.

### 13.2 பங்களிப்பு

**(அ) நிதியியல் துறை இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு வசதியளித்தல்**

(I) விசேடமாக நிதியியல் அறிக்கையிடலில் பயன்படுத்தப்படும் சொத்து மதிப்பீட்டிலுள்ள முரண்பாடுகளை கவனத்தில் கொண்டு மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவனம் என்பவற்றின் அலுவலர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

(II) வியாபாரத்தின் மீது தடங்கல்களை அல்லது எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தும் சட்டங்களை அடையாளம் காணுகின்ற சாத்தியக்கூற்றினை பரீட்சிக்கும் நோக்குடன் இலங்கையிலுள்ள நிதியியல் துறைகளின் சட்டங்களுடன் தொடர்புடைய சட்ட நிறுவனங்களுடனும் முதலீட்டு வங்கிகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

**(ஆ) நிதியியல் சந்தை அபிவிருத்திகளுக்கு வசதியளித்தல்**

(I) கம்பனி படுகடன் சந்தை அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்ட நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனை குழுவின் உபகுழு தொடர்பான பல்வேறு கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

## 14. ஆளுநர் செயலகம்

ஆண்டுக் காலப்பகுதியில் என்றுமில்லாதவாறு மாற்றமடைந்து வருகின்ற நிதியியல் மற்றும் பொருளாதார சூழலுக்கு மத்தியிலும் ஆளுநருக்கான விரிவான தொழிற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப உதவிகளை ஆளுநர் செயலகத் திணைக்களம் வழங்கியது. ஆளுநர் செயலகத் திணைக்களமானது அதன் பணிகளை சிறந்த முறையில் ஆற்றிய வேளையில் நாட்டின் பொருளாதார இலக்குகள் மீதும் கவனம் செலுத்தியது. இதன்படி சவாலான பொருளாதார இலக்குகளை அடைவதில் முக்கிய கவனம் செலுத்தும். ஆளுநரின் இலக்குகளின் சுமூகமான தொழிற்பாட்டை இயலச் செய்யும் விதத்தில் உயர்தர செயலகப் பணிகள், நிருவாக உதவிகள் மற்றும் உபசரணைப் பணிகள் போன்ற பணிகள் ஆளுநருக்கு வழங்கப்பட்டன.

ஆண்டு முழுவதும் ஆளுநரின் நிகழ்ச்சி நிரலானது பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டு அதேபோல் உள்நாட்டு உத்தியோகபூர்வ சந்திப்புக்கள், கூட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் போன்றவற்றால் முழுமையாக நிறைந்திருந்ததுடன் ஆளுநர் செயலகத் திணைக்களமானது காத்திரமான தொடர்பூட்டல் மற்றும் தொடர்பான தரப்பினருடனான பின்தொடர் நடவடிக்கைகளினூடாக அவற்றினைச் சீராக அட்டவணையிடக் கூடியதாகவிருந்தது. மேலும், ஆளுநரின் அறிவுறுத்தல்கள் மற்றும் எதிர்பார்க்கைகளுக்கேற்ப ஆளுநருக்குத் தேவையான ஆவணங்கள், காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகள், உரைகள், முக்கிய சொற்பொழிவுக் குறிப்புக்கள், குறிப்புக்கள், கடிதத் தொடர்புகள் போன்றவற்றைத் தயாரித்து தொகுத்தலின் மூலம் ஆளுநருக்கான செயலக உதவிகள் வழங்கப்பட்டன.

வங்கித்தொழில், நிதி மற்றும் பொருளாதார துறைகளிலுள்ள உள்நாட்டு மற்றும் உலகளாவிய பங்கேற்பாளர்களுடனான தொடர்பினை உருவாக்கிப் பேணுதலானது ஆளுநர் செயலகத் திணைக்களமானது அதன் பணிகளை மிகவும் காத்திரமான முறையில் செயலாற்றுவதற்கு மிக முக்கியமானதாகும். குறிப்பாக, இப்பிராந்தியத்தில் தோற்றம் பெற்றுவரும் பொருளாதார நாடாக இலங்கை புகழ்பெற்று வருவதனைக் கவனத்தில் கொள்கையில் உலகளாவிய இணைத்தரப்புக்களுடனான உறவுமுறைகளைப் பேணுவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இப்பின்னணியில் ஆளுநர் செயலகத் திணைக்களமானது உலகளாவிய முதலீட்டாளர்களுடன் கிரமமான அடிப்படையில் ஒன்றோடொன்று இணைந்து செயற்பட வேண்டியிருந்த அதேவேளை, அவர்களுக்கு நம்பகமான தகவல்களை வழங்குவதுடன் அவர்கள் ஆளுநரைச் சந்திப்பதற்கான கூட்டங்களையும் ஒழுங்கு செய்ய வேண்டியிருந்தது. அவ்வாறு செய்யும் பொழுது, தொலைபேசி மற்றும் காணொளி மாநாடுகள், தொலைபேசி மற்றும் காணொளி நேர்காணல், உலகளாவிய முதலீட்டாளர் தளங்களில் கணனி வழி அதே நேரத்திலான கலந்துரையாடல்கள் உள்ளிட்ட வளர்ந்துவரும் நவீன தொடர்பாடல் முறைகள் பயன்படுத்தப்பட்டன.

ஆளுநர் செயலகத் திணைக்களமானது வங்கி மற்றும் இணைக்கப்பட்ட நிறுவனங்களின் ஒட்டுமொத்தத் தொழிற்பாடுகள் தொடர்பான புரிந்துணர்வைப் பேணுவதைத் தொடர்ந்ததுடன், இத்தகைய பின்னணியை ஆளுநரின் கடிதத் தொடர்புகளை வினைத்திறனான முறையில் கையாள்வதற்குப் பயன்படுத்தியது. இப்பணிகள் ஆளுநருக்காக உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் பெருமளவான தொலைத்தொடர்பு

அழைப்புக்கள், அஞ்சல், மின்னஞ்சல் போன்றவற்றைக் கையாள்வதை உள்ளடக்கியிருந்தன. இத்தகைய பணிகளை ஆற்றுகையில், பல்வேறு வழிமுறைகளினூடாகப் பெறப்பட்ட தகவலானது பொருத்தமான சுருக்கப்பட்ட வடிவில் ஆளுநருக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆளுநர் செயலகத் திணைக்களத்தின் மற்றுமொரு முக்கிய பணியானது ஆளுநர் மற்றும் ஆளுநரினதும் வங்கியினதுமாக மிக முக்கிய விருந்தினர்களுக்குத் தேவையான உபசரணைப் பணிகளை கையாள்வதாகும். அத்தகைய பணிகள் 24 மணி நேரமும் வழங்கப்பட்டதுடன் ஆளுநரினதும் நாணயச்சபையினதும் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்தும் விதத்திலும் அவை அமைந்திருந்தன. மேலும், ஆளுநர் செயலகத் திணைக்களத்தினால் உபசரணைப் பணிகள் வழங்கப்படுகையில் உயர்ந்த கண்ணியமான தன்மை பேணப்பட்டதுடன், இது வங்கியின் நன்மதிப்பை உயர்த்துவதற்கும் உதவியது. உபசரணைப் பணிகள் பிரதானமாக உள்நாடு மற்றும் வெளிநாட்டுக்கான ஆளுநரின் அலுவல்சார் பிரயாணங்கள் மற்றும் ஆளுநர் மற்றும் துணை ஆளுநர்களினால் அனுசரணை வழங்கப்பட்ட நிகழ்வுகள் தொடர்பில் காத்திரமான ஒழுங்குகளை உறுதிப்படுத்துவதை உள்ளடக்கியிருந்தது. ஆண்டுக் காலப்பகுதியில், ஆளுநர் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த குறிப்பிட்ட இடங்களை பார்வையிடுவதற்கு பல களவிஜயங்களை மேற்கொண்டார். ஆளுநர் உயர்மட்ட பன்னாட்டு மாநாடுகள், முதலீட்டாளர் பிரச்சாரங்கள் போன்றவற்றினை உள்ளடக்கிய பல்வேறு வெளிநாட்டு நிகழ்வுகளில் ஆளுநர் பங்கேற்றதுடன் முதன்மைப் பேச்சாளராகவும் பிரதம விருந்தினராகவும், அலுவலர்கள் கூட்டங்களிலும் கலந்துகொண்டார். மேலும், ஆளுநர் செயலகத் திணைக்களமானது ஆளுநரின் பல இடைத்தொடர்புகளை வசதிப்படுத்தும் விதத்தில் பெருமளவான காலையுணவு, மதியஉணவு மற்றும் இரவு உணவுக் கூட்டங்களையும் ஒழுங்குபடுத்தியது. அதேநேரம், ஆளுநர் செயலகத் திணைக்களம் வங்கியின் ஏனைய திணைக்களங்களின் நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதற்கும் உதவியது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தவிர, நாட்டின் நலனின் முக்கியத்துவம் பெற்றதும் அவசரமான விடயங்களுடன் தொடர்பானதுமான விடயங்கள் ஆளுநர் செயலகத் திணைக்களத்தால் உயர் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்பட்டன.


## 15. மனித வளங்கள் முகாமைத்துவம்

தொழிற்சந்தையில் சேர்ந்த மிகத் திறமை வாய்ந்த புதியவர்களைக் கவர்ந்து கொள்வதற்காகவும் அவர்களின் பணியினைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் ஏற்கனவேயுள்ள அலுவலர்களின் தொழில்நுட்ப மற்றும் புலமைகளின் இயலளவை உயர்த்துவதற்காகவும் மத்திய வங்கியின் தொலைநோக்கு மற்றும் பணியினை அடையும் விதத்தில் அலுவலரை ஊக்குவிப்பதற்காகவும் 2013இல் சில புதிய கொள்கைகளையும் நடைமுறைகளையும் மனித வளங்கள் திணைக்களம் அறிமுகப்படுத்தியது. மனிதவளத் திணைக்களத்தின் உபாயக் குறிக்கோள் முக்கியமாக, தோற்றம் பெற்றுவருகின்ற சவால்களுக்கு மத்தியிலும் வங்கியின் மையக் குறிக்கோள்களை எய்துவதற்குப் பங்களிக்கக்கூடிய உயர்ந்த உற்பத்திறனும் செயலூக்கமும் முயற்சியுடன் கூடிய குழுவாகச் செயற்படும் ஊழியர்களின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதில் மிகுந்த கவனத்தினைச் செலுத்தியது. மனித வளத் திணைக்களத்தின் உபாயக் குறிக்கோளினை எய்தும் விதத்தில் அதனால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளாக பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி, செயலாற்ற முகாமைத்துவம், தொடர்ச்சியான திட்டமிடல் மற்றும் பதவி உயர்வுகள், ஆட்சேர்ப்பு, தொழில்முறை மாற்று மற்றும் இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டமிடலுடன் இசைந்து செல்லும் விதத்தில் அனைத்து உள்ளக ஆர்வலர்களுடனும் நெருக்கமான உறவு முறைகளைப் பேணுதல் என்பன காணப்பட்டன.

### 15.1 மனித வளங்கள் அமைப்பு

2013 இறுதியில் வங்கியின் மொத்த மனித வள மூலதனம் 1,550 ஊழியர்களாக அமைந்து 692 உயர் வகுப்பு அலுவலர்களையும் 693 உயர் வகுப்பு அல்லாத அலுவலர்களையும் 163 சிற்றூழியர்களையும் 02 ஒப்பந்த அடிப்படையிலான அலுவலர்களையும் உள்ளடக்கியிருந்தது. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் 32 உயர் வகுப்பு அலுவலர்களும் 18 உயர் வகுப்பு அல்லாத ஊழியர்களும் ஓய்வு பெற்றதுடன் 4 ஊழியர்கள் வங்கிப் பணியிலிருந்து இராஜினாமாச் செய்தனர்.

வரைபடம் II-3 2013.12.31 இல் உள்ளவாறு அலுவலர்களின் உள்ளமைப்பு




2013 திசெம்பர் 31இல் வங்கிப் பணியிலுள்ள ஊழியரொருவரின் சராசரி வயது, முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 42 வயதுடன் ஒப்பிடுகையில் 40 வயதிற்கு மேலும் குறைவடைந்தது. இதற்கு 23 வயதிற்கும் குறைவான வயதினைக் கொண்ட வங்கித்தொழில் உதவியாளர்களின் (பயிற்றுநர்கள்) புதிய தொகுதியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமையே காரணமாகும். 2013இன் இறுதியில் வங்கியின் மொத்த ஊழியர்களில் 53.3 சதவீதத்தினர் 40 வயதிற்கும் குறைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

வங்கியின் 27 திணைக்களங்களுக்கும் 5 மாகாண அலுவலகங்களுக்கும் தகைமையும் தகுதியும் வாய்ந்த ஊழியர்கள் வழங்கப்பட்டிருந்தனர். அவர்கள் அவர்களுக்கென திணைக்களங்களின் பல்வேறு வகையான வேலைகளையும் கையாளும் இயலாற்றல் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். உயர் வகுப்பு அலுவலர்களின் மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 83 சதவீதமானோர் முதலாவது பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்புப் பட்டம் அல்லது தொழில்சார்நிபுணத்துவத் தகைமையினைக் கொண்டிருந்தனர். 2013 திசெம்பர் இறுதியில், இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்பான விடயங்களுடன் தொடர்புடைய துறைகளில் அத்தகைய தகைமைகளைக் கொண்ட அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 646 ஆகக் காணப்பட்டது. அவர்களில் 19 அலுவலர்கள் 2013இல் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தினைப் பெற்றிருந்தனர். இலங்கை மத்திய வங்கி திணைக்களங்களின் ஐந்து கொத்தணிகளிடையேயும் மேற்குறிப்பிட்ட 646 ஊழியர்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தன்மையினை கீழேயுள்ள அட்டவணை II-14 காட்டுகின்றது.

### 15.2 மனித வளத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

#### (அ) பயிற்சி மற்றும் அபிவிருத்திகள்

மத்திய வங்கியின் மைய/ துணைத் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட துறைகளில் ஏற்படுகின்ற நவீன தொழில்நுட்ப மாற்றங்கள் மீதான அறிவினை இற்றைப்படுத்துவதன் மூலமும் மற்றைய நாடுகளின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதன் மூலமும் அதன் ஊழியர்களின் தேவையான தகுதிகளை மேம்படுத்திக் கொள்ளுதல் மற்றும் செயலாற்றத்தினையும் உற்பத்தித்திறனையும் உயர்த்திக் கொள்ளுதல் ஆகிய அதன் முக்கிய குறிக்கோள்களை எய்தும் பொருட்டு அதன் ஊழியர்களுக்கு மனித வளத் திணைக்களம் 2013இலும் பயிற்சி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி வாய்ப்புக்களுக்கான ஏற்பாடுகளைத் தொடர்ந்தும் வழங்கியது. 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 27ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி அத்தகைய பயிற்சி நிகழ்சித்திட்டத்தின் செலவினங்கள் மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்டது.

#### (i) குறுங்காலப் பயிற்சி

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு குறுங்காலப் பயிற்சி வாய்ப்பு ஏற்பாடுகளின் முக்கிய குறிக்கோள் யாதெனில் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களினது தேர்ச்சியையும் தகுதிகளையும் அபிவிருத்தி செய்வதேயாகும். வழமை போன்று, முன்னைய ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட தகைமைகாண் திட்டமிடல் பயிற்சியினூடாக

**அட்டவணை II - 13** மனிதவள அமைப்பு - 2013.12.31இல் உள்ளவாறு

| ஊழியர்களின் வகைகள் | ஊழியர்களின் எண்ணிக்கை | | | சராசரி வயது (ஆண்டு) | கல்வி/ தொழில்சார்நிபுணத்துவ தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | | பட்டப்பின் படிப்பு, முதற்பட்டம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | பட்டப்பின் படிப்பு மற்றும் முதற் பட்டம் | பட்டப்பின் படிப்பு மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | முதற்பட்டம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | முதற் பட்டம் | தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் |
| **(1) உயர் அலுவலர் வகுப்பு** | | | | | | | | | | |
| (i) தரம் IV உம் அதற்கு மேலும் | 54 | 16 | 70 | 54 | 13 | 47 | 03 | 04 | 03 | 0 |
| (ii) தரம் III.2 | 52 | 18 | 70 | 51 | 06 | 43 | 01 | 01 | 18 | 0 |
| (iii) தரம் III.1 | 13 | 25 | 38 | 47 | 01 | 12 | 01 | 04 | 19 | 0 |
| (iv) தரம் II | 101 | 116 | 217 | 43 | 21 | 33 | 04 | 20 | 98 | 09 |
| (v) தரம் I | 93 | 130 | 223 | 43 | 05 | 11 | 03 | 31 | 60 | 26 |
| (vi) முகாமைத்துவப் பயிலுநர்கள் | 38 | 36 | 74 | 28 | 02 | 01 | 0 | 19 | 47 | 05 |
| **(2) உயர் அலுவலர் அல்லாதோர் வகுப்பு** | | | | | | | | | | |
| (i) தரம் V | 26 | 20 | 46 | 56 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| (ii) தரம் IV | 67 | 40 | 107 | 50 | 0 | 0 | 0 | 0 | 11 | 04 |
| (iii) தரம் III | 31 | 05 | 36 | 53 | 0 | 0 | 0 | 0 | 0 | 02 |
| (iv) தரம் II | 150 | 128 | 278 | 33 | 0 | 01 | 01 | 08 | 32 | 13 |
| (v) தரம் I | 94 | 07 | 101 | 44 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| (vi) வங்கித்தொழில் உதவியாளர்கள் | 35 | 90 | 125 | 22 | 0 | 0 | 0 | 0 | 0 | 01 |
| **(3) சிற்றூழியர் தரம்** | | | | | | | | | | |
| (i) தரம் I, II மற்றும் III | 150 | 13 | 163 | 35 | 0 | 0 | 0 | 0 | 01 | 0 |
| **(4) ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள்** | 01 | 01 | 02 | 59 | 0 | 0 | 0 | 0 | 0 | 01 |
| மொத்தம் | **905** | **645** | **1550** | **40** | **48** | **148** | **13** | **87** | **289** | **61** |

அடையாளம் காணப்பட்ட தகுதிகாண் இடைவெளிகளின் அடிப்படையில் 2013ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மனித வளத் திணைக்களம் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தது. குறுங்கால உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் அடையாளம் காணப்பட்ட தகுதிகாண் இடைவெளிகளைக் குறைக்கும் நோக்குடனான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இசைந்த விதத்தில் வழங்கப்பட்டன. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட குறுங்கால உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களின் மொத்த எண்ணிக்கை 2,343 ஆகும்.

**(ii) குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி**

அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள், டியூச் புண்டஸ் வங்கி, இந்திய றிசேர்வ் வங்கி, மலேசிய நெகரா வங்கி, பெடரல் றிசேர்வ் வங்கி போன்ற மத்திய வங்கிகள், ப.நா.நிதியம், தென்கிழக்காசிய மத்திய வங்கிகள், பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கி, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய வேளாண்மைக் கடன் அமைப்பு வேளாண்மை வங்கித்தொழிலுக்கான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் போன்ற பன்னாட்டு நிதியிடல் முகவர்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றினால் நடத்தப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், ஆய்வரங்குகள் மற்றும் பார்வையிடல் போன்றவற்றில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன. 2013இல் வழங்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களின் மொத்த எண்ணிக்கை 324 ஆக இருந்தது. 2013இல் வழங்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களின் விபரங்களை கீழேயுள்ள அட்டவணை II - 15 காட்டுகிறது.

குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பங்கேற்பாளர்களுக்கு, வங்கியின் ஒட்டுமொத்த செயலாற்றத்திற்கு பங்கேற்பாளர்களினால் செய்யப்படக்கூடிய பெறுமதிகூட்டல்களை மதிப்பிடும் பொருட்டு, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அவர்களினால் பெறப்பட்ட அறிவினையும் வெளிப்படுத்தல்களையும் பயன்படுத்தி நிறைவு செய்யப்பட வேண்டிய பல்வேறு வகையான ஒப்படைகள் வழங்கப்பட்டன. 2013இல் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்ட 112 ஒப்படைகளில் 101 ஒப்படைகள் நிறைவு செய்யப்பட்டன. ஏறத்தாழ 40 ஒப்படைகள் வங்கியின் தற்போதைய செயன்முறைகளை மேம்படுத்துவதுடன் நேரடியாக தொடர்புபட்டவையாக அல்லது புதிய செயன்முறைகளை அறிமுகப்படுத்துவதுடன் தொடர்பானவையாக அல்லது வங்கியின் ஒட்டுமொத்த செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கான நடைமுறைகளுடன் தொடர்பானவையாக இருந்தன. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் பெறுமதிகூட்டல்கள் மற்றும் நிறைவு செய்யப்பட்ட ஒப்படைகளின் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணை II -16 இல் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II - 14** இலங்கை மத்திய வங்கியின் ஐந்து கொத்தணிகளிலுள்ள திணைக்கள ஊழியர்களின் கல்வி / தொழில்சார் தகைமைகளின் பகிர்வு

| கொத்தணி | கல்வி/ தொழில்சார்நிபுணத்துவத் தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டப்பின் படிப்பு, முதற்பட்டம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள் | பட்டப்பின் படிப்பு மற்றும் முதற் பட்டம் | பட்டப்பின் படிப்பு மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள் | முதற்பட்டம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள் | முதற் பட்டம் | தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள் |
| பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு | 10 | 39 | 3 | 16 | 42 | 5 |
| நிதியியல் முறைமை உறுதிப்பாடு | 12 | 24 | 3 | 27 | 48 | 22 |
| முகவர் தொழிற்பாடுகள் | 11 | 24 | 4 | 12 | 73 | 7 |
| நாணய முகாமைத்துவம் | 1 | 4 | | 1 | 11 | 2 |
| துணைப் பணிகள் மற்றும் ஏனையவை | 14 | 57 | 3 | 31 | 115 | 25 |
| மொத்தம் | **48** | **148** | **13** | **87** | **289** | **61** |

**அட்டவணை II - 15 குறுகிய வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் - 2013**

| துறை | பங்கேற் பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பொருளாதாரம் | 66 |
| நிதியியல் உறுதிப்பாடு | 82 |
| ஒதுக்கு முகாமைத்துவம் | 26 |
| பொதுப்படுகடன் முகாமைத்துவம்/ சொத்துப்பட்டியல் முகாமைத்துவம் | 24 |
| நாணய முகாமைத்துவம் | 7 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் கொடுப்பனவு முறைமை | 9 |
| மத்திய வங்கித்தொழில் | 7 |
| மனித வள முகாமைத்துவம் | 21 |
| ஏனையவை | 82 |
| **மொத்தம்** | **324** |

**அட்டவணை II - 16 2013இல் குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களினால் நிறைவு செய்யப்பட்ட ஒப்படைகளும் பெறுதிகூட்டல்களும்**

| வகை | ஒப்படைகளின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கான வழிகாட்டல்கள் | 23 |
| அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு | 38 |
| கோட்பாட்டுப் பத்திரங்கள் மற்றும் நாடு தொடர்பான ஆய்வுகள் | 14 |
| முறைமைகள் மற்றும் செய்முறைகளை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள் | 37 |
| **மொத்தம்** | **112** |

**(iii) குறுங்கால உள்நாட்டுப் பயிற்சி**

குறுங்கால உள்நாட்டுப் பயிற்சியின் கீழ், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினாலும் மற்றைய அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு நிறுவனங்களினாலும் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்கு ஊழியர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில், 2,019 குறுங்கால உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதுடன் அவற்றில் 1,330 வாய்ப்புக்கள் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினாலும் 689 வாய்ப்புக்கள் ஏனைய புகழ்மிக்க நிறுவகங்களினாலும் வழங்கப்பட்டன. இப்பயிற்சி வாய்ப்புக்கள் முக்கியமாக பொருளாதாரம், வங்கி மேற்பார்வை, நிதி மற்றும் மூலதனச் சந்தைகள், நுண்பாக நிதி, தகவல் தொழில்நுட்பம், தொடர்பூட்டல், உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் என்பனவற்றில் முக்கியமாகக் கவனம் செலுத்தியிருந்தன.

**(iv) செயலமர்வு மற்றும் மொழிப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

ஊழியர்களின் சிறப்புத் தகுதிகளை மேம்படுத்தும் குறிக்கோளுடன், மனித வளத் திணைக்களம் 2013இல் மனித வள முகாமைத்துவம், மொழி மற்றும் தொடர்பூட்டல் மற்றும் அறிக்கை எழுதுதல் ஆகிய துறைகளில் தொடர்ச்சியான செயலமர்வுகளை ஒழுங்கு செய்தது. 2013இல் ஒழுங்கு செய்யப்பட்ட அத்தகைய 16 செயலமர்வுகள் தலைமைத்துவம், செயலூக்கம், தொடர்பூட்டல் மற்றும் அறிக்கை எழுதுதல் போன்ற துறைகளை உள்ளடக்கியிருந்தன. தமிழ் பேசும் சமூகத்திற்கு மிக வினைத்திறனுள்ள முறையில் பணிகளை வழங்குவதற்கு வங்கி அலுவலர்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 2013இல் தமிழ்மொழி வகுப்புக்கள் தொடர்ந்தும் நடத்தப்பட்டன. மனித வளத் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ்மொழி விவாதம், தமிழ்மொழி வகுப்புக்களில் பங்கேற்றவர்கள் தமது தமிழ்மொழித் தேர்ச்சியை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்கியது.

மத்திய வங்கியின் ஐந்து கொத்தணிகளிலுமுள்ள அலுவலர்களுக்காக 2013இல் வழங்கப்பட்ட குறுங்கால உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களின் பரம்பல் கீழேயுள்ள வரைபடம் II-4 இல் காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, மொத்த குறுங்கால பயிற்சி வாய்ப்புக்களில் 39 சதவீதமானவை பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு கொத்தணிகளிலுள்ள திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டன.


கீழேயுள்ள வரைபடம் II-5 மற்றும் II-6 என்பன பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டுக் கொத்தணி மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு கொத்தணியிலுள்ள திணைக்களங்களிடையேயான பயிற்சி வகுப்புக்களின் பகிர்ந்தளிப்பினைக் காட்டுகின்றது. பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டு கொத்தணிக்காக வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் மொத்த எண்ணிக்கையில் 46 சதவீதமானவை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இதேபோன்று நிதியியல் முறைமை உறுதிப்பாடு கொத்தணிக்கு வழங்கப்பட்ட மொத்தப் பயிற்சி வாய்ப்புக்களில் 49 சதவீதமானவை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது.

மனித வளத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பயிற்சி வசதிகளுக்குப் புறம்பாக, அநேக திணைக்களங்கள் அவர்களது ஊழியர்களின் அறிவையும் தேர்ச்சியையும் மேம்படுத்துவதற்காக தொடர்பான திணைக்களங்களுக்குள்ளேயே அவர்களின் சொந்த அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதல், தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தின.


**(v) நீண்ட காலப் பயிற்சி**

நீண்ட காலப் பயிற்சியின் கீழ், இலங்கை மத்திய வங்கி உயர் பதவி அலுவலர்களின் புலமை இயலளவினை மேம்படுத்தும் நோக்குடன், பட்டப்பின் படிப்பு கற்கைகளுக்கான புலமைப் பரிசில்களை வழங்கியது. இவ்வாண்டுப் பகுதியில், மனித வளத் திணைக்களம் நீண்ட காலப் பயிற்சித் தேவைகளை வழங்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட நடுத்தர காலத் திட்டமொன்றினைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. 2013இல் இலங்கை மத்திய வங்கி ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் அவுத்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பிஎச்டி நிகழ்ச்சித்திட்டத்தினையும் முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் தொடர்வதற்காக முறையே 6 அலுவலர்களுக்கும் 11 அலுவலர்களுக்கும் அனுசரணை வழங்கியது. மேற்குறிப்பிட்ட 17 அலுவலர்களில் 13 அலுவலர்கள் தமது ஆய்வுகளை பொருளாதாரத் துறையில் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாண்டுப் பகுதியில் 19 அலுவலர்கள் தமது முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை


**வரைபடம் II-4 குறுங்கால பயிற்சி வாய்ப்புக்கள் - 2013**



**வரைபடம் II-5** பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டு கொத்தணி




**வரைபடம் II-6** நிதியியல் முறைமை உறுதிப்பாடு கொத்தணி




வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் வங்கிப் பணிக்கு மீண்ட வேளையில் 4 அலுவலர்கள் அவர்களது பிஎச்டி பட்டத்தினை நிறைவு செய்த பின்னர் 2014இல் வங்கிப் பணிக்கு மீளுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2009 இலிருந்து 2013 வரையான காலப்பகுதியில் பட்டப்பின் படிப்பைத் தொடர்ந்த அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும் நிறைவு செய்த அலுவலர்களின் எண்ணிக்கை விபரங்களை கீழேயுள்ள அட்டவணை II-17 காட்டுகிறது.

### (ஆ) செயலாற்ற முகாமைத்துவம்

மத்திய வங்கியின் செயலாற்ற முகாமைத்துவ முறைமையானது வேலை தொடர்பான விபரணங்களை தயாரித்தல் மற்றும் உபாய திட்டமிடலுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலக்கினை நிர்ணயித்தல், தொடர்ச்சியான அடிப்படையில் செயலாற்றத்தினைக் கண்காணித்தல், செயலாற்றத்தினை மதிப்பிடல் மற்றும் சிறந்த செயலாற்றத்திற்கு விருது வழங்கல் என்பனவற்றை உள்ளடக்குகிறது. செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறையில், ஊழியரொருவரின் செயலாற்றம் இலக்கு அறிக்கையில் வழங்கப்பட்ட இலக்குகளின் அடைவுகள் மற்றும் அத்தகைய ஊழியரின் இலக்குகளை எய்துவதற்கு பங்களித்த சிறப்புத் தகுதிகளின் நியதிகளில் மதிப்பிடப்படுகிறது. செயலாற்றத் தரமிடல்கள் பதவி உயர்வினை வழங்குவதற்கான பிரமாணக் கூறுகளிலொன்றாக குறித்துரைக்கப்படுகின்றது.

2013இல் மனித வளங்கள் திணைக்களம் உபாயத் திட்டமிடலில் குறித்துரைக்கப்பட்ட நேர நிர்ணயத்தினை எய்தும் விதத்தில் 2012ஆம் ஆண்டிற்கான அனைத்து ஊழியர்களினதும் செயலாற்ற மதிப்பீட்டினை நிறைவு செய்துள்ளது. 2013ஆம் ஆண்டிற்கான தனிப்பட்ட நபர் மற்றும் திணைக்கள ரீதியான இலக்கினை நிர்ணயிக்கின்ற செயன்முறைகள் அட்டவணையிடப்பட்டவாறு நிறைவு செய்யப்பட்டன.

இதற்குப் புறம்பாக, செயலாற்ற முகாமைத்துவ செயன்முறையினை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், மனித வளத் திணைக்களம் நடுவாண்டு செயலாற்றத்தினை மீளாய்வு செய்தது. இது தொடர்பான தரப்பினருக்கு ஆண்டின் முதலரைப் பகுதியில் அலுவலக உறுப்பினரின் செயலாற்ற மட்டம் பற்றிய அபிப்பிராயமொன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பமொன்றினை வழங்குகிறது. மேலும், நடுவாண்டு செயலாற்ற மீளாய்வு பதிவேடுகள் அலுவலக உறுப்பினர்களின் வருடாந்தச் செயலாற்றத்தினை மதிப்பிடுகின்ற வழிகாட்டலொன்றாக பயன்படுத்தப்படுகிறது.

### (இ) தொடர்ச்சியான திட்டமிடல் மற்றும் பதவி உயர்வுகள்

இலங்கை மத்திய வங்கியின் எதிர்கால அறைகூவல்களைக் கையாள்வதற்கு ஊழியர்களின் பதவி முன்னேற்றங்களினதும் தொடர்ச்சியான திட்டமிடலினதும் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில் மனித வளத் திணைக்களம், பதவி உயர்வுகளின் மூலம் வங்கியின் அனைத்து முக்கிய பதவிகளிலும் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு வசதியளித்தது. இதன்படி, உயர் பதவி அலுவலர் தரம் III-1 இல் இருந்த 13 அலுவலர்கள் 2013இல் திணைக்கள துணைத் தலைவர்களாக பதவி உயர்த்தப்பட்டனர். மேலும், உயர் வகுப்பு அல்லா தரத்திலிருந்த ஊழியர்களுக்கு உயர் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குகின்ற பதவி உயர்வு திட்டத்தின் கீழ், உயர் பதவி அல்லா வகுப்பு தரம் IV இலும் V இலும் இருந்த 26 அலுவலர்கள் உயர் வகுப்பு தரம் I இற்கு தரமுயர்த்தப்பட்டனர். வெவ்வேறுபட்ட வகுப்பிலிருந்த 199 ஊழியர்கள் தொடர்பான பதவி உயர்வுப் பிரமாணங்களுக்கமைவாக அவர்களது நேரொத்த அடுத்த தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

### (ஈ) ஆட்சேர்ப்பு

உயர் உற்பத்தித்திறனும் செயலூக்கமும் முயற்சியும் கொண்ட அலுவலர்களின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துகின்ற மனித வளத் திணைக்களத்தின் உபாய குறிக்கோளினை எய்துமொரு வழிமுறையாக, தொழிற்சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மிகத்திறன் வாய்ந்தவர்களை ஈர்த்துக் கொள்வதன் மூலம் வங்கியின் தகுதி வாய்ந்த தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக வங்கித்தொழில் உதவியாளர்களைக் கொண்ட புதிய தொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்ய

**அட்டவணை II-17** இலங்கை மத்திய வங்கியின் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டப்பின் படிப்புத் தகைமைகளைத் தொடங்கிய மற்றும் நிறைவுசெய்த அலுவலர்களின் எண்ணிக்கை

| தகுதி | 2009 | | 2010 | | 2011 | | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் |
| முதுமாணிப் பட்டம் | 4 | 2 | 15 | 6 | 17 | 10 | 18 | 17 | 11 | 19 |
| பிஎச்டி | 1 | 1 | 2 | 1 | 2 | 2 | 4 | 2 | 6 | 0 |

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய 125 தேர்வுநாடிகள் 2013 ஒத்தோபர் 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். மேலும், இவ்வாண்டுப் பகுதியில் வங்கியின் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்திற்கு 9 ஓட்டுநர்களும் மத்திய வங்கியின் அச்சகத்திற்கு வெட்டுநராகவும் புத்தகம் கட்டுபவராகவும் தொழிற்படுகின்ற ஒருவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

(உ) வேலைச் சுழற்சி

பல்தேர்ச்சித் தொழிற்படையினை அபிவிருத்தி செய்வதனையும் வங்கியின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை உயர்த்துவதனையும் குறிக்கோளாகக் கொண்டு 2013இல் மனித வளத் திணைக்களம் வருடாந்த வேலைச் சுழற்சி முறையினைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இதன்படி, ஒரே திணைக்களத்தில் 5 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த அல்லது ஒரே மாகாண அலுவலகத்தில் 2 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த 90 அலுவலக உறுப்பினர்கள் 2013 யூலை 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் திணைக்களங்களின் தகைமைத் தேவைப்பாடுகள் மற்றும் தகைமைகள் மற்றும் ஊழியர்களின் தகைமை மட்டங்கள் என்பனவற்றைக் கவனத்தினைக் கொண்டு 22 திணைக்களங்களிடையேயும் 3 மாகாண அலுவலகங்களிடையேயும் மாற்றல் செய்யப்பட்டனர்.

(ஊ) தொழில்தருநர் - ஊழியர் உறவுகள்

வங்கியில் தொழில் சௌகன்யத்தினைப் பேணுகின்ற வசதி ஏற்பாட்டாளர் என்ற ரீதியில் மனித வளத் திணைக்களம் தொழிற்சங்கங்களுக்கும் வங்கியின் முகாமைத்துவத்திற்குமிடையில் நெருங்கிய பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இது தொடர்பாக மனித வளத் திணைக்களம் தேவையேற்படும் போதெல்லாம் தொழிற்சங்கங்கள் அவற்றின் பிரச்சனைகளைக் கலந்துரையாடுவதற்காக முகாமைத்துவத்தினரைச் சந்திப்பதற்கு வசதி செய்து கொடுத்தது. இதற்கமைய, 2013இல் 15 கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இது முகாமைத்துவமும் தொழிற்சங்கங்களும் ஊதியங்கள், பதிவு உயர்வுகள், பயிற்சி, நலப்பிரிவு, ஆட்சேர்ப்பு மற்றும் வங்கியின் பொதுவான நிருவாகம் என்பன தொடர்பான பிரச்சனைகளில் சிலவற்றை தீர்ப்பதற்கு முகாமைத்துவமத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

### 15.3 பட்டதாரிகள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மாணவர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள்

நாட்டில் உயர் தகைமை வாய்ந்த தொழிற்படையொன்றினைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிக்கும் நோக்குடனும் வங்கியின் சமூகப் பொறுப்பாண்மையினை ஆற்றுகின்றதொரு வழிமுறையாகவும் 2013 இலும் மனித வளங்கள் திணைக்களம் பட்டதாரிகள், பட்டதாரி மாணவர்கள் மற்றம் இலங்கை பட்டதாரி கணக்காளர் நிறுவகத்தின் மாணவர்களுக்கு பயிற்சியை வழங்குவதற்கான வசதியை தொடர்ந்தும் கிடைக்கச் செய்தது. இவ்வாண்டுப் பகுதியில் எல்லாமாக 229 அத்தகைய பயிற்சியாளர்களை விருத்தி செய்யும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி வசதிகளை வழங்கியது.

(அ) பட்டதாரி மாணவர்களுக்கான மூன்று மாத உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

2013இல் மற்றைய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன், மனித வளத் திணைக்களம் தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாகவும் பட்டதாரி மாணவர்களுக்கு மூன்று மாத உள்ளகப் பயிற்சிகளுக்கான வசதிகளை வழங்கியது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது யாதெனில், பல்கலைக்கழகங்களில் பொருளாதாரம், புள்ளிவிபரம், கணக்கியல், வங்கித்தொழில் மற்றும் நிதி, வியாபார முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சட்டம் ஆகிய துறைகளில் பயின்ற கொள்கை ரீதியான கோட்பாடுகளின் நடைமுறை அம்சங்களுடன் பழகிக் கொள்ளச் செய்யும் பொருட்டு பட்டதாரி மாணவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குவதேயாகும். அத்துடன் இந்நிகழ்ச்சித்திட்டம் பட்டதாரி மாணவர்கள் மூன்று மாத காலப்பகுதிக்கு வங்கியின் அநேக திணைக்களங்கள் தொடர்பான அனுபவங்களையும் நேரடியாகப் பெற்றுக் கொள்வதை வசதிப்படுத்தியது. மேலும், தொழிற்சந்தையில் அவர்களின் தொழில்வாய்ப்பிற்கான கேள்வியை உயர்த்துவதற்கு முற்தேவையாக விளங்கும் அவர்களின் ஆளுமையினையும் தொழில்சார் நிபுணத்துவத்தினையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் வழங்கும். 2013ஆம் ஆண்டுப் பகுதியில் 17 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் இலங்கை சட்டக் கல்லூரி என்பனவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 98 மாணவர்களுக்கு 4 உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

(ஆ) பட்டதாரிகளுக்கான வேறு உள்ளகப் பயிற்சிகள்

மேலே குறிப்பிடப்பட்ட கிரமமான 3 மாத உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தமைக்குப் புறம்பாக, மனித வளத் திணைக்களம் 2013இல் சிறிஜெயவர்த்தனபுர மற்றும் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களுக்காக ஊ.சே. நிதியத் திணைக்களத்தில் 2 சிறப்பு உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தது. இச்சிறப்பு உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் 85 பட்டதாரி மாணவர்களுக்கு இரண்டு தொகுதியினராக ஆறு மாத காலப்பகுதிக்கு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்ட வேளையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் 20 பட்டதாரி மாணவர்களுக்கு 3 மாத காலப்பகுதிக்கு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

(இ) பட்டதாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

உயர் கல்வி அமைச்சின் கோரிக்கைக்கு பதிலிறுத்தும் விதத்தில், வெற்றிகரமான மிகச் சிறந்த பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்குவதற்காக மனித வளத் திணைக்களம் 2013இல் பட்டதாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்கியது. முதலாவது பட்டதாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2013 யூலை 01 இலிருந்து 2013 திசெம்பர் வரையான காலப்பகுதியில் 5 பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டது.

(ஈ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மாணவர்களுக்கான கணக்கீட்டுப் பயிற்சி

2013இல் மனித வளங்கள் திணைக்களம் தகைமையும் அனுபவமும் கொண்ட பட்டயக் கணக்காளர்களின் மேற்பார்வையின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் கணக்குப் பயிற்சியாளர்களாகப் பணியாற்ற வேண்டுமென்ற கட்டாயக் கல்வி தேவைப்பாட்டினை நிறைவேற்றும் விதத்தில், பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மாணவர்களுக்கு தொடர்ந்தும் வசதிகளை வழங்கியது. 2013இல் இது தொடர்பில் மனித வளத் திணைக்களத்தினால் வசதி வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 21ஆக விளங்கியது.

### 15.4 2013 காலப்பகுதியில் ஆளுநர் வெளிநாட்டில் பங்குபற்றிய கூட்டங்கள்

1. சனவரியில் டெல்லியில் நடைபெற்ற பொதுநலவாய வியாபார அரங்கம், பாங்கொக்கில் நடைபெற்ற முதலீட்டு வங்கியாளாகளின் கூட்டம் மற்றும் சிங்கப்பூரில் நடைபெற்ற சிட்டி ஏசியா பசுபிக் முதலீட்டாளர் மாநாடு 2013 என்பனவற்றில் கலந்து கொண்டார்.
2. பெப்புருவரியில் ஓமானில் இடம்பெற்ற வங்கியாளர் மற்றும் முதலீட்டாளர்களுடனான கூட்டம், அபுதாபியில் வங்கியாளர்களுடனான கூட்டம் மற்றும் முக்கிய உரையாற்றுவதற்காக மும்பையில் இடம்பெற்ற கொழும்பு பங்குச் சந்தையின் முதலீட்டாளர் அரங்கத்தில் கலந்து கொண்டார்.
3. மாச்சில் டோக்கியோவில் இடம்பெற்ற இலங்கை வியாபார அரங்கம் மற்றும் கோலாலம்பூரில் நடைபெற்ற 4ஆவது நிதியியல் உறுதிப்பாட்டு சபையின் ஆசியாவிற்கான பிராந்திய ஆலோசனைக்குழுக் கூட்டத்திலும் பங்குபற்றினார்.
4. ஏப்பிறலில் வாசிங்கடன் டிசி இல் இடம்பெற்ற ப.நா.நிதியம்/ உலக வங்கியின் இளவேனில் கால கூட்டங்கள் மற்றும் லண்டனில் இடம்பெற்ற முதலீட்டாளர் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.
5. மேயில் பாங்கொக்கில் நடைபெற்ற பணவனுப்பல்கள் தொடர்பான உலகளாவிய அரங்கத்தில் பங்குபற்றினார்.
6. யூனில் கோலாலம்பூரில் இடம்பெற்ற 7ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் உயர் தலைமைத்துவக் கூட்டத்தில் முக்கிய உரையாற்றியதுடன் மேதகு சனாதிபதியின் தூதுக்குழுவில் உறுப்பினராக தன்சானியா மற்றும் சீசெல்சில் நடைபெற்ற அரசாங்கம் மற்றும் வியாபாரத் தலைவர்களின் கூட்டங்களில் கலந்து கொண்டார்.
7. யூலையில் சிங்கப்பூரில் இடம்பெற்ற உலகளாவிய பொருளாதார அரங்கத்தில் ஆசியாவின் பங்கு என்பது பற்றி விளக்க சொற்பொழிவு ஆற்றியதுடன் வாசிங்டன் டிசி இல் இடம்பெற்ற முதலீட்டாளர் கூட்டங்களில் கலந்து கொண்டார்.
8. செத்தெம்பரில் கொங்கொங்கில் நடைபெற்ற இலங்கையில் முதலீடு செய்யும் முதலீட்டாளர் அரங்கம் மற்றும் பீஜிங், சங்காய் மற்றும் பரிசில் இடம்பெற்ற வங்கியாளர் கூட்டங்களில் பங்கு பற்றினார்.
9. ஒத்தோபரில் பாங்கொங்கில் இடம்பெற்ற முதலீட்டு வங்கியாளர் கூட்டங்கள், தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் 30ஆவது

வருடாந்த மாநாட்டில் முக்கிய உரையினையும் 7ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் இடைநிலை தலைமைத்துவக் கூட்டத்தில் முக்கிய உரையினையும் ஆற்றியதுடன் கோலாலம்பூரில் இடம்பெற்ற 3ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் லத்தீன் அமெரிக்க நாணய ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்டதுடன் டோக்கியோவில் இடம்பெற்ற ஆசியாவிற்கான நிதி உறுதிப்பாட்டுச் சபையின் பிராந்திய ஆலோசனைக் குழுவில் முன்னணி கலந்துரையாடலாளராகவும் கலந்து கொண்டார்.

10. நவெம்பரில் சீசெல்ஸ் மத்திய வங்கியின் 35ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களில் பிரதம உரையினை ஆற்றுவதற்காகக் கலந்து கொண்டார்.

### 15.5 நியமனங்கள்

1. திருமதி கே. குணதிலக, கண்காணிப்பாளர், ஊழியர் சேம நிதியத் திணைக்களம் 2013 யூலை 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மனித வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
2. திரு. பி. டபிள்யு. டி. என். ஆர். ரொட்றிகோ, பணிப்பாளர், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் 2013 யூலை 01ஆம் நாளிலிருந்து ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
3. செல்வி கே. சரவணமுத்து, பணிப்பாளர், புள்ளிவிபரத் திணைக்களம் 2013 யூலை 01ஆம் நாளிலிருந்து கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
4. திரு. ஏ.ஆர்.கே. விஜேசேகர, பணிப்பாளர், மனித வளத் திணைக்களம் 2013 யூலை 01ஆம் நாளிலிருந்து புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
5. திரு. வி. பாஸ்கரன், மேலதிக பணிப்பாளர், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் 2013 ஒத்தோபர் 07ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
6. திரு. ரி. எம். இசட். முத்தாலிப், மேலதிகப் பணிப்பாளர், ஆளுநர் செயலகத் திணைக்களம் 2013 நவெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தொடர்பூட்டல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
7. திரு. எல். டி. டி. வை. பெரேரா, மேலதிகக் கண்காணிப்பாளர், ஊழியர் சேம நிதியம் 2013 நவெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### 15.6 ஓய்வு பெறல்கள்

1. திரு. டபிள்யு. எம். கருணாரத்ன, உதவி ஆளுநர் 2013 மாச்சு 20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
2. திருமதி சி. பிரேமரத்ன, துணை ஆளுநர், 2013 யூன் 20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

### 15.7 விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்

1. திரு. கே. டி. ரணசிங்க, உதவி ஆளுநர், பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக.
2. திருமதி கே. எம். ஏ. என். டவுலகல, உயர் பதவி அலுவலர் தரம் IV, நிதித் திட்டமிடல் அமைச்சிற்கு
3. திரு. எஸ்.ஆர். ஆட்டிகல, உயர் பதவி அலுவலர் தரம் IV, நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.
4. திரு. கே.எம்.எம். சிறிவர்தன, உயர் பதவி அலுவலர் தரம் IV, நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.
5. திரு. எம். மகிந்த சாலிய, உயர் பதவி அலுவலர் தரம் II, நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.
6. திரு. எம். எஸ். கந்துன்கே, உயர் பதவி அலுவலர் தரம் II, கோல்டன் கீ கிரடிற் கார்ட் கம்பனி லிமிடெட்டிற்கு.
7. திரு. எஸ். ஜி. எஸ். டி. ஜெயசேகர, உயர் பதவி அலுவலர் தரம் II, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிற்கு.
8. திரு. எஸ். ஜே. கே. குறுகே, உயர் பதவி அலுவலர் தரம் II, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிற்கு.
9. திரு. எச். எம். என். தர்சன, உயர் பதவி அலுவலர் தரம் II, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிற்கு.
10. திரு. ஜே. ஏ. ஏ. பிரியந்த, உயர் பதவி அலுவலர் தரம் I, சனாதிபதி செயலகத்திற்கு.
11. திரு. ஏ. டபிள்யு. யு. சி. என். பண்டார, உயர் பதவி அலுவலர் தரம் I, கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட்டிற்கு.
12. திரு. கே. பி. எம். பெரேரா, உயர் பதவி அலுவலர், தரம் I, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிற்கு.
13. திரு. டி ஜயவர்த்தன உயர் பதவி அலுவலர் தரம் I, பொதுமக்கள் தொடர்பு மற்றும் தகவல் அமைச்சிற்கு.
14. திருமதி. எஸ் ரணசிங்க, உயர் பதவி அலுவலர் தரம் II, உயர் நீதிமன்றத்திற்கு.
15. திருமதி. ஏ. சி. அபேசிங்க, உயர் பதவி அலுவலர் தரம் I, பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.
16. திரு. ஈ. ரி. எம். சொய்சா, உயர் பதவி அல்லா தரம் II அலுவலர், கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட்டிற்கு.
17. திருமதி. எச். எம். எஸ். எஸ். குணவர்த்தன, சட்ட அலுவலர் (ஒப்பந்தம்) நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

### 15.8 சம்பளமற்ற கல்வி விடுப்பிலுள்ள அலுவலர்

1. திரு. யு. பி. அலவத்தஹேை, உயர் பதவி அலுவலர் தரம் IV, 2012 செத்தெம்பர் 4ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சம்பளமற்ற கல்வி விடுப்பில் உள்ளார்.

## 16. தகவல் தொழில்நுட்பம்

வங்கியின் தூண்டுவிசையாகத் தொழிற்படும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது வங்கியின் நடுத்தர கால உபாய தொலைநோக்கான 2016 அளவில் ஐ.அ.டொலர் 100 பில்லியன் பொருளாதாரத்தை அடையும் நோக்கில் பல புத்தாக்க வியாபாரத் தீர்வுகளை நடைமுறைப்படுத்தியது. 2013இல் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கீழ்வரும் ஐந்து முக்கிய பணிப்புரைகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

1. உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்ப திட்டங்களை வழங்குதல்
2. தேசிய நலன் வாய்ந்த திட்டங்களுக்காக தகவல் தொழில்நுட்பத்திறனை வியாபார அபிவிருத்திகளுடன் இணைத்தல்
3. தகவல் தொழில்நுட்பச் செயலாற்றம் மற்றும் நியமங்களினை அளவிடல்
4. இ-அலுவலகம் மற்றும் தடங்கலற்ற வியாபாரத்திற்காக உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை மேற்கொள்ளல்
5. மனித மூலதன அபிவிருத்தி

### 16.1 உற்பத்தி திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்பத் திட்டங்களை வழங்குதல்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் வங்கியினிடையே பல்வகைப்பட்ட வியாபார நடவடிக்கைகளை வழங்குவதற்காக அதனது தொழில்சார் தகைமையினை சரியான பாதையில் பயன்படுத்தி பல புத்தாக்க வியாபாரத் தீர்வுகளைத் தொடர்ச்சியாக அறிமுகப்படுத்திய அதேவேளையில் தற்போதுள்ள 100 இற்கும் மேற்பட்ட தன்னியக்க பிரயோகங்களுக்கான ஆதரவு மற்றும் பேணல் பணிகளை வழங்கியது. ஆண்டுக்காலத்தில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய செயற்திட்டங்கள் பின்வருமாறு:

அ. ஒருங்கிணைக்கப்பட்ட பொதுப் பேரேட்டு கணக்கீட்டு முறைமையானது, கணக்கீட்டு அமைப்பு பட்டியல் மற்றும் சிக்கலான வியாபார பிரயோகங்களின் இடைமுகங்களுடன் வங்கியின் புதிய வியாபாரத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக விருத்தி செய்யப்பட்டது. இப்புதிய முறைமை

உள்ளக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட முறைமைகள் மற்றும் தர உறுதிப் பரீட்சைகள் மற்றும் மதிப்புக்கள் ஓர் கணக்காய்வு நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆய்வு என்பவற்றின் பின்னர் நேரடி நடவடிக்கைகளுக்காக நிறுவப்பட்டது. இலத்திரனியல் பொதுப் பேரேட்டுக் கணக்கீட்டு முறைமை ஏற்றுக்கொள்ளப்பட்ட கைத்தொழில் நடைமுறைகள் மற்றும் நியமங்களுடன் இணைந்த வங்கியின் நிதியியல் கணக்குகளின் மத்திய களஞ்சியமாகத் தொழிற்படுகிறது.

ஆ. குவாவா என்று அழைக்கப்படும் ஓர் புதிய திறைசேரி முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளை பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு வழங்குகிறது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் வெளிநாட்டு பரிமாற்ற ஒப்பந்தங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களினை மேற்கொள்வதற்காக குவாவா மற்றும் இலத்திரனியல் பொதுப் பேரேட்டு கணக்கீட்டு முறைமை என்பவற்றிற்கிடையே இடைமுகத்தினை அபிவிருத்தி செய்துள்ளது.

இ. ஊழியர் சேமநிதிய தகவல் தொழில்நுட்ப முறைமையை வினைத்திறனான முறையில் பேணுவதற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கிய அதேவேளையில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் அம்முறைமையினை மேலும் தரமுயர்த்துவதற்கு பின்வரும் செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதில் முனைப்புடன் செயற்பட்டது.

I. தொழில்தருநர்களுக்கான இணையதளத்தினை அடிப்படையாகக் கொண்ட பங்களிப்புச் சேகரிப்பு முறைமை

II. இலத்திரனியல் முறை மூலம் பதிவு செய்யும் அறை நிறுவுதலுக்காக பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்திட்டம்

III. ஊழியர் சேம நிதியப் பங்களிப்பினை இலத்திரனியல் முறை மூலம் வர்த்தக வங்கிகளினூடாகச் சமர்ப்பித்தல்

ஈ. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் திணைக்களம் என்பவற்றிற்கான பின்நெற் பிரயோகத்தினை பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் முறைப்பாட்டு அறிக்கை மாதிரிகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் தரமுயர்த்தியது.

உ. வெளிமுக முதலீட்டு கணக்கு மாதிரியினை அறிமுகப்படுத்தியதன் மூலம் பொரெக்ஸ்நெற் பிரயோகத்தினை விரிவுபடுத்தியதுடன் புதிய செலாவணிக் கட்டுப்பாடல் பணிப்புரைகளுக்கிணங்க பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு மாதிரி புதுப்பிக்கப்பட்டது.

ஊ. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு செலாவணிக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மீதான பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக இணையதளம் ஒன்றை உருவாக்குவதற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது.

எ. ஈ எச் ஆர் நெற் பிரயோகத்தினை மேம்படுத்துவதற்கு தற்போதைய விற்பனையாளர் வழங்கும் பிரயோகத்திற்குப் பதிலாக சம்பளப்பட்டியல் மற்றும் கடன் மாதிரிகள் வடிவமைக்கப்பட்டது.

ஏ. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் கட்டுப்பணம் மற்றும் காப்புறுதி மாதிரிகளின் கீழ் புதிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை விருத்தி செய்யப்படுகிறது.

ஐ. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் உள்முக மற்றும் வெளிமுகத் தீர்ப்பனவுச் செயல்முறைகளை கையாள்வதற்காக ஓர் புதிய காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையினை கொள்வனவு செய்தல் மற்றும் நடைமுடைக்கிடல் செயன்முறையில் ஈடுபடல் மற்றும் மத்திய முகாமைப்படுத்தும் கணக்கீட்டு முறைமை ஒன்றிற்காக இலத்திரனியல் பொதுப் பேரேட்டு கணக்கீட்டு முறைமையுடன் ஓர் இடைமுகத்தினை உருவாக்குதல்

ஒ. தேசிய வேளாண்மை - வியாபார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்தல், மீள்நிதியிடல், மீள்கொடுப்பனவு மற்றும் பயனாளிகள் கடன்களின் விரைவான தீர்ப்பனவு என்பனவற்றை வழங்குவதற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு இணையத்தள பிரயோகம் ஒன்றினை அறிமுகப்படுத்தல்

ஓ. ஓர் புதிய அணுகும் வழி கட்டுப்பாட்டு முறைமையினை வங்கியில் அறிமுகப்படுத்துவதற்காக தொழில்நுட்ப உதவியினை வழங்குதல்.

ஔ. மத்தியில் முகாமை செய்யப்படும் அலுவலர் வரவுப்பதிவேடு முறைமையொன்றினைப் பேணுவதற்காக ஊழியர் சேம நிதியத்தில் உள்ள "இலகுநேர" வரவுப் பதிவேட்டு முறைமையுடன் தலைமைக் காரியாலயத்தின் இலத்திரனியல் நேர மற்றும் விடுப்பு பதிவுசெய்தல் முறைமையினை ஒருங்கிணைத்தல்

க. வங்கி அலுவலருக்கான இலத்திரனியலூடான சந்திப்பு இடமான "மன்சல" எனப்படும் ஓர் கம்பனி உள்ளக இணையகத்தை நடைமுறைக்கிடல்

### 16.2 தேசிய நல செயற்திட்டங்களுக்காக தகவல் தொழில்நுட்பத்தினை வியாபார அபிவிருத்திகளுடன் இணைத்தல்

ஆண்டுக்காலத்தில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு முக்கிய பணிப்புரையானது தகவல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களை தேசிய மட்ட செயற்திட்டங்களுடன் இணைப்பதனால் தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் மற்றும் தேசியநலன் வியாபாரத் தேவைப்பாடுகளுக்கிடையிலான இடைவெளியை நிரப்புவதற்கு உதவுகின்றது. இந் நோக்கத்தினை அடைவதற்காக தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் தமது நிபுணத்துவத்தினை பின்வரும் திட்டங்களுக்கு வழங்கினர்:

அ. லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் தேசிய கொடுப்பனவு ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கிணங்க பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழி செயற்றிட்டத்தின் கீழ் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி இயந்திரத்தினை நடைமுறைக்கிடல்

ஆ. உள்நாட்டு இறைத் திணைக்களத்தின் செயற்பாடுகளை தன்னியக்கமாக்குதல்

இ. பொதுத் திறைசேரிக்கான ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல்முறைமை ஒன்றினை அறிமுகம் செய்தல்

ஈ. பன்னாட்டு நியமங்களின் அமைப்பின் நியமங்களுடன் இணைந்து செல்லும் வகையில் நிதியியல் துறைக்கான கணனி அவசர பதிலளிக்கும் குழு ஒன்றினை அமைப்பதன் ஆரம்பநிலை பாதுகாப்பு நியமங்களை இலங்கை கணனி அவசர பதிலளிக்கும் குழு மற்றும் இலங்கை நியம நிறுவனம் ஆகியவற்றுடன் தயாரித்தல்.

### 16.3 தகவல்தொழில்நுட்ப செயலாற்றம் மற்றும் நியமங்களினை அளவிடுதலை இணைத்தல்

இணைய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி கைகளினால் செய்யப்படும் முறைமைகளை தன்னியக்கப்படுத்துவதற்கான கேள்விகள் அதிகரித்தமை மற்றும் கைத்தொழிலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகவல் முறைகளின் நியமங்களுடன் இணைந்து செயலாற்றத்தினை அளவிடுதல் என்பனவற்றை கருத்திற்கொண்டு தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தகவல் முறைமைகள் மற்றும் உட்கட்டமைப்பு இரண்டினதும் பணிக்கூற்று சிக்கலான முறைமைகளின் கிடைப்பனவினை மேம்படுத்தல் மற்றும் பாதிக்கப்படும் தன்மையின் அளவீட்டினை நடாத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதன்விளைவாக, தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் முறையான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் மற்றும் ஏனைய சிக்கலான முறைமைகள் என்பவற்றின் கிடைப்பனவினை 99.9 சதவீதத்தால் உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளதுடன் உள்ளக தொழில்நுட்ப ஆற்றல்களைப் பயன்படுத்தி நடாத்தப்பட்ட பாதிக்கப்படக்கூடிய தன்மையில் கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட சில விடயங்களின் மேம்படுத்தலை இயலச்செய்தது.

### 16.4 இலத்திரனியல் அலுவலகம் மற்றும் தடங்கலற்ற வியாபாரத்தினை தொடர்தல் என்பவற்றிற்கான உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்

எதிர்காலப் பொருளாதாரத்திலான அதிகரித்த கொடுக்கல்வாங்கல்களைப் பூர்த்தி செய்வதற்காகவும் வெவ்வேறு திணைக்களங்களின் செயற்பாடுகளின் தொழிற்பாட்டினை சுமூகமாக மேற்கொள்வதற்கு வசதியளிப்பதற்கும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு தேவைப்பாடுகளின் தரமுயர்த்தலை வசதிப்படுத்துவதற்காக பின்வரும் முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. வங்கி மற்றும் ஊழியர் சேம நிதியத்தின் முதற்தர மற்றும் அனர்த்த மீட்பு நடவடிக்கைகளுக்காக அனுமதிக்கப்பட்ட அனைத்து ஏஎஸ் 400 சேமிப்பிகளுக்குப் பதிலாக தற்போதைய அதேநேர பதிலிறுத்தல் வசதி தரமுயர்த்தப்பட்டதுடன் ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் திணைக்களத்திற்கிடையிலான ஓர் புதிய வசதி அமைக்கப்பட்டது.

ஆ. சிறந்த செயலாற்றத்திற்காக சிக்கலான உள்ளக பிரயோகம் மற்றும் தரவுத் தொகுப்பக சேவையகங்கள் புதிய தொழில்நுட்பம், உயர் இயலளவு மற்றும் வேகம் என்பனவற்றுடன் சேர்க்கப்பட்டு மீளமைக்கப்பட்டது.

இ. வங்கியின் இனங்காணப்பட்ட இடங்களில் முகாமைசெய்யப்பட்ட கம்பிகள் அற்ற இணையத்தள சேவை அமைக்கப்பட்டது.

ஈ. பன்னாட்டு நியமங்கள் அமைப்பின் நியமங்களுடன் இணைந்து செல்லும் வகையில் ஓர் புதிய அனர்த்த மீளாய்வுத் தளம் ஆரம்பிக்கப்பட்டது.

உ. மாகாண அலுவலங்களை தலைமை அலுவலகத்துடன் இணைப்பதற்கு தனியார் வலையமைப்பு நிறுவப்பட்டதுடன் மாகாண அலுவலகங்கள் மைய மற்றும் முகவர் தொழிற்பாடுகளை எதிர்வு கூறப்பட்டதன் படி சிறப்பாக வழங்குவதற்காக கம்பிகள் அல்லா உள்ளகப்பகுதி வலையமைப்பு மாகாண அலுவலகங்களில் அமைக்கப்பட்டது.

ஊ. நிதியியல் நிறுவனங்களினால் ஒழுங்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுவதனை வசதிப்படுத்தவும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் இலத்திரனியல் தொடர்பாடலின் கடத்துகையை மேம்படுத்தலுக்குமாக குத்தகை இணைப்பின் இயலளவு 20 எம் பி பி எஸ்க்கு விரிவாக்கப்பட்டது.

### 16.5 மனித மூலதன விருத்தி

புதிய தொழில்நுட்பவியல் மற்றும் வியாபாரப் பணிப்புரைகளில் மனித மூலதனத்தின் தொடர்ச்சியான அபிவிருத்திக்கான தேவைகள் மற்றும் எப்பொழுதும் மாற்றமடையும் சூழலில் உள்ளக தனிப்பட்டவர் திறன்கள் என்பனவற்றினை இனங்கண்டு கொள்கிறது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஆண்டுக் காலத்தில் ஆய்வுக்கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைகள் மூலமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளை வழங்கி தனது மனித மூலதனத்தினை வலுப்படுத்தியது.

## 17. உள்ளகக் கணக்காய்வு

வங்கியில் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் 1951 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பாட்டிலிருந்து வருகின்றன. 2013 இல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் உலகளாவிய நியமங்கள் மற்றும் சிறந்த தொழில் நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் மீளமைக்கப்பட்டன. இதற்கிணங்க, திணைக்களத்தின் பெயர் முகாமைத்துவ கணக்காய்விலிருந்து உள்ளகக் கணக்காய்வு என மாற்றப்பட்டது. திணைக்களத்தின் பணி மற்றும் வேலையின் செயற்பரப்பு, பொறுப்பாண்மை, சுதந்திரம் மற்றும் கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் அலுவலர்களின் பொறுப்புக்கூறும் தன்மை, மற்றும் அதிகாரம் என்பனவும் உள்ளகக் கணக்காய்வு சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கணக்காய்வுகள் ஐக்கிய அமெரிக்காவின் உள்ளகக் கணக்காய்வாளர் நிறுவகத்தின் பன்னாட்டுத் தொழில்சார் நிபுணத்துவ நடைமுறைகளின் கட்டமைப்பிலுள்ள நியமங்கள் மற்றும் தொழில்துறையின் மிகச் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டன. 2013 ஆண்டுக் காலத்தில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

### 17.1 கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்ளுதல்

**அ. 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டம்**

வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது இலங்கை மத்திய வங்கியின் அனைத்து முக்கியமான நடவடிக்கைகளை உள்ளடக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டதுடன் நாணயச்சபையின் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**ஆ. உள்ளகக் கணக்காய்வு நடைமுறை**

கணக்காய்வானது திட்டமிடல், செயற்படுத்தல், தொடர்பூட்டல் மற்றும் தீர்மான நடவடிக்கைகள் எடுத்தல் அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்களினது நடவடிக்கைகள் ஏற்புடைத்தான விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காகப் பின்தொடர்தல் ஆகிய நான்கு தொடர்ச்சியான படிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டது.

**இ. கணக்காய்வுகளை மேற்கொள்வதன் முன்னேற்றங்களை அறிக்கையிடல்**

கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்வதில் காணப்படும் முன்னேற்றம் மதியுரைக் கணக்காய்வு குழுவின் விதந்துரைப்புக்களுடன் நாணயச் சபைக்கு காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடப்பட்டது. நடவடிக்கை அறிக்கைகள் அரையாண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**ஈ. கணக்காய்வு தொடர்பான ஏனைய நடவடிக்கைகள்**

ஆண்டுக்காலத்தில் கணக்காய்வு வசதிப்படுத்தல் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் அனைத்து திணைக்களத் தலைவர்களிற்கும் வழங்கப்பட்டன. கணக்காய்வு வசதிப்படுத்தல் வழிகாட்டல்களின் தேவைப்பாடுகளின்படி, திணைக்களத் தலைவர்கள் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதற்காக கணக்காய்வு ஒருங்கிணைப்பு அலுவலர்களை நியமித்தனர்.

### 17.2 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயிற்சியளித்தல் ஏற்பாடுகள்

தகவல் முறைமைகளின் முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு "தகவல் முறைமைகளின் பாதுகாப்பு" விழிப்புணர்ச்சித் திட்டமொன்று இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களிற்காக ஒழுங்குபடுத்தப்பட்டது. அலுவலர்களின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்காக கணக்காய்வுக் கருத்துக்களை அனைத்து அலுவலர்களிற்கும் அதேநேரத்தில் சுற்றோட்டத்தில் விடுவதற்கான ஓர் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. திணைக்களம் பட்டதாரிகள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் மாணவர்களிற்கு உள்ளகக் கணக்காய்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களில் பயிற்சிகளையும் வழங்கியது.

### 17.3 நாணயச்சபை மதியுரை கணக்காய்வுக் குழு

மதியுரைக் கணக்காய்வுக் குழு நாணயச்சபையின் ஒரு உறுப்பினரையும் இரண்டு வெளிவாரி தொழில்சார் கணக்காய்வு நிபுணர்களையும் உள்ளடக்கியிருக்கிறது. நாணயச் சபைக்கான செயலாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு செயலாளராகவும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உதவிச் செயலாளராகவும் இருப்பார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கான செயலகப் பணி வசதிப்படுத்தல்களை வழங்கியது.

ஆண்டுதோறும் குறைந்தது ஆறு(06) மதியுரைக் கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுதல் வேண்டும். ஆண்டுக்காலத்தில், ஏழு (07) மதியுரை கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் உள்ளகக் கணக்காய்வின் முன்னேற்றம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கான முகாமைத்துவ பதிலுறுப்புக்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டன.

மேலும், கணக்காய்வு மூலவள ஒதுக்கீடு, முகாமைத்துவ ஒப்புதல் செயன்முறைகளிலிருந்து உள்ளகக் கணக்காய்வினை மீளப் பெறல் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைகள் மீதான கணக்காய்வு என்பன தொடர்பாக மதியுரை கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நாணயச்சபையின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### 17.4 வெளிவாரிக் கணக்காய்விற்கு வசதியளித்தல்

கணக்காய்வாளர் நாயகம் வெளிவாரிக் கணக்காய்வினை மேற்கொள்வதுடன் வெளிவாரிக் கணக்காய்விற்கான வசதிப்படுத்துனராக நாணயச் சபையின் செயலாளரூடாக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் தொழிற்படுகிறது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் நியதிகளுக்கிணங்க நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு நோக்கத்திற்காக கணக்காளர் நாயகத்தினால் ஏர்னஸ்ட் அன்ட் யங், பட்டயக் கணக்காளர்கள் கணக்காய்வில் ஈடுபடுத்தப்பட்டது. இதற்கிணங்க உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்கும் கண்டறியப்பட்ட விடயங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும் கடிதத் தொடர்புகளைக் கையாள்வதற்கும் நாணயச் சபையின் செயலாளருக்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியது.

## 18. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

நாணய விதிச் சட்டம், இலங்கையின் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பினை வழங்குவதுடன், இது பன்னாட்டு ஒதுக்குகளை பேணல் மற்றும் உள்ளமைப்பு, ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டினை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மற்றும் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம் தொடர்பிலான நாணயச் சபையின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் போன்ற துறைகளையும் உள்ளடக்கியிருக்கிறது. இது தொடர்பில், நாணய விதிச் சட்டத்தின் 67ஆவது பிரிவு, சொத்து வகைகள் தொடர்பிலான

அளவுகள், இணைக்கிணைத்தரப்பினர், முதலீட்டு சாதனங்கள் மற்றும் அதன் வழங்குநர்கள் ஆகிய விடயங்களைக் கையாளுகின்றது. நாணயச்சபை ஒதுக்கு முகாமைத்துவத்தின் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருவாய் நோக்கங்கள் என்பனவற்றை உயர்த்துவதற்காக ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளின் செயற்பரப்பினை மேலும் விரிவாக்குவதற்கு பணிக்கக்கூடும். இதற்கமைய, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம், பன்னாட்டு ஒதுக்கு முகாமைப்படுத்தும் பணிகளை செயற்படுத்துகின்ற பொறுப்பும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகளை முகாமைப்படுத்தும் பணியும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

### 18.1 பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்

பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீடுகள், நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ வழி காட்டல்களுக்கமைய வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ சபையின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. ஐ.அ. டொலர்கள், யூரோ, ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர் போன்ற குறித்துரைக்கப்பட்ட நாணயங்களைக் கொண்ட பன்னாட்டு ஒதுக்குகள் முக்கியமாக இரண்டு சொத்து வகைகளான நிலையான வருவாய் பிணையங்களிலும் தங்கம் உட்பட பணச் சந்தை சாதனங்களிலும் முதலீடு செய்யப்பட்டன. வங்கியின் நிலையான வருமான பிணையங்கள் சொத்துப்பட்டியல் உயர்ந்த தரமிடல் வீதங்களைக் கொண்ட அரச பிணையங்கள், அரசின் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள், அரச பிணையங்களின் முகவர் மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. நிலையான வருமானப் பிணையங்கள் மற்றும் பணச் சந்தை என்பன மீதான முதலீடுகள் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் அத்தகைய சொத்துக்கள் மீதான வருமானம் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட இணைத்தரப்பினர்களாகவுள்ள உயர்ந்த தரமிடலைக் கொண்ட வர்த்தக வங்கிகள், மத்திய வங்கிகள் மற்றும் முதலீட்டு இல்லங்கள் என்பன ஊடாக மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன. வங்கியின் திரவத் தேவைப்பாடுகள், படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் இடர்நேர்வு முகாமைத்துவ அளவுகள், வருமான உருவாக்க இயலுமைகள் மற்றும் நாணயச் சபையின் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள் என்பன ஒதுக்குச் சொத்துப்பட்டியலின் சொத்துக்களையும் நாணய உள்ளமைப்பினையும் நிர்ணயிப்பதற்கு பரிசீலனையில் கொள்ளப்பட்ட முக்கிய காரணிகளாக விளங்கின.

2013ஆம் ஆண்டு பன்னாட்டு நிதியியல் சந்தைக்கான தளம்பலாண்டாக இருந்தது. இவ்வாண்டின் முக்கிய பண்புகளாக ஐக்கிய அமெரிக்காவின் கணியம்சார் குறைந்து செல்லும் ஊகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் வரவு செலவுத்திட்டத்திற்கு ஒப்புதலளிப்பதில் காணப்பட்ட தாமதங்களின் காரணமாக அரசாங்கத்தின் கதவடைப்பு என்பன காணப்பட்டன. பொருளாதார மீட்சியில் காணப்பட்ட படிப்படியான முன்னேற்றத்தின் காரணமாக ஐக்கிய அமெரிக்காவின் கணியம்சார் தளர்த்தல் - 3 நிகழ்ச்சித்திட்டம் பற்றிய ஊகங்கள் உலகம் முழுவதிலுமுள்ள சந்தைகளைப் பாதித்ததுடன், அதிகரிக்கின்ற ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரி விளைவு வீதங்கள் மூலதன வெளிப்பாய்ச்சல்களுக்கு வழிவகுப்பதன் காரணமாக முன்னேற்றங்கண்ட மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தைகளில் நாணயங்கள் விரைவாக தேய்வடையக் காரணமாயின. ஐரோப்பிய பிராந்தியம் அதன் சொந்த அரசியல் மற்றும் நிதியியல் பிரச்சனைகளைக் கொண்டிருந்ததுடன் பணச் சுருக்கமடைவதற்கான இடர்நேர்வுகள் தொடர்ந்தும் காணப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவின் மீட்சியுடன் தங்கத்தின் விலைகள் 2013இல் 25 சதவீதமான சாதனை மட்டத்தினால் வீழ்ச்சியடைந்தது. இத்தகைய சூழ்நிலைகள் வெளிநாட்டு ஒதுக்குகளின் திரவத்தன்மை மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் வருமானத்தில் நியாயமானதொரு வீதத்தினை உழைப்பதற்கு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு பெரும் சவால்களைத் தோற்றுவித்தன. எனினும், வங்கியின் ஒட்டுமொத்த ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் வெளிநாட்டு நாணய வர்த்தகப்படுத்தல் நாணயச் சந்தை முதலீடுகள், மூலதன இலாபம் மற்றும் நிலையான வருமானப் பிணையங்களிலிருந்து பெறப்பட்ட நறுக்கு வருமானம் என்பனவற்றினூடாக 2013ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 194.4 மில்லியன் (ஏறத்தாழ ரூ.25 பில்லியன்) கொண்ட தேறிய வெளிநாட்டு வருமானத்தை உருவாக்கியது.

பாரம்பரியமான அபிவிருத்தியடைந்த சந்தைகளை உறுதியற்ற மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் பீடித்தமையின் காரணமாக பன்முகப்படுத்தலுக்காகவும் வருமானத்தினை உச்சப்படுத்தும் நோக்கங்களுக்காகவும் தென் கொரியா, சீனா மற்றும் இந்தியா போன்ற தோற்றம் பெற்றுவரும் சந்தைகளில் துணிகரமாக முதலீட்டு முயற்சிகளில் ஈடுபட்டது. மேலும், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் என்றும் அதிகரித்துவரும் இடர்நேர்வுகளிலிருந்து அதன் ஒதுக்குகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அதன் முதலீடுகளுக்காக சாத்தியமான வழிகளைக் கண்டுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது.
கொடுக்கல் வாங்கல்களின் அதிகரித்துவரும் எண்ணிக்கையையும் மற்றும் புதிய முதலீட்டு சாதனங்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்திலும், பல்வேறுபட்ட சந்தைத் தளம்பல்களுக்கு உள்ளாகும் இடர்நேர்வுகளைத் தணிக்கும் விதத்திலும் இலங்கை மத்திய வங்கியின் புதிய சாதனங்கள் காணப்பட்டமையினால் புதிய திறைசேரி முகாமைத்துவ முறைமை 2013இன் தொடக்கப் பகுதியில் ஆரம்பமானது. புதிய முறைமையின் நேரடித் தொழிற்பாடுகள் 2013 நவெம்பர் 01 இலிருந்து ஆரம்பமாகின.

### 18.2 இடர்நேர்வு முகாமைத்துவம்

உருவாக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்களில் குறித்துரைக்கப்பட்ட சொத்துப்பட்டியல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளுக்கு இணங்குவதனை உறுதிப்படுத்தும் விதத்தில், பன்னாட்டு ஒதுக்குச் சொத்துப்பட்டியலின் முகாமைத்துவத்திலிருந்து எழுகின்ற இடர்நேர்வுகளை பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் நடு அலுவலகத்தினால் தொடர்ச்சியான அடிப்படையில் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டது. தீவிரமான வர்த்தகப்படுத்தல் செயலாற்றமானது உபாய இலக்குகள், அதேபோன்று அடிப்படைய அளவுக் குறியீட்டு சொத்துப்பட்டியல் என்பனவற்றிற்கு எதிராக மதிப்பிடப்பட்டமையானது உண்மையான நிலைமைகளுக்கு எதிரான ஒப்பீட்டினை இயலச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. தொடர்ச்சியாக தோற்றம் பெறும் இடநேர்வு செயற்பாடு காரணமாக எதிர்காலத்தில் தோற்றம் பெறும் ஆபத்தான சூழ்நிலைகள் அடையாளப்படுத்தப்பட்டு உரிய நேரத்தில் கவனமான மற்றும் நுட்பமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நேரிடக்கூடிய செலாவணி வீத அல்லது நாணய இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்காக பன்னாட்டுச் சந்தை நிகழ்வுகள் நுணுக்கமாக ஆராயப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் விடாது காணப்பட்ட உயர்மட்ட தளம்பல்கள் யூரோ வலயத்தில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மைகள், யப்பானிய வங்கியினால் ஊக்குவிக்கப்பட்ட மரபு முறைக்கு மாறான நாணயக் கொள்கைகள், ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் வங்கியின் படிப்படியாக குறைந்து செல்லும் அரச பிணைகள் மீள் கொள்வனவு வசதி பேச்சுவார்த்தைகள் மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் பின்னடைவுகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் சொத்துப்பட்டியல் பன்முகப்படுத்தல்களைப் பின்பற்றியதுடன் உபாய நாணய இணைப்புக்களையும் பயன்படுத்தியது. நேரிடவிருக்கின்ற வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் அதேபோன்று உலகளாவிய நாணயச் சந்தைத் தோற்றப்பாடு மற்றும் வர்த்தக மாதிரி என்பனவும் நாணயத்தின் உள்ளமைப்பினைத் தீர்மானிக்கும் பொழுது பரிசீலனையில் கொள்ளப்பட்டன. நிலையான வருமானப் பிணையங்கள் சொத்துப்பட்டியலின் பெறுமதி குறுங்காலத்தில் குறைவடையும் தன்மையினால் இழப்பிற்குள்ளாகும் தன்மை முதலீட்டின் வினைதிறன் காலத்தினைப் பயன்படுத்தியதன் மூலம் மதிப்பிடப்பட்ட வேளையில் இடர்நேர்வுகள் பொருத்தமான மட்டத்தில் பேணப்பட்டமையினை உறுதிப்படுத்துவதற்கு இடர்நேர்வுவேற்புப் பெறுமதி கணிப்புக்கள் பயன்படுத்தப்பட்டன. வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான வெளிநாட்டுச் செலாவணி இழப்புக்கள் “இழப்பு நிறுத்தற் கட்டளைகள்” மற்றும் “வணிகர் வரையறைகள்” மூலம் கட்டுப்படுத்தப்பட்டன. வட்டி வீத மாற்றங்களுக்கு நிலையான வருமான பிணையங்களின் சொத்துப்பட்டியல் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையினை அளவிடுவதற்கு உணர்திறன் பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டது. வட்டிவீத இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையானது எதிர்பார்க்கப்பட்ட விளைவு வளையி அசைவுகளை அடிப்படையாகக் கொண்டு நிலையான வருமானம் மற்றும் பணச்சந்தை முதலீடுகள் என்பவற்றின் காலஅளவுகளை வேறுபடுத்தியதன் மூலம் குறைக்கப்பட்டது.

இணைத்தரப்புக் கொடுகடன் இடர்நேர்வு முகாமை முறையின் உதவியுடன் தொடர் தேர்ச்சியாக இணைத்தரப்பு கொடுகடன் இடநேர்வு மதிப்பீடு செய்யப்பட்டு முகாமை செய்யப்பட்டதுடன் இணைத்தரப்பின் நிதியியல் குறிகாட்டிகள், கொடுகடன் தரமிடல் மற்றும் அவர்களின் சந்தை வெளிப்படுத்துகை கருத்தில் கொள்ளப்பட்டு அவர்களுடனான வர்த்தக எல்லை நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் தரமிடல் குறைவாகக் காணப்பட்ட பல இணைத்தரப்பினர்களின் வர்த்தக எல்லையும் மாற்றி அமைக்கப்பட்டது. சாத்தியமான இடர்நேர்வுகளுக்குள்ளாகக் கூடிய தன்மைகள் அவர்களது கொடுகடன்

தவறுகைகள் பரஸ்பர பரிமாற்றல் வீச்சு மற்றும் பங்குச் சந்தை விலைகள் என்பனவற்றினூடாக அவதானிக்கப்பட்டன.

தொடர்பான நாணயங்களிலுள்ள சொத்துக்களின் குறிப்பிடத்தக்க விகிதம் ஆண்டு முழுவதும் திரவ நிலையில் வைக்கப்பட்டு இருந்தமையினை உறுதிப்படுத்தியமையின் மூலம் திரவத்தன்மை இடர்நேர்வு தணிக்கப்பட்டமையானது அனைத்துக் கொடுப்பனவுகளும் சரியான முறையில் கௌரவிக்கப்படுவதனை இயலச் செய்தன. சரிபார்ப்புச் செயன்முறைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றமை, புதிய வர்த்தகப்படுத்தல் முறைமைகளின் கொள்வனவு, முதலீட்டு வழிகாட்டல்கள் மீள வலுவூட்டப்பட்டமை என்பன பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்திற்கு ஆதரவளிப்பதற்காகக் காணப்பட்ட ஊழியர்கள், முறைமைகள் மற்றும் செயன்முறைகளிலிருந்து தோன்றுகின்ற தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையினைக் குறைக்க உதவின.

### 18.3 உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகளைக் கண்காணித்தல்

உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்தும் நோக்குடன் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைத் தொடர்ந்தும் கண்காணித்ததுடன் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதங்களின் ஏதேனும் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் விதத்தில் பொருத்தமான நடவடிக்கையினையும் மேற்கொண்டது. நாளாந்த தேறிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகளின் மீது குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இணங்கியொழுகுகின்றமையினை இது உறுதிப்படுத்தியது. மேலும், பல்வேறுபட்ட அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களுக்கு செலாவணி வீதங்கள் பற்றிய தகவல்களைப் பரப்புவது பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பொறுப்பாகத் தொடர்ந்தும் இருக்கிறது.

வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் மேலும், நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதிக்கும் நோக்குடன் வர்த்தக வங்கிகளின் மீது விதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியில் தேறிய திறந்த நாளாந்த எல்லைகள் 2013இல் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. இதற்கமைய இப்பணிப்புரையானது 2012இன் ஐ.அ.டொலர் 64.7 மில்லியனிலிருந்து 2013 ஐ.அ.டொலர் 120 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

உள்ளகத்தில் விருத்தி செய்யப்பட்ட 'பன்னாட்டுத் தொழிற்பாடுகள் முகாமைத்துவ முறைமை' இன் முதலாவது கட்டம் இவ்வாண்டுப் பகுதியில் நடைமுறைக்கிடப்பட்டமையானது கூடுதலான தொழிற்பாட்டு வினைத்திறனை வழங்கியதுடன் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கான கட்டுப்பாட்டுப் பண்புகளையும் அதிகரிக்கச் செய்தது. இது பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் பரப்பப்பட்ட செலாவணி வீதங்களுடன் தொடர்பான தகவல்களைப் பரப்புவதின் தரத்தையும் விரைவினையும் அதிகரித்தது.

**அட்டவணை II-18** வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு - 2013

ஐ.அ.டொலர் மில்லியன்

| மாதம் | 2 நாள் | நாளை | இன்றைய நாள் | முன்னோக்கிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 399.91 | 277.82 | 92.31 | 378.23 | 1,148.27 |
| பெப்புருவரி | 296.71 | 182.55 | 145.12 | 331.34 | 955.71 |
| மாச்சு | 367.61 | 288.98 | 165.01 | 445.79 | 1,267.39 |
| ஏப்பிறல் | 418.68 | 230.94 | 278.72 | 432.50 | 1,360.83 |
| மே | 381.15 | 302.78 | 187.23 | 503.19 | 1,374.35 |
| யூன் | 420.53 | 252.18 | 111.61 | 453.21 | 1,237.54 |
| யூலை | 209.10 | 200.55 | 149.53 | 599.69 | 1,158.87 |
| ஓகத்து | 91.84 | 225.50 | 225.50 | 550.17 | 1,093.00 |
| செத்தெம்பர் | 122.05 | 157.95 | 125.80 | 304.21 | 710.01 |
| ஒத்தோபர் | 292.91 | 142.62 | 235.33 | 400.43 | 1,071.28 |
| நவெம்பர் | 146.78 | 240.83 | 214.60 | 515.82 | 1,118.02 |
| திசெம்பர் | 381.46 | 228.85 | 141.24 | 458.50 | 1,210.05 |
| மொத்தம் | **3,528.73** | **2,731.55** | **2,072.00** | **5,373.08** | **13,705.32** |

மூலம்: பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II-19** மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனை - 2013

ஐ.அ. டொலர் மில்லியன்

| மாதம் | கொள்வனவு | விற்பனை | தேறிய கொள்வனவு/ (விற்பனை) |
|---|---|---|---|
| சனவரி | 434.75 | 26.00 | 408.75 |
| பெப்புருவரி | 102.50 | 25.25 | 77.25 |
| மாச்சு | 17.00 | - | 17.00 |
| ஏப்பிறல் | 61.50 | 18.00 | 43.50 |
| மே | 20.00 | - | 20.00 |
| யூன் | 65.00 | 59.68 | 5.32 |
| யூலை | - | 110.30 | -110.30 |
| ஓகத்து | 12.00 | 328.87 | -316.87 |
| செத்தெம்பர் | 2.50 | 60.60 | -58.10 |
| ஒத்தோபர் | 164.15 | 11.48 | 152.67 |
| நவெம்பர் | 20.00 | 51.38 | -31.38 |
| திசெம்பர் | 239.20 | 11.45 | 227.75 |
| மொத்தம் | **1,138.60** | **703.01** | **435.59** |

மூலம்: பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## 19. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு தொழிற்பாடுகளுக்கான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் வழங்கியதுடன் நாட்டின் பாதுகாப்பு, பத்திரமானதன்மை, வினைத்திறன் மிக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை மேம்படுத்துவது என்பன மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தியது. இதன்படி, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை செயன்முறைப்படுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகள், சுவிப்ற் தொடர்பூட்டல் முறைமைகளின் முகாமைத்துவம், ஆசியத் தீர்ப்பனவ ஒன்றியத்தினூடாக நிதிய மாற்றல்களை மேற்கொள்ளுதல் மற்றும் கொள்கை வடிவமைப்பு மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் மேற்பார்வை ஆகியவற்றினை மேற்கொண்டது. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாட்டுத் துறைகளில் காணப்பட்ட செயலாற்றம் கீழே தொகுத்துத் தரப்படுகிறது.

### 19.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை உட்பட இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை மற்றும் ஏனைய இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவு முறைமை அதேபோன்று அதேநேர மொத்த அடிப்படையிலான வாடிக்கையாளர் கொடுப்பனவு என்பனவற்றை தீர்ப்பனவு செய்தது. பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழிக் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளக வங்கி தீர்ப்பனவுகளும் 2013 யூலையில் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் நடைமுறைப்படுத்தலுடன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாக தீர்ப்பனவு செய்யப்பட்டன. மேலும், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவ முறைமையின் சுமூகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக மேலதிக நிதியினைக் கோரிய பங்கேற்பாளர்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடுகளை வசதிப்படுத்தியதுடன் கண்காணிப்பினையும் மேற்கொண்டது.

- 2013ஆம் ஆண்டுப் பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 306,977 ஆகவும் மொத்தப் பெறுமதி ரூ.54,070 பில்லியனாகவும் விளங்கியது.

- நாளொன்றில் தீர்ப்பனவு செய்யப்பட்ட அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கல்களின் சராசரி அளவும் சராசரி பெறுமதியும் முறையே 1,263ஆகவும் ரூ.223 பில்லியனாகவும் காணப்பட்டன.
- சராசரியாக, ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியூடாக பங்கேற்பாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.19.2 பில்லியன் விடுவிக்கப்பட்டது.
- கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 2013ஆம் ஆண்டுப் பகுதியில் 99.92 சதவீதமான முறைமைக்கிடைப்பனவினைப் பேணியது.

### 19.2 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு

2013ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவ கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான பின்னரங்கத் தொழிற்பாடுகளை மேற்கொண்ட வேளையில், வணிக அறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திறைசேரி முகாமைத்துவ முறைமையின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுக்கும் பங்களித்தது. திறைசேரி முகாமைத்துவ முறைமையின் பின்னரங்க அலுவலக மாதிரி அமைப்பினை நிறைவு செய்வதற்குத் தேவையான உள்ளீடுகளை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் வழங்கியதுடன் பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகளின் தொடர்பான பரீட்சிப்பு மற்றும் பயிற்சித் தொடர்களிலும் பங்கேற்றது. 2013 நவெம்பர் 1ஆம் நாள் திறைசேரி முகாமைத்துவ முறைமையின் நேரடித் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் புதிய முறைமையின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆண்டின் இறுதி இரண்டு மாத காலப்பகுதியிலும் பழைய மற்றும் புதிய முறைகள் இரண்டினையும் சமாந்தரமான முறையில் மேற்கொண்ட வேளையில் நாளாந்த தொழிற்பாடுகளுக்காக தடங்கலற்ற பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகளையும் வழங்கியது.

- 2013ஆம் ஆண்டில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகப்படுத்தல் மற்றும் நிதியிடல், பணச் சந்தை, நிலையான வருமானப் பிணையங்கள், தங்க வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஆசியத் தீர்ப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக ஐ.அ.டொலர் 265 மில்லியன் கொண்ட 16,899 கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தது. 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை 14 சதவீத வீழ்ச்சியைக் காட்டிய வேளையில் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி 17 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.
- பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் கொடுக்கல்வாங்கல்களின் உயர்ந்த அளவிற்கு வசதியளிக்கும் பொருட்டு 2013ஆம் ஆண்டு முழுவதும் முறைமாற்று அடிப்படையில் பணியாற்றும் முறைமை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

### 19.3 திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு

திறந்த சந்தை தொழிற்பாடுகளுக்கான பின்னரங்க அலுவலகத்தின் தொழிற்பாடுகள், லங்கா செட்டில் பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் அடிப்படையில் அவர்களுக்குச் செய்யப்பட்ட பிணையங்களின் ஒதுக்குகளினூடாக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

- கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ரூ.5,677 பில்லியன் தொகை கொண்ட 5,270 மீள்கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.187 பில்லியன் தொகை கொண்ட 262 நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.129 பில்லியன் தொகை கொண்ட உடனடி விற்பனை மீதான 84 கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொண்டது.

### 19.4 சுவிப்ற் தொடர்பூட்டல்கள்

ஏனைய உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களுடனான இலங்கை மத்திய வங்கியின் அனைத்து சுவிப்ற் தொடர்பூட்டல்களையும் கையாள்கின்ற இலங்கை மத்திய வங்கியின் சுவிப்ற் முறைமையை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பேணுகின்றது. அதேவேளை, நிதியியல் தொலைத் தொடர்பூட்டலில் உலகளாவிய நியமங்களுடன் இசைந்து செல்லும் பொருட்டு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 2013 நவெம்பரில் சுவிப்ற் முறைமையின் தரம் உயர்த்தப்பட்ட புதிய பதிப்பினை வெற்றிகரமாக நிறுவியது.

- 2013இல் அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட மொத்த சுவிப்ற் செய்திகள் முறையே 1,553,537 ஆகவும் 862,432 ஆகவும் காணப்பட்டன.
- தற்பொழுது காணப்படும் சுவிப்ற் பிரயோக இடைமுகத்திற்கு மேலதிகமாக, சுவிப்ற் வெப்தளத்தினை பயன்படுத்துவதனூடாக முறைமையினை அணுகுவதற்கான வசதியினை வழங்குவதற்காக, 2013இல் சுவிப்ற் பணியானது சுவிப்ற் தலைமையகத்தினால் உயர்த்தப்பட்டது
- இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு, முறை மாற்றினை அடிப்படையாகக் கொண்ட வேலை முறைமைகளின் கீழ் சுவிப்ற் பணிகள் மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 8.00 மணி வரை கிடைக்கச் செய்யப்பட்டன.

### 19.5 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்கள்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஒன்பது உறுப்பினர் நாடுகளின் பிரதேசங்களுக்குள்ளேயான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தது.

- 2013இல் ஆண்டுப் பகுதியில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக இலங்கையினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கையினையும் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதியும் முறையே 5,018 ஆகவும் ரூ.243.6 பில்லியனாகவும் காணப்பட்டன. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் பெறுமதி ரூ.198.9 பில்லியனாகக் காணப்பட்டது.
- ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபையின் 42ஆவது கூட்டம் 2013 யூனில் பாகித்தானில் நடைபெற்றதுடன் இக்கூட்டத்தில் துணை ஆளுநரும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரும் முறையே ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபையின் பணிப்பாளராகவும் மாற்றுப் பணிப்பாளராகவும் பங்கேற்றனர். ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபையின் 42ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைப் பின்பற்றுவதற்குத் தேவையான மாற்றங்களை கூட்டிணைக்கும் விதத்தில் 2013 செத்தெம்பரில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைத் திருத்தியது.
- 2013 நவெம்பரில் திறைசேரி முகாமைத்துவ முறைமை தொடங்கப்பட்டதுடன் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய கொடுக்கல் வாங்கல்கள், ஆசியத் தீர்ப்பனவ ஒன்றிய கொடுக்கல் வாங்கல்களை கணனி வழியில் உடனடியாக செயன்முறைப்படுத்துவதற்கு வசதியளிப்பதற்காக திறைசேரி முகாமைத்துவ முறைமைகளுடன் இணைக்கப்பட்டன.

### 19.6 கொடுப்பனவு முறைமைக் கொள்கை மற்றும் மேற்பார்வை

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் நாட்டில் பாதுகாப்பு, ஆற்றல் மற்றும் வினைத்திறன் மிக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை என்பனவற்றைப் பேணுவதன் மூலம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும், இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவு முறைமைகளின் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பும் வலுப்படுத்தப்பட்டது. இதன்படி, 2013இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் பின்வரும் முக்கிய மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு பணிகளின் ஒழுங்குவிதிகளில் எதிர்நோக்கப்பட்ட பல்வேறு நடைமுறை மற்றும் சட்டப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டை பணி வழங்குவோர் ஒழுங்குவிதிகளுக்குப் பதிலாக, 2013 யூன் 7ஆம் நாளன்று 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமை ஒழுங்குவிதி விடுக்கப்பட்டது.

- தகைமையுடைய தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் கொடுப்பனவு அட்டை வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக மூன்று நிறுவனங்களுக்கும் இ- பணத்தினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமையொன்றினை தொழிற்படுத்துவதற்காக செல்லிட வலையமைப்புத் தொழிற்பாட்டாளருக்கும் உரிமங்களை வழங்கியது. மேலும், கட்டுக்காப்பு கணக்கினை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமையொன்றினை மேற்கொள்வதற்கு ஏற்கனவே உரிமம் வழங்கப்பட்டிருந்த தொலைத் தொடர்பூட்டல் வலையமைப்பு தொழிற்பாட்டாளருக்கு பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டையினை பொதுப் போக்குவரத்திற்காக வழங்குவதன் மூலம் இ-பணத் திட்டமொன்றினைத் தொழிற்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

- இலங்கையில் கொடுப்பனவு அட்டைத் தொழிற்பாடுகளின் பாதுகாப்பினையும் பத்திரமான தன்மையினையும் உறுதிப்படுத்தும் பொருட்டு நிதியியல் கையேற்பு வியாபாரத்தில் ஈடுபடும் நிறுவனங்களின் விற்பனை மைய முனைக்கோடிகளுக்காக பின்பற்றப்படுகின்ற வழி புகுபதிகைத் தொழில்நுட்பம் கண்காணிக்கப்பட்டது. இதன்படி, அனைத்து நிதியியல் கையேற்பாளர்களும் தமது விற்பனை மைய முனைக்கோடிகள் வழி புகுபதிகை தொழில்நுட்பத்தினை 2013 மாச்சு 31 அளவில் தரமுயர்த்திக் கொண்டனர்.

- இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவு முறைமைகளுக்காக நாடளாவிய பொதுவான தளமொன்றினை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியினை நிறுவுவதற்கு தொடர்ந்தும் உதவியை வழங்கியது. பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் முதற்கட்டமான பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி 2013 யூலை 23ஆம் நாளன்று நேரடித் தொழிற்பாடுகளை தொடங்கியதுடன் ஆழியின் சுமூகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டிற்கும் பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆழியின் உறுப்பினர்களுக்கும் பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

    (i) பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் மீதான 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பொதுவான பணிப்புரை. இப்பணிப்புரையானது, முக்கியமாக முன்மதியுடைய மற்றும் கடப்பாட்டுத் தேவைப்பாடுகளை லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டிற்கும் அதேபோன்று பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் உறுப்பு வங்கிகளுக்கும் விதிப்பதற்காக விடுக்கப்பட்டது.

    (ii) பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறியூடாக மேற்கொள்ளப் படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம் தொடர்பான 2013ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பொதுவான பணிப்புரை. இப்பணிப்புரையானது, வாடிக்கையாளரிடமிருந்து அட்டை வழங்குநரினால் விதிக்கப்படக்கூடிய கட்டணத்தினதும் அட்டை வழங்குநரிடமிருந்து நிதிக் கையேற்பாளர்ளினால் விதிக்கப்படக்கூடிய பரஸ்பர பரிமாற்றல் கட்டணத்தினதும் மேல் எல்லையினை விதிப்பதற்காக விடுக்கப்பட்டது.

- காசோலை வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் காசோலைப் பெறுகைகளை வரவு வைத்தல் என்பன தொடர்பான பணி வசதிகள் மற்றும் நியம நேரங்கள் பற்றி விடுக்கப்பட்ட 2013ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பொதுவான பணிப்புரையானது காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமைக்கு செய்யப்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றங்களின் முழு நன்மையினையும் வங்கி வாடிக்கையாளருக்கு கிடைக்கச் செய்யும் குறிக்கோளுடன் ரி+1 இற்காக காசோலைகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் காசோலைப் பெறுகைகளை வரவு வைத்தல் என்பனவற்றிற்கான ரி+1 தொடர்பான புதிய வெட்டு நேரத்தினை குறித்துரைக்கின்றது. இப்பணிப்புரையானது, பங்கேற்கும் நிறுவனங்கள் மீதான 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பொதுவான பணிப்புரையான வாடிக்கையாளரிடமிருந்து காசோலை வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கும் வாடிக்கையாளர்களுக்கான காசோலைப் பெறுகைகளை வரவு வைப்பதற்குமான பணி வசதிகள் மற்றும் நியம நேரங்கள் பற்றிய பணிப்புரையினை அகற்றுகிறது.

- நாளாந்த இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பாதுகாப்பானதும் நம்பகமானதுமான சூழலொன்றை உருவாக்குவதன் மூலம் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக, பணி வழங்குவோர் கொடுகடன் அட்டை மற்றும் செல்லிடக் கொடுப்பனவு வழிகாட்டல்களுக்கு இணங்கியொழுகுவது பற்றி கண்காணிக்கப்பட்டது.

- இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் லங்கா செட்டில் பங்கேற்பாளர்கள் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலை இற்றைப்படுத்தியிருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக அவர்களின் வியாபாரத் திட்டமிடல்கள் மதிப்பிடப்பட்டன. ஒவ்வொரு பங்கேற்பாளர்களும் தொடர்பான பணிப்பாளர் சபையின் மீளாய்வுடன் ஆண்டுப் பகுதியில் குறைந்தபட்சம் ஒரு தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் ஒத்திகையையாவது மேற்கொள்ள வேண்டுமென பணிக்கப்பட்டனர்.

நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் “கொடுப்பனவுச் செய்தித்திரட்டு” என்ற காலாண்டு வெளியீட்டினை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிட்டது. மேலும், தாளினை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளிலும் பார்க்க பாதுகாப்பும் வினைத்திறன்மிக்க இலத்திரனியல் கொடுப்பனவு முறைமையினைப் பயன்படுத்த பொதுமக்களை ஊக்குவிக்கும் பொருட்டு கொடுப்பனவு முறைகள் மற்றும் ஏனைய தொடர்பான பிரச்சனைகள் பற்றி பொதுமக்களுக்கும் வங்கித்தொழில் சமூகத்திற்கும் அறிவூட்டுவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது.

மேலும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளில் பிராந்திய ஒத்துழைப்பினைப் பேணி வளர்க்கும் விதத்தில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் சார்க் கொடுப்பனவுச் சபைக் கூட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்றது. இச்சபையானது உறுப்பினர் நாடுகள் அவற்றின் தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையின் சீர்திருத்தங்களையும் சார்க் பிராந்தியத்தில் வர்த்தகம் மற்றும் முதலீட்டுப் பாய்ச்சல்களை வசதிப்படுத்துகின்ற பொருத்தமான பிராந்தியக் கொடுப்பனவு முறைமைகளை உருவாக்குவதனையும் நோக்கி முன்னேற்றுவதற்கு உறுப்பினர் நாடுகளுக்கு உதவுவதற்காக பொதுவான புரிந்து கொள்ளல்களையும் ஒத்துழைப்பினையும் அடைவதற்காக உருவாக்கப்பட்டதாகும். 13ஆவது சார்க் கொடுப்பனவு சபைக் கூட்டம் 2013 யூலையில் பூட்டானிலும் 14ஆவது சார்க் கொடுப்பனவுச் சபைக் கூட்டம் 2013 திசெம்பரில் இந்தியாவிலும் நடைபெற்றன.

### 20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திடம் இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டமிடல் செயற்பாட்டினை ஒருங்கிணைத்தல் மற்றும் கொள்கை மீளாய்வு மற்றும் ஆய்வுகளை நடத்துதல் போன்ற பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக, கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டமிடலைத் தயாரித்தல், உபாயத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தினை கண்காணித்தல் மற்றும் சமகால முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை ஆய்வுகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றை வசதிப்படுத்துகின்றது.

### 20.1 உபாயத் திட்டமிடல் செயற்பாட்டினை ஒருங்கிணைத்தல்

2013 சனவரி முதலாம் நாளன்று “ஆயத்தமாகுங்கள் $4K முன்னால்” என்ற தொனிப்பொருளின் கீழ் 2013 - 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான 7 ஆவது உபாயத்திட்டம் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 2013 சனவரி முதல் வாரத்தில் மத்திய வங்கியின் அனைத்து அலுவலர்களுக்குமான இரண்டு நாள் விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்பட்டது. இச் செயலமர்வுடன் நடத்தப்பட்ட அளவீடொன்று வங்கியின் அலுவலர்கள் உபாயத்திட்டத்தின் உள்ளடக்கங்கள் பற்றி அறிந்திருக்கின்றமையைக் குறித்துக் காட்டியது.

கொள்கை மீளாய்வு கண்காணிப்புத் திணைக்களம் உபாயத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணித்ததுடன் திணைக்களங்கள் மற்றும் மாகாண அலுவலகங்களுடன் காலாண்டு

அட்டவணை II-20 2013 காலப்பகுதியில் மாகாண அலுவலகங்களினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

| மாகாண அலுவலகம் | விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | |
|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்களின் எண். | பங்கேற்பாளர்களின் எண். | நிகழ்ச்சித் திட்டங் களின் எண். | பங்கேற்பா ளர்களின் எண். |
| தென் மாகாணம் | 88 | 7,623 | 23 | 1,302 |
| வட மத்திய மாகாணம் | 78 | 6,489 | 51 | 2,493 |
| மத்திய மாகாணம் | 94 | 7,411 | 25 | 1,283 |
| வட மாகாணம் | 77 | 7,545 | 15 | 526 |
| கிழக்கு மாகாணம் | 79 | 6,157 | 21 | 913 |
| **மொத்தம்** | **416** | **35,225** | **135** | **6,517** |

முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்தியது. உபாயத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதலின் முன்னேற்றங்கள் ஆளுநரைத் தலைவராகக் கொண்டதும் இலங்கை மத்திய வங்கியின் பொது முகாமைத்துவ உறுப்பினர்களை உள்ளடக்கியதுமான உபாயத்திட்ட மீளாய்வுக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டன. தடைகள் மற்றும் இடையூறுகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு உபாயத்திட்ட மீளாய்வுக் குழுவினால் விதந்துரைக்கப்பட்ட வழிமுறைகள் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் சம்மந்தப்பட்ட திணைக்களங்களிற்கு குறைபாடுகளைச் சீர்ப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அறிவிக்கப்பட்டன. முன்னேற்ற அறிக்கைகள் நாணயச் சபைக்கும் காலாண்டு அடிப்படையில் சமர்பிக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கி 2013இன் உபாயத் திட்டத்தில் 97.3 சதவீத அடைவினைப் பதிவு செய்துள்ளது.

மேலும், இவ்வாண்டில் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் அடுத்துவரும் ஐந்து வருடங்களிற்கான உபாயத் திட்டத்தினைத் தயாரிப்பதற்காக எட்டாவது உபாயத் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டத்தினை 2013 செத்தெம்பரில் ஒழுங்குபடுத்தியிருந்தது. இந்நிகழ்ச்சியில் நாணயச் சபையின் உறுப்பினர்கள், பொது முகாமைத்துவக் குழு, திணைக்களத் தலைவர்கள் மற்றும் மேலதிக திணைக்களத் தலைவர்கள், ஏனைய அலுவலர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனை குழுக்களின் குழு அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். 2013 - 2017 காலப்பகுதிக்கான உபாயத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் 2014 - 2018 காலப்பகுதிக்கான உபாயத் திட்டம் "பொறிக்குள் சிக்குவதைத் தவிர்ப்பதற்கு" என்ற தொனிப் பொருளின் கீழ் இறுதிப்படுத்தப்பட்டது. 2014 - 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான உபாயத் திட்டமானது உயர்வானதும் நிலைத்திருக்கக்கூடியதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்கு அவசியமான பொருளாதார மாற்றமடைதலை வசதிப்படுத்துவதற்கான கொள்கைகளை கூட்டிணைத்து அதன்மூலம் நடுத்தர வருமானப் பொறிக்குள் சிக்குதலைத் தவிர்க்கும். 2014 - 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான உபாயத்திட்டத்தினைத் தயாரிக்கும் பொறுப்பு கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினைச் சார்ந்ததாகும்.

### 20.2 கொள்கை மீளாய்வுகளையும் ஆய்வுகளையும் நடத்துதல்

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் நடுத்தர வருமானப் பொறி, நிதியியல் துறை சட்டங்கள், அரசிறையிலான போக்குகள், உலகளாவிய தேயிலைச்சந்தை, ஏனைய மத்திய வங்கிகளின் உபாயத் திட்டமிடல், வெளிநாட்டுப் பட்டப்படிப்புக்களை வழங்கும் கல்வியியல் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதித் துறைச் செயலாற்றம் ஆகிய விடயங்கள் தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டது. கொள்கை தொடர்பான ஆவணங்களைக் கொண்ட இலத்திரனியல் கொள்கை மற்றும் நடவடிக்கை முறை நூலகம் இற்றைப்படுத்தப்பட்டதுடன் 2013 இறுதியளவில் 735 ஆவணங்களைக் கொண்டிருந்தது. மேலும், திணைக்களத்தின் அலுவலக உறுப்பினர்கள் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் பணிகளில் ஈடுபட்டதுடன் கொள்கை விடயங்களின் மீது 11 உள்ளக காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளை நடத்தினர்.

### 21. மாகாண அலுவலகங்களின் கண்காணிப்பு

2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் தெற்கு, வட மத்திய, மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொழிற்படுகின்ற இலங்கை மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்பான பிரதேசங்களில் அபிவிருத்தியுடன் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகளைக் காத்திரமான முறையில் மேற்கொண்டன. இலங்கை மத்தி வங்கியின் பரந்தளவான உபாயக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் நோக்கில், மாகாண ரீதியில் மாகாண அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட தொழிற்பாடுகளை காத்திரமான முறையில் தொழிற்படுத்துவதனை உறுதி செய்யும் வகையில், மாகாண அலுவலக கண்காணிப்புத் திணைக்களமானது மாகாண அலுவலகங்களின் செயற்பாடுகளை உன்னிப்பாக கண்காணித்தது.

### 21.1 மாகாண அலுவலகங்களின் செயற்பாடுகளை கண்காணித்தல்

மாகாண அலுவலகங்களின் கண்காணிப்புத் திணைக்களத்தின் கண்காணிப்புச் செயற்பாடுகள் ஆண்டின் தொடக்கத்தில் ஒவ்வொரு மாகாண அலுவலகத்திற்காகவும் தயாரிக்கப்பட்ட விபரமான கலண்டர் நிகழ்ச்சித்திட்ட அடிப்படையிலேயே காணப்பட்டன. தலத்திற்கு வெளியேயான அதன் கண்காணிப்பின் ஒரு பகுதியாக, மாகாண அலுவலகங்களின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்யும் நோக்குடன், மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் ஒவ்வொரு மாகாண அலுவலகத்திடமிருந்தும் நாளாந்த செயற்பாட்டு அறிக்கைகளையும் வாராந்த மற்றும் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளையும் பெற்றுக் கொண்டது. மாகாண அலுவலகச் செயற்பாடுகளின் தலத்திலான கண்காணிப்புக்காக, மூத்த முகாமைத்துவம் மற்றும் மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் என்பவற்றின் அலுவலர்கள் மாகாண அலுவலகங்களுக்கு 27 விஜயங்களை மேற்கொண்டிருந்தனர். மேலும், இவ்வாண்டு காலப்பகுதியில், மாகாண அலுவலகங்களின் முன்னேற்றத்தினைக் கலந்துரையாடுவதற்காக மாகாண முகாமையாளர்கள் மற்றும் மாகாண அலுவலகங்களின் ஏனைய அலுவலர்களுடன் 6 காணொளி தொலை மாநாடுகளையும் 07 நேரடி கூட்டங்களையும் திணைக்களம் நடத்தியது. இவ்வாண்டுக் காலப்பகுதியில், அலுவலர்களின் முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்பத் திறன்களை முன்னேற்றுவதற்காக மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களத்தினால் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

### 21.2 மாகாண அலுவலகங்களின் செயற்பாடுகள்

#### (அ) மாகாணங்களில் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை விரிவாக்குதல்

இவ்வாண்டுப் பகுதியில், மத்திய வங்கியுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் தொடர்பாக பொதுமக்கள், நிதி நிறுவனங்களின் அலுவலர்கள், ஏனைய அரச மற்றும் தனியார் துறை அமைப்புக்கள் மற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு அறிவூட்டுவதற்காக மாகாண அலுவலகங்களினால் 416 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. நிதியியல் அறிவு அரச பிணையங்களில் முதலீடு செய்தல், மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்களின் கீழ் நிதியியல் வசதிகளை பெற்றுக்கொள்வதனால் ஏற்படும் நன்மைகள், நாணயத் தாள்களின் பாதுகாப்புப் பண்புகள், உண்மையான

தாள்களை அடையாளம் காணுதல் மற்றும் நாணயத் தாள்களையும் குத்திகளையும் பயன்படுத்துவது தொடர்பான நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்களிலும் தடை செய்யப்பட்ட திட்டங்களிலும் முதலீடு செய்வதன் விளைவு ஆகியன குறிப்பாக விடயப் பரப்புக்களில் உள்ளடக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் அநேக திணைக்களங்களால் வேண்டப்படும் தரவுகள் மற்றும் தகவல்களைச் சேகரிப்பதனூடாக மாகாண அலுவலகங்கள் அத்திணைக்களங்களுக்கு உதவியளித்தன. மேலும், மாகாண அலுவலகங்கள் ஊ.சே. நிதியத்தின் உறுப்பினர்களிடமிருந்தான ஊ.சே. நிதியம் தொடர்பான விசாரணைகளைக் கவனித்ததுடன், இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகளையும் ஞாபகார்த்த நாணயக் குத்திகளையும் மாகாண அலுவலகங்களில் விற்பனை செய்வதற்காக விற்பனைக் கருமபீடங்களையும் பேணியது. தொடர்புடைய மாகாணங்களில் ஏனைய அமைப்புக்களால் நடத்தப்பட்ட அபிவிருத்தி விடயங்கள் பற்றிய முக்கியமான ஆய்வரங்கங்களில் மாகாண அலுவலகங்களின் முகாமையாளர்கள் இலங்கை மத்திய வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

### (ஆ) அபிவிருத்தியுடன் தொடர்பான செயற்பாடுகள்

அனைத்து ஐந்து மாகாண அலுவலகங்களும் தொடர்பான மாகாணங்களில் ஆற்றல் வாய்ந்த நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகளை ஊக்குவிப்பதில் செயற்திறனுடன் ஈடுபட்டிருந்தன. இது, தொடர்பாக, தொழில் முயற்சியாளர்களின் தேர்ச்சி மட்டங்களை முன்னேற்றுவதற்கும், புதிய தொழில்நுட்ப மற்றும் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுவதற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. மாகாணங்களில் தொடர்பான நிறுவனங்களுடன் இணைந்து தொழில்முயற்சியாளர்களுக்காக கொள்கை ரீதியானதும் அதேபோல் நடைமுறை ரீதியானதுமான பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும், மாகாணத்தில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகளுக்கு உதவிபுரிவதற்கு வேறுபட்ட துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களின் பிரதிநிதித்துவத்துடன் தேர்ச்சியாளர் குழுமம் ஒன்றினை நிறுவுவதற்கு ஒவ்வொரு மாகாண அலுவலகங்களும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்திருந்ததுடன் உற்பத்தியாளர் மற்றும் பாரியளவிலான வாங்குநர்களுக்கிடையில் சந்தைப்படுத்தல் தொடர்புகளை அபிவிருத்தி செய்வதற்காக அநேக நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தின. ஆண்டு காலப்பகுதியில், மாகாண அலுவலகங்கள், அறிவியல் ரீதியான வேளாண்மை நடைமுறைகள், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் மற்றும் உயர் தொழில்நுட்ப வேளாண்மை உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக 135 செயற்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதுடன் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 6,517 பங்குபற்றுநர்கள் பிரசன்னமாகியிருந்தனர்.

2013இல் மாகாண அலுவலகங்களினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் அட்டவணை II-20இல் தரப்பட்டுள்ளன.

## 22. பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க, பொதுப் படுகடனின் முகாமைத்துவத்திற்கான பொறுப்பு இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, பொதுப்படுகடன் திணைக்களம் அரசாங்கத்தின் சார்பில் உள்நாட்டுப் படுகடன் மற்றும் வெளிநாட்டு வர்த்தகப் படுகடன்களை வழங்கியதுடன், பொதுப்படுகடன் தீர்த்தல் என்பனவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் பொதுப்படுகடன் திணைக்களத்தின் நடவடிக்கைகளினது சுருக்கம் கீழே தரப்படுகிறது.

### 22.1 அரச வரவு செலவுத்திட்டத்தினை நிதியிடுவதற்காக நிதிகளைத் திரட்டுதல்

2013இல் அரசின் மொத்த கடன்பாட்டுத் தேவைக்கு நிதியிடுவதற்காக பொதுப்படுகடன் திணைக்களம் முக்கியமாக திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பனவற்றினூடாக உள்நாட்டு மற்றும் பன்னாட்டு மூலங்களிலிருந்து நிதிகளைத் திரட்டியது. மூன்று சாதனங்களின் கீழான அத்தகைய நிதியிடல் நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

**(அ) திறைசேரி உண்டியல்கள்:** 2013இல் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்த முகப்புப் பெறுமதி ரூ.1,235.3 பில்லியனாக விளங்கியது. இவ்வழங்கல்கள் வாராந்த முதலாந்தர ஏலங்களினூடாக கிடைக்கச் செய்யப்பட்டன. மீள்முதலீடுகள் உட்பட திறைசேரி உண்டியலில் செய்யப்பட்ட மொத்த வெளிநாட்டு முதலீடு 2013இல் ரூ.90.3 பில்லியனாகக் காணப்பட்டது. மொத்த வழங்கலில் ரூ.1,170.5 பில்லியன் முதிர்ச்சியடைந்த திறைசேரி உண்டியல்களின் மீள்வழங்கலை பிரசன்னப்படுத்திய வேளையில் மீதி ரூ.64.8 பில்லியன் புதிய வழங்கல்களைப் பிரசன்னப்படுத்தியது.

**(ஆ) திறைசேரி முறிகள்:** 2013இல் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் மொத்த முகப்புப் பெறுமதி ரூ.1,017.1 பில்லியனாக விளங்கியது. இவ் வழங்கல்கள் 13 முதனிலை ஏலங்களினூடாகவும் நேரடியான வைப்பு அடிப்படையிலும் கிடைக்கச் செய்யப்பட்டன. திறைசேரி முறிகளின் மொத்த வழங்கலில், ரூ.560.8 பில்லியன் முதிர்ச்சியடைந்த திறைசேரி முறிகளின் மீள்வழங்கலை பிரசன்னப்படுத்திய வேளையில் மீதி ரூ.456.3 பில்லியன் புதிய வழங்கல்களைப் பிரசன்னப்படுத்தியது. 30 ஆண்டு திறைசேரி முறிகளின் வழங்கல் ஆய்விற்குரிய ஆண்டில் ஆரம்பமானது. 2013இல் வெளிநாட்டவர்களினால் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட மொத்த வெளிநாட்டு முதலீடு ரூ.250.7 பில்லியனாக விளங்கி, முதிர்ச்சியடைந்த திறைசேரி முறிகளின் ரூ.92.6 பில்லியன் கொண்ட மீள்முதலீட்டினையும் உள்ளடக்கியிருந்தது.

**(இ) இலங்கை அபிவிருத்தி முறிகள்:** 2013இல் ஆறு முதலாந்தர ஏலங்களை நடத்தியதனூடாக மொத்தமாக ஐ.அ.டொலர் 1,820.2 மில்லியன் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகள் திரட்டப்பட்டன. இலங்கைக்கான அபிவிருத்தி முறிகளின் மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 750.1 மில்லியன் மீளவழங்கப்பட்டமையினை பிரசன்னப்படுத்திய வேளையில் மீதி புதிய வழங்கலாக காணப்பட்டது.

### 22.2 பொதுப்படுகடனை தீர்ப்பனவு செய்தல்

உரிய நேரத்திலும் துல்லியமான முறையிலும் அனைத்துப் படுகடன்களும் சரியான முறையில் தீர்ப்பனவு செய்யப்பட்டதன் மூலம் பொதுப்படுகடனை தீர்ப்பனவு செய்வது தொடர்பான நாட்டின் களங்கமற்ற பதிவேட்டினை பொதுப்படுகடன் திணைக்களம் 2013இலும் பேணியது. இவ்வாண்டில் செய்யப்பட்ட மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ.1,143 .6 பில்லியனாகக் காணப்பட்டன. இது முதிர்ச்சியடைந்த திறைசேரி முறிகள், உள்நாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்கிக் காணப்பட்டது.

### 22.3 அரச பிணையங்களின் தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்

லங்கா செகுயரின் தடங்கலற்ற அதேநேர தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதன் மூலம் அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்கு பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்தும் வசதியளித்தது. 2013.12.31 இலுள்ளவாறு, லங்கா செகுயரின் பத்திரங்களற்ற பிணையங்களின் மொத்தப் பெறுமதி ரூ.3,726 பில்லியனாகக் காணப்பட்டது.

### 22.4 அரச பிணையங்களில் உரித்துப் பதிவினைப் பேணுதல்

பொதுப்படுகடன் திணைக்களத்தில் பேணப்படும் மத்திய வைப்பக முறைமையை அரச பிணையங்களின் உரித்துப் பதிவினை அதேநேர அடிப்படையில் இற்றைப்படுத்தும் வசதி, அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளில் திரவத்தன்மையும் கொடுக்கல்வாங்கல்களும் அதிகரிக்க உதவியுள்ளது. 2013இல் பொதுப்படுகடன் திணைக்களம், வேறுபட்ட முதனிலை வணிகர்கள்/ நேரடி வணிகர் பங்கேற்பாளர்களினூடாகப் பேணப்படுகின்ற கணக்குகளின் எண்ணிக்கையினை கருத்திற் கொள்ளாது ஒவ்வொரு பங்கேற்பாளருக்குமாக தனித்துவமான அடையாள இலக்கத்தினைக் கொண்டிருப்பதன் மூலம் மத்திய வைப்பக முறைமையில் முதலீட்டாளர் பதிவேட்டினை ஒழுங்குமுறைப்படுத்தியது. இதற்கமைய, அரச பிணையங்களின் உரித்தில் ஏற்படும் மாற்றங்களை உரிய முறையில் பதிவு செய்கின்றமை, மத்திய வைப்பக முறைமையில் கணக்குகளை வைத்திருப்பவர்களது உடமைகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுகள் மிதமான காலாந்தர கூற்றுக்களை அனுப்பும் செயன்முறையினை 2013இல் மேலும் மேம்படுத்தியது. பொதுப்படுகடன் திணைக்களம் 2013இல் மத்திய வைப்பக முறைமையில் கணக்கு வைத்திருப்போருக்கு 29,411 அரையாண்டு உடமைக் கூற்றுக்களையும், கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் 99,108 மாதாந்தக் கூற்றுக்களையும் 61,352 கொடுப்பனவுக் கூற்றுக்களையும் அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தது. 2013ன் இறுதியில் மத்திய வைப்பக முறைமையில் கணக்குப் வைத்திருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை 84,474 ஆகக் காணப்பட்டது. மேலும், பொதுப்படுகடன் திணைக்களம், மேலே குறிப்பிடப்பட்ட காலாந்தரத் தரவுகளை இலத்திரனியல் வடிவில் பெறவிரும்புகின்ற முதலீட்டாளர்களை அடையாளம் காண்பதற்கும் வினைத்திறன் மிக்க பணிகளை அவர்களுக்கு வழங்குகின்ற வேளையில் தகவல்களின்

இரகசியத்தன்மையினை உறுதிப்படுத்தும் நோக்குடன் அச்சிடப்பட்ட கூற்றுக்களை அஞ்சலூடாக அனுப்புவதனை நிறுத்துவதற்குமாக அளவீடொன்றினை ஆரம்பித்தது.

### 22.5 அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களின் ஒழுங்கு விதிகள்

முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப்பாட்டினையும் மற்றும் அரச பிணையங்களிலுள்ள முதலீட்டாளர்களினது பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தும் நோக்குடன், பொதுப்படுகடன் திணைக்களம், உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம், பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில், 2013இல் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களுக்கு புதிய முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை விடுப்பதிலும் மேற்பார்வை செய்வதிலும் ஒழுங்குவிதிகளைப் பேணுவதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. 2013இல் பொதுப்படுகடன் திணைக்களம் மேற்கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

#### (அ) முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை விடுத்தல்

2013இல், முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப்பாட்டினையும் அரச பிணையங்களிலுள்ள முதலீட்டாளர்களின் பாதுகாப்பினையும் மேலும் பலப்படுத்தும் நோக்குடன் முதனிலை வணிகர்களின் வியாபாரத்தினை நடத்துவதன் மீதான சிறந்த ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம், அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்தின் பாதுகாப்பு, முதனிலை வணிகர்களின் வாடிக்கையாளர் பணிகளை வழங்குவது தொடர்பான தரம் மற்றும் திருப்தி மற்றும் அரச பிணையங்களில் சுமூகமானதும் வினைத்திறன் மிக்கதுமான சந்தைகளை உருவாக்குதல் என்பனவற்றை உள்ளடக்கிய முன்மதியுடைய பணிப்புரைகள்/ ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

#### (ஆ) முதனிலை வணிகர்களைப் பரீட்சித்தல்

இறுதி இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான போதுமான மூலவளங்களுடன் சேர்ந்த பல்வேறு இடர்நேர்வுகளுக்கு முதனிலை வணிகர்கள் உள்ளாகும் தன்மை மற்றும் சட்ட ரீதியான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் பின்பற்றப்படுகின்றனவா என்பன பற்றி தலத்திலான பரீட்சிப்புக்களின் போது தொடர்ச்சியாக மதிப்பிடப்பட வேண்டியிருந்தது. இதற்கமைய, இடர்நேர்வுகளை முக்கிய கவனத்தில் கொண்ட பத்து முதனிலை வணிகர்களின் தலத்திலான பரீட்சிப்பு அறிக்கைகள் 2013இல் நிறைவு செய்யப்பட்ட வேளையில் அத்தகைய பரீட்சிப்பு அறிக்கைகளில் எடுத்துக்காட்டப்பட்ட எஞ்சியுள்ள மேற்பார்வைக்குரிய கரிசனைகளை சரிசெய்வதற்கான கால நிர்ணயத்துடன் கூடிய நடவடிக்கைத் திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன. 2013 இறுதியில் ஒரு பரீட்சிப்பு நிறைவடையும் நிலையில் காணப்பட்டது. கரிசனைக்குரிய ஒழுங்குமுறைப்படுத்தல் விடயங்களை சரி செய்வது தொடர்பான முன்னேற்றங்கள் முதனிலை வணிகர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகளினூடாக கண்காணிக்கப்பட்டன.

#### (இ) தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு

முதனிலை வணிகர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட பல்வேறு காலாந்தரக் கூற்றுக்களின் அடிப்படையில், தனிப்பட்ட முதனிலை வணிகர்கள் அதேபோன்று முழுக் கைத்தொழிலினதும் நிதியியல் ஆற்றல் மற்றும் தொழிற்பாட்டுச் செயலாற்றம் என்பனவற்றைக் கொண்ட தற்பொழுது இடம்பெற்றுவரும் கண்காணிப்பு பொறிமுறையொன்றான தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பில் பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்தும் ஈடுபட்டது. இவ்வாண்டுப் பகுதியில், மாதமொன்றிற்கு 12 அத்தகைய தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், தேவையானவிடத்து பொதுப்படுகடன் திணைக்களம் பொருத்தமான சரிசெய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

#### (ஈ) ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்

2013இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் முதனிலை வணிகர்களாக மாறுவதற்கு அனுமதிக்கப்பட்டன. இதற்கமைய பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி, கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் என்பன முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்டன. மேலும், பேர்பேச்சுவல் ரெசரீஸ் லிமிடெட் முதனிலை வணிகராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் முதனிலை வணிகர்களின் மொத்த எண்ணிக்கை 2013 இறுதியில் 15 இற்கு அதிகரித்தது.

#### (உ) முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான இலங்கை மத்திய வங்கியின் மாதாந்தக் கூட்டங்கள்

2013இல் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/ பதிவாளருடனான முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் 12 மாதாந்தக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இக்கூட்டங்கள் பொருளாதார மற்றும் நாணய அபிவிருத்திகள், பொதுப்படுகடன் தொழில் துறையின் செயலாற்றம் மற்றும் அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளின் செயலாற்றத்தில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய ஏனைய பல்வேறு துறைகள் தொடர்பாகவும், சந்தை அபிவிருத்தி பற்றியும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் கருத்துக்களமாகவும் பணியாற்றியது.

### 22.6 இடர்நேர்வு முகாமைத்துவம்

பொதுப்படுகடன் திணைக்களம் 2013இல் பொதுப்படுகடன் சொத்துப் பட்டியலிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளின் அளவீடு மற்றும் கண் காணிப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கும் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துகின்ற தொழிற்பாடுகளின் தரத்தினையும் செயற்பரப்பினையும் மேலும் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது தொடர்பில், பொதுப்படுகடன் திணைக்களத்தினால், பொதுநலவாய செயலகத்தின் படுகடன் முகாமைத்துவப் பிரிவின் உதவியுடன் சிஎஸ்-டிஆர்எம்எஸ் கொறிசோன் என்ற புதிய பதிப்பொன்று வெற்றிகரமாக நடைமுறைக்கிடப்பட்டது. கொறிசோன், பல்புடை - நாணய வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பொதுப்படுகடன் சொத்துப்பட்டியல் மீதான திரட்சிப்படுத்தப்பட்ட தரவுத்தளமொன்றினைப் பேணுவதற்கு வசதியளித்தது. மேலும், மிக நவீனத்துவம் வாய்ந்த திட்டமிடல் மற்றும் பொருத்தப்பட்டிருக்கும் பகுப்பாய்வுக் கருவிகள் என்பனவற்றுடன் கொறிசோன் பொதுப்படுகடன் சொத்துப்பட்டியலின் முக்கியத்துவம் வாய்ந்த இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினைப் பகுப்பாய்வு செய்வதற்கும் படுகடன் இருப்பு நியதிகளில் ஒட்டுமொத்தச் செலவு மற்றும் இடர்நேர்வின் மீதான சாத்தியமான பேரண்டப் பொருளாதார மாற்றங்களின் தாக்கத்தினை எறிவு செய்வதற்கும் உதவுவதுடன் இதன் மூலம் உச்சமட்ட படுகடன் உபாயத்தினை வடிவமைப்பதனையும் வசதிப்படுத்துகின்றது.

### 22.7 அரச பிணையங்கள் சந்தை மற்றும் கம்பனிப் படுகடன் சந்தை அபிவிருத்தி

மீள்நிதியிடல் இடர்நேர்வினையும் அரசின் கடன்பாட்டுச் செலவுகளையும் குறைப்பதற்கு நன்கு விருத்தியடைந்த படுகடன் சந்தை முக்கியமானதொரு மூலமாக விளங்குகிறது. எனவே, பொதுப்படுகடன் திணைக்களம் 2013இல் படுகடன் பிணையங்கள் சந்தையினை பின்வரும் விதத்தில் அபிவிருத்தி செய்வதில் தொடர்ந்தும் ஈடுபட்டது.

(அ) முதலீட்டாளர்கள் முதலீட்டு வாய்ப்புக்கள் போன்ற காரணியினை உள்ளடக்கி அவர்களது உள்ளகத் தீர்மானங்களை முன்கூட்டியே மேற்கொள்வதற்கு வசதியளிக்கின்ற நோக்குடன் அரையாண்டு திறைசேரி முறி கலண்டரொன்று நடைமுறைக்கிடப்பட்டது.

(ஆ) 30 ஆண்டுகள் திறைசேரி முறிகளை வழங்கத் தொடங்கியதன் மூலம் 30 ஆண்டுகள் வரை இடர்நேர்வற்ற ரூபா விளைவு வளையி உயர்த்தப்பட்டது.

(இ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் உதவியுடன் படுகடன் சந்தைகள், பணச் சந்தைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகள் உள்ளடக்கிய இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளமொன்றினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஈ) இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்புப் பங்குச் சந்தை மற்றும் லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட் என்பனவற்றின் உதவியுடன் இலங்கை நிதியியல் சந்தையின் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்காக மத்திய இணைத்தரப்பினரை நிறுவுவதற்கு தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(உ) உயர்ந்தளவு எண்ணிக்கையான பங்கேற்பாளர்களினூடாக அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களின் போட்டி அதிகரித்தது.

**இணைப்பு II-2 அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள்**

| | |
|---|---|
| 1. | அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 2. | இலங்கை வங்கி முதனிலை வணிகர் பிரிவு |
| 3. | கப்பிட்டல் அலையின்ஸ் லிமிடெட் |
| 4. | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி முதனிலை வணிகர் பிரிவு |
| 5. | என்ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 6. | பெர்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் லிமிடெட் |
| 7. | நற்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 8. | என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட் |
| 9. | மக்கள் வங்கி முதனிலை வணிகர் பிரிவு |
| 10. | சம்பத் வங்கி பிஎல்சி முதனிலை வணிகர் பிரிவு |
| 11. | செலான் வங்கி பிஎல்சி முதனிலை வணிகர் பிரிவு |
| 12. | வெல்த் ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 13. | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி முதனிலை வணிகர் பிரிவு |
| 14. | த கொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் முதனிலை வணிகர் பிரிவு |
| 15. | பேப்பற்சுல்ஸ் ரெஷறீஸ் லிமிடெட் |

(ஊ) சந்தை மீள்கொள்வனவுகளுக்கான ஆவணப்படுத்தல் தரப்படுத்தப்பட்டது.

(எ) கம்பனிப் படுகடன்களில் சந்தைகளை உருவாக்குவதில் ஈடுபட முதனிலை வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

(ஏ) அரச பிணையங்களில் முதலீட்டாளர்களின் கேள்வியும் எதிர்பார்ப்புக்களும் பூர்த்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வாடிக்கையாளர் பணிகள் தரத்துடனும் திருப்திகரமான முறையிலும் வழங்கப்படுவதனை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன் முதலாந்தர வணிகர்கள் மற்றும் அவர்களது வாடிக்கையாளர்களுக்கிடையிலான உறவுகளை நிருவகிப்பதற்காக முறைமைசார்ந்த வாடிக்கையாளர் சாசனமொன்று நடைமுறைக்கிடப்பட்டது.

(ஐ) அரச பிணையங்களில் சுமுகமானதும் வினைத்திறன் மிக்கதுமான சந்தையை உருவாக்குவதற்காக முதனிலை வணிகர்களினால் அரச பிணையங்களில் தம்வசமில்லாதனவற்றை விற்பனை செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நடவடிக்கையானது வினைத்திறன்மிக்க விலையைக் கண்டறிவதற்கு தொழிற்பாட்டு நெகிழ்ச்சித்தன்மையினை வழங்கும் அதேவேளை இரண்டாந்தர சந்தை நடவடிக்கைகளை அதிகரிப்பதன் மூலம் சந்தைத் திரவத்தன்மையை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 22.8 நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடலின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல்

அரசாங்கத்தின் இறை முகவராகத் தொழிற்படும் இலங்கை மத்திய வங்கியிடம் பன்னாட்டு தரமிடல் முகவர்களிலிருந்தான நாட்டிற்கான பன்னாட்டு தரமிடலின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய தரமிடல் மத்திய வங்கியின் பொதுப்படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளமையினால் பிட்ஜ் றேட்டிங் லிமிடெட், ஸ்டான்டட் அன்ட் புவர் மற்றும் மூடிஸ் இன்வெஸ்டர் சேர்விஸ் என்பனற்றினால் ஆண்டுதோறும் வழங்கப்பட்ட தரமிடல் பணிகளை மதிப்பீடு செய்வதற்குமான பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, பொதுப்படுகடன் திணைக்களம் மூன்று தரமிடல் முகவர்களினதும் வழங்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்தும் மதிப்பிட்ட வேளையில் 2013இல் அவற்றின் இலங்கை தொடர்பான ஆண்டு தரமிடல் மீளாய்விற்கும் வசதியளித்தது.

## 23. பிரதேச அபிவிருத்தி

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அரசாங்கத்தின் சார்பில் நாட்டின் முழுமையானதும் சமநிலையானதுமான வளர்ச்சியை அடைவதற்கு ஆதரவளித்தல் மற்றும் நிதியியல் வசதிகள் வழங்குவதை மேம்படுத்துதல் ஆகிய அதன் முகவர் தொழிற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டது. இப்பின்னணியில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நிதியினை வழங்குதல் மற்றும் விழிப்புணர்வைக் கட்டியெழுப்புதல் எனும் இரண்டு பரந்த பரப்புக்களின் கீழ் தனது வகிபாகத்தினைத் தொடர்ந்தும் செயற்படுத்தியது.

நிதியினைப் பெறுவதற்கான வழிவகையினை வழங்குகின்ற விதத்தில் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களூடாக, வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் நுண்பாக நிதியியல் ஆகிய மூன்று பரந்த துறைகளுக்கு இயலுமானளவு நிதியினை கிடைக்கச் செய்தல் மீது பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் கவனம் செலுத்தியது. நாடு முழுவதிலுமுள்ள கடன் வசதிகளின் பயன்பெறுநர்கள், மற்றும் தொழில்முயற்சியாளர்களின் தேர்ச்சியை விருத்தி செய்வதற்கு நிதியியல் அறிவூட்டல், தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் விழிப்புணர்வை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு கடன் திட்டங்கள் தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக, பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அச்சு, இலத்திரனியல் மற்றும் ஒலிபரப்பு ஊடகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தியது.

2013 காலப்பகுதியில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் 20 கொடுகடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது இவற்றுக்கான நிதி இலங்கை அரசாங்கம், இலங்கை மத்திய வங்கி, கொடை முகவர்கள் மற்றும் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்கள் என்பவற்றின் மூலம் நிதியிடப்பட்டது. இவை தொடர்பான விபரங்கள் அட்டவணை II-22 இல் தரப்பட்டுள்ளது.

### 23.1 வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறை

2013 காலப்பகுதியில் ரூ.8,440 மில்லியன் பெறுமதிக்கு பங்குபற்றும் நிறுவனங்களினூடாக கொடுகடன் வழங்கல் ஊக்குவிக்கப்பட்டதன் மூலம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறைக்கான பங்களிப்பைத் தொடர்ந்தது.

இத்துறை மீது கவனம் செலுத்தும் பிரதான கொடுகடன் திட்டமாக, 32 வகை பயிர்களை உள்ளடக்கி, வேளாண்மையாளர்களுக்குத் தேவையான தொழிற்படும் மூலதனத்தை வழங்கும் 'சறுசற' அல்லது புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் விளங்குகிறது. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ், 2012/2013 பெரும்போக காலத்தில் 60,120 வேளாண்மையாளர்களிடையே ரூ.5,378 மில்லியன் தொகை வழங்கப்பட்டதுடன் முன்னைய பெரும்போக காலத்துடன் ஒப்பிடுகையில் விநியோகிக்கப்பட்ட கடன் பெறுமதி நியதிகளில் 10 சதவீத வீழ்ச்சியையும் கடன் எண்ணிக்கை நியதிகளில் 17 சதவீத வீழ்ச்சியினையும் பதிவு செய்தது. 2013இன் சிறுபோக காலப்பகுதியில், முன்னைய சிறுபோக காலத்தின் 40,077 வேளாண்மையாளர்களுடன் ஒப்பிடுகையில் 36,261 வேளாண்மையாளர்களுக்கு ரூ.2,786 மில்லியன் பெறுமதியான கடைகள் வழங்கப்பட்டன. முன்னைய ஆண்டின் செயலாற்றத்திற்கெதிராக சிறுபோக காலத்தில் விநியோகிக்கப்பட்ட கொடுகடன் தொகையானது, கடன் பெறுமதி நியதிகளில் 17 சதவீத வீழ்ச்சியையும் கடன் எண்ணிக்கை நியதிகளில் 10 சதவீத வீழ்ச்சியையும் பதிவு செய்தது. இவ்வீழ்ச்சிக்குப் பெரும்போக காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும், சிறுபோக காலத்தில் ஏற்பட்ட வரட்சியுமே காரணங்களாக இருந்தன. கடந்த காலங்களைப் போல, 2013 இல் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் நெல் (54 சதவீதம்) அதிகூடிய சதவீதத்தைக் கொண்டிருந்த வேளையில் வெங்காயம் 23 சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் எஞ்சியவை, உருளைக்கிழங்கு, சோளம், மிளகாய், மரக்கறிகள் மற்றும் ஏனைய உணவுப் பயிர்களின் வேளாண்மைக்காக வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக, மூன்றாவது ஆண்டாகவும், 2013 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வேளாண்மை கடன்களின் மிக உயர்ந்த தொகைக்கு வகைகூறியதொரு மாவட்டமாக தொடர்ந்தும் விளங்கி 32 சதவீதப் பங்கினைப் பதிவு செய்தது. அதனை அடுத்து அநுராதபுரம், அம்பாந்தோட்டை மற்றும் பொலனறுவை மாவட்டங்கள் முறையே 10 சதவீதம், 9 சதவீதம் மற்றும் 8 சதவீதப் பங்கினைப் பிரதிபலித்தன. சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் அடுத்த போகத்தில் எவ்வித தடைகளுமில்லாது பயிர் செய்வதனை உறுதிசெய்வதற்காக, மீள்அட்டவணையிடப்பட்ட கடன்களின் நியதிகளில் வேளாண்மையாளர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டன.

பால் நுகர்வில் தன்னிறைவு அடைதலுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் 2013 ஓகத்தில் பிரதேச அபிவிருத்தி திணைக்களமானது “பாரியளவு பால் உற்பத்தி அபிவிருத்தி கடன் திட்டம்” எனும் ஒரு புதிய கொடுகடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. பாரியளவு பால் உற்பத்தி அபிவிருத்திக் கடன் திட்டமானது பரந்த அளவிலான கொடுகடன் திட்டமாக காணப்படுவதுடன் பாற்பண்ணை வழங்கல் சங்கிலியின் எல்லா நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றது. ஆண்டுக்காலப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் ரூபா 202 மில்லியன் பெறுமதியான தொகை 60 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. பாரியளவு பால் உற்பத்தி அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் சலுகை ரீதியான வட்டி வீதங்களிலான கொடுகடன் வசதிகளின் ஏற்பாடுகளானது பாற்பண்ணை கைத்தொழிலிலுள்ள பண்ணையாளர்களுக்கு அறிவு இடைவெளியை நிரப்புதல், தொழில்நுட்ப அறிவை ஏற்படுத்துதல் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பவற்றின் மூலம் ஒரு நவீன பாற்பண்ணை கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இது பால் உற்பத்தியின் அதிகரிப்புக்கு பங்களிக்கும். நவீன பாற்பண்ணை முகாமைத்துவ முறைகளை மேம்படுத்துதல், உயர்தர புற்களை பயிரிடுதல், செறிவுபடுத்தப்பட்ட கால்நடை உணவுகளின் பயன்பாடு, கால்நடைகளின் உணவில் நீர், கனிப்பொருட்கள், விற்றமின்கள் போன்றவற்றைப் போதுமானளவில் பயன்படுத்தும் சிறந்த நடைமுறைகளை ஊக்குவித்தல் என்பவற்றின் மூலம் வீரியம் மிக்க பாற்பண்ணை கைத்தொழில் ஒன்றினை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டமானது இலங்கையில் பால்நுகர்வில் தன்னிறைவு அடைகின்ற இலக்கினை பூர்த்தி செய்வதற்கு பாற்பண்ணை கைத்தொழிலில் உயர்தொழில்நுட்ப பாற்பண்ணைகளில் முதலீடு செய்யக்கூடிய தொழில்முயற்சியாளர்களைக் கவரும் என எதிர்பார்க்கிறது.

### 23.2 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் அபிவிருத்தி

பிரதேச அபிவிருத்தி திணைக்களமானது பிரதானமாக உற்பத்தி மற்றும் பணிகள் துறைகளின் நடவடிக்கைகளை இலக்காக கொண்டு ஏழு கொடுகடன் திட்டங்களின் மூலம் சலுகை ரீதியான நிதி வசதியூடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு தொடர்ந்து உதவியளித்தது. 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத்தொகையானது 2012ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ.4,167 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.5,538 மில்லியனாக விளங்கி 33 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. 2013 ஆண்டுக் காலப்பகுதியில் கடன் வழங்கலானது 2012ஆம் ஆண்டின் 18,674 உடன் ஒப்பிடுகையில் 25,483 தொழில்முயற்சியாளர்களுக்கு அதிகரித்து 37 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

நாட்டின் எல்லா பாகங்களையும் உள்ளடக்கி ‘சௌபாக்கியா’ கடன் திட்டத்தின் கீழ் 9,063 தொழில்முயற்சியாளர்களுக்கு ரூ.3,492 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. பகிர்ந்தளிக்கப்பட்ட ‘சௌபாக்கியா’ கடன்களில் 40 சதவீதத்திற்கு மேலான தொகையானது நுண்பாக, சிறிய அல்லது நடுத்தர தொழில்முயற்சியாண்மைகளை ஆரம்பிப்பதற்கு அல்லது இருக்கின்ற முயற்சியாண்மைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது. இக்கடன் திட்டத்தின் கீழ், ஆண்டுக்கு 9 சதவீத சலுகை ரீதியிலான வட்டி வீதத்தில் ரூபா 25 மில்லியன் வரை பெற்றுக்கொள்ள முடிவதோடு 6 மாத சலுகைக்காலம் உள்ளடங்கலாக ஐந்து வருடங்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகைமையைக் கொண்டிருக்கும் இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டத்தினூடாக கடன் வசதிகளை வழங்கியதன் மூலம் சொந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு உதவி வழங்கப்பட்டது. வடக்கின் எழுச்சி கடன் திட்டம் கட்டம் II மற்றும் கிழக்கு மாகாணத்தின் பொருளாதார செயற்பாடுகளை மீளமைத்தல் கட்டம் II மற்றும் III ஆகியன 2013 ஆம் ஆண்டுகாலப்பகுதியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய முக்கிய கடன் திட்டங்களாகும். பிரதேச அபிவிருத்தி திணைக்களமானது, இக்கடன் திட்டங்களூடாக இவ்விரண்டு மாகாணங்களிலும் 2012இல் 9,158 ஆக காணப்பட்ட கடன் வழங்கல்களை 2013ஆம் ஆண்டில் 14,845 இற்கு அதிகரிக்க இயலுமாகவிருந்தது. ஆண்டுக்காலப்பகுதியில் இக்கடன் திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த கடனானது 2012ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ.1,197 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,670 மில்லியனாகக் காணப்பட்டது.

### 23.3 நுண்பாக நிதியியல் துறை

நுண்பாக நிதியியல் துறைக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் பிரதான நோக்கங்களாக நிதியியல் வசதிகள் வழங்குவதை மேம்படுத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு என்பன காணப்பட்டன. இந்த திட்டங்களானவை முறைசார் நிதியியல் துறைகளிலிருந்து விலக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதன் மீது கவனம் செலுத்தின. நாட்டின் 14 மாவட்டங்களில் செயற்பாட்டை தொடரும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்திட்டம் - II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - II சுழலும் நிதி ஆகிய இத்துறையை இலக்காக கொண்டு வடிவமைக்கப்பட்ட பிரதான கடன் திட்டங்களாகும். வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்திட்டம் சுழலும் நிதி கடன் திட்டமானது 11 மாவட்டங்களில் செயற்பாட்டிலிருந்தது. ஆண்டுக் காலப்பகுதியில் இம் மூன்று செயற்திட்டங்களின் கடன் வழங்கலானது 2012 ஆம் ஆண்டின் 19,728 நன்மை பெறுநர்களினால் பெற்றுக் கொண்ட ரூ.1,039 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 32,100 நன்மை பெறுநர்களால் ரூ.1,893 மில்லியன் தொகை பெறப்பட்டு கணிசமான அளவு முன்னேற்றத்தினைக் காட்டியது. இது கடன் வழங்கல்கள் மற்றும் தொகைகளின் நியதிகளில் முறையே 63 சதவீதம் மற்றும் 82 சதவீதமான அதிகரிப்பைக் காட்டியது. அதேவேளை பொருளாதாரத்தின் நலனோன்புகளையும் கிராமிய வறிய மக்களின் பொதுவான நலன்புரிகளையும் மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்ட சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்திட்டம் - சுழலும் நிதியின் கடன் திட்டம் 2013இல் 5,919 நன்மைபெறுநர்களுக்கிடையே ரூ.249 மில்லியன் பெறுமதியான கடன்களை வழங்கியதன் மூலம் சிறந்த செயலாற்றத்திறனைக் காட்டியது.

### 23.4 விழிப்புணர்வினை மேம்படுத்துதல்

விழிப்புணர்வை கட்டியெழுப்புதலானது, குறிப்பாக, கிராமிய மக்கள் தங்களின் நிதியியல் நலனோன்புகளை முன்னேற்றுவதற்காக கல்வியறிவூட்டுவதனை இலக்காகக் கொண்டிருந்தது. நிதியியல் சார்ந்த அறிவானது நிதியியலைப் பெறுவதனை மேம்படுத்துவதற்கு முக்கியமானதாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தில், சேமிப்பு மற்றும் சேமிப்பு பழக்கங்கள், வரவு செலவுத்திட்டமிடல், குடியிருப்பாளர் மட்டத்தில் நிதியியல் முகாமைத்துவம், முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் சாதனங்கள்/ பணிகள் என்பவற்றின் கிடைப்பனவு, கொடுகடனை புத்திசாலித்தனமாக பயன்படுத்தல், அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்களுடனான வணிகம் தொடர்பில் ஏற்படக்கூடிய இடர்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட செயற்றிட்டங்கள் ஆகிய தலைப்புகள் பொதுவாக உள்ளடக்கப்பட்டன. பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் உதவியுடன் நாடு முழுவதும் பிரதேச அபிவிருத்தி திணைக்களம் 63 நிதியியல் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களினை நடத்தியது. மேலும், பிரதேச அபிவிருத்தி திணைக்களமானது பிரதேசங்களிலுள்ள வங்கியாளர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய முகவர்களின் மனித வளங்களிற்காக 20 பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி தொடர்களுக்கு வசதியளித்ததுடன் இப் பயிற்சிகளுக்கான மனிதவள வளவாளர்களினை பிரதேச அபிவிருத்தி திணைக்களம் வழங்கியிருந்தது. ஆண்டுக் காலப்பகுதியில் வெளியக பயிற்சி அலுவலர்களின் உதவியுடன் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வேளாண்மையாளர்களின் நன்மைக்காக 37 தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்றிட்ட மதிப்பீட்டு செயலமர்வுகளையும் மற்றும் 12 அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களானவை நிதியியல் வசதிகளின் கிடைப்பனவு, பொருத்தமான நிறுவனங்களிடமிருந்து சந்தைப்படுத்தும் அறிவுசார்ந்த வசதி மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றிலான அறிவூட்டலை உருவாக்குதல் மற்றும் வேளாண்மையாளர்களுக்கிடையே தரம் மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிப்பு தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்தல் என்பவற்றிற்கு உதவிபுரிந்தன. மேலும், பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடிய சலுகை ரீதியான நிதியியல் வசதிகள் மீதான தகவல்களை பரப்புவதற்காக 16 வானொலி நிகழ்ச்சித்திட்டங்களையும் 2 தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் திணைக்களம் நடத்தியது.

அட்டவணை II-22

## பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் (2013 காலப்பகுதியில்)

| செயற்றிட்டத்தின் பெயர் | | நிதியிடல் மூலம் | பணித் திட்டங்கள் | நிதி ஒதுக்கீடு (ரூ.மில்) | 2013இல் நிதி வழங்கல் (ரூ.மில்) | வழங்கப் படவுள்ள மீதி நிதியம் (ரூ.மில்) | கடன் பெற்றோ ருக்கான ஆண்டு வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | **வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத்துறை** | | | | | | |
| 1.1 | இரண்டாவது நீண்ட காலப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | நீண்ட காலப் பயிர்கள் துறையை வர்த்தக மயப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்று மேடை அபிவிருத்தி, அறுவடையின் பின்னான கையாளல், மற்றும் பதனிடல் செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் | 1,200 | 2 | முழுமையாகப் பயன்படுத்தப் பட்டது | 9% |
| 1.2 | தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | தீங்குப் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கிய கட்டுப்பாட்டு அளவு சான்றிதழைப் பெறும் விதத்தில் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதிச் சந்தையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேயிலை சிறு உடைமையாளர்களின் வருமானத்தை நிலைத்து நிற்கும் அடிப்படையில் அதிகரித்தல். | 1,100 | 69 | 174 | 9% |
| 1.3 | "விஸ்கம்" வர்த்தக மயப்படுத்தப்பட்ட வேளாண்-வியாபார அபிவிருத்திக்கான கொடுகடன் தொடர் | இலங்கை மத்திய வங்கி | வேளாண்-வியாபார செயற்பாடுகளில் பன்முகப்படுத்தல் மற்றும் ஏனைய முன்னேற்றங்களை உருவாக்குவதன் ஊடாக வர்த்தக வேளாண்-வியாபாரத்தை அபிவிருத்தி செய்தல் | 1,329 | 3 | முழுமையாகப் பயன்படுத்தப் பட்டது | 8% |
| 1.4 | புதிய அனைத்தையு முள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியம் மற்றும் அரச வட்டி உதவு தொகை | நெல் மற்றும் குறுங்காலப் பயிர்களின் பயிர்செய்கையில் ஈடுபடுகின்ற நுண்பாக மற்றும் சிறியளவு வேளாண்மையாளர்களின் சமூக பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல் | நிதிக்கான கேள்வி அடிப் படையில் | 8,164 | வி.கி.* | 9% |
| 1.5 | பாரியளவு பால் உற்பத்தி அபிவிருத்திக் கடன் திட்டம் | இலங்கை மத்திய வங்கி | பால் நுகர்வில் தன்னிறைவை அடைவதற்கு உதவுதல் மற்றும் வர்த்தக அளவிலான பாற்பண்ணைகளை நிறுவுதலினூடாக பாலினை உற்பத்தி செய்தல் | நிதிக்கான கேள்வி அடிப் படையில் | 202 | வி.கி.* | 8% |
| 2. | **நுண்பாக,சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறை** | | | | | | |
| 2.1 | சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டம் | இலங்கை அரசாங்கம் | அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிற்றப்பட்ட இளைஞருக்கு நிதியியல் உதவி வழங்குதல் | 250 | 41 | 97 | 10% |
| 2.2 | "வடக்கின் எழுச்சி" கடன் திட்டம் - கட்டம் II | இலங்கை மத்திய வங்கி | வட மாகாணத்தில் கடன் பெறுவதற்கு வாய்ப்புள்ள நன்மைபெறுநர்களுக்கு அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு உதவி வழங்கல் | 2,000 [2] | 770 | 562 | 9% |
| 2.3 | கிழக்கு மாகாணத்தின் பொருளாதார செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் II | இலங்கை மத்திய வங்கி | புதிய மற்றும் இருக்கின்ற வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளிற்கு நிதியளிப்பதன் மூலம் கிழக்கு மாகாண சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் | 1,000 [2] | 472 | முழுமையாகப் பயன்படுத்தப் பட்டது | 9% |
| 2.4 | கிழக்கு மாகாணத்தின் பொருளாதார செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் III | இலங்கை மத்திய வங்கி | புதிய மற்றும் இருக்கின்ற வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளிற்கு நிதியளிப்பதன் மூலம் கிழக்கு மாகாண சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் | 1,000 | 428 | 572 | 9% |
| 2.5 | சுபீட்சக் கடன் திட்டம் ("சௌபாக்கியா") | இலங்கை மத்திய வங்கி | எந்தவொரு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அல்லது விரிவாக்குவதற்கு அல்லது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு | 7,960 | 3,492 | முழுமையாகப் பயன்படுத்தப் பட்டது | 9% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2.6 | மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம் | இலங்கை மத்திய வங்கி | வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடித்தல், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகள், வர்த்தகம் மற்றும் போக்குவரத்து துறைகளிலான நடுத்தர மற்றும் பெரியளவு செயற்றிட்டங்களின் வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளுக்கு உதவுதல் | 2,900 | 254 | முழுமையாகப் பயன்படுத்தப் பட்டது | 12% |
| 2.7 | சுனாமிக்குப் பின்னைய கரையோர மீளமைப்பு மற்றும் வள முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்[3] | வே.அ.ப.நி* | சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களிற்கு அவர்களுடைய வழமையான செயற்பாடுகளினுடைய ஆதாரத்தை மீள நிறுவுதல் மற்றும் அவர்களுடைய சொத்துக்களை மீளமைத்தல் என்பவற்றின் ஊடாக ஆதரவளித்தல் | 191 | 81 | முழுமையாகப் பயன்படுத்தப் பட்டது | 8% - 10% |
| **3.** | **நுண்பாக நிதியியல் துறை** | | | | | | |
| 3.1 | சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | நன்மைபெறுவோரின் பொருளாதார நிலைமைகளையும் பொது நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு வறிய கிராம மக்களுக்கான வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளுக்கு முறைசார் கொடுகடனை வழிமுறைப்படுத்தல் | 345 | 249 | மீள அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும் | 12% - 14% |
| 3.2 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | | 1,031 | 735 | மீள அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும் | 12% |
| 3.3 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II[3] | இலங்கை அரசாங்கம் ய.ப.ஒ.மு* | முறைசார் வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானமுடைய குழுக்களை இணைப்பதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக வறுமையை ஒழித்தல் | 2,104 | 202 | 1 | 12% - 15.5% |
| 3.4 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | | 2,246 | 956 | மீள அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும் | 12% - ப.நி.நி.க 14% - க.வ.ப.மு.க* |
| 3.5 | வரண்ட வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | மொனராகலை, குருணாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் வறிய வேளாண்மையாளர்களிற்கிடையிலான வறுமை ஒழிப்பும், வருமான உருவாக்கத்திற்கு உதவுதலும் | 253 | 123 | 130 | 10% |
| 3.6 | சிறு உடைமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்[3,4] | வே.அ.ப.நி.* | மத்திய நாட்டுப் பிரதேசத்தில் தேயிலை மற்றும் ஏனைய நிரந்தர பயிர்களைப் பயிரிடுகின்ற வசதி குறைந்த சிறு உடைமையாளர்களினதும் இறப்பரை பயிரிட விரும்புகின்ற மொனராகலை மாவட்டத்தின் இடைநிலை வலயத்திலுள்ள உயர்நிலத்தில் உணவுப்பயிர் செய்யும் வறிய வேளாண்மையாளர்களிற்கும் ஜீவனோபாயத்தை மேம்படுத்தல் | 295 | 167 | 88 | 9% |
| 3.7 | தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | வே.அ.ப.நி.* | வறுமைக் குறைப்புக்குப் பங்களித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டப் பிரதேசங்களிலுள்ள வறுமையான கிராமிய வீடுகளிலுள்ள வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை கணிசமான அளவு விருத்தி செய்தல் | 262 | 113 | 149 | 12.25% |
| **4.** | **ஏனையவை** | | | | | | |
| 4.1 | **வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல்** | இலங்கை மத்திய வங்கி | வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மோதல்களின் போது சேதமடைந்த வீடுகளை திருத்துவதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 600 | 211 | 305 | 8% |

1. 2013இல் புதிய நிதியங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.
2. 2.2 மற்றும் 2.3 இல் கொடுக்கப்பட்ட கடன்களின் நிதி ஒதுக்கீடு கடன் வட்டிகளின் ரூ.154 மில்லியன் மற்றும் ரூ.78 மில்லியனிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.
3. 2.2, 3.3 மற்றும் 3.6 இல் கொடுக்கப்பட்ட கடன்கள் முறையே சிறப்பு எடுப்பனவு உரிமை 1.02 மில்லியன், யப்பான் யென் 2,100 மில்லியன் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமை 1.75 மில்லியன் வெளிநாட்டு நாணயங்களிலிருந்ததுடன் கடன் உடன்படிக்கைத் திகதியிலிருந்தபடியாக நாணய மாற்று வீதத்தில் ரூபாய் பெறுமதிக்கு மாற்றப்பட்டது.
4. இலங்கை ரூபாவிற்கு எதிராக சிறப்பு எடுப்பனவு உரிமைப் பெறுமதி உயர்ந்தமை காரணமாக

* வி.கி. - விபரம் கிடைக்கவில்லை
வே.அ.ப.நி - வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம்
ய.ப.ஒ.மு - யப்பானிய பன்னாட்டு ஒத்துழைப்பு முகவராண்மை
க.வ.ப.மு.க. - கடன் வழங்கும் பங்கேற்பாளர் முகவர்கள் கடன்பெறுநர்களிடமிருந்து
ப.நி.நி.க - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுநருக்கு

## 24. செயலகம்

வங்கி ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் முதலில் நிறுவப்பட்ட திணைக் களங்களில் ஒன்றான செயலகத் திணைக்களமானது பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு, விடுப்புத் தொடர்பான கொள்கைகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல், ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல், பயணம் மற்றும் ஏனைய பொதுவான பணிகளையும் சட்ட ரீதியான பணிகளையும் வழங்குதல் என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது.

2013இல் செயலகத் திணைக்களம் சரியான நேரத்தில் பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்தல், தொழிற்பாட்டு முறைமைகளினையும் நடைமுறைகளினையும் தொடர்ச்சியாக மதிப்பிடல் மற்றும் தரம் உயர்த்துதல், விடுப்பு, ஓய்வூதிய நிதியம் மற்றும் பொதுப் பணிகள் தொடர்பான விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் நிருவகித்தல் மற்றும் நடைமுறைக்கிடல் என்பனவற்றினூடாக இலங்கை மத்திய வங்கியின் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டை வசதிப்படுத்தியது.

இவ்வாண்டுப் பகுதியில் திணைக்களம், தரம், சரியான நேரம் மற்றும் போட்டி விலைகள் என்பனவற்றினை உறுதிப்படுத்துவதன் மூலம் முக்கியமாக விலைக்கோரல்களினூடாக ரூ.194.1 மில்லியன் பெறுமதியான மூலதனம் மற்றும் மூலதனமல்லாப் பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்தது. கடந்த காலங்களைப் போன்றே, பயன்படுத்துநர் திணைக்களங்களுக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் நேரம் பிந்தாத வழங்கலை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கியின் கொள்வனவு முகாமைத்துவ செயன்முறையினைக் கண்காணிப்பதற்காக கொள்வனவுத் திட்டமிடல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, செயலகத் திணைக்களம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட மொத்தக் கொள்வனவுத் தேவைப்பாடுகளில் 98 சதவீதத்தினை நிறைவு செய்யக்கூடியதாக இருந்தது. மேலும், செயலகத் திணைக்களம் மத்திய வங்கியின் அனைத்துச் சொத்துக்களுக்கும் செலவுச் சிக்கனமானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான காப்புறுதிப் பாதுகாப்பினைப் பெற்றுக் கொண்டது. செயலகத் திணைக்களம் மத்திய வங்கியின் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பனவற்றை நிருவகித்தது. 2013 இறுதியில் இத்திட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஓய்வூதியக்காரர்களின் மொத்த எண்ணிக்கை 2,070 ஆகக் காணப்பட்டது. ஆண்டுக்காலப்பகுதியில், வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத அலுவலக உபகரணங்களை விற்பனை செய்வதற்காக மாத்தறை மாகாண அலுவலகம், அனுராதபுர மாகாண அலுவலகம், நுவரெலியா விடுமுறை விடுதி, வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வு நிலையம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தலைமைக் காரியாலயம் போன்ற இடங்களில் 06 அளவீட்டுச்சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் இச்செயற்பாட்டின் மூலம் ரூ.4.6 மில்லியன் பெறுமதியான தொகை வருமானம் உருவாக்கப்பட்டிருந்தது.

இவ்வாண்டுப் பகுதியில் செயலகத் திணைக்களம் வங்கிக்குச் சட்டப் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. அத்தகைய பணிகள் வங்கியின் செயற்பாடுகளுக்கு ஊக்கியாகச் செயற்படும் வகையில் வழமையான சட்டப் பிரச்சனைகளிலிருந்து கொள்கைகளை உருவாக்குவது வரையிலான பரந்தளவிலான நடவடிக்கைகளில் கிடைக்கத்தக்கதாக இருந்தன. நீதிமன்ற வழக்குகளைக் கையாள்வதில் வங்கியின் உரிமைகளை வலியுறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் செயற்பாடுமிக்க வகிபாகமொன்றினை ஆற்றியது. வங்கிக்கு முன்னாலுள்ள பல்வேறு வகையான சவால்களையும் சுமூகமாக கையாள்வதனை வசதிப்படுத்துவதற்காக, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறை தொடர்பாக பொருத்தமான சட்டங்களையும் துணைச் சட்டங்களையும் தயாரிப்பதன் மூலம் தேவையான உதவிகள் வழங்கப்பட்டன.

2013இல் செயலகத் திணைக்களமானது புதுவருட வைபவம், நீண்டகால பணிக்கான விருது வழங்கும் வைபவம், சுதந்திர தின வைபவம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் 63 ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்ட வைபவம் போன்ற பல்வேறுபட்ட மத ரீதியான நிகழ்ச்சிகளையும் ஞாபகார்த்த நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்து ஒழுங்குமுறைப்படுத்தியது.

2013ஆம் ஆண்டில் செயலகத் திணைக்களத்தினால் அடையப்பட்ட இச்செயலாற்றமானது 23 உயர் அலுவலர்கள், 13 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 05 வங்கி அலுவலக உதவியாளர்கள் போன்றோரின் ஒத்துழைப்புடன் அடையப்பட்டதொன்றாகும்.

## 25. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்பு பணிகள் திணைக்களம் 2013 ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியினை அனைத்து பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்களிலிருந்தும் பாதுகாத்து எந்த விதமான பாதுகாப்புத் தவறுமில்லாத ஓர் சூழலை உறுதிப்படுத்தியது.

இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தில் வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடன் நவீனத்துவம் வாய்ந்த மையப்படுத்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நுழைவு வழிக்கட்டுப்பாட்டு முறைமை ஒன்று நிறுவப்பட்டது. தற்போதைய வானொலித் தொடர்பூட்டல் முறைமையானது கொழும்புத் தலைமை அலுவலகம், வங்கி இல்லம் மற்றும் இராஜகிரிய வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் ஆகிய இடங்களின் 03 தள நிலையங்களுக்குப் பதிலாக 25 கையடக்க வானொலிக் கருவிகள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் தரமுயர்த்தப்பட்டது. மேலும், முறைமையிலுள்ள டிவிஆர் களை பதிலீடு செய்ததன் மூலம் சிசிரிவி புகைப்படக்கருவி முறைமையின் சேமிப்பு இயலளவு 01 மாதத்திலிருந்து 06 மாதங்களுக்கு அதிகரிக்கப்பட்டது. பாதுகாப்பு பணிகள் திணைக்களம் கணிசமானளவு எண்ணிக்கையான தீயணைப்புக் கருவிகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய கருவிகளை கிரமமான அடிப்படையில் திருத்தம் செய்ததுடன் பதிலீடு செய்தது. உயர் பதவி அலுவலர் ஒருவருக்கும் எட்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களிற்கும் மாலபேயில் உள்ள சினெக் மரிரைம் வளாகத்தில் தீயணைப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அத்துடன் கொழும்பு தீயணைப்புப் படை மற்றும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் என்பவற்றின் உதவியுடன் மத்திய வங்கியின் அனைத்து திணைக்களங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 106 தீயணைப்பு மேற்பார்வையாளர்களுக்கு ஒருங்கிணைந்த பயிற்சியொன்று வழங்கப்பட்டது. மேலும், 2013இல் இலங்கை மத்திய வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் இலங்கை விமானப்படை மற்றும் கொழும்பு தீயணைப்புப் படையின் உதவியுடன் தீயணைப்பு பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய் நிலையத்தில் 25 பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் மிகச் சிறந்த சேவையைப் பாராட்டி இரு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் 32 பாதுகாப்பு அலுவலர்களைக் கொண்ட மற்றொரு குழு அத்துருகிரியவிலுள்ள தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தில் நடத்தப்பட்ட பொதுவான பாதுகாப்பு, மிகவும் முக்கிய நபர்களினைக் கையாளல், பாதுகாப்புக் கடமைகள் மற்றும் பொதுமக்கள் தொடர்புகள் பற்றிய இரண்டு நாள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றது.

மேலும், 2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் பணிமனைக்கு உள்ளே நடைபெற்ற அனைத்துக் கூட்டங்களுக்கும் நாடு பூராகவும் நடைபெற்ற நாணயக் குத்திச் சேகரிப்பு நிகழ்ச்சிதிட்டங்களிற்கும் பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் பாதுகாப்புப் பணியினை வழங்கியது.

## 26. புள்ளிவிபரவியல்

இலங்கையில் புள்ளிவிபரங்களை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பனவற்றை விரிவாக்கும் நோக்குடன் 1978இல் புள்ளிவிபரத் திணைக்களம் உருவாக்கப்பட்டது. இதற்கமைய, சமூக விபரங்கள், மாதிரி அளவீடுகள் மற்றும் அளவைப் பொருளாதாரம் என வகைப்படுத்தப்பட்டவாறான பரந்த செயற்பாடுகளை இது நிறைவேற்றியிருக்கிறது. தற்பொழுது திணைக்களத்தின் தொழிற்பாடுகள் பரந்தளவிற்கு விரிவடைந்துள்ளதுடன் முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளை எதிர்வுகூறுதல் மற்றும் மதிப்பிடுதல், விலைகள் மற்றும் கூலிச் சுட்டெண்கள், இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் மாகாண மொ.உ.உற்பத்தி என்பனவற்றைத் திரட்டுதல், அளவீடுகளை நடத்துதல், நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினூடாக தரவுகளை சேகரித்தல் மற்றும் செய்முறைப்படுத்தல், பிரசுரங்கள் மற்றும் பத்திரிகை வெளியீடுகளூடாக புள்ளிவிபரங்களையும் தகவல்களையும் சரியான நேரத்தில் பரப்புதல் மற்றும் இலங்கையில் வியாபாரம் செய்தல் தரமிடலை மேம்படுத்தல் என்பனவற்றிற்குப் படிப்படியாக வளர்ச்சி கண்டுள்ளது.

### 26.1 முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளை எதிர்வுகூறல்

நாட்டின் நாணயக் கொள்கை வடிவமைப்பிற்கு வசதியளிக்கும் பொருட்டு குறுங்கால அடிப்படையில் நுகர்வோர் விலைப் பணவீக்கத்தினையும் பொருளாதார வளர்ச்சியையும் எதிர்வுகூறியதுடன் நாணயக் கொள்கை

குழுவிற்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கிறது. பணவீக்க எறிவுகள், விலை அசைவுகளின் எதிர்காலப் போக்குகளின் முன்னணிக் குறிகாட்டியாகப் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, பணவீக்கத்தின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் தொடர்பான மாறிகளின் விலைகளில் அடையப்படுகின்ற மற்றும் உணரப்படுகின்ற மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் அடிக்கடி இற்றைப்படுத்தப்படுகின்றன. இதற்கமைய திணைக்களம் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் திரட்டப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலுள்ள பொருட்கள் மற்றும் பணிகளின் நுகர்வோர் விலைகளின் அசைவுகளை கிரமமாகவும் நெருக்கமாகவும் கண்காணித்ததுடன் விலை அசைவுகளைப் பகுப்பாய்வு செய்கின்ற மாதாந்த பத்திரிகை வெளியீடுகளையும் விடுத்தது. பணவீக்க எதிர்வுகூறலானது முக்கியமாக நுகர்வோர் விலைகளின் கடந்தகால மற்றும் எதிர்காலப் போக்குகளையும் திணைக்களத்தினால் விருத்தி செய்யப்பட்ட பொருளாதார அளவுசார் தொழில்நுட்பங்களையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

துறைவாரியான உள்ளமைப்புடன் கூடிய மொ.உ.உற்பத்தி வளர்ச்சியின் வருடாந்த மற்றும் காலாண்டு எதிர்வுகூறல்கள், துறைவாரியான அபிவிருத்திகள் பற்றிய பகுப்பாய்வுடன் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர மூலங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டன. புள்ளிவிபரவியல் தொழில்நுட்பங்களின் அறிமுகத்துடன் சேர்ந்து பொருளாதாரத்திலுள்ள நடைமுறை அபிவிருத்திகளை உள்ளீடு செய்வதற்கு புதிய குறிகாட்டி மாறிகளை சேர்த்துக் கொண்டதன் மூலம் எறிவுகளின் தரமும் நம்பகத்தன்மையும் உயர்த்தப்பட்டது. நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு போன்ற ஏனைய தேசிய வருமானக் கணக்கு கூறுகளின் எதிர்வுகூறல்களும் வருடாந்தம் தயாரிக்கப்பட்டன.

### 26.2 விலை மற்றும் கூலிச் சுட்டெண்களைத் தொகுத்தல்

ஒன்பது மாகாணங்களுக்குமான மாகாண ரீதியான நுகர்வு விலைச் சுட்டெண்களும் முழுத் தீவினையும் உள்ளடக்கிய ஒன்று சேர்ந்த நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டு மாதாந்த அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் தொகுக்கப்பட்டமைக்கான முக்கிய நோக்கம் மாகாண மட்டங்களில் விலை அசைவுகளை ஒப்பிடுவதேயாகும். திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 2003/04 மாகாண ரீதியான விலைச்சுட்டெண்களுக்கான தளத்தினை வழங்கின. மாகாண நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் தொகுப்பில் பயன்படுத்தப்பட்ட விலைத் தரவு திணைக்களத்தினால் பேணப்பட்ட நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையிலிருந்தும் வெளியிலிருந்தான ஏனைய பொருத்தமான நம்பத்தகுந்த மூலங்களிலிருந்தும் பெறப்பட்டது.

முதலாந்தரச் சந்தை மட்டங்களில் உற்பத்தியாளர் மற்றும் மொத்த விற்பனை விலைகள் என்பனவற்றின் அசைவுகளை மதிப்பிடுவதற்காக திணைக்களம் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணினைத் தொடர்ந்தும் மாதாந்த ரீதியில் தொகுத்தது. மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணிற்கான தரவுகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையினூடாகவும் ஏனைய தொடர்பான அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களூடாகவும் சேகரிக்கப்பட்டன. உற்பத்தியாளர் மட்டங்களில் பெருமளவில் அபிவிருத்திகளுக்கு கூடியளவு பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய விலைச்சுட்டெண்ணினை அறிமுகப்படுத்தும் நோக்குடன் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உதவியுடன், இலங்கைக்காக, உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணொன்றினை உருவாக்குவதற்காக 2013இல் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் நடவடிக்கைகளைத் தொடங்கியது. இவ்வாண்டுப் பகுதியில், உத்தேச சுட்டெண்ணினை அறிமுகப்படுத்துவதுடன் தொடர்பான பிரச்சனைகள் தொடர்பில் திணைக்களம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்துடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டது.

விலைச்சுட்டெண்களுக்குப் புறம்பாக, பொருளாதாரத்தில் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் அசைவுகளை மதிப்பிடுவதற்காக, திணைக்களம் கூலி வீதச் சுட்டெண்களையும் தொகுத்திருக்கிறது. இதற்கமைய, திணைக்களம் அரச துறை ஊழியர்களுக்காக பெயரளவு மற்றும் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்களையும் முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்களுக்காக உண்மைக் கூலி வீதச் சுட்டெண்களையும் கணித்தது. அரச துறை ஊழியர்களுக்கான கூலி வீதச் சுட்டெண், மத்திய அரசாங்கத்திலுள்ள நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள் மற்றும் சிற்றூழியர்களையும் அரச பள்ளிக்கூட ஆசிரியர்களையும் உள்ளடக்குகின்றமையால், புள்ளிவிபரத் திணைக்களம், 2012இல் வருடாந்த அரச துறை ஊழியர்களின் அளவீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி அரச துறையிலுள்ள அனைத்து ஊழியர் தரங்களையும் உள்ளடக்கிய அரச துறைக்கான கூலி வீதச் சுட்டெண்ணினை உருவாக்குவதற்கான நடவடிக்கையினை 2013இல் ஆரம்பித்தது. முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்களின் உண்மைக் கூலி அசைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் பொருட்டு, தொழில் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணையும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணையும் (2006/2007 = 100) பயன்படுத்தி திணைக்களத்தினால் குறைந்தபட்ச உண்மைக் கூலி வீதச் சுட்டெண்கள் கணிக்கப்பட்டன. மேலும், முறைசாரா தனியார் துறையின் கூலி அசைவுகள் வேளாண்மை மற்றும் கட்டடங்கள் கட்டுமான துணைத் துறையை உள்ளடக்கி நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினூடாக சேகரிக்கப்பட்ட நாளாந்தக் கூலித் தகவல்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

### 26.3 இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினைத் தொகுத்தல்

நாடு முழுமையானதும் மற்றும் அதன் மாகாணங்கள் ஒவ்வொன்றினதும் சுபீட்சத்தின் ஒட்டுமொத்த நிலைமையினை மதிப்பிடுவதற்கான கலப்பு குறிகாட்டியொன்றிற்கான தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு 2008இல் மத்திய வங்கியினால் இலங்கை சுபீட்சச் சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை சுபீட்சச் சுட்டெண் என்பது நாட்டிலும் அதன் மாகாணங்களிலும் இடம்பெறும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற பல்பரிமாண குறிகாட்டியொன்றாகும். இலங்கை சுபீட்சச் சுட்டெண் பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல், மக்கள் நலனோம்புகை மற்றும் சமூக உட்கட்டமைப்பு ஆகிய மூன்று துணைச் சுட்டெண்களை உள்ளடக்கியிருந்ததுடன் முழுமையான சுட்டெண் 26 மாறிகளையும் கொண்டிருந்தது. இலங்கை சுபீட்சச் சுட்டெண் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வருடாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டதுடன் 2009 இலிருந்து 2011 வரையான காலப்பகுதிக்கான இலங்கை சுபீட்சச் சுட்டெண் 2012இல் வெளியிடப்பட்டது. சுபீட்சத்தினை நோக்கி நாட்டில் இடம்பெற்று வருகின்ற பொருளாதார மாற்றங்களை எடுத்துக்காட்டுவதற்காக கூடியளவு பிரதிநிதித்துவ மாறிகள் உள்ளடங்கலாக இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினை முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் செயற்பாட்டில் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

### 26.4 மாகாண ரீதியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணித்தல்

2012ஆம் ஆண்டிற்கான பெயரளவு நியதிகளில் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி, தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியினது பிரிப்புக்களின் அடிப்படையில் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டது. ஒன்பது மாகாணங்களுக்கான மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தி வருடாந்த அடிப்படையில் கணிக்கப்பட்டு 2013இல் வெளியிடப்பட்டது.

### 26.5 புள்ளிவிபரவியல் அளவீடுகள்

2006இல் ஆரம்பிக்கப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்களின் அளவீடு மாதாந்த அடிப்படையில் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வளவீடானது நிதியியல் நிறுவனங்கள், அரச துறை நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் என்பனவற்றிலிருந்தான ஏறத்தாழ 300 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது. பதிலிறுப்புக்கள் மின்னஞ்சல்கள் மற்றும் நேர்காணல்கள் மூலமாகத் திரட்டப்பட்டன. பதிலிறுத்தவர்கள் தற்போதைய பணவீக்க உள்ளுணர்வுகள் மற்றும் 12 மாத காலப்பகுதிக்கான எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கம் என்பன மீதான கணியம்சார் மற்றும் தரம்சார் தகவல்கள் இரண்டையும் வழங்கினர். ஒவ்வொரு மாதத்தினதும் அளவீடுகளின் பெறுபேறுகள் நாணயக் கொள்கை குழுவிற்கும் நாணயச் சபைக்கும் அறிக்கையிடப்பட்டன.

நாட்டின் அரச துறை தொழில்நிலையின் மட்டங்களையும் போக்குகளையும் கண்டறியும் பொருட்டு, திணைக்களம் தொடர்ந்தும் வருடாந்த மற்றும் காலாண்டு அரச துறை தொழில்நிலை அளவீடுகளை மேற்கொண்டது. இத்தரவுகள் தேசிய வருமான மதிப்பீடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டன. 2012 இற்கான வருடாந்த அரச துறை ஊழியர் அளவீட்டின் அறிக்கையிடப்பட்டவாறு காலாண்டு அளவீடுகள் 1,000 இற்கு மேற்பட்ட ஊழியர்களை கொண்ட மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அரசுசார் நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. அளவீட்டில் கண்டறியப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வு அறிக்கையும் 2013இல் தயாரிக்கப்பட்டது. மேலும், தொழில் வாய்ப்பு, தொழிலின்மை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, தொழிலாளர் உறவுகள்,

தொழிற்சந்தை சீர்திருத்தங்கள் மற்றும் தொழிலாளர் உற்பத்தித்திறன் என்பனவற்றை உள்ளடக்கிய தொழிற்படை மற்றும் தொழிற்சந்தை என்பன மீது சேகரிக்கப்பட்ட தகவலும் திணைக்களத்தினால் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

மொ.உ.உற்பத்தியில் போதுமானளவிற்கு உள்ளடக்கப்படாத தெரிந்தெடுக்கப்பட்ட தனியார் துறைப் பணி நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டப்பட்ட பங்களிப்பினை மதிப்பிடுகின்ற குறிக்கோளுடன் தொடர்ச்சியான சிறப்பு அளவீடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. இவ்வளவீடுகள், தனியார் நலத்துறை, தனியார் கல்வி, தகவல் தொழில்நுட்பம்/ வெளிமூலங்களிலிருந்து வியாபாரச் செய்முறைப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் ஏனைய தனியார் பணி நடவடிக்கைகள் என்பன மீது மேற்கொள்ளப்பட்டன. அளவீடுகள் கிடைக்கத்தக்க தகவல்களுக்கமைய ஒன்றில் நிகழ்தகவுத்தன்மையினை அல்லது நிகழ்தகவற்ற மாதிரி முறையினை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஒவ்வொரு துறையிலிருந்தும் மொ.உ.உற்பத்திக்கு கிடைக்கின்ற பெறுமதிகூட்டப்பட்ட பங்களிப்பு, துறைவாரியான வளர்ச்சி மதிப்பீடுகளுடன் சேர்ந்து மேலதிக தொழில்நுட்பத்துடன் மதிப்பிடப்பட்டன. பெறுபேறுகள் எதிர்காலக் கொள்கை வகுப்பு நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கான முகாமைத்துவத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

### 26.6 நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை

1978இல் தொடங்கிய நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையானது புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களாக தொழிற்படுகின்ற பள்ளிக்கூட ஆசிரியர்களில் நாடளாவிய வலையமைப்பினூடாக தொழிற்படுகின்றது. முறைமையானது 102 தரவு சேகரிப்பு நிலையங்களை உள்ளடக்கியுள்ளது. இவ்வாசிரியர் புள்ளிவிபரச் சேகரிப்பாளர்கள் நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மை மற்றும் மீன்பிடிப் பண்டங்களின் உற்பத்தியாளர் விலைகள், முறைசாரா தனியார் துறையுடன் தொடர்பான நாளாந்தக் கூலிகள் மற்றும் வேளாண்மை மற்றும் மீன்பிடிப் பண்டங்களின் எதிர்கால உற்பத்தி மட்டங்கள் என்பனவற்றை வாராந்த, மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். ஆசிரிய புள்ளிவிபரச் சேகரிப்பாளர்கள் வலையமைப்பிற்குப் புறம்பாக, நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையும் ஆசிரியர்களல்லாத புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களின் புறக்கோட்டைச் சந்தை, மறடகமுல்ல அரிசிச்சந்தை மற்றும் தம்புள்ள, நாரகன்பிட்டி சிறப்பு பொருளாதாரமையங்கள் என்பனவற்றிலிருந்தான மொத்த மற்றும் சில்லறை விற்பனை விலைகள் என்பன தொடர்பான நாளாந்த மற்றும் வாராந்த அடிப்படையிலான தரவு அறிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டது.

திணைக்களம் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளை விலைச்சுட்டெண்களைத் தொகுத்தல், விலை அசைவுகளை எதிர்வுகூறல், விலைகள் மீதான கொள்கை மாற்றங்களின் தாக்கத்தினை மதிப்பிடல் மற்றும் தேசிய செலவினம் மற்றும் வருமானத்தினை மதிப்பிடல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறது. தரவுகளின் துல்லியமான தன்மையினையும் சரியான நேரத்தினையும் பேணும் பொருட்டு, திணைக்களம் புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களினால் அறிவிக்கப்பட்ட தரவுகள் தொடர்பில் தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வைகளை கிரமமாக மேற்கொண்டது. அது தவிர, இத்தரவின் துல்லியமான தன்மையானது, திணைக்களத்தின் அலுவலர்களினால் கொழும்பு மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட சந்தைகளிலிருந்து நேரடியாக சேகரிக்கப்பட்ட விலைத் தரவுகளைப் பயன்படுத்தி மேலும் சரிபார்க்கப்பட்டன. 2012இனைப் போன்றே, தெரிந்தெடுக்கப்பட்ட தரவு சேகரிப்பு மையங்களின் மேற்பார்வை நடவடிக்கைகள் மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்களினூடாக மேற்கொள்ளப்பட்டன.

வழமையான நடைமுறைகளைத் தொடர்ந்து, அண்மைய சந்தை அபிவிருத்திகள் மற்றும் பொருளாதாரத்தில் அண்மையில் தோற்றம் பெற்றிருக்கும் பொருளாதார நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில் தரவுச் சேகரிப்பிற்காக இற்றைப்படுத்தப்பட்ட படிவங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இவ்வாண்டுப் பகுதியில் தரவு சேகரிப்பு செயன்முறை மேம்படுத்தப்பட்டது. நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தப்படும் முறைமைக்காக பயன்படுத்தப்பட்ட தரவுப்படிவமும் கூடுதலான தகவல்களையும் பயன்படுத்துநர் சிநேகபூர்வதன்மையினையும் உருவாக்கும் விதத்தில் இவ்வாண்டுப் பகுதியில் திருத்தியமைக்கப்பட்டன.

வழமையான நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், பிரதேசங்கள் முழுவதிலும் அடையாளம் காணப்பட்ட விலை அபிவிருத்திகளில் காணப்பட்ட வேறுபாடுகள் தொடர்பான அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் தொழிற்பாடுகள் தொடர்பான பிரச்சனைகளை கலந்துரையாடுவதற்காகவும் 2013இல் கொழும்பு, மாத்தறை, அநுராதபுரம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஐந்து நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமை பிராந்திய ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன. இந்த ஆய்வரங்கு பொருளாதாரத்தின் தற்போதைய அபிவிருத்திகள் மீதான அறிவூட்டல்களை அவர்களுக்கு வழங்கின.

### 26.7 “வியாபாரம் செய்தலை இலகுபடுத்தும்” தரமிடலை மேம்படுத்தல்

2009 இலிருந்து புள்ளிவிபரவியல் திணைக்களம் இலங்கையின் “வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல்” தரமிடலை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. இந்நோக்கத்திற்காக திணைக்களம் 2013இல் பல முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நடவடிக்கைகள் “வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல்” தரமிடலை முன்னேற்றுவதற்கான உபாயங்களையும், நடுத்தர காலத்தில் தரமிடலை மேலும் மேம்படுத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய எதிர்கால உபாயங்களையும் வடிவமைப்பதற்கு முக்கிய ஆர்வலர்களின் பங்கேற்புடன் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தல், தரவு வழங்குநர்களுக்கு அவர்களது அமைப்புக்கள் மற்றும் நடவடிக்கை முறைகள் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் இடம்பெற்ற துறைகள் பற்றி அவர்களுக்கு அறிவிப்பதற்காக முக்கிய ஆர்வலர்களுக்குப் பொதுவான மேடையொன்றிற்கு வசதியளிக்கும் நோக்குடன் முக்கிய ஆர்வலர்களினதும் தரவு வழங்குவோரினதும் பங்கேற்புடன் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடல்கள், மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் பற்றி வாசிங்டனிலுள்ள உலக வங்கி தலைமை அலுவலகத்துடன் நேரடியாகக் கலந்துரையாடுவதற்கு முக்கிய ஆர்வலர்களை இயலுமைப்படுத்தும் விதத்தில் காணொளி மாநாடுகள் பலவற்றை நடத்தியமை மற்றும் பிரச்சனை பற்றிய தெளிவுபடுத்தல்கள், சீர்திருத்தங்கள் மற்றும் பிரச்சனைகள் பற்றிய அறிக்கைகளை உலக வங்கிக்கு சமர்ப்பித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இதன் விளைவாக இலங்கையில் வியாபாரம் செய்தல், தரமிடலை முழுமையான நியதிகளில் 60.87 இலிருந்து 2014இல் 61.83 இற்கு அதிகரிக்கக் கூடியதாக இருந்ததுடன் கட்டுமானங்களுக்கான உரிமங்கள், மின்வலுவினைப் பெற்றுக் கொள்ளுதல், வரி செலுத்துதல் மற்றும் எல்லை கடந்த வர்த்தகப்படுத்தல் ஆகியவற்றைக் கையாள்வதுடன் தொடர்பான விடயங்களில் அடையப்பட்ட முன்னேற்றம் காரணமாக முன்னேற்றங்கண்ட நாடுகளுக்கும் நாட்டிற்குமிடையில் காணப்பட்ட இடைவெளி குறுக்கமடைந்தது. இலங்கை தென்னாசியாவில் மிக உயர்ந்த தரமிடலைக் கொண்ட நாடாகக் காணப்படுகின்றது.

### 26.8 புள்ளிவிபரங்களைப் பரப்புதல்

புள்ளிவிபரத் திணைக்களம் கொள்கை வகுப்போர், ஆராய்ச்சியாளர், கல்வியாளர்கள், தொழில்சார் நிபுணர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தற்போது ஈடுபாடுள்ள சமூகப் பொருளாதார தரவுகளை பரந்தளவில் பரப்புவதற்குப் பொறுப்பாக இருக்கின்றது. இவ்வாண்டுப் பகுதியில் புள்ளிவிபரத் திணைக்களம் இரண்டாவது தடவையாக மும்மொழிகளிலும் அதன் இரண்டு முக்கிய ஆண்டு வெளியீடுகளான “இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரங்கள் - 2013 தொகுதி XXXV” இனை 2013 ஏப்பிறலிலும், “இலங்கை சமூக பொருளாதார தரவு மடிப்பு - 2013 - தொகுதி XXXVI” இனை 2013 யூனிலும் வெளியிட்டது. மேலும், இது 2013இல் வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகளை வெளியிட்டது. புள்ளிவிபரத் திணைக்களம் மத்திய வங்கி ஆண்டறிக்கைக்கும் அண்மைக்காலப் பொருளாதார அபிவிருத்திக்கும் இரண்டு அத்தியாயங்களுக்குப் பங்களிக்கின்றது. மேலும், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட உணவுப் பண்டங்களின் விலைகளும் கொள்கை நோக்கங்களுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு வாராந்தம் அறிவிக்கப்பட்டது. உள்ளக பிரதேச திணைக்களத்தின் வெப்தளமான ஸ்ராநெற் வலையமைப்பும் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளமும் கிரமமான அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டன.

## 27. அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம்

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம்[1] ஆண்டு முழுவதும் அனைத்து பயன்பெறுநர்களுக்கும் வினைத்திறனுடனும் பயனுறு விதத்திலும் நலன்புரி வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களத்தின் தொழிற்பாடுகள் அலுவலர் வீடமைப்பு (ஈட்டு) கடன் திட்டம், சேம நிதிய கடன் திட்டம் மற்றும் அலுவலர் நன்மைகள் திட்டம் என்பவற்றின் கீழ் கடன்களை வழங்குதல், தொழில்தருநர் பங்களிப்பு மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ்

செலவுகளை மீளளித்தல் மற்றும் உணவக வசதிகளை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட தங்கியிருளப்போர் ஆகியோரை உள்ளடக்கி 11,500 இற்கும் மேற்பட்ட தனிநபர்கள் மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பயன்பெறுநர்களாக காணப்பட்டனர்.

2013இல் அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களம் 2,162 கடன்களை வழங்கியது. இது சேம நிதியக் கடன்கள், ஊர்திக் கடன்கள், கணனிக் கடன்கள் மற்றும் அலுவலர் நன்மைகள் திட்டம் மற்றும் வீடமைப்புக் கடன்களின் கீழான ஏனைய கடன்களையும் உள்ளடக்கியிருந்தது. இக்கடன்கள், தொடர்பான அனைத்து ஆவணங்களுடனும் விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரால் சமர்பிக்கப்பட்ட பின்னர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் வழங்கப்பட்டன. கடன் கண்காணிப்பு முறைமை ஊழியர்களுக்கு கடன்கள் பகிர்ந்தளிப்பினை வினைத்திறனுடன் மேற்கொள்வதனை இயலச் செய்தது.

இலங்கை மத்திய வங்கியின் உணவகம் மத்திய வங்கி அலுவலர்களுக்கு காலை உணவையும் மதிய உணவையும் தொடர்ந்தும் வழங்கியது. அலுவலர் பணிகள் திணைக்களத்தின் தேனீர் வழங்கல்/ மூலிகை பானம் வழங்கல் என்பவற்றுடன் இணைந்து காலை மற்றும் மாலை நேரங்களில் உடன் பால் பரிமாற்றப்பட்டது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் உணவகச் சூழலை மேம்படுத்துவதற்கும் உணவக வசதிகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களம் மருத்துவ நலன்புரித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்து நன்மை பெறுநர்களினாலும் உறப்பட்ட மருத்துவச் செலவினங்களைத் தொடர்ந்தும் மீளளித்தது. மருத்துவச் செலவின மொத்த மீளளிப்புத் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஐந்து சதவீதத்தினால் அதிகரித்தது. 2013 திசெம்பர் 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மருத்துவ நன்மைகள் திட்டத்தின் வகை இ மற்றும் வகை ஈ யின் கீழான மருத்துவச் செலவின் மீளளிப்பு உச்ச வரம்புகள் அதிகரிக்கப்பட்டன. மருத்துவ நிலையத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மருத்துவ வசதிகள் பிரபல்யமான தனியார் வைத்தியசாலையிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பணி நேரங்களில் மத்திய வங்கி அலுவலர்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டன. மேலும் ஆய்வுகூட வசதிகளும் நியாயமான விலைகளில் மருத்துவ நிலையத்தில் வழங்கப்பட்டன. ஆண்டுக்காலப் பகுதியில் அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களம் மத்திய வங்கி அலுவலர்களின் நலம் தொடர்பான அறிவினை அதிகரிப்பதற்காக ஐந்து விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.

திடீரெனத் தோன்றும் மீளமுடியாத நோய்கள், பாரிய சத்திர சிகிச்சை அல்லது நீண்டகால நோய்களின் காரணமாக நிதியியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் நிதிய அங்கத்தவர்களுக்கு நிதியியல் உதவிகளை வழங்கும் பொருட்டு குறிப்பிட்ட வரையறைகளைத் தளர்த்துவதற்காக ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்தின் விதிகள் திருத்தப்பட்டன. அத்தகைய சிகிச்சைகளுக்கு உறப்படும் செலவினம் நன்மைகளினை விடவும் அதிகூடியதாக காணப்படுமிடத்து அவ்வங்கத்தவர் மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் கோருவதற்கு உரித்துடையவராவார்.

## 28. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

### 28.1 விஞ்ஞாபனம்

வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களம், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்காக 1988ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அந்நேரத்தில், 1979ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்குப் பதிலாக 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம் இயற்றப்பட்டதுடன் நிதிக் கம்பனிகள் சட்டத்தினை நடைமுறைக்கிடும் பொறுப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் ஒழுங்குமுறைப்படுத்தலையும் மேற்பார்வையினையும் மேலும் வலுப்படுத்தும் நோக்குடனும் அதிகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்கின்ற வியாபாரங்களை ஒழிப்பதற்காகவும் நிதிக் கம்பனிகள் சட்டத்திற்குப் பதிலாகவும் 2011இன் 42ஆம் இலங்கை நிதித்தொழில் சட்டம் இயற்றப்பட்டதுடன் அது 2011 நவம்பர், 9ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம் இயற்றப்பட்டதுடன் நிதிக் குத்தகைக்குவிடும் வியாபாரத்தின் ஒழுங்குமுறைப்படுத்தலும் கண்காணிப்பும் இத்திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

### 28.2 தொழிற்பாடுகள்

திணைக்களத்தின் மேற்பார்வைப் பொறுப்புக்கள் நிதி மற்றும் குத்தகைக்குவிடும் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு கம்பனிகளுக்கு உரிமம் வழங்கல், முன்மதியுடைய தேவைப்பாடுகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல், தொடர்ச்சியாக மேற்பார்வையினையும் காலாந்தர தலத்திலான பரீட்சிப்புக்களையும் மேற்கொள்ளுதல், ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல், அதிகாரமின்றி நிதி வியாபாரங்களை நடத்தும் நிறுவனங்களின் மீது புலனாய்வுகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்களில் வைப்புக்களை மேற்கொள்ளுவதனால் ஏற்படும் இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக பகிரங்க விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. 2013 இறுதியில் 48 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் 13 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 7 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் 46 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் 10 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உள்ளடங்கலாக 76 பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களும் தொழிற்பாட்டிலிருந்தன. உரிமம் பெற்ற நிதிக் கம்பனகளினதும் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் பெயர்கள் இணைப்பு II-3இல் தரப்பட்டுள்ளன

### 28.3 இவ்வாண்டின் நடவடிக்கைகள்

**(அ) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை**

**i. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு**

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர கூற்றுக்களினூடாகப் பெறப்பட்ட நிதியியல் தகவல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலமாக அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கான தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. மேலும், நேரகாலத்துடன் எச்சரிக்கும் முறை மற்றும் பின்தொடர் முறைமையூடாக திணைக்களம் இடர்நேர்வு ஏற்படக்கூடிய சாத்தியமான துறைகளை அடையாளம் கண்டதுடன் அத்தகைய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு மீட்பு நடவடிக்கைகளை விதந்துரைத்தது. மேலும், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை நிறுவனங்களை அவற்றின் நிதியியல் பலத்தின் அடிப்படையில் தரமிடுவதற்காக உள்ளகத் தரமிடல் முறைமையொன்று நடைமுறைக்கிடப்பட்டிருக்கிறது.

**ii. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் தலத்திலான பரீட்சிப்பு**

இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், இடர்நேர்வுகளின் முகாமைத்துவம் மற்றும் அத்தகைய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு மூலவளங்களை மதிப்பீடு செய்தல் என்பன மீது கவனத்தினைச் செலுத்தும் இப்பரீட்சிப்புக்களை மேற்கொள்ளும் பொழுது இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை பின்பற்றப்பட்டது. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் திரவத்தன்மை, சொத்துக்களின் தரம், மூலதனப் போதுமை, முகாமைத்துவ வினைத்திறன், வருவாய்கள், இலாபத்தன்மை, முறையியல் கட்டுப்பாடு மற்றும் அந்நிறுவனங்களின் கம்பனி ஆளுகையின் நிலை என்பனவற்றை மதிப்பீடு செய்தவற்காக காலாந்தர தலப் பரீட்சிப்புக்கள் மேற் கொள்ளப்பட்டன. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் 35 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினதும் 7 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் தலத்திலான பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. பரீட்சிப்பு அறிக்கைகள் எடுத்துக்காட்டும் அடையாளம் காணப்பட்ட ஏதேனும் இடர்நேர்வுகளும் அவற்றை சரிசெய்யும் நடவடிக்கைகளுக்கான விதந்துரைப்புக்களும் தொடர்பான பணிப்பாளர் சபைகளுக்கு வழங்கப்பட்டன. மேலும் பலயீனமான துறைகளை முக்கிய கவனத்திற் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட செயற்பரப்பு அடிப்படையில் 8 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் 2 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் பரீட்சிக்கப்பட்டன.

**(ஆ) பணிப்புரைகளையும் முன்மதியுடைய தேவைப்பாடுகளையும் வழங்குதல்**

நாணயச் சபையின் ஒப்புதலுடன் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு புதிய முன்மதியுடைய தேவைப்பாடுகளும் பணிப்புரைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

i. ஏற்கனவேயுள்ள அமைப்பியல் மாற்றல் பணிப்புரையின் செயற்பரப்பு மேலதிக விடயங்களுடன் விரிவாக்கப்பட்டது. இதில் வரையறுக்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு நாணயச் சபையினதும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளரினதும் ஒப்புதல் தனித்தனியாக தேவைப்படுத்தப்படுகிறது. மேலும், சொத்து

மாற்றல் பணிப்புரையின் ஏற்பாடுகள் புதிய அமைப்பியல் மாற்றப் பணிப்புரையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

ii. நிதிக் கம்பனிகளின் தொடர்பான தரப்பினர்களின் கடன்களை பதிவழிப்பது தொடர்பில் நாணயச் சபையின் முன்னொப்புதலைப் பெறவேண்டும் என்ற தேவைப்பாடு பணிப்பாளர்/ வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்ற தேவைப்பாட்டின் மூலம் நீக்கப்பட்டது.

iii. குறிப்பாக, திரவத்தன்மை மற்றும் வட்டி/ நறுக்கு வீதங்கள் போன்ற விடயங்களில் நிதிக் கம்பனிகளினால் விடுக்கப்பட்ட படுகடன் சாதனங்கள் மீது மேற்பார்வைக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக பணிப்புரையொன்று வடிவமைக்கப்பட்டது.

iv. 2012இற்காக பின்பற்றப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 32, 39 மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடும் நியமங்கள் 7இனைப் பின்பற்றுவது மீதான வழிகாட்டல்கள் பங்கிலாபங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக பணிப்பாளர்/ வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் முன்னொப்புதலைப் பெற வேண்டுமென உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளைத் தேவைப்படுத்தும் வழிகாட்டல்.

v. குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களின் அறிக்கைகள்/ சான்றுபடுத்தல்கள் மீதான கம்பனி ஆளுகை பணிப்புரையின் வெளிப்படுத்துகை தேவைப்பாட்டில் கூட்டிணைக்கப்பட்டுள்ள திருத்தங்கள்.

vi. மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல்/ மேற்பார்வைச் செலவு குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றமையினால் ஆண்டு உரிமக் கட்டணம் திருத்தியமைக்கப்பட்டது. மேலும், உரிமம் பெறுகின்ற ஆண்டில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியினால் செலுத்தப்படத்தக்க உரிமக் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

**(இ) ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்**

2013ஆம் ஆண்டுப் பகுதியில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையானது சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளான சியபதா பினான்ஸ் லிமிடெட் மற்றும் இந்திரா பினான்ஸ் லிமிடெட் என்பன உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளாக உயர்த்தப்பட்ட வேளையில் பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி, பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி என்பதுடன் இணைக்கப்பட்டமையின் காரணமாக 47 இலிருந்து 48 இற்கு அதிகரித்தது. மேலும் சீலீஸ் லிமிடெட், எம்சிஎஸ்எல் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டது.

**(ஈ) உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுடனான கூட்டங்கள்**

i. இத்துறையுடன் தொடர்பான பிரச்சனைகளை பரிமாறும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தலைமை தாங்கிய உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான கூட்டங்கள் காலாண்டு அடிப்படையில் நடத்தப்பட்டன.

ii. மேலும், சட்டப்படியான தேவைப்பாடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதற்காகவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் தலைவர்களின் கூட்டம் ஒன்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையில் நடத்தப்பட்டது. “ஒரு நில்லியனுக்கும் அப்பாலான உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்” என்ற கருப்பொருளின் கீழ் திணைக்களம், பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கான ஆண்டுக் கூட்டத்தினை நடத்தியது.

**உ) ஏனைய நடவடிக்கைகள்**

**i. அதிகாரமின்றி நிதித்தொழில் நடத்துவதன் மீதான புலனாய்வுகள்**

2013ஆம் ஆண்டுப் பகுதியில் நிதித்தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் அதிகாரமின்றி நிதித்தொழிலைக் கொண்டு நடத்துகின்ற ஆட்கள்/ நிறுவனங்களின் மீது திணைக்களம் புலனாய்வுகளைத் தொடங்கியது. திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் ஒரு நிறுவனத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்திய வேளையில் ஒரு நிறுவனத்திற்கெதிராக சட்ட நடவடிக்கைகளைத் தொடங்கியது.

**ii. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையினை திரட்சிப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்**

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையில் இணைப்புக்கள் மற்றும் கையேற்புக்கள் என்பனவற்றை ஊக்குவிக்கும் பொருட்டு வரி ஊக்குவிப்புக்களை வழங்குவது தொடர்பாக திணைக்களம் 2014ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்திருந்தது. முன்மொழிவின் குறிக்கோள் யாதெனில், பொருளாதாரத்தில் வளர்ந்துவரும் கேள்விக்கு வசதியளிப்பதற்காக வலுவான உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையினை விருத்தி செய்வதும் சாத்தியமான முறிவுகளைத் தவிர்ப்பதுமேயாகும். மேலும், திணைக்களம், 2014இற்கும் அதற்கு அப்பாலுக்குமான உத்தேச நிதியியல் துறைத் திரட்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் மீது ஆரம்பத் திட்டமொன்றினை தயாரித்தது.

**iii. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கான தொழில்நுட்பக் கூட்டத் தொடர்கள்**

திணைக்களம், பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் மூத்த முகாமைத்துவத்திற்கான இடர்நேர் முகாமைத்துவம் என்பன மீதான இரண்டு தொழில்நுட்பக் கூட்டத் தொடர்களை நடத்தியது.

**28.4 பொதுமக்களுக்கான பங்களிப்பு**

**(அ) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் வளர்ச்சி மற்றும் உறுதிப்பாடு**

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியான மேற்பார்வைகளை மேற்கொண்டது. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் பேரண்டப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பிலும் பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட தங்க விலைகளின் தளம்பல்கள் தொடர்பிலும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பல சவால்களை எதிர்நோக்கின. எனினும், திணைக்களம் கடுமையான கொள்கை வழிமுறைகளையும் கடுமையான மேற்பார்வையினையும் நடைமுறைப்படுத்திய வேளையில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த கம்பனிகள் இடர்நேர்வுகளை ஈர்த்துக் கொள்வதனையும் உறுதியான வளர்ச்சியையும் உறுதிப்படுத்துவதற்காக மதியுரைகளை வழங்கியது. வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் முறையே 33 சதவீதம் மற்றும் 9 சதவீத வளர்ச்சி வீதங்களை பதிவு செய்தமையின் காரணமாக நிதியிடல் மூலங்களில் ஏற்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சியின் ஆதரவுடன் துறையின் சொத்துத் தளம் 20 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கடன் வழங்கல் வசதி 17 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2013 திசெம்பர், 31இல் முடிவடைந்த பன்னிரண்டு மாத காலப்பகுதியில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறை வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ.8 பில்லியனைப் (கணக்காய்வு செய்யப்படாதது) பதிவு செய்தது. மொத்த மூலதனப் போதுமை விகிதம் 15 சதவீதம் கொண்ட உயர்ந்த உத்வேகத்தில் காணப்பட்டது.

**(ஆ) பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்:**

**(i) பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்:** பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களூடாக அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில்களில் முதலீடு செய்வது தொடர்பான இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் 23 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டக்களப்பு, மொனராகலை, அம்பாறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நடத்தப்பட்டன.

**(ii) வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள்:** கண்டியில் இடம்பெற்ற இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கந்துரட்டை சேவையினால் நடத்தப்பட்ட விசேட ஒலிபரப்பான “எசல பெரகர” ஊடாக பொதுமக்களுக்கு விசேட செய்திகள் ஒலிபரப்பப்பட்டன.

**(iii) துண்டுப் பிரசுரங்கள் மற்றும் செய்தித்தாள் கட்டுரைகள்:** உரிமம் பெற்ற வங்கிகளினதும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினதும் பட்டியலைக் கொண்ட 2,000 சுவரொட்டிகள் மொனராகலை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலுள்ள கிராமசேவகர்களினூடாக பகிர்ந்தளிக்கப்பட்டன. ஏனைய பயன்மிக்க தகவல்களுடன் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் பட்டியல்களை உள்ளடக்கிய 24,000 துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட்டன. வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல்கள் அனைத்து மும்மொழிகளிலும் செய்தித்தாள்களில் காலாண்டு அடிப்படையில் பிரசுரிக்கப்பட்ட வேளையில் 2013இன் பின்னரைப் பகுதியில் அடையாளம் காணப்படாத யதார்த்த பூர்வமற்ற திட்டங்களின் இடர்நேர்வு பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக சிறப்பு அறிவித்தல்கள் செய்தித்தாள்களில் அனைத்து மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டன. மேற்சொல்லப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் பொதுமக்களிடையே நிதியியல் அறிவு அதிகரிப்பதற்கு உதவியது.

**(இ) பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனித்தல்:**

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு திணைக்களம் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை மேற்கொண்டது. அத்தகைய முறைப்பாடுகள் தொடர்பான உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் அவை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## இணைப்பு II-3 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்

### சட்டத்திற்கிணங்க மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் (2013 இறுதியிலுள்ளவாறு)

#### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
6. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
7. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
8. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
9. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
10. கப்பிட்டல் எலையின்ஸ் பினான்ஸ் பிஎல்சி
11. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
12. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
13. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
14. சிற்றிசன்ஸ் டெவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
15. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. தேஷோடய டெவலொப்மன்ட் பினான்ஸ் லிமிடெட்
19. ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்
20. ஜோர்ஜ் ஸ்ருவோர்ட் பினான்ஸ் பிஎல்சி
21. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
22. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
23. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
24. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
25. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
26. மெல்ஸ்ரா றீகல் பினான்ஸ் லிமிடெட்
27. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
28. எம்சிஎஸ்எல் பினான்சியல் சேர்விசஸ் லிமிடெட்
29. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
30. பிராக் லங்கா பினான்ஸ் பிஎல்சி *(முன்னர் நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்)*
31. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
32. ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி
33. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
34. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
35. பிறைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
36. றிச்சேர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
37. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
38. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
39. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
40. சொவ்றலொஜிக் பினான்ஸ் பிஎல்சி
41. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் சேர்விசஸ் பிஎல்சி
42. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
43. சியப்பதா பினான்ஸ் லிமிடெட் *(முன்னர், சம்பத் லீசிங் அன்ட் பக்ட்றிக் லிமிடெட்)*
44. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
45. த ஸ்டான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
46 ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
47. யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
48. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி

#### பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்

**(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. அமானா வங்கி லிமிடெட்
2. இலங்கை வங்கி
3. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
4. டிஎவ்சிசி வர்தன பாங்க் பிஎல்சி
5. அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி
8. நேஷன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி
9. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
10. மக்கள் வங்கி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. செலான் பாங்க் பிஎல்சி
13. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**(ஆ) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1. டிஎவ்சிசி பாங்க்
2. லங்காபுத்ர டெவலப்மென்ட் பாங்க் லிமிடெட்
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. பிரதேசிய சன்வர்தன பாங்க்
5. சணச டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி
6. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
7. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

**(இ) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

1. அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
2. கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட்
3. இசுறு லீசிங் கம்பனி லிமிடெட்
4. கொசீபா லீசிங் கம்பனி லிமிடெட்
5. லிஸ்வின் இன்வெஸ்மென்ட் லிமிடெட்
6. எல்ஓஎல்சி மைக்ரோ கிரடிட் லிமிடெட்
7. மர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சி
8. நியூவெஸ்ட் கப்பிட்டல் லிமிடெட்
9. எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி
10. லாப்ஸ் கப்பிட்டல் லிமிடெட் (முன்னர் சொப்றலொஜிக் கிரடிட் லிமிடெட்)

**(ஈ) பிறைம் கிறமீன் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட் மற்றும் டெஷோடய டெவெலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட் ஆகியன தவிர்ந்த மேலே பட்டியலிடப்பட்டுள்ள உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்**

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள் கட்டமைப்பு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதேவேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.